
ரகுவம்சம்

மஹாகவி காளிதாசரின்

ரகுவம்சம்

(1 முதல் 6 சருக்கங்கள்)

தமிழ்த் தெளிவுரை

ஸ்ரீவித்யானந்தா

டாக்டர் C. R. ஆசார்யா

1994

முதற் பதிப்பு : 1991

ஸ்ரீவித்யானந்தா,
டாக்டர் C. R. ஆசார்யா
நெ. 3, நேரு நகர்,
திருத்தணி - 631209.
செங்கை அண்ணா மாவட்டம்,
தமிழ்நாடு

அச்சிட்டோர் : ஸ்ரீ கிருஷ்ணசித்ரா பிரிண்டர்ஸ்,
நெ. 4, நாகேஸ்வரன் ரோடு,
தி நகர் சென்னை - 600 017.
போன் : 441286

முகவுரை

உலகறிந்த மாபெரும் கவிஞர்களுள் ஒருவர் காளிதாசர். இவரது வரலாற்றைப் பற்பலவாகப் பேசிவருகின்றனர். தன்வந்தரி க்ஷபணகர், அமரசிம்மர், சங்கர், வேதாளபட்டு, கடகற்பரர், காளிதாசர், வராகமிகிரர், வரருசி ஆக ஒன்பதுபேர்களும் விக்ரமார்க்க மன்னரின் அவையை அலங்கரித்து இருந்தனர் என்பர். இவர்களே 'நவரத்தினங்கள்' என வழங்கி வந்தனர்.

இவர்களுள் 'தன்வந்தரி' என்பவர் ஆயுர்வேத மருத்துவ நூலை இயற்றியவர். க்ஷபணகர் எந்தநூலை இயற்றினதும் தெரியவில்லை. 'அமரம்' என்னும் பெயரால் நாடெங்கும் புகழ் வாய்ந்த வடமொழி நிகண்டு 'நாமலிங்காநுசாஸணம்' எனப்படும். நூலை இயற்றியவரே அமரசிம்மர். சங்கரைப் பற்றி வரலாறேதெரியவில்லை. வேதாளபட்டரின் நூல்களும் காணமுடியவில்லை. கடகற்பரர் பிராக்ருத மொழியில் சில நூல்களை இயற்றியுள்ளார் என்று கூறுகின்றனர். காளிதாசர் ரகுவம்சம், குமாரசம்பவம், மேகசந்தேசம் என்னும் மாபெருங் காப்பியங்களையும், அபிஜ்ஞான சாகுந்தலம், விக்ரமோர்வசீயம், மாளவிகாக்னிமித்ரம் என்னும் மூன்று நாடகங்களையும் வடமொழியில் இயற்றினார். வராகமிகிரர் சோதிட வல்லுநராய்த் திகழ்ந்தார். 'ப்ரிஹத்ஸம்ஹிதை;, 'ப்ரிஹஜ் ஜாதகம்' என்னும் இரு சோதிட நூல்களை இயற்றியுள்ளார். வரருசி என்பவர் இலக்கண நூல்களை இயற்றியுள்ளார். இவ்வொன்பது பேர்களையும் உண்மையில் 'நவரத்தினங்கள்' என்றே சொல்ல வேண்டும். இவர்களுள் காளிதாசர் தலைசிறந்தவர் என்பதில் ஐயமில்லை. இவர் விக்ரமார்க்கமாமன்னன் அவையில் இருந்தார் என்று சொல்லப்பட்ட போதிலும், 'தாரா' என்னும் நகரத்தை ஆண்டுவந்த 'போஜமன்னனுக்கும் இவருக்கும் மிகவும் தொடர்பு உண்டு. இதற்குப் பற்பல சான்றுகள் உள்ளன. 'உவமை காளிதாசருக்கே உரியது' என்று கூறுவர். 'கவிதல குருஹ் காளிதாஸோ விலாஸஹ'—என்று ஜெயதேவ மகாகவி கூறியுள்ளார்.

மகாகவிகளை எண்ணும்போது இவர் சுண்டுவிரல்மீது நிற்பார். இவரைப் போன்ற கவீசுவரர் இவருக்கு முன்பு இருந்தது இல்லை; பின்பும் பிறந்ததுமில்லை. இவ்வளவு புகழ்வாய்ந்த ஒரு மாபெரும் கவிஞரின் வாழ்க்கை வரலாறு நமக்குக் கிடைக்காதது மிக மிக

விருந்தத் தக்கது. இவரைப் பற்றி கூறிக் கொள்ளும் கதைகள் வெறுங் கற்பனைகளாகவே இருக்கலாம். எனினும் அவை சுவை மிக்கவை. ஆனதால், மக்களிடையே வழங்கப்பெற்று வருகின்றனர். அவை சுவையாக உள்ள போதிலும், அவருடைய வாலைப் பருவம் பற்றிய கூற்றுகள் நம்பத் தக்கவையாக தோன்றுவதில்லை. எவை எப்படி இருந்த போதிலும், நமக்குத் தேவையை மட்டும் தற்போது கவனிப்போம்.

காலநிச்சயம்: —

காளிதாசர் விக்ரமார்க்கரின் காலத்தவராயின் அவர் கி. மு. 56ஆம் ஆண்டிலிருந்ததால், 2,000 ஆண்டுகட்கு முற்பட்டவராக இருந்திருக்க வேண்டும், சில அறிஞர்கள் இவர் குப்த வம்சத்தரசரான சந்திரகுப்த விக்ரமாதித்திய மன்னன் காலத்திலிருந்தவரென்றும் கூறுவர். அவ்வாறாயின் கி. பி. 350 ஆம் ஆண்டுக்குப் பின் வாழ்ந்தவராயிருக்க வேண்டுமென்பது—அதாவது 1600 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்க வேண்டும். உலக வழக்கில் உள்ளபடி காளிதாசர் போஜமன்னரின் அவையில் இருந்திருந்தால், அவர் கி.பி. 1000 முதல் 1050 வரை 900 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து வந்தவர் எனக் கூறுதல் வேண்டும்.

காளிதாசர் பெயரில் இருவர் வாழ்ந்து வந்ததாக சில அறிஞர்கள் கூறுவர். அவ்வாறாயின் விக்கிரமார்க்க மன்னரின் காலத்தில் ஒருவரும், போஜமன்னர் அவையில் மற்றொரு காளிதாசரும் இருந்தாரோ; தெரிய முடியவில்லை. இவர் கௌடநாட்டவர் என்றும், கௌண்டின்ய கோத்திரத்தவர் என்றும் கூறுவர். இக்கூற்றுகட்கு தக்கச் சான்றுகள் கிடையா. இதற்கு காரணம் இவர் பிற கவிகள் தங்கள் கவிகளில் தங்களைப் பற்றிக் கூறிக் கொண்டதுபோல், தன்னைப் பற்றிய விளக்கம் யாதொன்றும் எந்த காப்பியத்திலும் கூறிக் கொள்ளாததே ஆகும்.

காளிதாசரைப் பற்றி சில இழிவான கதைகள் கூறப்பட்டுள்ள… அவர் சிறுவயதில் ஆடுகளை மேய்த்து வந்தாரென்று ஒரு க… யிலும், இன்னும் இழிவாக, கழுதையை மேய்த்து வந்தார் என ம… மோர் கதையிலும் கூறியதையும் காணலாம். திருமணம் ஆன பின்பு காளிகாம்பாள் அருள் பெற்று சிறந்த கவியானாரென்று கதைகளின் கூற்று. கதைகள் எவ்வாறிருப்பினும், அவர் மேற்கூறிய நீசமான தொழில்கள் செய்திருந்து வந்தால் விரைவில் பேரறிஞராவதற்கு முடிந்திருக்காது. ஒருவேளை கல்லாதவராய் திரிந்து கொண்டிருந்திருக்கலாம்; பிறகு திருந்தி காளி பகதனாய் காளிதாசராக மாறி

இருக்கலாமென்பது ஒப்புக்கொள்ளத்தக்க கருத்தாகும். இளமையில் இவ்வாறு கல்லாது திரிந்த பிறகு பெரிய புலவராக மாறிய தெலுங்கு புலவர்-'சின்னய சூரி' என்பவரும் ஒருவராகும். அதுபோல் இவரும் மாறி இருக்கலாமன்றோ!

இவர் ஹர்ஷசரித்திர மியற்றிய பாணர் வாழ்ந்த காலத்தில்-அதாவது கி.பி. 634ல் இருந்ததாக அண்மையில் கண்ட சில தகவல்கள் கூறுகின்றன. பாரவி போன்ற புகழ்மிக்க கவிஞராகவும் அவருக்குச் சம காலத்தவரென்றும், 7-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இருந்தவரென்றும் தெரியவருகிறது.

ரகுவம்ச காப்பியத்தையொட்டி அவர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இருந்தாரெனக் கீழ்கண்ட சான்றுகளையொட்டி கூறலாகும். (1) ரகுவம்சத்தில் 4 மற்றும் 6-ம் சருக்கங்களில் கூறப்பட்ட அரசியல் நிலைமைகள் 6-ஆம் நூற்றாண்டில் இருந்த நிலைகளைக் குறிக்கின்றன. (2) மேகசந்தேச மென்னும் நூலில் 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திங்நாகர் என்னும் பௌத்த தார்க்கிகரைப்பற்றி கூறப்படுவதால் அந்த நூற்றாண்டில் வாழ்ந்தவராக அறியலாம், (3) 5-ஆம் நூற்றாண்டின் கடைசியில் வாழ்ந்து, வடமொழியில் கிரேக்கரின் வான சாத்திரத்தை எழுதிய ஆர்யபட்டரின் நூலிலிருந்து சிற்சில விஷயங்களை எடுத்துக் கூறுவதாலும் இவர் 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென்றும் கூறுவர். ஆனால் எந்த கூற்றும் தகுந்த, ஆதாரங்களைக் கொண்டு நிச்சயமாக கூற முடிவதில்லை.

5 ஆம் நூற்றாண்டில் இருந்தவரென்பதற்குச்சிற்சில சான்றுகள், (1) இவர் தம் நூலில் குப்த மன்னர்கள் காலத்தில் செய்துவந்த காரியங்களையும், அக்காலத்தில் நாடு இருந்த மேன்மை நிலையைக் குறித்தும், இந்துமதத்தின் உச்ச நிலையையும் குறிம்பிடுவதாலும். (2) தமது மாளவிகாக்னி மித்ரமெனும் நூலில் அசுவமேத யாகத்தைப்பற்றியும், ரகுமன்னனால் திக்விஜயம் செய்ததைப்பற்றி ரகுவம்சத்தில் கூறுவதாலும், மற்றும் விக்ரமோர்வசீயத்தில் குப்த மன்னர் காலத்து சம்பவங்களைப் போன்றவற்றைக் குறிப்பிட்டிருப்பதாலும், (3) வத்சபட்டி என்பவரின் கி.பி. 74 கல்வெட்டுகளில் சிலவரிகள் காளிதாசரின் கவிதைகளைப் போல் உள்ளதாலும் 5-ம் நூற்றாண்டில் இருந்துவந்திருக்கலாமென கூறுவர். கீழ்த்திசைப் புலவர்கள் பெரும்பாலும் மேற்படி 3-ஆம் கூற்றே உண்மையானதென ஒப்புக்கொள்கின்றனர்.

இவர் அசுவ கோஷரை அனுசரித்து வந்தார் என்பதற்குத் தக்க சான்றுகள் உண்டு. அசுவகோஷர் தமக்கு முன்பு இருந்த சம்ஸ்கிருத கவிஞர்களை ஒட்டி புத்த சரிதத்தை சம்ஸ்கிருதத்தில் எழுதினார், காளிதாசர் இராமாயணத்தை எழுதியதில் பல விடங்களில் அசுவ கோஷரை தழுவியுள்ளார். அசுவகோஷர் கி.பி. 1-வது நூற்றாண்டில், விக்ரமசகம் ஆரம்பத்தில் இருந்தவரென்பார்கள். காளிதாசர் தமது மாளவிகாக்னிமித்திரத்தில் அக்கினி மித்திரனைப் பற்றிக் கூறியுள்ளதாலும். அக்கினிமித்திரர் கி பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாலும், இவர் 2-ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தவராக கூறுவதற்கில்லை.

இவர் மாளவ மன்னனாகிய போஜனுடைய அவையில் இருந்து வந்ததாக நம்பவேண்டியுள்ளது. இவரைப் பற்றிய நாடகங்களும் ''போஜ—காளிதாசன்'' என்ற பெயரில் நடிப்பதைக் காண்கின்றோமே யன்றி, 'விக்ரமார்க்கன்-காளிதாசன்' என்ற பெயரில் நடிப்பதை நாம்காண்கிலம். ஆகையால, காளிதாசர் போஜராசனின் காலத்தவரே என்று துணிந்து கூறிவிடலாம்.

ஆந்திரப் பிரதேசத்தில் 'தெனாலி'யில் பிறந்து விகடகவியாக விளங்கியவரும் அந்திர போஜன் என்ற புகழ்ப் பெற்று, கவியும் மன்னவனுமாய் விளங்கிய விஜய நகரத்தரசன், கிருஷ்ணதேவ ராயரின் அவையில் கவிவாணராகத் திகழ்ந்து வந்த, தெனாலி ராமகிருஷ்ண கவிராயரைப் பற்றிய நகைச்சுவை யூட்டும் கதைகள் மக்களிடையே பரவி வந்திருப்பதுபோல், காளிதாசரைப் பற்றிய கதைகளும் பல உள்ளன. இதை விளக்கி, திரு. சிலகமர்த்தி. லக்ஷ்மீ நரசிம்மம் என்னும் புலவர் தெலுங்கில் ஓர் நூலை வெளியிட்டிருக்கிறார்.

இவர் அம்பாள் வரம்பெற்று, அவர்மீது சுலோகங்களும், தண்டகங்களும் பாடியுள்ள போதிலும், தாமியற்றிய நூல்களுக்காதியில் சிவனைப் பற்றிய துதிப்பாடல்களே உள்ளன,

' வாகர்த்தாவிவ—பார்வதீ பரமேஸ்வரௌ''—என்று சிவனைக் குறித்த துதிப்பாடல் ரகுவம்ச காப்பியத்தில் இயற்றினார். நாடகங்களுட் சிறந்ததும், பலரால் போற்றப்பட்டு நடித்துவருவதுமான 'அபிஜ்ஞான சாகுந்தலமென்னும் நாடகத்திலும், முதற் பாடலில், 'யாஸ்ரிஷ்டி—ரஷ்டாபி ரீஸ்வர:' என்று ஈசுவரனையே துதி செய்துள்ளார். 'விக்ர மோர்வசீய' மென்னும் நாடகத்தின் முதற் பாடலிலும் 'வேதாந்தேஷு—யஸ்மினீஸ்வர—யாஸ்துவ:' என்று

சிவத்துதியே செய்துள்ளார். மேலும், 'மாளவி காக்னிமித்ர' மெனும் நாடகத்தின் முதலிலும், 'ஏகைச்வர்யே—ஸ்த்தி மீஶ:' என்று சிவத்துதி செய்து நூல் துவங்கியுள்ளார்.

மேலும் இவர் சைவத்தைத் தழுவிய 'குமார சம்பவம்' என்னும் முருகக் கடவுளின் பிறப்புப் பற்றிய நூல் ஒன்றையும் இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. இதில் அம்மையப்பன், அம்மையார் கட்கு முருகன் பிறத்தல், அவனால் செய்யப்பட்ட சூரசங்காரம் ஆகிய வனைத்தும் அடங்கியுள்ளன.

இப்படி அம்பாளிடம் வரம்பெற்று எல்லா நூல்களின் முதன் முத லில் சிவனைப் பற்றியே பாடியுள்ளமைக்கு, இவருடைய அபேத தரிசனம் (அதாவது சிவனுக்கும் சக்திக்கும் வேறுபாடின்மை) என்பது மிகவும் பொருந்தும். இதையே மறைநூல்களும் 'அபேத தர்சனம் ஜ்ஞானம்'' என்று ஞானத்தைப் பறைசாட்டிக் கூறுகின் றன போலும்! ஆதலால், இவர் பற்பல விஷய சுகங்களில் ஈடுபட்டி ருந்த போதிலும் ஒரு ஞானியாகவே திகழ்ந்து வந்தார் என்பதில் யாதொரு ஐயப்பாடும் தேவையில்லை.

இவர் காப்பியமியற்றுவதில் சமத்காரம் :=

இவர் தம் மனைவியுடன் படுக்கையறையிலிருந்தபோது அவள் கேட்ட 'அஸ்தி கச்சித் வாக்விசேஷ:' (அதாவது 'தங்கள் வாக்கு விசேடம் ஏதேனும் உண்டா?') என்று கேட்ட கேள்விக்கு இவ ருடைய கல்லாமையால், அப்போது, பதில் கூறமுடியாமல் திகைத்தாராம். பிறகு அவளை விட்டுச் சென்று, அம்பிகை வரம் பெற்று, மறுபடியும் திரும்பிவந்தயிவர், மேற்கூறிய கேள்விகட்குப் பதிலாக—'அஸ்தி, கச்சித், வாக், விசேஷ:' என்ற நான்கு சொற் களில் ஒவ்வொன்றை, ஒவ்வோர்காப்பியத்தின் முதலில் பயன்படுத்தி அக்காப்பியங்களை இயற்றினாரென்று அறிஞர்கள் கூறுகின்றனர், 'அஸ்தி' என்ற சொல்லை குமாரசம்பவத்திலும், 'கச்சித்' என்ற சொல்லை மேகஸந்தேசத்திலும், 'வாக்' என்பதை ரகுவம்சத்தி லும் பயன்படுத்தி, சிவத்துதி பாடியுள்ளார். 'விசேஷ:' என்னும் சொல்லை எக்காப்பித்தில் பயன்படுத்தினாரென்பது தெரிய தெரியவில்லை.

காளிதாசரின் பிற நூல்கள் :—

இதுவரை கூறிவந்த மூன்று காவியங்கள், மூன்று நாடகங்கள் அன்றி, இவர் 'ருதுசம்ஹாரம்' என்னும் காவியத்தையும் இயற்றி யுள்ளார். ஒருவருடத்தில் நிகழும் ஆறு ருதுக்க (காலங்க)ளைப்

பற்றி இதில நன்கு வர்ணித்திருக்கிறார். அவருடைய கற்பனைகள் பூராவும் இதில் கண்டு மகிழலாம். இதுவுமன்றி 'ரோலம்ப ராஜீயம்' என்னும் மருத்துவ நூலையும், 'சந்த்ராலோக'மெனும் இலக்கண நூலையும், 'தாராவளி', 'காலாம்ரிதம்' என்னும் இரண்டு சோதிட நூல்களையும், 'பிரபாகர'மெனும் இலக்கண நூற்பகுதியையும் தன் பெயரால் இயற்றியுள்ளார் என்பது தெரியவருகிறது ருதுஸம் ஹாரத்தை இவர் இயற்றியதே என்று அறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் 'ரோலம்ப ராஜீயம்' போன்ற பிறநூல்களை இத்த காளிதாசர் இயற்றியவன்று, அவற்றை மற்றொரு காளிதாசர் இயற்றியிருக்க வேண்டுமென்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 'நலோதய'மென்னும் நூலும் இக்காளிதாசருடையதே என்று கூறுவாறுமுளர். ஆனால், அதில் தோன்றும் சமத்காரங்களின் போக்கால் இதனை இவர் இயற்றியது அன்று என மற்றும் சிலர் கூறுவர்.

மேற்படி நூல்களில் எது முன், எது பின் பியற்றியவை என்று வரிசைப்படுத்திக் கூறுவதற்குச் சாத்தியமாயில்லை. ஆனால் கவிதைகளுக்கு முன்பே நாடகங்கள் இயற்றப்பட்டனவெனலாம். அவற்றில் ருது சம்ஹாரம் முதலில் இயற்றப்பட்டதாயிருக்கவேண்டும். நாடகங்களில் மாளவி காக்னிமித்ர மென்பது முதலில் இயற்றப்பட்டதென்று துணிந்து கூறிவிடலாம்- அபிஜ்ஞான சாகுந்தல மென்பது கடைசியாக இயற்றிய நாடகமாகவே இருக்கவேண்டும். கவிதைகளில் மேக சந்தேசம் முதலில் இயற்றப்பட்டதாகவும், குமார சம்பவம் கடைசியில் இயற்றியதாகவும் இருக்கின்றன.

ரகு வம்சத்தைப்பற்றி :

அவருடைய கவிதைகள் நயமிக்கவை, எளிமையும், திராட்சைப் பாகு போன்று இருக்கும். இவர் கவிதைகளில் யமகம் சிலேடை முதலியன இல்லை என்று சிலர் இவரைக் கேலி செய்தனர். அதனால், இவர் அப்படிப்பட்ட இலக்கியங்களடங்கிய சித்திரக் கவிதை யடங்கிய சிலேடை நூலை இயற்றும் சாமர்த்தியம் தனக்குள்ளதென்று எடுத்துக் காட்டுவதற்கு முன்பே, ஒரு வேசியின் சூழ்ச்சியில் சிக்கி துர்மரணமடைந்தார்.

ரகுவம்சமென்பது 19 சருக்கங்களடங்கிய ஒரு இதிகாசகாப்பியம் இதில் ரகு என்பவரைத் தொடர்ந்து சூரிய வம்சத்து அரசர்களின் சரிதத்தைக் குறிக்கும் காப்பியமாகும். ஒரு மகா காப்பியம் என்பது பண்டைய இதிகாசம் அல்லது புராணங்களை ஆதாரமாகக்

கொண்டதாக இருத்தல் வேண்டும். இது சில அதிகாரங்களாகவோ பகுதிகளாகவோ பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். இதில் அரசரை அல்லது வீரரைப்பற்றிய பிறப்பு, வீரம், உன்னத குணங்கள் முதலியன அடங்கி இருத்தல் அவசியம். கூடுமானவரை கீழ்க்கண்ட குறிப்புகள் அடங்கியும் இருக்க வேண்டும்; அதாவது:—(1) ஒரு பட்டணம் அல்லது நகரத்தைப் பற்றிய விளக்கம் (சருக்கம் 16) கடலைப்பற்றி (சருக்கம் 13) மலை, காலங்கள் பற்றி (சருக்கம் 4 மற்றும் 16) தோட்டம் அல்லது நீரில் விளையாடல் (சருக்கம் 8 மற்றும் 16), பானமருந்தல், காதல், விழாக்கள்; பிரிதல், இணைதல் காதலர் திருமணம் (சருக்கம் 8, 12 மற்றும் 7) மகவு பிறத்தல் (சருக்கம் 3) அவை விளக்கம்: சருக்கம் 8 மற்றும் 15) தூது (சருக்கம் 5) அரசன் (சருக்கம் 16, 12 மற்றும் 4) மேலும் போர்ச் செயலும் வெற்றியும் (சருக்கம் 2, 7 மற்றும் 12) குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ரகுவம்ச காப்பியத்தில் புராணங்களிலிருந்து சூரிய மற்றும் சந்திர வம்சத்து அரசர்களைப் பற்றிய கதைகள் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. ஆனால் இராம சரிதம் 10 முதல் 15 சருக்கங்களில் உள்ளவை ராமாயணத்தை ஆதாரமாகக் கொண்டவை.

காளிதாசர் இயற்றிய இந்த ரகுவம்சம் 19 சருக்கங்களோடு நிறுத்தப்பட்டதா அல்லது மேலும் தொடர்ந்து இயற்றப்பட்டதா? என்பது சந்தேகத்திற்கு இடமளிப்பதாகவே உள்ளது. ரகுவுடன் துவங்கி 28 வீரர்களை மட்டும் குறிப்பதாக இருக்கிறது. இதில் சிங்காரம், வீரம், கருணை முதலிய குணங்களைத் தகுந்த இடங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் சுருக்கம் கீழ்க்கண்டவாறு :—

1ம் சருக்கம்: திலீபமன்னன் வசிட்டரிடம் சென்று தனக்கு மகவில்லாமைக்கு காரணம் அறிதல்.

2ம் சருக்கம்: திலீபமன்னன் நந்தினீ என்னும் பசுவுக்குக் கோசேவை செய்து மகவு உண்டாக வரம் பெறுதல்.

3ம் சருக்கம்: ரகுவின் பிறப்பும் அவர்தம் குழந்தைப்பருவமும் வாலைப் பருவமும்.

4ம் சருக்கம்; ரகுவின் பட்டாபிஷேகம், மற்றும் திக்விஜயம்.

5ம் சருக்கம்: ரகுவின் மகன் அஜனின் பிறப்பு, விதர்ப்பநாட்டு இளவரசி இந்துமதி சுயம்வரத்திற்கு போதல்

6ம் சருக்கம்: இளவரசி இந்துமதி அஜனை மணத்தல்.

7ம் சருக்கம்; அஜனுடைய திருமணம்; அவனை எதிர்த்த அரசர்களைக் வெல்லுதல்.

8ம் சருக்கம்: தசரதன் பிறப்பு, மற்றும் இந்துமதி மரணம்.

9ம் சருக்கம்: தசரதர் வேட்டைக்குப் போய் ரிஷிசாபம் பெறுதல்.

10ம் சருக்கம்: மஹாவிஷ்ணு தசரதருக்கு மகன்களாய் பிறத்தல்.

11ம் சருக்கம்: இராமர் சிவன்வில்லை ஒடித்து சீதையை மணத்தல், மற்றும் பரசுராமனை கருவபங்கம் செய்தல்.

12ம் சருக்கம்: இராமரின் வனவாசம், சீதையை இராவணன் எடுத்துப் போதல், இராவண வதம்.

13ம் சருக்கம்: இராமர் புஷ்பக விமானத்தில் இலங்கையை விட்டு அயோத்தி அடைதல்.

14ம் சருக்கம் சீதையை காட்டில் விட்டுவிடுகிறான் இலக்குவன். வான்மீகி முனிவர் ஆச்சிரமத்தில் சீதை அடைக்கலம்.

15ம் சருக்கம்: குசலவர்களின் பிறப்பு அவர்கள் இராமருடன் கலத்தல், சீதை பூமியில் மறைதல்.

16ம் சருக்கம்: குசன் அயோத்தி அடைதல். அவன் குமுத் வதியை மணத்தல்.

17ம் சருக்கம்: குசனின் மகன் அதிதிக்குப் பட்டமளித்தல், அதிதி அயோத்தியை ஆளுதல்.

18ம் சருக்கம்: அதிதியின் மகன் நிஷதன் முதலாக இருபத் தோரு அரசர்களைப் பற்றி சுருக்கமான விளக்கம்,

19ம் சருக்கம் : அக்னி வர்ணனுடைய சிற்றின்ப வாழ்க்கை விளக்கம். அக்னிவர்ணன் நோய்வாய்ப்படுதல், அவனுடைய ராணி அரசை ஏற்றல்.

இந்த நூலில் பல பொருள்கள் (Subject matters) காணலாகும் எடுத்துக்காட்டாக அரசாட்சி, துறவு; அரசன், துறவு மகுடாபிஷேகம், தவம்; படையெடுப்பு, நாடு கடத்தல்; வேட்டையும் விளையாட்டும்; திருமணமும், அந்தி சடங்கு; தீரம், சிற்றின்பம், இயற்கையானதும் அதீதமானதுமான செய்கைகள்; மற்றும் அவரது கூறிய வருணனைகள் அதாவது அரண்மனைக்கோ அல்லது காட்டிற்கோ சம்மந்தமானவை; நல்லார் அல்லது தீயார் நட்பு பற்றியோ; சண்டை அல்லது சமாதானம் ஆகிய அனைத்தைப் பற்றியும் இதில் காணாதது ஒன்றுமிராது. இவற்றையெல்லாம் கவனிக்கும்போது அவருடைய சீரிய அறிவுத் திறனும் பறந்த மனப்பான்மையையும் நமக்குத் தெளிவாகாமல் போகாது. இவையாவும் அவரை சிறந்த வராக உயர்த்தி விட்டது என்பதில் ஐயமில்லை.

அவருடைய நீண்ட வருணனைகள் மற்றும் சுருங்கக் கூறுதல்; (உதாரணமாக சருக்கம் 12-இல் இராமாயணத்தின் 5 காண்டங்களை சுருக்கமாகக் கூறியது) போன்றவற்றைக் கவனிக்கும்போது இவருடைய மேதை எவ்வளவு பெரியதென்பது தெள்ளத் தெளிவு.

காளிதாஸர் உவமைகளை அளிப்பதில் வல்லவர், ஒவ்வொரு சுலோகமும் உவமையுடன் உள்ளதென்பதை நாம் காணலாம், ஒவ்வொரு உவமையும் சுயமானவை. அவருக்கு முன்பு வாழ்ந்தவர் எவராலும் கூறப்படாதவைகளே ஆகும்.

(குமார சம்பவத்தில் ஒரு வீரனைமட்டும் கூறினார். ஆனால் ரகுவம்சத்தில் சூரியகுல வீர மறபையே கூறினார். சிலவிடங்களில் நீண்ட வருணனைகளை செய்து இராமர் கதைக்கு வந்தபோது எவ்வளவு குறுகக் கூறலாமோ அவ்வளவும் குறுக்கினார். இவ்வாறு செய்ததில் ரகுவம்சத்தார் அனைவர்களைப்பற்றியும் கூறி முடித்தல் வேண்டுமென்ற அவா கொண்டு அவ்வாறு செய்து முடித்ததாகவும் கருதலாம். இவர் வான்மீகியைப் போல் விரிவாகக் கூற விரும்ப வில்லையெனினும் அவர் பயன்படுத்திய சொற்கள் பலவிடங்களில் பயன்படுத்தியதும் காணலாகும்.

இப்படிப்பட்ட மாபெரும் காப்பியமானது தேவ நாகரிலிபியில் உள்ளதால் தமிழ் அன்பர்கள் வாசிக்க முடியாமலும், மொழியினை சுவைக்க உதவாமலும் இருப்பதை ஊகித்த நான் இதனை, தமிழ்

எழுத்துக்களையே சில மாற்றம் செய்வித்து ஸம்ஸ்கிருதத்தை வாசிக்க இயலும் அளவுக்கு transliteration செய்ய முயன்றேன்; முடிக்கவும் செய்தேன்.

என் முயற்சிக்கு ஊன்று கோலாக அச்சு வேலையை ஏற்று தம்மிடமில்லாத டைப்புகளைப் புதுசாய் வார்படம் செய்வித்து, கால தாமதத்தையும் பொருட்படுத்தாது சிரமத்தைப் பொருமையுடன் ஏற்று இந்நூலை சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீகிருஷ்ண சித்ரா பிரிண்டர்ஸ் அவர்களுக்கும், உற்சாகத்துடன் இவ்வேலையை முடிக்க துரிதமாக பாடுபட்ட அச்சகத்து பணியாளர்களுக்கும் நான் மிகவும் நன்றி செலுத்தக் கடமைபட்டுள்ளேன். முகப்பு படம் போட்டு தந்த ஓவியருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

வாசகர்கள் கவனத்திற்கு ஒரு குறிப்பு

நண்பர்கள் இம்மகா காப்பியத்தில் உள்ள வடமொழி சுலோகங்களை உள்ளவை உள்ளபடியே உச்சரிப்பில் பிழையின்றி எளிதில் வாசிக்க உதவக் கூடிய சிலகுறிப்புகள் இங்கு வழங்கப்பட்டுள்ளன. கிரந்த எழுத்துக்கள், தேவநாகரி எழுத்துக்கள் எதுவும் கற்காமலேயே, தமிழ் எழுத்துக்களைக் கொண்டே உச்சாரணையில் பிழையின்றி இந்நூலை வாசிக்கும் எளிய முறை ஒன்று transliteration கையாண்டு இந்நூலை அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதிலுள்ள குறிப்புகளை நன்கு மனதில் பதிய வைத்துக்கொண்டு வாசித்தால், நன்றாய் பொருள் விளக்கும்,

தமிழில் அழுத்தி ஒலிக்கும் எழுத்துக்கள் இல்லை. இடத்தைப் பொருத்து 'க'வை 'க' Ka வாகவும், Ga வாகவும் உச்சரிக்க வேண்டும். ஆனால் 'க' என்னும் தமிழ் எழுத்துக்கு மேல் ஒரு '1' நெடுங்கோடு (stoke) பயன்படுத்தி 'க' Kha ஆக இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் 'க'வுக்கும் 'க¹'வுக்கும் உள்ள வித்தியாசம் இதனால் விளங்கும். இதுபோல் Ga என்னும்போது 'க'வுக்குமேல் ஒரு '²' இரண்டுபோல் குறியிட்டு 'Ga' வாகவும், '³' என்ற குறியிட்டு Ghah வாகவும் உச்சரிக்க வழி செய்யப்பட்டுள்ளது. இதனால் க, க¹, க², க³ (Ka Kha Ga Ghah) என்ற நான்கு எழுத்துக்களின் வித்தியாசம் நன்கு அறிவிக்கப்பட்டது. இதுபோன்று ச, ச¹வும் (Cha Chcha) அறியப்பட வேண்டும். ஏற்கனவே, தமிழில் கிரந்த எழுத்து ஆகிய 'ஜ' வுள்ளதால் 'ஜ' வை அவ்வாறே உச்சரித்து இதில் அழுத்தி உச்சரிக்கும் Jhah வை மட்டும் 'ஜ'¹ என்று 'ஜ'வுக்கு

மேல் ஒரு சிறு கோடு (stroke) இட்டு, 'ஜ'¹ (Jhah) வாக்கப்பட்டுள் ளதை அறியவேண்டும். ஆகையால், 'ச ச¹' ஜ, ஜ¹ (Cha, ChCha, Ja JhJha) என்ற ஒலிகள் உண்டாக்கப்பட்டுள்ளன. தமிழில் உள்ள 'ட'கரத்துக்கு முன் 'ட'கரமெய்வரும்போது 'ட்ட' (tta) என்று ஒலிக்கிறோம். எடுத்துக்காட்டாக, பட்டம், மட்டம் முதலியன. இதில் அவ்வாறின்றி 'ட¹' (ttah) என்றும் குறிக்கப்பட்டுள்ளது. da என்பதற்கு 'ட²' என்று குறியிட்டும், இதை அழுத்தி ஒலிக்கும் போது அதாவது ddah 'ட³' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக இவற்றுள் (ட, ட¹, ட², ட³ ta, ttah, da, dhah) என நான்குவகை ஒலிகளும் விளங்கும். இதுபோன்று த, த¹, த², த³ tha, ttha, dha, dhdhah) என்னும் நான்கு ஒலிகளின் வித்தியாசங்கள் தரப்பட்டுள் ளன. இதுபோலவே ப, ப¹, ப², ப³, (pa, ppah, ba, bbah), என்னும் ஒலிகளின் வித்தியாசங்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழில் உள்ள 'டண்ணகரம்' அவ்வாறே ஒலிக்கும். வட மொழி யில் தந்நகரம், றன்னகரம் வெவ்வேறாக கிடையாது. ஆகையால், ஒரு தந்நகரமே எல்லாவிடத்திலும் பயன்படுத்தப்பட்டது. மற்ற எழுத்துக்களெல்லாம் தமிழ் எழுத்துக்களாகவே உள்ளவை உள்ள படியே பயன்படுத்தப் பட்டுள்ளன. வடமொழியில் 'ழ' வும் 'ற' வும் இல்லை. 'ஸ, ஷ, ஹ, க்ஷ' க்கள் ஏற்கனவே உண்டு இவையாவும் சேர்ந்து அதாவது-உயிரெழுத்துக்கள், உயிர் மெய் யெழுத்துக்கள் யாவும் சேர்ந்து வடமொழியில் 51, எழுத்துக்கள் உள. வடமொழி யில் எ, ஒ என்னும் குறில்கள் இல்லை. 'ஏ, ஓ' என்னும் நெடில்கள் மட்டும் உண்டு. அவையாவும் கீழ்க்கண்டவாறு;-''அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, லு, லூ, ஏ, ஐ, ஓ, ஔ, அம், அ:- என்பன உயி ரெழுத்துக்கள். 'அ:' என்பதை 'அஹ' என்று உச்சரிக்க வேண்டும்.

உயிர் மெய்யெழுத்துக்கள்:- க, க¹, க², க³, ங, ச, ச¹, ஜ, ஜ¹, ஞ, ட, ட¹, ட², ட³, ண, த, த¹, த², த³, ந, ப, ப¹, ப², ப³, ம, ய, ர, ல, வ, ஶ, ஷ, ஸ, ஹ, ள, க்ஷ - என்பன. சில சமயங்களில் ல' வுக்குப் பதில் 'ள' வும் வரலாம்; தவறில்லை. இவற்றுள் 'ஶ' என் பதே புதிதாகத் தோன்றும். ஆனால், இதுவும் புதிதன்று. கிரந்த எழுத்தே ஆகும். இது 'ஸ' வுக்கும் 'ஷ' வுக்கும் இடைப்பட்ட ஒலியைக் குறிக்கும். உதாரணம் 'ஶாந்தி' முதலியன.

':' இந்த இரு சுழிகட்கு 'விஸர்க²ம்' என்று பெயர். இது பொதுவாக, ஒரு சொல்லின் கடைசியிலேயே வரும். சிற்சில சொற் களுக்கு இடையிலும் வருவதுண்டு. எடுத்துக்காட்டாக-'து:க¹ம்'- இதை துக்கம் என்றுரைக்காமல் 'துஹ்க'ம்' என்று ஒலிக்க வேண்டும்

இது (':') எந்த உயிர்மெய் யெழுத்தைத் தொடர்ந்து வருமோ அவ்வுயிர் மெய்யெழுத்தில் கலந்துள்ள உயிரெழுத்துடன் சேர்த்து 'ஹ'கரமாக உச்சரிக்க வேண்டும். அதாவது 'க:' என்பதனை 'கஹ' என்னும், 'பூ^{3}:' என்பதை 'பூ^{3}ஹூ' என்றும், 'தை:' என்பதை 'தைஹி' என்றும் - ஹ, ஹி, ஹூ, ஹெ, ஹ், என்றும் அந்தந்த எழுந்துக்களில் உள்ள உயிரெழுத்தைப் பொருத்து உச்சரித்துக் கொள்ளல் வேண்டும். ஒலிகளைப் பற்றிய ஐயம் இனி இராதென்றே நினைக்கிறேன்.

இதற்காக கிரந்த எழுத்துக்களையோ, அல்லது தேவநாகரி எழுத்துக்களையோ நண்பர்கள் கற்கவேண்டிய அவசியமில்லை. இனி ஸம்ஸ்கிரிதம் நன்கு வாசிக்கலாம்.

THIS BOOK IS PUBLISHED UNDER THE KIND FINANCIAL AID OF TIRUMALA TIRUPATI DEVASTHANAMS OF TIRUPATI, UNDER THEIR SCHEME OF 'FINANCIAL AID TO AUTHORS' AS PER THE R. O. C. NO EDIT. S.I/58/89 DATED 14-11-90 AND I AM THANKFUL TO THEM FOR HAVING SANCTIONED THE SAME.

AUTHOR

ஓம் ஐம் நம:

ரகுவம்ச மகா காவியம்

முதலாம் சுருக்கம்

சுலோகம் : வாக²ர்த¹ாவிவ ஸம்ப்ரிக்தெள வாக²ர்த¹ப்ரதி பத்தயே।
ஜக²த : பிதரெளவந்தே² பார்வதீ பரமேஶ்வரெள॥ 1

பதவுரை : வாக் அர்தா¹விவ = சொல்லின் பொருளைப் போல்; ஸம்ப்ரிக்தெள = ஒன்றோடொன்று இழைந்திருப்பது போன்று; (அதாவது வீழ்ச்சியிலாத் தொடர்புள்ள), ஜக²த : = உலகிற்கு; பிதரெள = தாயுந் தந்தையுமாகிய; பார்வதீ பரமேஶ்வரெள = பார்வதி அம்மையையும், பரமசிவனாரையும்; வாக²ர்த¹ ப்ரதிபத்தயே = வாக்கில் வெளிப்படும் பொருள்களின் அறிவுக்காக; வந்தே² = தொழுகிறேன்.

(கருத்துரை) : உலகத்திற்குத் தாய்த் தந்தையர்களாய், எழுத்துக்களடங்கிய சொற்களும், அவற்றின் பொருளும் எவ்வாறு ஒன்றுடன் மற்றொன்று வேறுபடாமல் உள்ளனவோ அதுபோன்று பாதிமடவரல் உருகொண்டு, ஒருவரையொருவர் பிரியாதிருக்கும், பார்வதி பரமசிவனார்களை, சொல், சொல்லின் பொருள்களின் ஞானம் பெறும் பொருட்டு வணங்குகிறேன். (ஒன்றற்கொன்று தவியணி)

சு॥ க்வ ஸூர்ய ப்ரப³வோ வம்ஶ: க்வசால்ப விஷயாமதி: ।
திதீர்ஷுர் து³ஸ்தரம்மோஹா து²டு²பே நாஸ்மி ஸாக³ரம் 2

(ப-ரை) : ஸூர்யப்ரப³வ : = சூரியனைக் காரணமாகக் கொண்ட; வம்ஶ: = குலம் (மறபு); க்வ = எங்கே; அல்பவிஷயா = சொற்பமாயறியத்தக்க பொருளையுடைய; மதிஶ்ச = அறிவு; க்வ = எங்கே; (தத¹ாபி = ஆயினும்); து²ஸ்தரம் = கடக்க முடியாத; ஸாக²ரம் = கடலை; மோஹாத் = அஞ்ஞானத்தால்; உடு²பேந = தெப்பத்தால்; திதீர்ஷு = தாண்ட எண்ணியவன்; அஸ்மி = ஆகின்றேன்,

(க-ரை) உலகத்தைக் காக்கும் பரிதியே கூடஸ்தனாகக் கொண்ட இந்த ரகுவம்சம் எங்கே? பொருளறியா என் புத்தி எங்கே? அற்பபுத்தியுடைய நான் ரகுவம்சத்தைப் பற்றி விளக்கு வதற்கு முயலுதல் என்பது: மடமையால், தாண்ட முடியாத மாக் கடலை தெப்பத்தின் வாயிலாக கடக்க முயற்சித்தல் போன்று உளது. அஃதெவ்வாறு முடியாதோ அவ்வாறே இதுவும் முடியதா தாகும். (உவமை மற்றும் காரணவணி)

சு:॥ மந்த²: கவியஶ: ப்ரார்தீ¹ க²மிஷ்யாம் யபுஹாஸ்யதாம் ।
ப்ராம்ஶிலப்³யே ப¹லேலோப³ா து²த²பாஹுரிவ வாமந: ॥ 3 ॥

(ப-ரை) மந்த²:=மூடனே ஆயினும்; கவியஶ: ப்ரார்தீ¹= கவிஞர்களின்; காப்பியம் பாடுதலால் உண்டாகும் புகழை அடை யத்தக்க; ப¹லே=பலனைக் கருதி; லோப³ாத்=வெஃகுதலால்; உத²ப²ாஹு:=மேலே தூக்கிய கைகளுடைய; வாமாத்இவ= குள்ளனைப்போல்; அபஹாஸ்யதாம்=ஏளனத்துச்கு ஆளாவதை; க²மிஷ்யாமி=அடைவேன்.

(க-ரை) உயரமானவர்களால் அடையத்தக்க ஒரு மரத்தி லிருக்கும் பழங்களை எட்டிப் பிடிக்கத்தன் கைகளை உயர்த்தி யுள்ள குள்ளனைக் கண்டு எவ்வாறு மக்கள் கேலியாக சிரிப்பார் -களோ, அவ்வாறு மூடனாகிய நான் மகாகவிகள் காப்பியங்களை இயற்றுவதால் அடையும் புகழைப் பெற விழையும் என்னைக் கண்டு "இம்மூடனாவது இக்காப்பியத்தை இயற்றுவதாவது விந்தையாக இருககிறதே" என என்னைக் கண்டு ஏளனஞ் செய் வார்கள். (முழுதுவமையணி)

சு॥ அத்¹வா க்ரிதவாக்²த்²வாரே வம்ஶோஸ்மிந் பூர்வஸூரிபி⁸: ।
மணௌ வஜ்ர ஸமுத்கீர்ணே ஸூத்ரஸ்யே வாஸ்திமே க²தி:॥ 4

(ப-ரை) அத்¹வா=அவ்வாறாயினும்; பூர்வஸூரிபி⁸:=முன்பு இருந்த வான்மீகி முதலிய வித்வான்களால்; க்ரித=செய்யப்பட்ட; வாக்=ராமாயணாதி பிரபந்த உருவில் உள்ள இலக்கியமே; ²த்வாரே=அறிமுகத்துக்கு. உபாயமாக உள்ள; அஸ்மிந்=இந்த; வம்ஶே=பரிதியின் மறபில்; வஜ்ரஸமுத்கீர்ணே=வஜ்ஜிரமென்னும் மணிக்குத் துளைப்போடும் ஒருவித ஊசியால் குத்தப்பட்ட; மணௌ=ரத்தினத்தில்; ஸூத்ரஸ்யேவ=நூலைப்போன்று; மே= எனக்கு; க²தி:=வழி; அஸ்தி=ஆகின் (இருக்கின்)றது.

(க-ரை) நான் ஏளனத்துக்குரியவனாகயிருக்கலாம். எவ்வா றெனில் வஜ்ஜிரத்தால் துளை செய்யப்பட்ட ரத்தினங்களில் நூல் அல்லது மெல்லிய கம்பி நுழைவதுபோல், வான்மீகி முதலிய மாபெருங் கவிஞர்களால் காட்டப்பட்ட வழியில் நான் செல்கின் றேன். அதாவது அவர்கள் சென்ற வழியையொட்டி நான் செல் கின்றேன் (விரியுவமையணி)

சு॥ ஸோஉஹமாஜந்ம ஶுத்^{2}த^{3}ாநாம் அப^{1}லோத^{2}ய கர்மணாம் ।
ஆஸமுத்^{2}ர க்ஷிதீஶாநாம் ஆநாக ரத^{1}வர்த்மநாம் ॥ 5

(ப-ரை) ஸோஹம் = அப்படிப்பட்ட நான்; ஆஜந்மஶுத^{3}த^{3}ா நாம் = பிறந்தது முதல் தூய்மையானவர்களும்; அப^{1}லோத^{2}ய கர் மணாம் = பிரயோஜனம் உண்டாகும் வரையில் தொழில்களைக் கொண்டவர்களும்; ஆஸமுத்^{2}ர க்ஷிதீஶாநாம் = கடல்கள் வரை பரவி யுள்ள நிலங்களுக்கு அரசர்களாயினாரும்; ஆநாக = புத்தேளுலகு வரை; ரத^{1}வர்த்மநாம் = தேர் செல்லும் பாதை உடையவர்களும்; (ஆகிய) ரகூ^{3}ணாம் = ரகுவம்சத்தில் பிறந்த அரசர்களின்; அந்வயம் = வமிசத்தைக் குறித்து; வக்ஷ்யே = சொல்லப்போகிறே னென்று (ஆறாம் சுலோகத்துடன் தொடரும்.)

(க-ரை) மேலே குறிப்பிட்டபடி உள்ளநான், பிறந்தது முதல் தூய்மையாய் உள்ளவர்களும், தொடுத்த தொழிலை கடைசி வரை செய்து முடிப்போரும் கடல் சூழ்ந்த நிலத்துக்கு அதிபர் களும் தேவலோகம் வரை தேர்மீது செல்லக் கூடியவர்களும்; (பலபடப்புனேவணி)

சு॥ யத^{1}ாவிதி^{3} ஹுத^{1}ாக்^{2}நீநாம் யத^{1}ா காமார்சி தார்தி^{1} நாம்
யத^{1}ாபராத^{3} த^{2}ண்ட^{2}ாநாம் யத^{1}ா கால ப்ரபே^{3}ாதி^{3} நாம்॥ 6

(ப-ரை) யத^{1}ாவிதி^{3} = சாத்திரங்களின் கூற்றுகட்குட்பட்டு; ஹுத அ^{2}கநீநாம் = வேட்கப்பட்ட க^{2}ார்ஹபத்யம், ஆஹவநீயம், த^{2}க்ஷிணம் என்னும் வன்னிகளை உடையவர்களும்; யத^{1}ாகாம = விழைவை மிஞ்சாதபடி; அர்சித அர்தி^{1}நாம் = தொழும்பிச்சைக் காரர்களை உடையவர்களும்; யத^{1}ாபராத^{1} = தண்டனையைத் தாண்டாதபடி; த^{2}ண்ட^{2}ாநாம் = தண்டனையை உடையவர்களும்; யத^{3}ாகால = நேரத்தைக் கடக்காமல்; ப்ரபே^{3}ாதி^{3}நாம் = விழித்துக் கொள்பவர்களும்.

(க-ரை) மறைகளில் உள்ளபடி வேள்விகளைச் செய் வோரும்; அண்டினோர்கட்கு வேண்டிய மட்டும் உதவுவோரும், தப்புகளுக்குத் தக்கவாறு தண்டனை அளிப்போரும், குறித்தக் காலத்தில் குறிப்பிட்ட தொழில்களைச் செய்து முடிப்போரும், காலங்கடத்தாமல் விழித்தெழுவோர்களும்; (பலபடப்புனைவணி)

சு॥ த்யாக²ாய ஸம்ப்³ரி தார்த¹ா நாம் ஸத்யாய மிதப³ாஷிணாம் ।
யஶஸே விஜிகீ²ஷிணாம் ப்ரஜாயை க்³ரிஹமேதி³ நாம்॥ 7

(ப-ரை) த்யாக²ாய = உரியவர்கட்குக் கொடுப்பதற்காக; ஸம்ப்³ரித அர்த¹ாநாம் = தேடப்பட்ட பொருள் கொண்டுள்ளவர் களும்; ஸத்யாய = வாய்மைக்காக; மிதப³ாஷிணாம் = சொற்பமாய்ப் பேசும் சுபாவம் உள்ளவர்களும் யஶஸே = புகழ்ப்பெறற்கு; விஜி கீ²ஷிணாம் = பிறரை வெல்ல விழைவோரும் ப்ரஜாயை = மக்க (பிள்ளைக)ளைப் பெற க³ிஹமேதி³நாம்; = இல்லறம் பூண்ட வர்களும்,

(க-ரை) உரியவர்களுக்குக் கொடுக்க வேண்டி பொருள் சம் பாதிப்போரும்; அதிகம் பேசினால் என்ன கேடுவருமோவென அஞ்சிமிதமாய் பேசுவோரும்; புகழ்ப் பெறவேண்டி பிற மன்னர்களை வெல்ல நினைப்போரும்; தென்புலத்தாரின் விடுதலைக்காக மக்களைப் பெற திருமணஞ் செய்துக் கொள் வோரும்; (பலபடைப்புனைவணி)

சு॥ ஶைஶவேஂப்³யஸ்த வித்³யாநாம் யௌவநே விஷயைஷிணாம் ।
வார்த³கே முநிவ்ரித்தீநாம் யோகே² நாந்தே தநுத்யஜாம் ॥ 8

(ப-ரை) ஶைஶவே = வாலைப் பருவத்தில்; அப்³யஸ்த வித்²யாநாம் = கற்கப்பட்ட கல்வி கேள்விகள் உடையவர்களும்; யௌவநே = இளமையில்; விஷய ஏஷிணாம் = புணர்ச்சியை விரும்பு வோரும்; வார்த³கே = முதுமையில் முநிவ்ரித்தீநாம் = தவசித் தொழில் மேற்கொள்வோரும்; அந்தே = கடைசியில்; தநுத்யஜாம் = உடலை விடுவோரும்;

(க-ரை) வாலைப் பருவத்தில் கல்வி கேள்விகள் உடையவர் களும், இளமையில் இல்லறம் கொள்வோரும்; முதுமையில் வாநப்ரஸ்தம் என்னும் தவவேடம் ஏற்போரும் அந்திய காலத்தில் யோகத்தால் உயிர் விடுவோரும்; (பலபடைப்புனைவணி)

ஸு॥ ரகூ³ணா மன்வயம் வக்ஷ்யே தநுவாக்² விப³வோ௨பி ஸந் ।
த²த்²குணை: கர்ணமாக³த்ய சாபலாய ப்ரசோதி²தம் ॥ 9

(ப-ரை) ஸோ௨ஹம். அப்படிப்பட்ட நான்; தநு=சொற்பமாய்; வாக் = வார்த்தைகளின்; விப³வோ௨பி = ஆக்க முடையவனாயினும்; தத்²கு²ணை: = அந்த ரகுவம்ஸத்தரசர்களின் பிறவி முதற் கொண்ட தூய குணங்களை; கர்ணம் = எனது செவிகள்; ஆக³த்ய=பெற்று; சாபலாய = சிந்தனையற்ற தொழில்களைச் செய்யும் சபலமான புத்தியால்; ப்ரசோதி²தஸ்ஸந்=தூண்டம் பட்டவனாய்; ரகூ³ணாம் = ரகுவம்சத் தரசர்களின்; அந்வயம்=மறைபைச் சார்ந்த பிரபந்தத்தை; வக்ஷ்யே= மொழிகிறேன்.

(க-ரை) சொற்றிறன் அதிகமில்லாதவனாயினும் அந்த ரகு வம்சத் தரசர்களின் குணம் போன்று, என்னை ஊக்குவிப்பதால், வாலை சபலத்தால் ரகுவம்சம் என்னும் இப்பெருங் காப்பியத்தை இயற்ற நான முயற்சித்தேன். (பிரிதாராய்ச்சியணி)

ஸு॥ தம் ஸந்த: ஸ்ரோது மர்ஹந்தி ஸத³ஸத்² வ்யக்தி ஹேதவ: ।
ஹேம்நஸ் ஸம்லக்ஷ்யதே ஹ்யக்³னௌ விஸு²த்²தி³ஸ்ஸ்யாமி-
காபிவா॥ 10

(ப-ரை) தம்=அந்த ரகுவம்சம் என்னும் பிரபந்தத்தை; ஸத³ஸத் வயக்தி ஹேதவ:=குற்றங் குறைகள் ஆராய்வதில் தேர்ந்தவர்களாகிய; ஸந்த: = அறிஞர்கள்; ஸ்ரோதும் = கேட்பதற்கு; அர்ஹந்தி = தகுந்தவர்களாக உள்ளனர்; (தத³ாஹி = அது பொருந்தும்); ஹேம்ந: = பொன்னானது; விஸு²த்²தி³: = குற்றமற்றதாயினும்; ஸ்யாமிகாபிவா= பிற உலோகங்களின் கலப்பால் குற்றமுற்றிருப்பினும்; அக்³னௌ=வன்னியிடம்; ஸம்லக்ஷ்யதே = காணப்படுகிறது.

(க-ரை) தங்கத்தின் தூய்மையும், அத்துடன் பிற உலோகங் களின் கலப்பினால் உண்டாய குற்றங்களும் அக்கினியால் அறியப் படுவது போல், குற்றங்குறைகள் கண்டறியக் கூடிய அதிகார முடைய அறிஞர்கள் குற்றங்களை விமரிசனம் செய்து, இந்தப பிரபந்தத்திலுள்ள குற்றங்களக் குறித்து மகிழ்வடையும்படி விழை கிறேன். (தொடர் முழுதுவமையணி)

அவதாரிகை: வம்சவிளக்கம் தொடங்குகிறது.

சு॥ வைவஸ்வதோ மநுர்நாம மாநநீயோ மநீஷிணாம் ।
ஆஸீந் மஹீக்ஷிதா மாத்²ய: ப்ரணவஶ் ச்¹ந்த³ஸாமிவ ॥ 11

(ப.ரை) மநீஷிணாம் = அறிஞர்களுக்கு; மாநநீய: = தொழப்படுவோனும்; ச¹ந்²தஸாம் = வேதங்களுக்கு; ப்ரணவ: இவ = ஓம் என்னும் எழுத்தைப் போன்று; மஹீக்ஷிதாம் = அரசர்களுக்கு; ஆத்²ய: = முதன்மையானவனாகிய; வைவஸ்வதோ நாம = வைவஸ்வதன் என்னும் புகழ்வாய்ந்த; மநு: = மனுமகாராஜன்; ஆஸீத் = இருந்தான்.

(க-ரை) அறிஞர்களுள் மேன்மை பொருந்தியவனாய்; வேதங்களுக்கு ஓங்காரம் போன்று அரசர்களுக்கு முதன்மையானவனாய்; வைவஸ்வதன் என்னும் பேரரசன் இருந்தான், (உவமையணி) (விவஸ்வன் = சூரியன்; வைவஸ்வதந் = சூரியனின் மகன்)

சு॥ தத²ந்வயே ஶுத்²தி³மதி ப்ரஸூதஶ் ஶுத்²தி³மத் தர: ।
தி²லீப இதி ராஜேந்²து ரிந்²து க்ஷீரநித³ா நிவ ॥ 12

ப ரை) ஶுத்²தி³மதி: = குற்றமற்ற: தத் அந்வயே = அந்த மனுவென்னும் பேரரசனுடையமறபில்; ஶு²த்³திமத்தர³: = மிகுந்த தூய்மையானவனாகிய; ²திலீப இதி = திலீபன் என்னும் புகழ் வாய்ந்த; ராஜேந்²து: = அரசர்களுள் ஒளிமிக்கவன்; க்ஷீர நித³ா = பாற்கடலில்; இந்²து: இவ = சந்திரனைப் போன்று; ப்ரஸூத: = பிறந்தான்.

(க-ரை) பாற்கடலில் மதிஉதயம் போன்று அத்தூய மறபில் மிகுந்த பரிசுத்தனான திலீபன் என்னும் அரசரேறு பிறந்தான். (விரியுவமையணி)

கீழ்க் கண்ட மூன்று சுலோகங்களால் அவரைப் பற்றி விளக்கப்படுகின்றது.

சு॥ வ்யூடோ³ர ஸ்கோ வ்ரிஷஸ்கந்த³: ஸாலப்ராம்ஶுர்
மஹாபு³ஜ: । ஆத்மகர்ம க்ஷமம் தே²ஹம்க்ஷாத்ரோ ³தர்ம
இவாஶ்ரித: ॥ 13

(ப-ரை) வ்யூட³உரஸ்க: = அகன்ற மார்புடையவன்; வ்ரிஷ = எருதின்; ஸ்கந்த³: = முதுகு போன்ற முதுகை உடையவன்;

ஸாலப்ராம்ஶு: = சாலம் (Sal tree) என்னும் மரம் போன்று உயரமானவனும்; மஹாபு³ஜ: = நீண்ட தோள்கள் உடையவனும்; ஆத்ம = தன்னுடைய; கர்ம = தொழிலுக்கு, க்ஷமம் = ஏற்ற; தே²ஹம் = உடலை; ஆஶ்ரித: — அடைந்த; க்ஷாத்ர: — க்ஷத்திரியர் (அரசர்) கட்குகந்த; த⁴ர்ம இவஸ்தி¹த: = வலிமை உடையவனாக தோன்றி;

(க-ரை) அகன்ற மார்பும் எருது போன்ற முதுகும் சால் மரம் போன்று உயரமும், முழங்கால்களைத் தொடும் நீண்ட புயங்கள் பெற்றவனாய், அரசர்களின் வீறே ஆண் மகனாய் பிறந்தானோவென பிரமை உண்டாக்கும் உடலுடையவனாக இருந்தான். (தொகையுவமையணி)

சு॥ ஸர்வாதிரிக்த ஸாரேண ஸர்வ தேஜோ பி³ ப⁴ாவிநா ।
ஸ்தி¹தஸ் ஸர்வோந்நதே நோர்வீம் க்ராந்த்வா
மேருரிவாத்மநா ॥ 14

(ப-ரை) ஸர்வ அதிரிக்த ஸாரேண = எல்லா பூதங்களை விட அதிக வலிவுடையதும்; ஸர்வதேஜ: = எல்லா ஒளிகளையும் அபி³ப⁴ாவிநா = இகழக் கூடியதும்; ஸர்வ உந்நதேந = எல்லாவற்றைவிட மேன்மையான; ஆத்மநா = உடலுடன்; மேரு: இவ = மேருவெனும் மலையைப்போல்; உர்வீம் = பூமியை; க்ராந்த்வா = வளைத்துக் கொண்டவனாய்; ஸ்தி¹த: = இருக்கின்றவனும்;

(க-ரை) எல்லாம் பூதங்களைவிட வலிவும் ஒளியும் பொருந்தியவனாய், மாந்தர் அனைவர்களைவிட உயரமான உருவாய், மேருபருவதம் பூமி அனைத்தையும் ஆக்கிரமித்து நிற்பது போன்றவனும் (தொடர் முழுதுவமையணி)

சு॥ ஆகார ஸத்²ருஶப் ரஜ்ஞ: ப்ரஜ்ஞயா ஸத்²ருஶாக²ம: ।
ஆக²மைஸ் ஸத்²ருஶாரம்ப⁴: ப்ராரம்ப⁴ஸ் ஸத்²ருஶோத²ய: ॥ 15

(ப-ரை) ஆகார: = உடலுக்கு; ஸத்²ருஶ: = சமமாய; ப்ரஜ்ஞ: = அறிவாற்றலுடையவனும்; ப்ரஜ்ஞயா = அறிவுக்கு; ஸத்ரி²ஶ ஆக²ம: = நிகரான நூலாராய்ச்சியுடையவனும்; ஆக²மை: = சாத்திரங்களோடு; ஸத்²ருஶஆரம்ப⁴: = சமமாகவுள்ள தொழில்கள் உடையவனும்; ப்ராரம்³ப: = தொழில்களோடு; ஸ்த்²ருஶ: உத²ய: = நிகராய பலனையும் அடைந்தவனாய்.

(க-ரை) உருவத்திற்குத் தகுந்த அறிவும், அறிவுக்கேற்ற நூலாராய்ச்சியும், நூலாராய்ச்சிக்கு நிகரான தொழில்களும், தொழில்களுக்குச் சமமான பலன்களுடையவனும் (அரதன மாலையணி)

சு॥ பீ^{3}ம காந்தைர் ந்ரிபகு^{2}ணைஸ் ஸப^{2}பூ^{3}வோப ஜீவி நாம் ।
அத்^{3}ரிஷ்ய [illegible] சாபி^{1}க^{2}ம்ய [illegible]ச யாதோ ரத்நை ரிவார்ணவः ॥ 16

(ப-ரை) ஸः = மேலே கூறிய குணநலங்களை உடைய அந்த திலீப மகாராஜன்; ^{3}பீம காந்தை: = அச்சங் கொடுக்கக் கூடியதும், மனதுக்கு உகந்ததுமான; ந்ரிபகு^{2}ணை: = அரசர்களின் ஒளி ஆற்றல் முதலியவற்றால்; (குடி, சீலம். கண்ணோட்டம் முதலியவற்றால்); உபஜீவ நாம் — அண்டி வருவோருக்கு; யாதோ^{2} ரத்நை: = நீர்வாழ்ப் பிராணிகளாலும், மணிகளாலும்; அர்ணவ இவ = கடலோன் போன்று; அத்^{2}ரிஷ்யஶ்ச = அலட்சியப்படுத்தப் படாதவனும்; அபி^{3}க^{2}ம்யஶ்ச = அண்டக் கூடியவனும்; ப^{2}பூ^{3}வ = ஆனான்)

(க-ரை) கடலோன் தன்னையண்டி வருவோருக்கு, திமிங்கலம் முதலிய கொடிய பிராணிகளால் அச்சமூட்டுபவனும், முத்து, பவழம் முதலியவற்றால் எவ்வாறு ஆசிரயிக்கக் கூடியவனாகி இருக்கின்றானோ, அது போல் திலீபமகாராசனும் தன்னையண்டினோருக்கு ஒளி ஆற்றல் முதலியவற்றால் அச்சம் தர வல்லவனாகவும் ; தயவு, கண்ணோட்டம் முதலியவற்றால் இன்றியமையாது அண்டக் கூடியவனாகவும் ஆனான் (முறையிற் படர்ச்சியணி)

சு॥ ரேக^{1}ா மாத்ரமபி க்ஷுண்ணா த^{2}ாமநோர் வர்த்மந:பரம் ।
ஸ வ்யதீயு: ப்ரஜாஸ் தஸ்ய நியந்துர் நேமிவ்ரித்தய: ॥ 17

(ப-ரை) நியந்து: = பயிற்சியாளனும். சாரதியுமாகிய; தஸ்ய = அந்த திலீப ராசனுடைய; நேமி = சக்கரங்களின் அச்சுகளைப் போன்று; வ்ரித்தய: தொழில்கள் உடையவனும்; ப்ரஜா: = குடிகள்; ஆமநோ: = மனுவரசனைத் தொடங்கி; க்ஷுண்ணாத் = கற்கப்பட்ட; வர்த்மந: = ஒழுக்கமுறையைவிட; பரம் = அதிகமாக; ரேக^{1}ா மாத்ரமபி = ஒரு கோட்டளவு: நவ்யதீயு: = தாண்டினாரல்லர்,

(க-ரை) கைதேர்ந்த ஓட்டுநர், தேரின் சக்கரங்கள் நடந்து தேய்ந்த வழியினின்று சற்றேனும் விலகிப் போகாமல் எவ்வாறு தேரை நடத்திச் செல்வானோ, அவ்வாறே நன்கு பயின்ற திலீப மகாராசன் தன் குடிகளை மனுமுதற்கொண்டு ஏற்பட்ட ஒழுக்கங்களினின்று இம்மியளவும் வழுவாது காத்து வந்தான். (விரிபுவமையணி)

சு ॥ ப்ரஜா நாமேவ பூ[3]த்யர்த்[1]ம் ஸ தாப்[3]யோ ப[2]லிமக்[2]ரஹீத் ।
ஸாஹஸ்ரகு[2]ண முத்ஸ்ரஷ்டு மாத[3]த்தேஹி ரஸம்ரவி: ॥ 18

(ப-ரை) ஸ: = அந்த திலீப மகாராசன்; ப்ரஜாநாம் = குடிகளுடைய; பூ[3]த்யர்த[1]மேவ = அபிவிருத்திக்கே; தாப்[3]ய: = அக்குடிகளால்; ப[2]லிம் = ஆறில் ஒரு பங்கான வரியை; ஆக்[2]ரஹீத் = பெற்று வந்தான் (ததாஹி = அதாவது) ரவி: = சூரியன்; ஸாஹஸ்ர கு[2]ணம் யத[1]ா தத[1]ா = பற்பல குணங்கள் பெறுவது போன்று; உத்ஸ்ரஷ்டும் = விடுவிக்கும் பொருட்டு; ரஸம் = தண்ணீரை; ஆத[3]த்தே = பெற்றுக்கொள்கிறான்.

(க-ரை) அந்த திலீபவரசன் குடிகளிடமிருந்து ஆறில் ஒரு பங்கு வரியை (காணிக்கையை)ப் பெற்றுக் கொண்டு வந்தான். ஆதவன் ஆயிரம் மடங்குகள் விடுவதற்கன்றோ தண்ணீரைப் பெறுகிறான். (புகழ்பொருளுவமையணி)

அவ ॥ அவருடைய புத்திகூர்மை முதலியவை விளக்கப் படுகிறது.

சு॥ ஸேநா பரிச்ச[1]த[2]ஸ் தஸ்ய [2]த்வயமேவார்த[1] ஸாத[3] நம் ।
ஶாஸ்த்ரே ஷ்வவ்யாஹதா பு[3]த்[3]தி[3]ர் மௌர்வீ த[3]நுஷிசாததா॥ 19

(ப-ரை) தஸ்ய = அந்த திலீப மன்னனுக்கு; ஸேநா = படைகள் நான்கு பரிச்ச[1]த[2]: = உபகரணங்கள்; பபூ[3]வ = ஆயின; அர்த[1]ஸாத[3]நம் = பிரயோஜனத்தின் சாதனையோ; ஶாஸ்த்ரேஷு = நூல்களில்; அவ்யாஹதா = தடையற்ற; புத்[3]தி[3]: = புத்தியும், த[3]நுஷி = வில்லேந்துவதில்; ஆததா = தொடுக்கப்பட்ட; மௌர்வீ = நாணும்; த்[2]வயமேவ = இரண்டே.

(க-ரை) அந்த திலீப மன்னனுக்குப் படைகள் துணைப் பொருட்களாகத் திகழ்ந்தனவே யன்றி பிரயோசனங்களை நிறை

வேற்றிக் கொள்வதற் கன்று. அவ்வாறாயின் பிரயோசனங்களை எவ்வாறு சாதித்துக் கொண்டான் எனின், சாத்திரங்களில் நிக ரில்லா புத்திகூர்மையும் வில்லில் நாணேற்றுதல் என்னும் இவ் விரண்டு சாதனங்களால் (கருத்துடையடையணி)

அ॥ ஆனால் எங்ஙனம் ஆண்டு வந்தான் என்பது கூறப் படுகிறது.

சு॥ தஸ்ய ஸம்வ்ரித மந்த்ரஸ்ய கூ^{2}ட^{3}ாகாரேங்கி^{2}தஸ்யச ।
ப^{1}லாநுமேயா : ப்ராரம்ப^{3}ா: ஸம்ஸ்காரஃ ப்ராக்தநா இவ ॥ 20

(ப-ரை) ஸ்ம்வரித=மறைக்கப்பட்ட; மந்தரஸ்ய= மந்திரங் களை உடையதும்; கூ^{2}ட^{3}கார=உள்ளடங்கிய; ஆகார=மகிழ்வு முதலியன அறிவிக்கும் கண்புருவம் முகபாவனை முதலியவைக் கொண்ட உருவமும்; இங்கி^{2}தஸ்ய=மனத்துளடங்கிய; ப்ராரம்ப^{3}ா= சாமம் முதலிய உபாயங்களை ஆளுதல்; ப்ராக்தநா:=முன் பிறவி யில் பிறந்த ஸம்ஸ்கார இவ=குணங்கள் போன்று ப^{1}லாஅநு மேய:=தொழில்கள் நடத்துவதில் பயன்படுத்தப்படக் கூடியவை களாய்; ஆஸந்=ஆயின.

(க-ரை) அத்திலீபவரசன் தான் செய்யுந் தொழில்களை மகிழ்வு முதலியவற்றை அறிவிக்கும் செய்கைகளால் பிறர் அறியா வண்ணம் செய்து வந்தான். பிறர் அறிந்துக் கொள்வது எங்ஙன மெனிலோ நிகழும் பிறப்பில் நுகர்ந்து வரும் நன்மை தீமைகள் பொறுந்த முற்பிறவியில் இவ்வாறு நடந்திருக்குமென ஊகித்து அறிவது போன்றே= ''இதற்கு இவ்வாறு செய்திருக்கலா'' மென்று ஊகித்துத் தெளிதல், வாயிலாகவே, என அறிய வேண்டிய தாயிற்று (சொற்பொருட் பின்வருவிளக்கணி)

அ॥ அவனது குணங்கள் விளக்கப்படுகின்றன.

சு॥ ஜுகே^{2}ா பாத்மாந மத்ரஸ்தோ பே^{3}ஜேத^{3}ர்ம மநாதுரஃ ।
அக^{2}ரித்^{3}நு ராத^{2}தே^{2} ஸோர்த்^{1} மஸக்தஸ் ஸுக^{1}மங்வபூ^{3}த் ॥ 21

(ப. ரை) ஸஃ= அந்த திலீபமன்னன்; அத்ரஸ்தஸ்ஸந்= அச்சமில்லாதவனாகவே; ஆத்மாநம் = உடலை; ஜுகே^{2}ாப= காத்து வந்தான்; அநாதுர:=நோய்வாய்ப்படாமலேயே; த^{3}ர்மம்= புண்ணியத்தை; பே^{3}ஜே = சம்பாதித்தான்; அக்^{3}ரித்^{3}நு =

விழைத லில்லாமலேயே; அர்த^{1}ம் = பொருளை (பணம்); ஆத^{2}தே^{3} = பெற்று வந்தான்; அஸக்த:= பற்றற்றவனாகவே; ஸுக^{1}ம் = சுகங்களை; அந்வபூ^{3}த் = அனுபவித்து வந்தான்.

(க-ரை) அந்த திலீபமன்னன் தன்னுடலைப் பேணிவந்தது அறம்பொருளின்பங்களை நிறைவேற்றவேயன்றி உடல் வீழு மென்றஞ்சியன்று; அவன் நோயற்றவனாக இருந்து புண்ணியம் செய்து வந்தான்; போர் முனையில் பொருள் சம்பாதித்தாலும் பொருளீட்டும் பற்றுக் கொண்டன்று. அவன் சுகபோகங்கள் அடைந்திருப்பினும் அவற்றின் மீதுள்ள பற்றாலன்று, (அதாவது அவனுக்குப் பயம், நோய்களின்றி, பொருள்மீது பற்றின்மை; சுக போகங்களிலும் பற்றுவைக்காமலிருந்தான் (அரதனமாலையணி)

அ॥ ஒவ்வொரு குணத்திற்கும் எவ்வாறு இயங்கி வந்தான் என்பது,

சு॥ ஜ்ஞாநே மௌனம் க்ஷமாஶக்தௌ த்யாகே^{2} ஶ்லாக^3ா
விபர்யய: । கு^{2}ணா கு^{2}ணாநு ப^{2}ந்தி^{3}த்வாத் தஸ்ய ஸப்ரஸவா
இவ ॥ 22

(ப-ரை) ஜ்ஞாநே=பிறர் குணங்கள் அறிந்திருந்தும்; மௌனம் =கட்டுப்பாடுடைய பேச்சும்;ஶக்தௌ=பதிலுக்குத் தீங்குசெய்யும் ஆற்றலிருந்தபோதிலும்; க்ஷமா: பொருமையும்; த்யாக^2 = ஈதல் உள்ளபோதிலும், ஶ்லாக^3ா விபர்யய:= போற்றப் படுதலைக் காண்பது அரிது; தஸ்ய= அப்பேரரசனுடைய; கு^{2}ண: = ஞானம் முதலிய குணங்கள்; குண அனுப^{2}ந்தி^{3}த்வாத் = எதிர்மாறான மௌனம் முதலிய குணங்களோடு சேர்ந்துள்ளமையால்; ஸப்ர ஸவாஇவ= உடன் பிறந்தவை போன்றே; அபூ^{3}வந் = ஆயின.

(க-ரை) உலகத்தாருடைய குணங்களை அறியுந்தன்மை யிருந்தும், பிறரின் கெட்டகுணங்களை விளம்பரப்படுத்தாமலும்; தீங்கு அல்லது உதவிக்குமாறு செய்யும் திறனிருந்த போதிலும், பிறருடைய கெடுதிகளைப் பொறுத்தருளுதல்;ஈயுங்குணமிருப்பினும், பிறரால் போற்றப்படுதலை எதிர்பாராதும்; தியாகம் இருந்தும், ஆகுலமில்லாமலிருப்பது ஒரு மனிதனுக்கு அரிது. ஒருவனிடம் காண முடியாத இவ்விரட்டைக் குணங்கள் இந்த திலீபமன்னனிடம் காணப்பட்டன. (ஒற்றைமணிமாலையணி)

அ|| திலீபனுக்கு எது முதுமை என்பது பற்றி விளக்கப்படுகிறது.

சு || அநாக்ரிஷடவ்ய விஷயைர் வித்[2]யாநாம் பாரத்[2]ரிம்வந: ।
தஸ்ய த[3]ர்ம ரதே ராஸீத் வ்ரித்[2]த[3]த்வம் ஜரஸா விநா ॥ 23

(ப-ரை) விஷயை: = கேள்வி முதலியவற்றால்; அநாக்ரிஷ்டஸ்ய = தன்வயப்படுத்திக் கொள்ளாதும்; வி[2]த்யாநாம் = மறைகள் அவற்றின் அங்கங்கள் ஆகியவற்றின் கல்விகளின்; பாரத்[2]ரிம்வந: = முடிவு காணும்படியான; த[3]ர்மரதே: = அறத்தில் ஊக்கமுண்டாகிய; தஸ்ய = அந்த திலீப மன்னனுக்கு; ஜரஸபவிநா = முதுமை தவிர்த்து; வ்ரித்[2]த[3]த்வம் = மூப்பு; ஆஸீத் = ஆயிற்று.

(க-ரை) புலன்களை வென்றவனும், எல்லாக் கல்விகளிலும் கரை கண்டவனும், அறநெறியாளனும் ஆகிய திலீப மன்னனுக்கு மூப்பைத் தவிர மற்ற எல்லாவகையான்வற்றிலும் மூப்பு அதாவது மேன்மை உண்டாகி இருக்கிறது. (பெருமையணி)

சு|| ப்ரஜாநாம் விநயாத[3]ாநாத்[2]ரக்ஷணாத்[2] ப[3]ரணாத[2]பி ।
நபிதா பிதரஸ் தாநாம் கேவலம் ஜந்மஹேதவ: ॥ 24

(ப-ரை) ப்ரஜாநாம் = மக்களுடைய; விநய = கற்பித்தலின்; ஆத[3]ாநாத் = செய்தலாலும்; ரக்ஷணாத் = ஆபத்துக்களை தடுப்பதாலும்; ப[3]ரணாத[2]பி = உண்டி முதலியன அளித்து காப்பாற்றுதலாலும்; ஸ: = அந்த திலீப மன்னன்; பிதா = தகப்பன்; அபூ[3]த் = ஆனான்; தாஸாம் = அந்த குடிமக்களின்; பிதரஸ்து = தகப்பன் மார்களோ; கேவலம் = மிகுந்த; ஜன்மஹேதவ: = பிறப்பிப்பதற்கு மட்டுமே கர்த்தாக்கள்; அபூ[3]வந் = ஆயினர்.

(க-ரை) அந்த திலீப மன்னன் குடிகளை நன்நெறியில் நடத்திச் செல்வதாலும், அச்சம் நீக்கிக் காத்தலாலும், உண்ண உணவு முதலியனவளித்துக் காப்பாற்றுவதால் அவர்களுக்குத் தந்தையானான்; அவர்களின் தந்தைமார்கள் அவர்களுக்குப் பிறவி தரக்கூடிய கர்த்தாக்கள் மட்டுமே ஆயினர். (வீறுகோளணி)

சு || ஸ்தி[1]த்யை த[2]ண்டயதோ த[2]ண்ட்யாந் பரிணேது ப்ரஸூதயே
அப்[3]யர்த்[1] காமா தஸ்யாஸ்தம் த[3]ர்மாயைவ மநீஷிண: ॥ 25

(ப-ரை) [2]தண்டயாநேந = தண்டனைக்குத் தகுந்தவர்களாகியவர்களே; ஸ்தி[2]த்யை = உலகு நிலை பெறுவதற்கு

த^{2}ண்டயத: = தண்டனையளித்துவரும்; ப்ரஸூதயே = மக்களைப் பெறுவதற்கு; பரிணேது = மனைவியை ஏற்கும்படியான; மநீஷிண: = அறிஞனான; தஸ்ய = அந்த திலீபவரசனுக்கு; அர்த^{1}காமாபி = பொருளும் காமங்களுக்கும்; த^{3}ர்மாயை அறத்துக்கே; ஆஸ்தாம் = ஆயின.

(க-ரை) அறிவுமிகுந்த திலீபராஜன் தண்டிக்கக்கூடியவர்களை தண்டித்தும், மக்களைப் பெற்றெடுக்க மனைவியை மணந்தும் வந்தான். அதனால், அவன் செய்த துட்டர்களை அடக்குதல், நல்லவர்களைக் காத்தல் முதலியவற்றால் அவனுக்கு கிடைத்து வந்த செல்வமும் மனைவியை மணத்தலும் அறஞ் செய்து முடிக்கவே ஆயின; அதாவது; அவனின் பொருளீட்டல் நியாயத்துடன் கூடியாவாயிற்று. அதாவது அவன் உரியகாலத்தில் தனது இல்லாளை அடைந்ததும் அறம்பொருட்டே ஆயிற்று. (தன்மை நவிற்சியணி)

சு ॥ து^{2}தே^{2}ாஹ க^{2}ாம் ஸயஜ்ஞாய ஸஸ்யாய மக^{3}வாதி^{3}வம் ।
ஸம்பத்^{2} விநிமயே நோபெ^{3}ள த^{2}த^{3}துர் பு^{3}வநத்^{2}வயம் ॥ 25

(ப-ரை) ஸ: = அந்த திலீபன்; யஜ்ஞாய = வேள்வி செய்தற் பொருட்டு; க^{2}ாம் = நிலத்தை; து^{2}தே^{2}ாஹ = கறந்தான்; மக^{3}வா = தேவேந்திரன்; ஸஸ்யாய = பயிர்களைப் பெருக்கும் பொருட்டு; தி^{2}வம் = சுவர்கலோகத்தை; து^{2}தே^{2}ாஹ = கறந்தான்; உபெ^{3}ள = திலீபனும் தேவர்கோனும்; ஸம்பத் = ஆக்கங்களின்; விநிமயேந பகுத்துக் கொடுப்பதாலும்: பு^{3}வநத்^{2}வயம் = விண்மண்ணுலகங்களின்; த்^{2}வயம் = இரண்டினையும் = த^{2}த^{3}து: = காப்பாற்றினார்கள்.

(க-ரை) திலீபகன்னன் சிற்றரசர்களிடம் கப்பமெனப்படும், நிலந்தனிலுள்ள பொருள்களை ஏராளமாகப் பெற்றுக்கொண்டு, வேள்விகள் நடத்திவைத்தல் வாயிலாக உம்பர்களை மகிழ்வித்து மனநிறைவு உண்டாக்கி தேவருலகையும்; உம்பர்கோன் தேவலோகத்திலிருந்து நிலவுலகுக்கு மழைபெய்வித்து பயிர்விளைச்சல் பெறுகச் செய்து பூமியையும், இவ்வாறு ஒருவர் உலகத்தை மற்றவராக இருவுலகங்களையும் காப்பாற்றி வந்தனர். (உயத்துணர் வணி)

சு ॥ நகி[1]லாநு யுயஸ் தஸ்ய ராஜாநோ ரக்ஷிதுர் யஶ: ।
வ்யாவ்ரித்தா யத் பரஸ்வேப்[3]ய: ஶ்ரிதௌ தஸ்கரதா
ஸ்தி[1]தா ॥ 27

(ப-ரை) ராஜாந: = மற்றுமுள்ள அரசர்கள்; ரக்ஷது: = அச்சத்தால் ஆண்டு வந்ததால்; தஸ்ய = அந்த திலீபமன்னன் போன்று; யஶ: = புகழை; நாநுயயு:= தொடர்ந்து பெற்றாராயின ரல்லர்; யத் = எக்காரணத்தால் தஸ்கரதா = களவு; பரஸ்வே[3]ப்ய:= பிறர் பொருள்களாலும்; வ்யாவ்ரித்தா ஸதி= புறக்கணிக்கப் பட்டவை யாயின்; ஶ்ரிதௌ = சொல்லளவில்; ஸ்தி[1]தா = இருந்து வந்தது.

(க-ரை) குடிகளைக் காப்பதில் பிறவரசர்கள் திலீப பேரரசனுக்கு நிகரானவனென்ற நற்புகழைப் பெற்றன ரல்லர். ஏனெனறால், திலீபனுடைய அரசில் கள்ளத்தனம் என்பது சொல்லளவில் அறியப்பட வேண்டி இருந்ததேயன்றி செயலளவில் காணப்பட முடிந்ததில்லைஅதாவது: திருடு அறவே இல்லை யென்பதாம். (கருத்துடையடைகொளியணி)

சு ॥ த[2]வேஷ்யோபி ஸம்மத ஶ்ஶிஷ்டஸ் தஸ்யார்தஸ்ய யதௌ[1]ஷத[3]ம் ।
த்யாஜ்யோ து[2]ஷ்ட: ப்ரியோஉஸ்யாஸீ த[2]ங்கு[2]ளீவோரக[2]க்ஷதா ॥ 28

(ப-ரை) ஶிஷ்ட: = தகுதியுள்ள பெரியார்கள்; த்[2]வேஷ்யோஉபி= பகைவராயினும்; ஆர்தஸ்ய = நோயாளிக்கு; ஔஷத[3]ம் யத[3]ா = மருந்து எவ்வாறோ அவ்வாறே; தஸ்ய= அந்த திலீப மன்னனுக்கு; ஸம்மத: = உடன்பாடு; ஆஸீத் = ஆயிற்று; து[2]ஷ்ட:- குற்றஞ்செய்வோர்கள்; ப்ரியோ பி = அன்பு கொள்ள வேண்டியவர்களே ஆயினும்; உரக[2]க்ஷதா = அரவத்தால் கடியுண்ட; அங்கு[2]ளிஇவ = விரல் போன்று; த்யாஜ்ய = விடத்தக்கது; ஆஸீத் = ஆயிற்று;

(க-ரை) அந்த திலீப சக்கரவர்த்திக்கு நல்லார்கள் தம் பகைவரே ஆயினும், நோயாளிக்கு மருந்து வெறுப்பதே ஆயினும் எவ்வாறு விரும்புவானோ அவ்வாறாயினர். துட்டர்கள் தமக்கு அன்பர்களே ஆயினும் பாம்பால் கடியுண்டவிரல் எவ்வாறு வெட்டி யெடுக்கப்பட்டு விடுமோ அதுபோல் விடத்தக்கவர்கள் ஆயினர். (வினை முதல் விளக்கணி)

அவ ॥ அவனுடைய பரோபகாரம் விளக்கப்படுகிறது.

சு ॥ தம்வேத3ா வித2தே3 நூநம் மஹாபூ3த ஸமாதி3நா ।
தத1ாஹி ஸர்வே தஸ்யாஸந் பரார்தை1க ப1லாகு2ணா: ॥ 29

(ப-ரை) வேத3ா: = பிரமன்; தம் = அந்த திலீப மன்னனை: மஹாபூ3த: = நிலம் முதலிய பெரும் பூதங்களின்; ஸமாதி2நா = காரணக் கூறுகளால்; வித2தே3 = உண்டாக்கினான்; நூநம் = உண்மை; தத1ாஹி = அதுசரிகயே; தஸ்ய = அந்த திலீப மன்னன்; ஸர்வே = எல்லா; கு2ணா: = குணங்கள்; பர = பிறர்களுடைய; அர்த1 = நன்மையையே = ஏகப1லா = இன்றியமையாத பலன்களாக ஆஸீத் = ஆயின.

(க-ரை) பிரம்மா அந்த திலீப மன்னனை மேன்மையான நிலம் முதலிய ஐம்பெரும் பூதங்களின் காரணக் கூறுகளைக் கொண்டு உண்டாக்கினான். எவ்வாறெனின். அவனின் குணங்கள்; அனைத்தும் பிறர் சுகத்திற்கே நிலையாய் வைத்தான் (அவையிலொற்றுமையுருவகவணி)

சு॥ ஸவேலா வப்ர வலயாம் பரிகீ1க்ரித ஸாக2ராம் ।
அநந்ய ஶாஸநா முர்வீம் ஶஶாஸைக புரீமிவ ॥ 30 ॥

(ப-ரை) ஸ: = அந்த திலீப மஹா ராஜா; வேலா = கடற்கரையை; வப்ரவலயாம் = அண்டையாய் சுற்றும் பெற்ற; பரிகீ1க்ரித = அகழிகளாகச் செய்த; ஸாக2ராம் = கடல்கள் உடையதும்; அநந்யஶாஸநாம் = பிறவரசர் ஆணையின்றி உள்ள; உர்வீம் = பூமியை; ஏகபுரீமிவ = ஒரே நகரம் போன்று; ஶஶாஸ = கற்பித்தான் (ஆண்டான்)

(க-ரை) அந்த திலீப மஹாராஜா நிலம் அனைத்தும் ஓர் குடையின்கீழ் ஒரே நகரம் போன்று ஆண்டு வந்தான்.
(தற்குறிப்பணி)

சு ॥ தஸ்ய த2ாக்ஷிண்ய ரூடே3ந நாம்நா மக2த3 வம்ஶஜா।
பத்நீ ஸுத2க்ஷிணே த்யாஸீ த2த்3வரஸ்யேவ த2க்ஷிணா ॥ 31

(ப-ரை) தஸ்ய = அந்த திலீப மன்னனுக்கு; மக2த3 = மகத நாட்டுமன்னனுடைய; வம்ஶ = குலத்தில்; ஜா = பிறந்த; த2ாக்ஷிண்ய

ருடே³ந=பிறர்க்குக் கண்ணோடுவதில் புகழ் வாய்ந்த; நாம்நா= பெயரால்; ஸு³த³க்ஷி²ணேதி=சுதக்ஷிணை என்கின்ற; பத்நீ= மனைவி அத்³வரஸ்ய = வேள்விக்கு; தக்ஷிணா இவ = தக்ஷிணா என்னும் மனைவி போன்று; ஆஸீத் = ஆனாள்.

(க-ரை) திலீப மன்னனுக்கு உயர்ந்த மகதவம்சத்தில் பிறந்த வளும், தாக்ஷிண்யம் என்னும் குணத்தால் நற்புகழ்வாய்ந்தவளும், தக்ஷிணை என்னும் பெயருக்கேற்றவாறு வேள்விக்கு தக்ஷிணாக்னி என்பது துணையாவது போல் அவனுக்கு மிகநேசமுள்ள மனைவியானாள். (பெருமை மற்றும் ஸிரியுவமையணி)

சு॥ களத்ரவந்த மாத்மாநம் அவரோதே³ மஹத்யபி ।
தயா மேநே மநஸ்விந்யா லக்ஷ்ம்யாச வஸுதா³தி³ப: ॥ 32

(ப-ரை) । வஸுதா³தி³ப:= அரசனாகிய திலீபன்; அவரோதே³ அந்தப்புரப் பெண்கள்; மஹத்யபி = அதிகமாயிருந்த போதிலும், மநஸ்விந்யா = திடமான மனதுடைய தயா=அந்த சுதக்ஷிணா தேவியாலும்; லக்ஷ்ம்யாச = நிலமெனும் திருமகளாலும்; ஆத்மாநம் தன்னை; களத்ரவந்தம் = மனைவியுடையவனாகவும்; மேநே= எண்ணினான்.

(க-ரை) அந்த திலீபமன்னன் பல அந்தர்புரத்து மகளிர் இருந்தும், பேரழகியும் மனோகரியுமான, சுதக்ஷிணாதேவியாலும் நாடென்னும் திருமகளாலும், தன்னையோர் நல்லில்லாளனாக எண்ணினான் (தன்குணமிகையணி)

சு॥ தஸ்யா மாத்மாநுரூபாயா மாத்மஜந்ம ஸமுத்ஸுக: ।
விலம்பி³த ப¹லை: காலம் ஸ விநாய மநோரதை¹: ॥ 33

(ப-ரை) ஸ: =அந்த திலீப மன்னன்; ஆத்மாநு ரூபாயாம்= தனக்கு நிகரானவளும்; தஸ்யாம்= அந்த சுதக்ஷிணாதேவியிடம்; ஆத்மஜந்ம = மகனிடம்; ஸமுத்ஸுகஸ்ஸந்=பற்றுடையவனாய்; விலம்பி³த= தாமதமான; ப¹லை:= பலனுண்டாய; மநோரதை¹:= ஆசைகளால்; காலம் = காலத்தை; நிநாய = கடத்தினான்.

(க-ரை) திலீப மன்னன் தனக்கு நிகராய சுதக்ஷிணாதேவிக்கு மகன் பிறக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டவனானான். அவ்வாறு சிறிது காலம் கடந்தது. (நிகழ்வினவிற்சியணி)

ஸு॥ ஸந்தா நார்த^1ாய வித^{3}யே ஸ்வபு^{3}ஜா த^{2}வதாரிதா ।
தேநதூ^{3}ர் ஜக^{2}தோ கு^{2}ர்வீ ஸசிவேஷு நிசிக்ஷிபே ॥ 34

(ப-ரை) தேந = அந்த திலீப மன்னவனால்; ஸந்தாந = மகப்பேறே; அர்த^1ாய = பிரயோசனமாகக் கொண்ட; வித^{3}யே ஒழுக்கமுறையாக; ஸ்வ = தனது; பு^{3}ஜாத் = தோள்களிலிருந்து அவதாரிதா = இறக்கப்பட்ட; ஜக^{2}த: = உலகத்தின்; கு^{2}ர்வீ = அதிகமான; தூ^{3}: = பளுவை; ஸசிவேஷு = அமைச்சர்களிடம்; நிசிக்ஷிபே = வைக்கப்பட்டது.

(க-ரை) திலீப மன்னன் தனக்கு மகப்பேறு உண்டாகும் பொருட்டு, அதற்காற்ற வேண்டிய நியமங்களைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தமையால், தானேற்றுவந்த அரசாண்மையென்னும் பளுவை அமைச்சர்களுக்கு ஒப்படைத்தான் (உருவகவணி)

ஸு॥ அத^1ா ப்^{3}யர்ச்ய வித^3ாதாரம் ப்ரயதௌ புத்ரகாம்யயா ।
தௌ த^{2}ம்பதீ வஸிஷ்டஸ்ய கு^{2}ரோர் ஜக்^{2}மது ராஸ்ரமம் ॥ 35

(ப-ரை) அத^1 = அவ்வாறு தன் அரசு பாரத்தை ஒப்படைத்த பிறகு; புத்ரகாம்யயா = மகப்பேற்றை விழைந்தவனாய்; தௌ = அந்த; த^{2}ம்பதீ = ஸு^{2}தக்ஷிணா திலீபர்கள்; ப்ரயதௌ ஸந்தௌ = பரிசுத்தமானவர்களாய்; வித^3ாதாரம் = பிரம்மதேவனை; அப்^{3}யர்ச்ய = தொழுது; கு^{2}ரோ: = தமது குலகுருவாய; வஸிஷ்டஸ்ய = வசிட்டருடைய; ஆஸ்ரமம் ஆச்சிரமத்தை நோக்கி; ஜக்^{2}மது: = புறப்பட்டுச் சென்றனர்.

(க-ரை) அதன் பிறகு திலீப மன்னனும் சுதக்ஷிணாதேவியும் மகப்பேறு பெறும் பொருட்டு அதற்குண்டான நியமங்களைக் கடைப் பிடித்தவர்களாய், அயனைத் தொழுது, தமது குல குருவாகிய வசிட்டமா முனிவருடைய ஆசிரமத்தை நாடிச் சென்றனர், (எளிதின் முடிபணி)

ஸு॥ ஸ்நிக்^{2}த^3 க^{2}ம்பீர நிர்கோ^{3}ஷ மேக^{3}ஸ்யந்த^{2}ந மாஸ்ரிதௌ ।
ப்ராவ்ரிஷேண்யம் பயோவாஹம் வித்^{2}யுதை^{2}ராவதாவிவ ॥ 36

(ப-ரை) ஸ்நிக்^{2}த^3 = இனிமையானதும்; க^{2}ம்பீர = பெரும்; நிர்கோ^{3}ஷம் = ஓசையுள்ள; ஏகஸ்யந்த^{2}நம் = ஒரேதேரை; ப்ராவ்ரிஷேண்யம் = மாரிக்காலத்தில் பிறந்த; பயோவாஹம் = முகிலும்; வித்^{2}யுத் ஐ ராவதா இவ = மின்னலும் வெள்ளையானை,

கள் போன்று; ஆஸ்தி[1]தௌ ஸந்தௌ = ஏறியவர்களாய், ஜக்[2]மது: = சென்றனர்,

(க-ரை) அநத திலீபரும் சுதக்ஷிணா தேவியும் பேரொலி செய்யும் ஓர் தேரையேறிக் கொண்டவர்களாய் சென்றனர். அவர் களில் வெண்ணிறமான திலீபனும், பசுமையான சுதக்ஷிணா தேவியும் கறுநிறமுள்ள அத்தேரில் போவது எவ்வாறுளதெனில், கார்மேகத்தின் மீது ஐராவதமெனும் வெள்ளையானையும் மின்னலும் ஒன்று கூடி செல்வது போன்று இருந்தது (தொகை யுவமையணி)

சு॥ மாபூ[3]த[2]ஶ்ரம பீடே[2]தி பரிமேய புரஸ்ஸரௌ ।
அநுப[3]ாவ விஶேஷாத்து ஸேநா பரிவ்ரிதா விவ ॥ 37

(ப-ரை) ஆஶ்ரம = ஆச்சிரமத்திற்கு; பீட[2]ா = துன்பம்; மாபூ[3]த் = நிகழவேண்டியதில்லை; இதி = இது காரணத்தால்; பரிமேய = சொற்பமான; புரஸ்ஸரௌ = ஏவலாட்கள் உடையவர்-களாயிருப்பினும்; அநுப[3]ாவ = ஒளியின்; விஶேஷாத்து = பெருக்கால் ஸேந = படைகளால்; பரிவ்ரிதா விவஸ்தி[1]தௌ = சூழப்பட்டவர் களோவென; ஜக்[2]மது: = திரண்டு சென்றனர்.

(க-ரை) வசிட்டாச்சிரமத்துக்கு தொல்லையின்றிருக்க வேண்டுமென்று எண்ணியவர்களாய், மிதமான பரிவாரங்களுடன் சென்றனர். எனினும் அந்த திலீப மன்னனுடைய ஒளியால் படையுடன் செல்வது போன்று இருந்தது (தற்குறிப்பணி)

சு॥ ஸேவ்யமாநௌ ஸுக[1]ஸ்பர்ஶை: ஸால நிர்யாஸ க[2]ந்தி[3]பி[3]: ।
புஷ்பரேணூத்கரைர் வாதைராதூ[3]த வநராஜிபி[3]: ॥ 38

(ப-ரை) ஸுக[1]: = சுகமான; ஸ்பர்ஶை: = தொடுதல் கொண்டும்; ஸால = சால்மரத்தின்; நிர்யாஸ = ரசத்தின்; க[2]ந்தி[3]பி[3]: = வாசனை உடையதும்; புஷ்ப = பூக்களின்; ரேணு = மகரந்தப் பொடிகளை உத்கரை: = தெளித்துக் கொண்டுள்ளதும்; ஆதூ[3]த = சற்று நடுக்கமுற்ற; வந = காடுகளின்; ராஜிபி[3]: = வரிசைகள் உடைய; வாதை: = காற்றால்; ஸேவ்யமாநௌ = வீசப் பட்டவர்களாய்; ஜக்[2]மது: = திரண்டு சென்றனர்.

(க-ரை) குளுமையானதும் சால்மரத்தின் ரசத்தின் நாற்ற முடையதும், க்பூகளின் மகரந்தப் பொடியைத் தூவி வருவதும்,

காட்டுப் பகுதியை அசையச் செய்வதும் சுகமான பரிசம் தருவதும் ஆகிய தென்றலினால், சேவிக்கப்படுகின்றவர்களாய் திரண்டு சென்றனர். (நிகழ்வினவர்ச்சியணி)

சு॥ மநோபி³ராமா ஶ்ரிண்வந்தௌ ரத¹நேமிஸ்வநோந்முகை¹: ।
ஷட்²ஜஸம்வாதி²நீ: கேகாத்³விதா³ பி³ந்நா ஶிகி¹ண்டி³பி³: ॥ 39

(ப-ரை) ரத¹நேமி = தேர்ச்சக்கரங்களின் விளிம்புகளுடைய ஸ்வந = ஓசையால்; உத் = எடுக்கப்பட்ட; முகை¹: = முகங்களுடைய ஶிக¹ண்டி²பி³: = மயில்களாலும்; த்²வித³ா = இருவிதங்களாக; பி³ந்நா: = பிரிக்கப்படவை ஆதலால்; ஷட்ஜ = சட்ஜமம் என்னும் ஒலியாலும்; ஸம்வாதி³நீ: = நிகரான; மநோபி³ராமா = மனத்துக்குகந்த; கேகா: = மயில்களின் குரல்களை: ஸ்ரிண்வந்தௌ; கேட்பவர்களாய்; ஜக்²மது: திரண்டு சென்றனர்.

(க-ரை) அந்த திலீப மன்னனின் தேரின் சக்கரங்களினால் உண்டான ஒலியைக்கேட்டு மயில்கள் முகில் சத்தமென்று நினைத்து தம் முகங்களை மேநோக்கி இருவகைகளாகப் பிரிக்கப்பட்டன வாகையால், சட்ஜ ஸ்வரத்திற்கு நிகரானதும் மனதுக்குகந்தது மான மயில்களின் வாக்குகளைக் கேட்டுக் கொண்டே சென்றனர். (நிகழ்வினர்ச்சி மற்றும் மயக்கவணி)

சு॥ பரஸ்பராக்ஷி ஸாத்²ரிஶ்ய மதூ²ரோஜ்ஜி¹த வர்த்மஸு ।
ம்ரிக²த்²வந்த்²வேஷு பஶ்யந்தௌ ஸ்யந்த²நா ப²த்³த³த்²ரிஷ்டிஸு ॥ 40

(ப-ரை) அதூ²ர = அருகில்; உஜ்ஜி³த = விடுவிக்கப்பட்ட; வர்த்மஸு = வழிகொண்டதாயதும்; ஸ்யந்த²ந = தேரில்; ஆப²த³த³ = கட்டப்பட்ட; த்²ரிஷ்டிஸு = பார்வைகள் கொண்ட; ம்ரிக² = மான்களின்; த்²வந்த்²வேஷு = ஆண் பெண் இரட்டையர்களில்; அந்யோந்ய = ஒன்றுக்கொன்று; அக்ஷி = கண்களில், ஸாத்²ரிஶ்யம் = ஒற்றுமையை; பஶ்யந்தோ = பார்பவர்களாய்; ஜக்²மது: = சென்றனர்.

(க-ரை) வழிக்கு அருகில் நின்று தமது தேரைப் பார்த்துக் கொண்டிருக்கும் பெண் மான்களின் கண்களும், தங்களது கண்களும் ஒத்திருக்கும் விசேடத்தைப் பார்த்துக் கொண்டே சென்றனர் (புகழ் பொருளுவமையணி)

சு॥ ஶ்ரேணீ ப²ந்த⁸ாத்² விதங்வத²பி⁸ ரஸ்தம்ப⁸ாம் தோரணஸ்ரஜ
ஸாரஸை: கலநிர்ஹ்ராதை²: க்வசிதுந் நமிதாநநௌ ॥

(ப-ரை) ஶ்ரேணீ=வரிசைகளில்; ப²ந்த⁸ாத்⁸=கட்டப்
தால்; ஆஸ்தம்ப⁸ாம்=ஆதாரமான தூணற்ற; தோரண=வெளி
லில் உள்ள; ஸ்ரஜம்=மாலையை; விதந்வத்²பி⁸:=செய்துக்கெ
டுள்ள; கல=விளங்காத இனிமையான; நிர்ஹராதை²:=ஒ
கொண்ட; ஸாரஸை:=ஸாரஸமென்னும் பறவைகளால்; க்வ:
ஓரிடத்தில்; உந்நமித=மேலுக்கு எடுத்துக் கொண்ட; ஆநநெ
முகங்கள் உடையவர்களாய்; ஜக்²மது:=சென்றுக் கொண்டி
னர்.

(க-ரை) ஓரிடத்தில் கம்பங்களின்றியே வெளிவாசலில் உ
தோரணங்களில் கட்டப்பட்டவை போன்று வரிசையாக வா
ஒலித்துக் கொண்டே பறக்கும் சாரசப் பறவைகளை த
நிமிர்ந்துப் பார்த்துக் கொண்டே சென்றனர்.
(நிகர் தொடர் முழுதுவமையணி)

சு॥ பவநஸ்யாநுகூலத்வாத் ப்ரார்த்த¹நா ஸித்²தி⁸ ஶம்ஸந: ।
ரஜோபி⁸ஸ் துரகே²ாத் கீர்ணை: அஸ்ப்ரிஷ்டாலக வேஷ்டாநெ

(ப-ரை) ப்ரார்த¹நா=விருப்பத்தின்; ஸித்²தி⁸=நிறைவே
லை; ஶம்ஸிந:=நவிலும்; பவநஸ்ய=காற்றின்; அநுகூ
லாத்=அனுகூலத்தால்; துரக²:=புரவிகளால்; உத்கீர்ணை
சிதறடிக்கப்பட்ட; ரஜோபி²:=தூசியால்; அஸ்ப்ரிஷ்ட=தெ
படாத; அலக=முன்னுச்சி மயிரும்; வேஷ்டநௌ=குடுமி
உள்ளவர்களாய்; ஜக²மது:=சென்றனர்.

(க-ரை) அவர்கள் எண்ணம் நிறைவேற்றுவது போல
பிரயாணத்திற்கு அனுகூலமாக பின்புறத்திலிருந்து காற்று
வதால், குதிரையின் வேகத்தால் உண்டாய தூசி சுதக்ஷி
தேவியின் முன்னுச்சி மயிர்களுக்கும் திலீபனுடைய குடுமி
படாமலிருக்க: (நிகழ்வினவர்ச்சியணி)

சு॥ ஸரஸீஷ்வரவிந்த²ாநாம் வீசிவிக்ஷோப⁸ ஶீதலம்
ஆமோத⁸ முபஜிக்²ரந்தௌ ஸ்வநிஸ்வாஸாநுகாரிணம் ॥

(ப-ரை) ஸரஸீஷு : பொய்கைகளுள்; வீசி = அலைகளின்; விக்ஷேபை: = அசைவுகளால்; ஶீதலம் = குளிர்ந்த; ஸ்வ: தன்னுடைய; நிஸ்வாஸ = மூச்சுவிடும் காற்றை; அநுகாரிணம் = ஒத்துள்ள; அரவிந்த²ாநாம் = தாமரை மலர்களின்; உபஜிக்²ரந்தௌ = முகர்ந்தவர்களாய்; ஜக்³மது: = சென்றனர்.

(க-ரை) வழிக்கிடையே தாமரைக் குளங்களில் உள்ள அலைகளைப் போன்று குளிர்ச்சியாய், தங்களது பெருமூச்சுகளுக்கு ஒத்தலைப் போனறுள்ள உயர்ந்த தாமரை மலர்களின் பரிமளம் வீசிக் கொண்டிருக்கையில் முகர்ந்துக்கொண்டே சென்றனர். (நிகழ்வினவிர்ச்சியணி)

சு॥ க்³ராமேஷ்வாத்ம விஸ்ரிஷ்டேஷு யூபசிஹ்நேஷுயஜ்வநாம் ।
அமோக²ா: ப்ரதிக்²ரிண்ஹந்தாவர்க்²யாநு பத²மாஸிஷ: ॥ 44

(ப-ரை) ஆத்ம = தன்னால்; விஸ்ரிஷ்டேஷு = விடப்பட்ட; யூபசிஹ்நேஷு = யூபத்தம்பங்களே அடையாளங்களாக உள்ள; க்²ராமேஷு = ஊர்களில்; அமோக³ா: = நிறைவேற்றப்பட்ட; யஜ்வநாம் = யாகம் செய்விப்போர்களின்; ஆஸிஷ: = வாழ்த்துக்களை; அர்க்³ய = பூசைப் பொருள்களைப் பெறுவதைவிட; அநுபத²ம் = பிறகும்; ப்ரதிக்²ரிஹ்ணந்தௌ = பெற்றுகொண்டவர்களாய்; ஜக்²மது = சென்றனர்.

(க-ரை) முன்பு தம்மால் செய்து நிறைவேற்றப்பட்ட வேள்விகட்காக நடப்பட்ட யூபத்தம்பங்களை அயையாளங்களாய் கொண்டுள்ள ஊர்களில் அந்தணர்களால் உபசாரங்கள், வாழ்த்துத்கள் பெற்றுக்கொண்டவாகளாகவும்; (நிகழ்வினவர்ங்சியணி)

(யூபத்தம்பம் = வேள்வியில் வதை செய்யப்போகும் பசுவைக் கட்டி வைக்கும் கம்பம்)

உபசாரம் = கை, கால் கழுவிக்கொள்ள தண்ணீரளித்தல்

சு॥ ஹய்யங்க²வீந மாத²ாய கே³ாஷவ்ரித்³த³ாந் உபஸ்தி¹தாந் ।
நாமதே³யாநி ப்ரிச்ச²ந்தௌ வந்யாநாம் மார்க²ஶாகி¹நாம் ॥ 45

(ப-ரை) ஹய்யங்க²வீநம் = அப்போதே கடைந்தெடுக்கப் பட்ட வெண்ணெய்; ஆத²ாய = பெற்றுக்கொண்டு; உபஸ்தி¹தாந் = வந்த; கே³ாஷவ்ரித்²த³ாந் = ஆயர்கள்வாழ் ஊர்களில் உள்ள முதி

யோர்களை; வந்யாநாம் = காட்டிற்பிறந்த; மார்க²ஶாகி¹நாம் = வழி நெடுகிலும் உள்ள மரங்களின்; நாமதே³யாநி பெயர்களை; ப்ரிச்ச¹ந்தௌ = கேட்பவர்களாய்; ஜக்³மது: = சென்றனர்.

(ச-ரை) அப்போதே கடைந்து எடுத்த வெண்ணெயிலிருந்து காய்ச்சி எடுத்த நெய்யை எடுத்துக்கொண்டு வந்த ஆயர்பாடிகளில்வாழ் முதியோர்களை, காட்டின் வழியே உள்ள மரங்களின் பெயர்களை கேட்டறிந்தவர்களாய் (நிகழ்வினவிர்ச்சியணி)

சு॥ காப்யபி³க்¹யாதயோ ராஸீத்² வ்ரஜதோ:ஶுத்²த²வேஷயோ: ।
ஹிமநிர்முக்தயோர்யோக² சித்ரா சந்த்²ரமஸோரிவ ॥ 46

(ப-ரை) வ்ரஜதோ: = சென்றுகொண்டுளள; ஶுத்²த³ = தூய்மையான; வேஷயோ: = சிங்காரமுள்ள; தயோ: = அந்த சுதக்ஷிணா திலீபமன்னர்களுக்கு; ஹிம = பனியால்; நிர்முக்தயோ = விடுக்கப்பட்ட; சித்ராசந்த³ர மஸோரிவ - சித்திரை நட்சத்திரமும் சந்திரனும் போல்; யோகே²ஸதி = தொடர்புண்டாக்கிக் கொண்டிருக்கவே; கா பி = இன்னதெனக் கூறமுடியாது; அபி க்¹யா = ஒருவிதமான ஒளி; ஆஸீத் = ஆயிற்று.

(க-ரை) தூய்மையான ஆடையலங்காரங்களுடன் செல்லும் அவ்வரச தம்பதிகளிடையே பனிக்காலம் தாண்டிய பிறகு சித்திரை விண்மீன் சந்திரன்களைப் போன்று சொல்லொணா ஒளி தோன்றியது. (பதப்பொருள்காட்சியணி)

சு॥ தத்தத்²பூ³மிபதி: பத்ந்யை த²ர்ஶயந் ப்ரிய த²ர்ஶந: ।
அபிலங்கி³த மத்³வாநம் பு²பு²தே³ந பு²தே³ாபம: ॥ 47

(ப-ரை) ப்ரிய = விருப்பமான; த³ர்ஶந: = பார்வையுடைய; பு²தே³ாபமா = புதனையொத்த; பூ³மிபதி: = திலீபமன்னன்; பத்ந்யை = மனைவியான சுதக்ஷிணாதேவிக்காக; தத்தத் = அவ்வந்தப் பொருட்களை; தர்ஶயந் = காண்பித்தவனாய்; லங்கி³தமபி = தாண்டப்பட்டவை ஆயினும்; அத்³வாநம் = வழியை; நபு²பு²தே³ = அறியமாட்டாது போயிற்று.

(க-ரை) அன்புள்ளளவனாய், பொருட்களையறிவதில் புதனுக்கு நிகரான திலீபமன்னன், தன் மனைவிக்கு, அவ்வந்த பொருட்களைக் காண்பித்துக் கொண்டே சென்றமையால், அவர்கட்கு வழிநடந்தது போல் தோன்றவில்லை. (விரிவுவமை மற்றும் மிகுதியுணர்ச்சியணி)

ஸு॥ ஸ து²ஷ்ப்ராப யஶா꞉ ப்ராப த³ா ஶ்ரமம் ஶ்ராந்த வாஹந꞉ ।
ஸாயம் ஸம்யமிநஸ் தஸ்ய மஹர்ஷேர் மஹிஷீஸக¹꞉ ॥ 48

(ப-ரை) து²ஷ்ப்ராப = பிறர்க்குக் கிடைக்கக் கூடாத; யஶா꞉ = புகழுடையவனும்; ஶ்ராந்த = துவண்டுபோன; வாஹிந꞉ = புரவிகளை உடையவனும்; மஹிஷீஸ்க¹꞉ = மனைவியோடு கூடியவனுமாகிய; ஸ꞉ = அந்த திலீபமன்னன்; ஸாயம் = அந்திப்பொழுதில்; ஸம்யமிந꞉ = நியமம் உள்ளவனான; தஸ்ய = அந்த; மஹர்ஷே꞉ = வசிஷ்டனுடைய; ஆஶ்ரமம் = குடிலை; ப்ராபத் = அடைந்தான்.

(க-ரை) பிறர்க்கு அரிதாய புகழ்வாய்ந்த திலீபமன்னவன் பத்தினீ சமேதனாய், தொய்ந்துபோன புரவிகளுடன் அந்தி நேரத்தில் வசிட்ட மகரிஷியின் குடிலை அடைந்தான் (நிகழ்வினவிர்ச்சியணி)

அவா॥ ஆச்சிரமத்தின் விளக்கம்.

ஸு॥ வநாந்தரா து²பாவ்ரித்தை꞉ ஸமித்குஶ ப்¹லாஹரை꞉ ।
பூர்யமாண மத்²ரிஶ்யாக்²நி ப்ரத்யுத்²யாதை꞉ தபஸ்விபி³꞉ ॥ 49

(ப-ரை) வநாந்தரா = வேறு காடுகளிலிருந்து; உபாவ்ரிதை꞉ = திரும்பிவந்த; ஸமித் = வேள்விக்காய விறகுகள்; குஶ = தருப்பை; ப¹ல = பழங்களையும்; ஆஹரை꞉ = கொண்டுவரும் சுபாவமுடையவர்களாய்; அத்²ரிஶ்ய = பார்க்க முடியாத; அக்²நி = கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்நிகளால்; ப்ரத்யு³த்யாதை = வரவேற்கப்பட்ட; தபஸ்விபி³꞉ = தவசிகளால்; பூர்யமாணம் = நிறப்பப்பட்ட; ஆஶ்ரமம் = குடிலை; ப்ராப்த꞉ = அடைந்தனர்.

(க-ரை) பிற காடுகளிலிருந்து சமித்து, தருப்பை பழங்களையும் கொண்டுவருவோரும், காணக்கூடாத திரேதாக்கினிகளால் வரவேற்கப்பட்ட முனிவர்களால் நிறம்பி இருப்பதும் (உயர்வினவிர்ச்சியணி)

ஸு॥ ஆகீர்ணம் ரிஷிபத்நீநாம் உடஜத்²வார ரோத்⁴பி³꞉ ।
அபத்யைரிவ நீவார ப³ாக²தே³யோசிதைர் ம்ரிகை²꞉ ॥ 50

(ப-ரை) நீவார = தாமாகவே நீர்நிலைகளில் முளைக்கும் நெல்லின்; ப³ாக²தே³ய = பங்கைப் பெற; உசிதை꞉ = தகுதியுள்ளவை ஆதலால்; உடஜ = குடில்களின்; த்²வார꞉ = வாயில்களை;

ரோதி²பி³꞉ = தடுக்கும்; ம்ரிகை³꞉ = மான்களால்; ரிஷிபத்நீநாம் = முனிவர்களுடைய மனைவிமார்களின்; அபத்யைரிவ = குழந்தைகளைப்போல பேணப்பட்டுவரும்; ஆகீர்ணம் = பரந்துள்ள; ஆ்ரமம் = குடிலை; (ப்ராபத் = அடைந்தனர்)

(க-ரை) காட்டு நெல்லில் ஒருபகுதியை தின்றுகொண்டே, முனிவர்களின் குழந்தைகளைப் போல் பாதுகாக்கப்பட்டு, குடில்களின் வாயில்களைத் தடுக்கும் மான்களால் சூழப்பட்டதுமான, (நிகழ்வினவிர்ச்சியணி)

ஸு॥ ஸேகாந்தே முநிகந்யாபி³ஸ் தத்க்ஷணோஜ்ஜி¹த வ்ரிக்ஷகம் ।
விஸ்ரம்ப³ாய விஹங்க²ாநா மாலவாலாம்பு² பாயிநாம் ॥ 51

(ப-ரை) ஸேக = மரங்களின் அடிகளை நனைக்கத் தண்ணீர் இறைப்பதின்; அந்தே = கடைசியில்; முநிகந்யாபி꞉ = முனிகன்னியர்களால்; ஆலவால = பாத்திகளில்; அம்பு = தண்ணீரை; பாயிநாம் = பருகுகின்ற; விஹங்க²ாநாம் = பறவைகளின்; வி்ரம்ப⁰ாய = நம்பிக்கைக்காக; தத்க்ஷணா = அவ்வாறு பருகும்போதே; உஜ்ஜி¹த = விடப்பட்ட; வ்ரிக்ஷகம் = இளம் மரங்களை உடைய; ஆ்ரமம் = குடிலை; ப்ராபத் = அடைந்தனர்.

(க-ரை) முனிகன்னியர்களால் ஊற்றப்பட்டு, பறவைகள் அந்தப் பாத்திகளிலுள்ள தண்ணீர் அருந்த வேண்டுமென்ற நம்பிக்கையுடன் விடுக்கப்பட்ட சிறுமரங்களுடையதுமான (நிகழ்வினவிர்ச்சியணி)

ஸு॥ ஆதபத்யய ஸம்க்ஷிப்த நீவாராஸு நிஷாதி²பி³꞉ ।
ம்ரிகை²ர் வர்த்தித ரோமந்த முடாஜாங்க²ண பூ⁰மிஷு ॥ 52

(ப-ரை) ஆதப = வெய்யிலில்; அத்யய = போனதால்; ஸம்க்ஷிப்த = குவியலாக செய்யப்பட்ட; நீவாராஸு = காட்டு நெல்லுடைய; உடஜ = குடிலின்; அங்க²ணபூ⁰மி꞉ = முற்றங்களில்; நிஷாதி²பி³ = உட்கார்ந்துள்ள; ம்ரிகை²꞉ = மான்களால்; வர்தித = செய்யப்பட்ட; ரோமந்தம் = அசைபோடுதல் உள்ள; ஆ்ரமம் = குடிலை; ப்ராபத் = அடைந்தனர்

(க-ரை) விரியல் தாழ்ந்தவுடன் குவியல்களாக தள்ளப்பட்ட; காட்டு நெல்லுள்ள வாசல்களில் அசைபோட்டுக் கொண்டுள்ள மான்களை உடைய குடில்களில் (நிகழ்வினவர்ச்சியணி)

சு॥ அப்3யுத்தி1தாக்2நி பிஸு4ணை: அதிதீ1ந் ஸாஶ்ரமோந்முக1ாந் ।
புநாநம் பவநோத்2தூ3தைர் தூ3மைராஹு4தி க2ந்தி3பி3: ॥ 53

(ப-ரை) அப்3யுத்தி1த=மூட்ப்பட்டு கொழுந்து விட்டெரியும்; அக்2நி=கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்2னிகளுக்கு; பிஸு4நை:=அறிகுறிகளாய்; பவந=காற்றினால்; உத்2தூ3தை:=சிதறடிக்கப்பட்டதும்; ஆஹு4தி=வேள்வியிலிடும் பலிகளின்; க2ந்தி3பி3:=வாசனையுடைய; தூ3மை:=புகைகளால்; ஆஶ்ரம=குடிலுக்கு; உந்முக1ாந்=எதிர்படும்; அதிதீ1ந்=விருந்தினர்; புநாநம்=புனிதராக செயகின்ற; ஆஶ்ரமம்=ஆச்சிரமத்தை; (ப்ராபத்=அடைந்தனர்)

(க-ரை) மூண்டு, கொழுந்துவிட்டெரியும் திரேதாக்கினிகளுக்கு அறிகுறிகளாகவும், காற்றினால் மேலே கிளப்பப்பட்ட ஆகுதிகளின் நறுமணமுள்ள புகைச்சல்களால் ஆச்சிரமத்திற்குப் போவோர்களை புனிதப்படுத்துவதும், (நிகழ்வினவிற்சியணி மற்றும் சொற்பொருட்பின்வருவிளக்கணி)

சு॥ அத1யந்தார மாதி2ஶ்ய து3ர்யாந் விஶ்ராமயேதி ஸ: ।
தாமவாரோபயத் பத்நீம்ரத1ா த2வததாரச ॥ 54

(ப-ரை) அத1=ஆச்சிரமத்தை அடைந்தபிறகு; ஸ:=அந்த திலீப மன்னன்; யந்தாரம்=சாரதி (ஒட்டுநரை); து3ர்யாந்=புரவிகளை; விஶ்ராமய="ஒய்வுபெறச் செய்யும்"; இதி=என்று; ஆதி2ஶ்ய=உத்தரவிட்டு; தாம்பத்நீம்=அம்மனைவியை; ரத1ாத்=தேரிலிருந்து. அவரோபயத்=இறக்குவித்தான்; அவததாரச=தானும் இறங்கினான்.

(க-ரை) திலீபமன்னன் வசிட்டரின் குடிலை அடைந்ததும், தம் மனைவியாகிய சுதக்ஷிணாதேவியை தேர்விட்டிறக்கி, தானும் இறங்கி, "குதிரைகளுக்கு ஓய்வுகொடு" மென்று தேரோட்டிக்கு ஆணையிட்டான் (வேண்டலணி)

சு॥ தஸ்மை ஸம்3யாஸ் ஸப3ார்யாய கே2ாப்த்ரே கு2ப்ததமேந்த்2ரியா: ।
அர்ஹணா மர்ஹதே சக்ரு: முநயோ நயசக்ஷுஷே ॥ 55

(ப-ரை) ஸப்3யா:=அவையில் உள்ளோர்களும்; கு2ப்ததம=அடங்கிய; இந்த்2ரியா:=புலன்களையுடைய; முநய:=முனிவர்கள்; ஸப3ார்யாய=மனைவியாருடன் கூடியவர்களும்; கே2ாப்த்ரே=

காப்பவனும்; நயசக்ஷுஷே=நூல்களையே தத்துவ விளக்கத் திற்காதாரமாகக் கொண்டவனாதலின்; அர்ஹதே=போற்றத்தக்க; தஸ்மை=அந்த திலீபமகாராசனுக்காக; அர்ஹணாம்=பூசையை; சக்ருஃ=செய்தார்கள்.

(க-ரை) புலனடக்கமுள்ள அவையோர்களாய முனிவர்கள், நூன்முறைப்படி ஆள்வதால் போற்றப்படத்தக்கவனும் மனைவி யுடன் கூடினவனுமாகிய திலீபமன்னனுக்கு வரவேற்பளித்து கௌரவித்தனர். (நிகழ்வினவிற்சியணி.)

சு॥ விதே³ஸ் ஸாயந்தநஸ்யாந்தே ஸத³த³ர்ஶ தபோநிதி³ம் ।
அந்வாஸித மருந்த³த்யா ஸ்வாஹா ஏவ ஹவிர்பு³ஜம் ॥ 56

(ப-ரை) ஸঃ=அந்த திலீப மன்னன்; ஸாயந்தநஸ்ய=மாலை வேளையிற் பிறந்த; விதே³ঃ=ஜபம் ஹோமம் முதலிய அனுஷ்டா னங்களின்; அந்த¹தே=முடிவில்; அருந்த்யா=அருந்ததிதேவியால்; அந்வாஸிதம்=உபாசனை செய்யப்பட்ட; தபோநிதி³ம்=வசிட்டரை ஸ்வாஹா = ஸ்வாஹாதேவியால்; ஹவிர்பு³ஜமிவ=வேள்விக்கு முதல்வனான அக்னியைப் போன்று; த³த³ர்ஶ=நோக்கினான்.

(க-ரை) மாலைப் பொழுது ஜபம் ஓமம் முதலிய அனுட்டானங் களை முடித்துக் கொண்டுள்ளவரும், ஸ்வாஹாதேவி அக்கினியைப் பூசிப்பது போன்று; அருந்ததி தேவியால் பூசிக்கப்பட்டவரும், தவ முனிவர்களுள் முதன்மையானவரும் ஆகிய வசிட்டரை திலீப மன்னன் கண்டான். (விரியுவமை மற்றும் நிகழ்வினவிற்சியணி)

சு॥ தயோர் ஜக்³ரிஹதுঃ பாதெ³ள ராஜா ராஜ்ஞீச மாக³தீ³ ।
தௌகு³ருர் கு³ருபத்நீச ப்ரீதயா ப்ரதிந நந்த³து ॥ 57

(ப-ரை) மாக³தீ³=மகத நாட்டரச புதல்வியான: ராஜ்ஞீ= சுதக்ஷிணா தேவி; ராஜச=திலீப மன்னனை; தயோঃ=அந்த அருந்ததி வசிட்டர்களின்; பாதௌ=அடிகள்; ஜக்³ரிஹதுঃ=பற்றி னார்கள்; கு³ருபத்நீ=அருந்ததி தேவியாரும்f கு³ருஶ்ச=ஆசானா கிய வசிட்டரும்; தௌ=அந்த சுதக்ஷிணா திலீபர்களை; ப்ரீத்யா= அன்போடு; ப்ரதிந நந்த³து=ஆசிகளுடன் மகிழ்வித்தனர்.

(க-ரை) மகதநாட்டரச புதல்வியாகிய சுதக்ஷிணா தேவியும், திலீப மன்னனும், குருவான வசிட்டருக்கும் குருபத்தினியாகிய அருந்ததியின் அடிகளுக்கு வணங்கினார்கள். அவர்கள் மகிழ்ந்த

வர்களாய் சுத²க்ஷிணா திலீபர்களுக்கு ஆசி கூறினார்கள் (நிகழ் வினவிற்சியணி)

சு॥ தமாதி²த்ய க்ரியாஶாந்த ரத¹க்ஷோப³ பரிஶ்ரமம் ।
பப்ரச்ச¹ குஶலம் ராஜ்யே ராஜ்யாஶ்ரம முநிம்முநிঃ ॥ 58

(ப-ரை) முநிঃ=வசிட்ட முனிவர்; அதி¹த்யக்ரியா=விருந்துப சாரஞ்செய்தல்; ஶாந்த=போக்கப்பட்ட; ரத¹=தேரின்; க்ஷோப³= அசைவினாலுண்டாகிய; பரிஶ்ரமம்=சோர்வுற்ற; ராஜ்ய=நாடு என்னும்; ஆஶ்ரமம்=ஆச்சிரமத்தில்; முநிம்=முனிவரான; தம்= அத்திலீப மன்னனை; ராஜ்யே=நாட்டில்; குஶலம்=நலன்களை; பப்ரச்ச¹=கேட்டார்.

(க-ரை) வசிட்டரால் செய்யப்பட்ட உபசாரங்களால் தேரில் வந்த சோர்வு நீங்கியவனும், தனது நாடென்னும் ஆச்சிரமத்தில் முனிவரைப் போன்றுள்ளவனும் ஆகிய திலீப மன்னனை, அவர் தம் அமைச்சு நட்பு அரசு முதலியவர்களின் நலனைப் பற்றி விசாரித்தார். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ அத²ாத¹ர்வநிதே³ஸ் தஸ்ய விஜிதாரிபுரঃ புரঃ ।
அர்த்¹யா மர்த¹பதிர் வாசமாத³தே³ வத³தாம் வரঃ ॥ 59

(ப-ரை) அத¹=பிறகு; விஜிதா=வெல்லப்பட்ட; அரிபுரঃ= எதிரிகளின் பட்டணங்களை உடையதும்; வத³தாம்வரঃ=பேச்சுத் திறம் படைத்தவர்களில் முதல்வனும்; அர்த¹பதிঃ=பொருள்களுக் கெல்லாம் அதிபதியாகிய திலீபமன்னன்; அத¹ர்வநிதே³=அதர் வண வேதத்திற்கு முதல்வராகிய; தஸ்ய=அந்த வசிட்டரின்; புரঃ=எதிரில்; அர்த்¹யாம்=பொருளடங்கிய; வாசம் வாக்குகளை; ஆத³தே³=பெற்றான்.

(க-ரை) பகைவர் நாடுகளை வென்று. பெரும்பொருளாள னாகியவனும், பேச்சில் திறம் மிக்கவனும், ஆகிய திலீப மன்னன், விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் அதர்வண வேதத்தில் நிபுணரா கிய வசிட்ட மாமுனிவருக்கெதிரில் பிரயோஜனமுள்ள செய்தியைச் செப்பத் தொடங்கினான். (முறையிற்படர்ச்சியணி)

சு॥ உபபந்நம் நநுஶிவம் ஸப்தஸ்யங்கேஷுயஸ்யமே ।
தை³வீநாம மாநுஷீணாஞ் சப்ரதிகர்தா த்வமாபத³ாம் ॥ 60

(ப-ரை) (ஹேகு²ரோ!=ஆசிரியரான வசிட்ட முனிவரே!); சப்தம்=ஏழாகிய; அங்கே²ஷு=என்னுடைய அமைச்சு முதலானோர்களுடையதும்; குஶலம்=ஆகிய நலன்களும்; உபபந்நம் நநு=தகுதியாகவே உள்ளன; யஸ்யமே=எந்த என்னுடைய; தை²வீநாம்=தேவர்களிடமிருந்தும்; மாநுஷீணாம்=மனிதர்களிடமிருந்தும்; ஆபத³ாம்=வருந்துன்பங்களை; (அதாவது=கருப்பு, திருடு முதலிய அச்சங்கள்); த்வம்=நீங்கள்; ப்ரதிகர்தா=போககவல்லீர்கள்.

(க-ரை) குருநாதரே! எனது அரசின் ஏழு அங்கங்களும் நன்கு உள்ளன. நானும் நலமாகவே உள்ளேன். ஆக எல்லாரும் நலமே. ஒருவேளை தெய்வீகமாய் நடக்கும் அக்னிபயம், நீர், காற்று, நோய் கருப்பு முதலிய ஐவகையினுள் ஏதேனும்;மானிடர் சார்பான ஆயுதம் திருடர், பகைவர், பேரரசர்கள், அரசின் பகைவர்கள் ஆகிய ஐந்தில் ஏதேனும் சரி ஏற்படுமாகில் அதனை நீக்க வல்லவராகிய தாங்கள் இருக்கவே இருக்கிறீர்கள் (இன்மைநவிற்சியணி மற்றும், பெருமையணி)

சு॥ தவமந்த்ர க்ரிதோ மத் த்ரைர்தூ²ராத் ப்ரஶமிதாரிபி³ः।
ப்ரத்யாதி²ஶ்யந்த இவமே த்ரிஷ்டலக்ஷ்யபி³த³ஶ்ஶராः॥ 61

(ப-ரை) தூராத் = அப்புறமிருந்தே; ப்ரஶமித = அடக்கப்பட்ட; அரிபி³ः=பகைவர்கள் உள்ள; மந்த்ரக்ரித=மந்திரத்தாலாய; தவ=உம்முடைய; மந்த்ரை=மந்திரங்களால்; த்²ரிஷ்ட = காணப்படும்; லக்ஷ்ய=குறிக்கோள்களை; பி³த²=பிளக்கவல்ல; மே=என்னுடைய; ஶராः=அம்புகள்; ப்ரத்யாதி²ஶ்யந்த இவ= மறுக்கப்படுவன போன்றுள்ளன.

(க-ரை) மந்திரங்களில் வல்லவராகிய தங்கள் மந்திரங்களோ பகைவர்களை அப்புறமிருந்தபடியே கண்ணுக்குக் காணாமலேயே விலக்குகின்றன. எனது அம்புகள் என்றாலோ கண்ணுக்குத் தெரியும்படியாக மட்டுமே குறியிற்படுவனவாயுள்ளன. (ஏதுவணி)

சு॥ தெய்வீகமாய் வரும் துன்பந் துடைக்கும் வழிகள்பற்றி கூறப்படுகிறது.

சு॥ ஹவிராவர்ஜிதம் ஹோதஸ் த்வயா விதி³வ த³க்³நிஷு।
வ்ரிஷ்யர் ப³வதிஸஸ்யாநாம் அவக்³ரஹ விஶோஷிணாம்॥ 62

(ப·ரை) ஹே,ஹோத:! = வேட்கும் திறனுள்ள ஐயனே! த்வயா = உம்மால்; விதி³வத் = முறைப்படி; அக்னிஷு = வன்னிகளில்; ஆவர்ஜிதம் = வைக்கப்பட்ட; ஹவி: = நெய் முதலிய அவிகள்; அவக்ர ஹ = மழையின்மையால்; விஶோஷிணாம் = வாடுகின்ற; ஸஸ்யாநாம் = பயிர்கட்கு; வ்ரிஷ்டி = மழைஉருவமாய்; ப³வதி = ஆகின்றன.

(க-ரை) வேள்விகட்குத் தலைவராகிய தங்களால் முறைப்படி வன்னிகளில் வைக்கப்படும் அவிகளாவன மழையின்றி வாடும் பயிர்களுக்கு மழையை பொழியச் செய்கின்றன. (பெருமையணி)

சு॥ புருஷாயுஷ ஜீவிங்யோ நிராதங்கா நிரீதய: ।
யங்மதீ²யா: ப்ரஜாஸ் தஸ்ய ஹேதுஸ்த்வத் ப்ரஹ்மவர்சஸம் ॥ 63

(ப-ரை) மதீய²ா: = என்னைச் சார்ந்தவர்களாய்; ப்ரஜா: = மக்கள்; புருஷாயுஷ = நூறாண்டுகள்; ஜீவிந்ய = வாழ்கின்றவர்கள்; நிராதங்கா: = நீங்கிய அச்சமுடையவர்; நிரீதய: = நீக்கப்பட்ட துன்பமுடையவர்கள்; இதியத் = இவ்வாறெனும் எது உடையதோ; தஸ்ய = அந்த எல்லாவற்றுக்கும்; த்வத் = உமது; ப்²ரஹ்மவர்சஸ: = பிரம்ம தேஜஸ் என்பதே; ஹேது: = காரணம்.

(க-ரை) மக்கள் நூறாண்டுகள் வாழ்வோர்களாயினும் அவர்கள் தங்களுடைய நல்வினைகளாகிய ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் போன்றவற்றால் நோயற்றவர்களாகவும், பெருமழை, மழையின்மை, வெட்டுக்கிளிகளால் உண்டாகும் உபாலதகள் போன்றவையும் இல்லாதவர்களாக உள்ளனர். (பெருமையணி)

சு॥ த்வயைவம் சிந்த்யமாநஸ்ய கு²ருணா ப்²ரஹ்மயோநிநா ।
ஸாநுப²ந்த³ா: கத¹ம்நஸ்யு: ஸம்பதே²ாமே நிராபத²: ॥ 64

(ப·ரை) ப்ரஹ்மயோநிந = பிரம்ம தேவனே காரணமாக உள்ள; கு²ருணா = ஆசானாகிய; த்வயா = உம்மால்; ஏவம் = இவ்விதமாய்; சிந்த்யமானஸ்ய = எண்ணப்படுகின்றவன் ஆதலால்; நிராப³த: = விபத்துகளற்ற; மே = எனது; ஸம்பத²: = செல்வங்கள்; ஸாநுப²ந்த³ா: = இணைபிரியாமல் உள்ளவனாக; கத¹ம் = ஏன்; நஸ்யு: = இருக்கமாட்டா?

(க-ரை) இப்படிப்பட்ட தன்மைகளடங்கிய பிரம்மவம்சத்தில் பிறந்த தாங்கள் இருக்கும்போது; என்னுடைய செல்வங்கள் விபத்து களுக்கு உள்ளாகமலும், சிதறாமலும் ஏன் இருக்க முடியாது? (புனை வுளிவிளைவணி)

அவ॥ தான் வந்த வேலையைப் பற்றி கூறுகிறான்.

சு॥ கிந்துவத்³வாம் தஹைதஸ்யா மத்²ரிஷ்ட ஸத்ரிஶ ப்ரஜம் ।
நமாமவதி ஸத்²வீபா ரத்நஸூ ரபி மேதி²நீ ॥ 65

(ப-ரை) கிந்து = மேலும் என்னவெனில்; தவ = உமக்கு; வத்³வாம் = மருமகளாகிய; ஏதஸ்யாம் = இந்த சுதக்ஷிணையில்; அத்²ரிஷ்ட = காணப்படாத; ஸத்ரிஶம் = அனுகூலமான; ப்ரஜம் = மக்களுடைய; மாம் = என்னை; ஸத்²வீபா = தீவுகளுடன் கூடிய; ரத்ந = மணிகளை; ஸூரபி = பிறக்கச் செய்யவல்லதாயிருந்தும்; மேதி²நீ = நிலம்; நாவதி = மகிழ்வுராது.

(க-ரை) எனினும் தீவுகளுடன் கூடிய இந்நிலம் ரத்தினங்களை கொடுக்கவல்லதாயினும், தங்களின் மருமகளாகிய இந்த சுதக்ஷிணா தேவி வயிற்றில் எனக்கு நிகரான மகனென்னும் சிறந்த ரத்தினம் பிறவாமலிருப்பதால் என்னை மகிழ்விப்பதில்லை. (பிரிதின் குணம் பெறாமையணி மற்றும் புகழ்பொருளுவமையணி)

அவ॥ இதுவும் மதுபற்றியே கூறுவதாம்.

சு॥ நூநம் மத்தஃபரம்வம்ஶ்யா பிண்ட²விச்சே¹த² த²ர்ஶிநஃ ।
நப்ரகாம பு⁸ஜ ஶ்ராத்²தே⁸ஸ்வத⁸ா ஸங்க்²ரஹதத்பராஃ ॥ 66

(ப- ரை) மத்தஃ = என்னைவிட; பரம் = பின்னால்; பிண்டா = பிண்டதானத்தின்; விச்சே¹த = சிதைவு; தர்ஶிதஃ = ஊகிக்கும்; வம்ஶ்யா = குடியிற் பிறந்ததென்புலத்தார்; ஸ்வத¹ா = அவர்களின் உண்ணுதலின்; ஸங்க்²ரஹ = சேமிப்பதில்; தத்பராஸ் ஸந்தஃ = ஆசைக் கொண்டவர்களாய்; ஶ்ராத்²தே⁸ = திவசங்களில்; ப்ரகாம = நிறையும்படி; பு⁸ஜஃ = சாப்பிடுகிறவர்கள்; நப⁸வந்தி = ஆகமாட்டார்கள்; நூநம் = இது உண்மை.

(க-ரை) என்னையடுத்து, பிண்டமளிப்பதின் நாசத்தை எண்ணும் பிதருக்கள், தமது உண்டினை சேமிப்பதில் விருப்பமுள்ள

வர்களாய் திவசகாலங்களில் திருப்தியாக உண்ணக்கூடியவர்கள் ஆகமாட்டார்கள். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ மத்பரம் து²ர்லப³ம் மத்வா நூந மாவர்ஜிதம் மயா ।
பயஃ பூர்வைஸ் ஸநிஃவாஸைஃ க²வோஷ்ண முபபு³ஜ்யதே ॥ 67

(ப-ரை) மத் = எனக்கு; அநந்தரம் = பிறகு; துர்லப³ம் = அடையவரிதாயதாக; மத்வா = எண்ணி; மயா = என்னால்; ஆவர்ஜிதம் = கொடுக்கப்பட்ட; பயஃ = தண்ணீர்; பூர்வைஃ = முன்பிருந்த பிதர்தேவதைகளால்; ஸ்வநிஃவாஸைஃ = தங்களின் விடும் மூச்சு (காற்று)களால்; க²வோஷ்ணம் = சற்று வெப்பமுள்ளது போன்று; உப³புஜ்யதே = புசித்தல் செய்யப்படும்; நூநம் = (இது) உண்மை.

(க-ரை) என்னுடைய பிதர்தேவதைகள் எனக்குப் பின் எள்ளும் தண்ணீரும் விடுவோர்கள் இல்லையென்று வருத்தப்படுவார்கள். அதனால் அவர்களுக்கு நான் விடும் (திவசத்து) தண்ணீர் சற்று வெப்பமாகும். அந்த தண்ணீரை அவர்கள் பெறுவார்களா? (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ஸோஹமிஜ்யா விஶுத்³த³ாத்மா ப்ரஜாலோப நிமீலிதஃ ।
ப்ரகாஶஶ்சாப்ரகாஶஶ்ச லோகா லோக இவாசலஃ ॥ 68

(ப-ரை) இஜ்யா = வேள்வியால்; விஶுத்³த³ = தூய்மையான; ஆத்மா = ஞானமுள்ளவனும்; ப்ரஜா = மக்களின்; லோப = இல்லாஸமயாலும்; நிமீலிதஃ = ஏற்பட்ட துன்பத்தினாலுண்டான; ஸோஹம் = அந்த நான்; லோகா லோக அசலம் = லோகாலோகமென்னும் மலைப் போல்; ப்ரகாஶச = பிரகாசிப்பவனாகவும்; அப்ரகாஶச = பிரகாசிப்பவனாக இல்லாதவனும்; அஸ்மி = ஆகின்றேன்.

(க-ரை) நான் வேட்டல் முதலான தொழில்களால் தேவர்களின் கடன் தீர்ப்பவனாய் இது விஷயத்தில் பரிசுத்தனாக, பிரகாசமுள்ளவனாயிருப்பினும் மக்கட்பேறின்மையால், பிதருக்களின் கடன் தீர்க்க மாட்டாதவனாக, அந்த விஷயத்தில் ஒளியற்றவனாக இருந்து லோகாலோகமென்னும் மலைபோல் இருந்து வருகிறேன். (விரியுவமை மற்றும் நிகழ்வினவிற்சியணி)

அவ॥ தவம், தானம் முதலிய செல்வங்கள் இருந்தும் மக்கட்பேறின்மைக்கு மூலம் என்னவென்று வினவுகிறான்.

சு॥ லோகாந்தர ஸுக¹ம் புண்யம் தபோதா²ந ஸமுத்³ப³வம் ।
ஸந்ததி꞉ ஶுத்³த³வம்ஶ்யாது பரத்ரேஹச ஶர்மணே ॥ 69

(ப-ரை) தபோதாந = தவமும், ஈகையும், ஸமுத்³ப³வம் = காரணங்களாகவுள்ள, புண்யம் = நல்வினையானது, லோகாந்தர = பிற உலகில், ஸுக¹ம் = சுகத்தை தரவல்லது, ஶுத்²த³வம்ஶ்யா = தூய்மையான வம்சத்தில் பிறந்த, ஸந்ததிஸ்து = மக்களாயின், பரத்ர = பரலோகத்திலும், இஹச = இவ்வுலகிலும், ஶர்மணே = சுதந்திரத்திற்கே ஆம்.

(க-ரை) தவம், ஈதல் போன்ற புண்ணிய காரியங்கள் பர லோக சுகங்கள் மட்டும் தரவல்லவையாக உள்ளன. உயர்குடியில் பிறந்த மக்களோ இகபர சுகங்களைத் தர வல்லவர்களாக உள்ளனர். (மறைப்பிறையணி)

சு॥ தயாஹீநம் வித³ாதர் மாம் கத¹ம் பஶ்யந் நதூ²யஸே ।
ஸிக்தம் ஸ்வய மிவஸ்நேஹாத்²வந்த்³ய மாஶ்ரமவ்ரிக்ஷகம் ॥ 70

(ப-ரை) ஹேவிதா³த꞉! = ஆக்கல் வல்ல ஓ வசிட்ட முனிவரே! தயா = அந்த மக்கள் . ஹீநம் = இல்லாதவனாகிய, மாம் = என்னை, ஸ்நேஹாத் = அன்பினால், ஸ்வயம் = தனக்குத்தானே, ஸிக்தம் = நனைந்த, வந்த்³யம் = பலனற்ற, ஆஶ்ரம = ஆச்சிரமத்திலிருக்கும், வ்ரிக்ஷமிவ = சிறுமரம் போன்று, பஶ்யந் = பார்த்துக் கொண்டுள்ள வராய்; கத¹ம் = எவ்வாறு, நதூ²யஸே = வருந்தாமல் இருக்கிறீர்கள்.

(க-ரை) தாங்கள் ஆக்கவல்லதோர் ஆக்கம் பெற்றிருந்தும், என்னிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தும், தங்களது ஆச்சிரமத்தில் தாங்கள் நீரூற்றி வளர்த்துவரும் செடிகளில் ஏதேனும் மலடாயுள்ள சிறுசெடி போன்று, மக்கட்பேறற்ற என்னைக் கண்டு ஏன் வருத்தப்பட மாட்டீர்கள்? (எடுத்துக்காட்டுவமையணி]

சு॥ அஸஹ்ய பீட²ம் ப³க²வந் ரிணமந்த்ய மவேஹிமே ।
அருந்துத³ மிவாலாந மநிர்வாணஸ்ய த²ந்திந꞉ ॥ 71

(ப-ரை) ஹேப³க³வந் = ஓ பகவானே! மே = எனது, அந்த்யம் = கடைசியில் பிறந்த, ரிணம் = பிதருக்கள் கடனை, அநிர்வாணஸ்ய = குளியலற்ற, த²ந்திந꞉ = யானைப் போன்று, அருந்துத²ம் = மருமத்தை உடைக்கக் கூடிய, அலோநமிவ = யானையைக்

கட்டும் கம்பம் போன்று, அஸஹ்ய = பொருக்கமாட்டாத, பீட³ம் = வருத்தமுற்றதாக, அவோஹி = அறிவீராக,

(க-ர) ஓ வசிட்டமாமுனிவரே! எனது தென்புலத்தாரின் கடன்களை குளியலற்ற யானையின் மருமத்தை உடைக்கும் கம்பம் போன்றது என்று அறிவீராக (புகழ்பொருளுவமையணி)

சு ॥ தஸ்மாங் முச்யே யத²ா தாத ஸம்வித²ாதும் த்வமர்ஹஸி ।
இக்ஷ்வாகூணாம்து³ ராபேஎர்தே³ த்வத³தீ³நாஹிஸித்³த³யம்॥ 72

(ப-ரை) ஹேதாத = தந்தையே! தஸ்மாத் = அந்த பிதருக்களின் கடனால்; யதா¹ = எவ்விதம்; முச்யே = விடுபடுவேனோ; தத¹ா = அது போன்று; ஸம்வித³ாதும் = செய்வதற்கு; த்வம் = நீவிர்; அர்ஹஸி = தகுதியுள்ளவர்; ஹி = எக்காரணத்தால்; இக்ஷ்வாகூணாம் = இக்ஷ்வாகு நாட்டரசர்களின்; து³ராபே = அடைய முடியாத; அர்தே¹ = விருப்பத்தில், ஸித்³த³யஃ = வெற்றி கண்ட, த்வத் = உமக்கு, அதீ³நாஃ = அடங்கியவை.

(க-ரை) தந்தையே! இக்ஷ்வாகு வம்சத்தினரின் அடைய முடியாத காரியங்களை அடையச் செய்யத் தாங்கள் தகுதியுள்ளவர்கள். ஆதலால், எனக்கு, பிதருக்களின் கடன்தீர ஏதேனும் நல்லதோர் உபாயத்தை செய்யுமாறு வேண்டுகிறேன். (வேண்டலணி)

சு ॥ இதி விஜ்ஞாபிதோ ராஜ்ஞா த்³யாநஸ்தி¹மித லோசநஃ।
க்ஷணமாத்ர ரிஷிஸ் தஸ்தெள ஸுப்தமீந இவஹ்ரத³ஃ॥ 73

(ப-ரை) இதி = இவ்விதமாக, ராஜா = திலீப மன்னனால், விஜ்ஞாபிதஃ = விண்ணப்பிக்கப் பட்ட, ரிஷிஃ = வசிட்டர், த்³யாநஃ = தியானத்தால், ஸ்தி¹மித = அசைவற்ற, லோசநஸ்ஸந் = கண்களுடையவராய், க்ஷணமாத்ரம் = நொடி நேரத்தில், ஸுப்த = படுத்துள்ள, மீநஃ = மீன்களையுடைய, ஹ்ரத³ஃ இவ = மடுவைப் போன்று, தஸ்தள = இருந்தது.

(க-ரை) வசிட்டர் மனதை ஒருங்கு படுத்தி, தமது ஞானத்தால், திலீபனுக்கு மக்கட்பேறில்லாமைக்குக் காரணம் அறிந்தவராய், பிறகு திலீப் மன்னனை நோக்கி இவ்வாறு கூறினார் (புகழ்பொருளுவமையணி)

சு ॥ புரா ஶக்ரமுபஸ்த²ாய தவோர்வீம் ப்ரதியா ஸ்வத꞉।
ஆஸீத் கல்பதருச்ச²ாயா மாஶ்ரிதா ஸுரபி⁴꞉ பதி²꞉। 74

(ப-ரை) புரா=முன்பொருபோது, ஶக்ரம் = இந்திரனை, உபாஸ்த²ாய=சேவித்து,உர்வீம்=பூமிக்கு, யாஶ்யத꞉=திரும்பிவரும் போது, தவ=உன்னுடைய, பதி²=வழியில், ஸுரபி⁴꞉=காமதே⁴னு என்னும் தேவப்பசு, கல்பதரு=கல்பக விருட்சத்தின், ச²ாயாத்= நிழலில், ஆஶ்ரிதாம்=அடைந்ததாய் ஆஸீத்=இருந்தது.

(க-ரை) முன்பு நீ தேவேந்திரனைத் தெரிசித்து திரும்பவும் பூமிக்கு வரும்போது உன்னுடைய வழியில் காமதேனுவானது கற்பக விருட்சத்தின் நிழலில் இருந்தது. (நிகழ்வினவிறிசியணி)

அ ॥ அங்கே என்ன நடந்தது என்பதைச் சொல்கிறார்.

சு ॥ த⁴ர்மலோப ப⁴யாத்²ராஜ்ஞீ ம்ருது ஸ்நாதா மநுஸ்மரந் ।
ப்ரத²க்ஷிண க்ரியார் ஹாயாம் தஸ்யாம் த்வம் ஸாது⁴ நாசர॥ 75

(ப-ரை) குதுஸ்நாதம்=மாதவிலக்கால் மூழ்கிய, ராஜ்ஞீம்= சுதக்ஷிணா தேவியை, த⁴ர்ம=ருது காலத்தால் ஏற்பட்ட தருமத்தின், லோப=நசித்த, ப⁴யாத்=அந்த அச்சத்தால், அநுஸ்

மரஸ்ஸந் = தியானம் செய்பவனாய், ப்ரத²க்ஷிண=வலம்வரும், க்ரியா=செய்கைக்கு, அர்ஹாயாம்=தகுதியுடைய, தஸ்யாம்=அந்த காமதேனுவிடம், த்வம்=நீ, ஸாது⁴꞉=வலம் வருதல் போன்ற நற்செய்கை; ந ஆசர=செய்யாமற் போய்விட்டாய்.

(க-ரை) அப்போது நீ பூப்படைந்து தூய்மையடைந்த உனது மனைவியைச் சேராவிடில் சிசுவைக் கொன்ற பாவம் நேரிடும் என்று நினைத்துக்கொண்டு, வலம்வந்து வணங்கத்தக்க அந்த காம தேனுவுக்கு நீ அவ்வாறு செய்யத் தவறிவிட்டாய் (நிகழ் வினவிற்சியணி)

சு ॥ அவஜாநாஸி மாம் யஸ்மாத் ததஸ்தே ந ப⁴விஷ்யதி।
மத்ப்ரஸூதி மநாராத்⁴ய ப்ரஜேதித்வாம் ஶஶாபஸா ॥ 76

(ப-ரை) யஸ்மாத் = எக்காரணத்தால்; மாம் = என்னை; அவஜாநாஸி=மதிக்கவில்லையோ; தத꞉=அக்காரணத்தால்; மத்ப்ர ஸூதிம்=எனது வம்சத்தை (கன்றையும்); அநாராத்⁴ய=சேவிக்

க்ர்மலேயே; தே = உனக்கு; ப்ரஜா = சந்ததி; நப³விஷ்யதி = உண்டாகப் போவதில்லை; இதி = இவ்வாறு (என்று); ஸா = அந்த (காமதேனு); த்வாம் = உன்னை; ஶஶாப = சபித்துவிட்டது.

(க-ரை) என்னை நீ மதியாததால் என்னுடைய வம்சத்தை நீ தொழுதேற்றாமல் உனக்கு மகப்பேறு உண்டாகாது என்று அக்காமதேனு உன்னை சபித்துவிட்டது. (வஞ்சக ஒழிப்பணி)

சு॥ ஸ ஶாபோ நத்வயா ராஜந்நசஸாரதி³ நா ஶ்ருதஃ ।
நத²த்யாகாஶ க²ங்க²ாயாஸ் ஸ்ரோதஸ் யுத²த²ாம தி²க்²க²ஜே ॥ 77

(ப-ரை) உத்²த²ாம = மதங்கொண்ட; தி²க்²க²ஜே = திசை வேழம்; ஆகாஶக²ங்க²ாயாஃ = தெய்வ கெங்கையின்; ஸ்ரோதஸி = வெள்ளத்தில்; நத²திஸதி = அரவம் செய்துகொண்டிருக்கையில்; ஹே ராஜன் = ஓ திலீப மன்னா! ஸஃ = அந்த; ஶாபஃ = சாபமானது; த்வயா = உன்னால்; ந ஶ்ருதஃ = கேட்கப்படவில்லை; ஸாரதி¹நாச = ஓட்டுநராலும்; நஶ்ருதஃ = கேட்கப்படவில்லை.

(க-ரை) மதயானை ஆகாச கெங்கையில் பிளிறிக்கொண்டிருந்ததால், அப்போது நீயும், உனது ஓட்டுநரும், அவ்வோசையில் அதன் சாபம் கேட்கவில்லை. (ஒன்றற்கொன்றுதவியணி)

அவ॥ அஃதவ்வாறாக விருக்க, தற்போது அதன் விளைவு என்னவென்று நவில்கிறார்.

சு॥ ஈப்ஸிதம் தத²வஜ்ஞாநாத் வித்²தி³ஸார்க³ள மாத்மநஃ ।
பிரதிப²த்³நாதி ஹிஶ்ரேயஃ பூஜ்ய பூஜாவ்யதி க்ரமஃ ॥ 78

(ப-ரை) தத் = அக்காமதேனுவின்; அவஜ்ஞாநாத் = அவமானத்தால்; ஆத்மநஃ = உனது; ஈப்ஸிதம் = விருப்பம்; ஸார்க²ளம் = தடையுடன் கூடியதாக; வித்²தி³ = அறிவாயாக; தத¹ாஹி = அப்படியே; பூஜ்ய = தொழத் தக்கவர்களின்; பூஜா = பூசையின்; வ்யதிக்ரமஃ = மீறுதல்; ஶ்ரேயஃ = மேன்மையை; ப்ரதிப²த்³நாதி = தடை செய்கிறது.

(க-ரை) அத்தெய்வப்பசுவின் சாபத்தால் உனது விருப்பத்திற்குத் தடை உண்டாயிற்று என அறிவாயாக. தொழத்தக்கவர்களைத் தொழாதிருப்பது மேன்மை பெறத் தடையாகுமன்றோ? (நிகழ்வினவிற்சி மற்றும் இன்மைநவிற்சியணி)

அவ॥ ஆதலால் அங்கு சென்று அதை தொழுது அதன் கண்ணோட்டம் பெறுதலே வழியாகுமென்று செய்யத்தக்கதை நவில்கிறார்.

ஸு ॥ ஹவிஷே தீ[2]ர்க[3] ஸத்ரஸ்யஸா சேத[2]ா நீம்ப்ரசேதஸஃ।
புஜங்க[2] பிஹித த்[2]வாரம் பாதாள மதி[3]திஷ்ட[1]தி ॥ 79

(ப-ரை) ஸாச=அந்த தெய்வப்பசு; இத[2]ாநீம்=இப்போது; தீ[2]ர்க[3]=நெடுநாட்கள் செய்துவரும்; ஸத்ரஸ்ய=வேள்வியுஸடய; ப்ரசேதஸஃ=வருணனால்; ஹவிஸே=செய்யும் அவிகளுக்காக; பு[3]ஜங்க[1]=பாம்புகளால்; பிஹித=மறைக்கப்பட்ட; த்[2]வாரம்=வாயிலுள்ளபாதாளம்=பாதாள உலகை; அதி[3]திஷ்ட[1]தி=கவர்ந்துள்ளது.

(க-ரை) அந்த காமதேனுவானது தற்போது பல பாம்புகளால் சூழப்பட்ட வாயிலையுடைய பாதாள உலகத்தில் வருணன் செய் வேள்விக்கு வேண்டிய நெய் முதலிய அவிகளைத் தந்துக்கொண்டு இருக்கிறது. (நிகழ்வினவிற்சியணி)

அவ ॥ இப்போது என் செய்ய வேண்டுமெனக் கூறுகிறார்

ஸு ॥ ஸுதாம் ததீ[3]யாம் ஸுரபே[3]ஃ க்ரித்வா ப்ரதிநிதி[3]ம் ஶுசிஃ।
ஆராத[3]யஸ் ஸபத்நீகஃ ப்ரீதா காமதுகா[2] ஹிஸா ॥ 80

(ப-ரை) ததீ[3]யாம் = அந்தக் காமதேனுவைச் சார்ந்த; ஸுதாம்=மகவை; ஸுரபே[3]ஃ=காமதேனுவுக்கு; ப்ரதி நிதி[3]ம்= பதிலாக; க்ரித்வா=செய்துக்கொண்டு; ஶுசிஸ்ஸஃ=தூய்மையான மனங்கொண்டவனாய்; ஸபத்நீகஃ=மனைவியுடன் கூடி; ஆராத[3]ய= சேவிப்பாயாக; ஹி=எக்காரணத்தால்; ஸா=அந்த மகள், (கன்றுக்குட்டி) ப்ரீதாஸதி=மகிழ்ச்சி கொண்ட தாய்; காம= நினைத்தவற்றை; து[2]க[3]=கொடுக்கவல்லது.

அவி=வேட்கும்போது அக்னியில் சொரியும் நெய், சோறு போன்ற பொருட்கள்.

(க-ரை) நீ தூய்மையான மனமுடையவனாய், உனது மனைவியுடன் கூடி அக்காமதேனுவின் கன்றாகிய கிடாரியை அதற்குப் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டு, பூசித்து வருவாயாக, அதனால், மகிழும் தேனுவானது உனது விருப்பங்களை நிறைவேற்றும். (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ இதி வாதி²ந ஏவாஸ்ய ஹோது ராஹுதி ஸாத³நம் ।
அநிந்த்³யா நந்தி²நீ நாம தே³நு ராவவ்ரிதே வநாத் ॥ 81

(ப-ரை) இதி = இவ்வாறு; வாதி²ந ஏவ = சொல்லிக்கொண்டிருந்த; ஹோது = வேள்வியில் வல்லவரான; அஸ்ய = இந்த வாசிட்டருடைய; ஆஹுதி = அவிகட்கு; ஸாத³நம் = கருவியாகிய; நந்தி²நீநாம = நந்தினி என்னும் சிறப்புப்பெயருடைய; அநிந்த்³யா = மேன்மையுற்ற; தே³நு: = பசு; வநாத் = காட்டிலிருந்து; ஆவவ்ரீதே = வந்தது.

(க-ரை) இவ்வாறு வசிட்டர் விளக்கிக்கொண்டிருக்கையில், அவர் வேள்விக்கு உதவிவந்த காமதேனுவின் கன்றாகிய நந்தினி என்னும் காராம்பசு ரத்தினவனத்திலிருந்து திரும்பிவந்து சேர்ந்தது. (நிகழ்வினவிற்சியணி)

அவ ॥ காராம்பசுவின் புகழுரை

சு ॥ லலாடோத³ய மாபு³க்³நம் பல்லவஸ்நி³க்த³ பாடலா ।
பி³ப்³ரதீ ஶ்வேத ரோமாங்கம் ஸந்த்³யேவ ஶஶிநம் நவம் ॥ 82

(ப-ரை) பல்லவ = தளிர்களைப்போன்று; நெற்றியில்; லலாட = உதயம் தோன்றியுள்ள; அபு³க்³நம் = சற்றுவளைந்துள்ள; ஸ்வேத வெண்மையான; ரோம = உரோமமெனும்; அங்கம் = மச்சத்தை; பி²ப்³ரதீ = பெற்றுள்ளது ஆதலால்; நவம் = புதிதான; ஶஶிநம் = மதியைப் போல்; பி²ப்³ரதீ = தாங்கும்; ஸந்த்³யேவ ஸ்¹திதா = சாயங்கால வேளையோ என்பது போன்றுள்ள; தே³நு: = நந்தினி காராம்பசு; ஆவிவ்ரிதே = வந்தது.

(க-ரை) செந்நிறமான நந்தினி காராம்பசுவின் நெற்றியில் வெண்மையான உரோமங்கள் உள்ளன. அதனால், அது காண்பதற்கு இளமதியைத் தாங்கிய மாலைப் பொழுதோவென தோன்றியது. (தற்குறிப்பணி)

சு ॥ பு³வம் கோஷ்ணே நகுண்டோ³த்³நீ மேத்³யே நாவ ப்³ரிதா¹த²பி।
ப்ரஸ்ரவே ணாபி³வர்ஷந்தீ வத்ஸலோகப்ரவர்திநா 83

(ப-ரை) கோஷ்ணே = சற்று வெப்பமுடையதும்; அவப்³ரிதா³பி = அவப்ரிதமெனும் குளிப்பாட்டைவிட; மேத்யே = பரிசுத்தமானதும்; வத்ஸ = கன்றினை; ஆலோக = பார்ப்பதனால்;

ப்ரவர்திநா = நடந்துவரும்; ப்ரஸ்ரவேண = பால் பொழிதலால் ; பு^{3}வநம் = பூமியை; அபி^{3}வர்ஷந்தி = நனைத்துவரும்; குண்ட^2 உத்^{3}நீ = பானைப்போன்ற மடியை உடையதுமான ; தே^{3}நுः = நந்தினி என்னும் காராம்பசு; ஆவவ்ரிதே = வந்தது.

(க-ரை) பானையைப் போன்ற மடியை உடைய அந்த நந்தினி எனும் காராம்பசு தன் கன்றைக் கண்டதும் சற்று வெப்பமுடையதும், மிக்க சுத்தமானதுமான பாலினால் பூமியை நனைத்துக் கொண்டே நடந்து வந்தது. (உவமை மற்றும் நிகழ்வினவிற்சியணி)

சு॥ ரஜः கணைः கு^{1}ரோத்^{2}தூ^{3}தைः ஸ்ப்ரிஶத்^{2}பிர்^{3}க^2ாத்ரமந்திகாத் ।
தீர்த^1ாபி^{3}ஷேகஜாம் ஶு^{3}த்^{2}தி^{3} மாத^{2}த^1ாநாம^{1}ஹீக்ஷிதः ॥ 84

(ப-ரை) கு^{1}ர = குளம்புகளால்; உத்^{2}தூ^{3}தைः = சிதறடிக்கப் பட்ட; அந்திகாத் = சமீபத்தில்; க^2ாத்ரம் = உடலை; ஸ்ப்ரிஶத்^{2}பி^{3}ः = தொட்டுக்கொண்டிருக்கும்; ரஜः = தூசுகளின்; கணைः = நுண்மையால்; மஹீக்ஷிதः = திலீப மன்னனுக்கு; தீர்த்தாபி^{3}ஷேகஜாம் = தீர்த்தங்களில் நீராடுவதால் ஏற்படக்கூடிய; ஶு^{3}த்^{2}தி^{3}ம் = புனிதத்தை; அவத^3ாநா = செய்கின்ற; தேநுः = பசுவானது; ஆவவ்ரிதே = வந்தது.

(க-ரை) அந்த நந்தினீ பசுவின் குளம்புகளிலிருந்து சிதறடிக்கப் பட்டு எழும்பிய தூசுகள் அருகிலிருந்த திலீப மன்னனுக்கு தீர்த்தத்தில் நீராடுவதால் உண்டாகும் புனிதத் தன்மையை உண்டாக்கியது (அறநூல்களில் குளியலைப் பற்றி:— விபூதி (புனிதநீறு) குளித்தலை ஆக்னேயக் குளியல் என்றும், நீரில் குளித்தலை வருணஸ்நானம் என்றும், கோரஜ (பசுவின் குளம்பு தூசுகள் படுதல்) ஸ்நானத்தை வாயுஸ்நானம் என்றும் சொல்லப்பட்டுள்ளன) (உயர்வுநவிற்சியணி)

சு॥ தாம்புண்ய த^{2}ர்ஶநாம் த்^{2}ரிஷ்ட்வா நிமித்தஜ்ஞஸ்தபோநிதி^{3}ः ।
யாஜ்ய மாஶம்ஸிதா வந்த்^{3}ய ப்ரார்த்^{3}நம் புநரப்^{2}ரவீத் ॥ 85

(ப-ரை) நிமித்தஜ்ஞः = சகுணங்களை அறிந்த; தபோநிதி^{3}ः = வசிட்டர்; புண்ய = மேன்மை தரவல்ல; த^{2}ர்ஶநாம் = பார்வையுள்ள; தாம் = அந்த நந்தினீ பசுவை; த்^{2}ரிஷ்ட்வா = கண்டு; ஆஶம்ஸித = விரும்பியவை; அவந்த்^{3}ய = நிறைவேற்றும்; பார்தி^{1}வம் = திலீப மன்னனை நோக்கி; புநः = மறுபடியும்; அப்ரவீத் = சொன்னார்.

(க-ரை) சகுனங்களை அறிந்த வசிட்ட மாமுனிவர் மனதில் எண்ணியவை நிறைவேறும் அறிகுறியாக அந்த நந்தினீ பசுவின் வரவைக் கண்டவராய் திலீப மன்னனை நோக்கி மேலும் கூறலானார். (பிரிதின்குணம்பெறலணி)

சு ॥ அதூ³ர வர்திநீம் ஸித்²தி³ம் ராஜந் விக²ணயாத்ம நஃ॥
உபஸ்தி¹தேயம் கல்யாணீநாம்நி கீர்த்தித ஏவயத் ॥ 86

(ப-ரை) ஹேராஜந் = ஓ அரசே! ஆத்மநஃ = உனது; ஸித்²தி³ம் = காரியம் நிறைவேற; அதூ²ர = அருகில்; வர்திநீம் = உளதாக; விக²ணய = அறிவாய்; யத் = எதனால்; கல்யாணீ = சுபங்களை தரவல்ல; இயம் = இந்த நந்தினி பசுவின்; நாம்நி = பெயரை; கீர்தித ஏவ = சொல்லிக்கொண்டிருக்கையிலேயே; உபஸ்தி¹தா = வந்தது.

(க-ரை) அரசே! சுபங்களைத் தரவல்ல நந்தினீ தேனுவானது, அதனைப்பற்றி அளவளாவிக் கொண்டிருக்கும்போதே வந்துவிட்டதால், உனது எண்ணம் மிகவும் சீக்கிரத்தில் நிறைவேறி விடும் என்பது அறியப்படுகிறது. (நிகழ்வினவிற்சி மற்றும் கரவு வெளிப்படுப்பணி)

சு ॥ வந்யவ்ரித்திரிமாம் ஶஶ்வ தா²த்மாநு க²மநேந கா²ம் ।
வித்²யா மப்⁸யஸநேநேவ ப்ரஸாத²யிது மர்ஹஸி ॥ 87

(ப-ரை) வந்ய = காட்டிற்பிறந்த (கிழங்கு, வேர், பழம், இலை முதலியவற்றையே); வ்ரித்திஃ = உணவாகக் கொண்டவனாய்; இமாம் = இந்த; ²கா²ம் = நந்தினீ பசுவை; ஶஶ்வத் = இடைவிடாது; ஆத்ம = தன்னுடைய; அநுக²ம நேந = பின்பற்றுதலாலும்; அப்⁸யஸ நேந = பயிற்சியாலும்; வித்²யாமிவ = கல்வியைப்போல்; ப்ரஸாத²யிதும் = வயப்படுத்திக் கொள்வதற்கு; அர்ஹஸி = நீ தகுதியுடையவனாகின்றாய்.

(க-ரை) நீர் காட்டிற் கிடைக்கும் கனிவேர் கிழங்கு முதலியவற்றையே உணவாகக் கொண்டு: பழக்கத்தால் கல்வியை வயப்படுத்திக் கொள்வதுபோல், நீ இந்த நந்தினீ பசுவை இடைவிடாது பின் தொடர்ந்து, அதனை வயப்படுத்திக்கொள்ள வேண்டும் (விரியுவமையணி)

அவ ॥ பசுவைப் பின்தொடர்ந்ததைப் பற்றிய விளக்கம்.

சு ॥ வதூ³ர் ப³க்திமதீசை நா மர்சிதா மாதபோ வநாத் ।
ப்ரயதா ப்ராத ரங்வேது ஸாயம் ப்ரத்யுத்² வ்ரஜேத²பி ॥ 88

ப-ரை) வது³ஃ = உனது மனைவி; ப³க்திமதீஸதி = பக்தியுள்ளவளாய்; ப்ரயதாசஸதி = கட்டுப்படுத்திய மனங்கொண்டு; அர்சிதாம் = பூசை செய்யப்பட்ட; ஏநாம் = இந்த நந்தினீ தேனுவை; ப்ராதஃ = வைகறையில்; ஆதபோவநாத் = தபோவனம் வரையில்; அந்வேது = தொடர்வாளாக; ஸாயமபி = அந்திவேளையிலும். ப்ரத்யுத்² வ்ரஜேத் = எதிர்நோக்கிச் செல்லவேண்டும்.

(க-ரை) உனது மனைவியும் அதனிடம் பக்தி செலுத்துபவளாய் இந்த நந்தினீ தேனுவைத் தொடர்ந்து காலையில் தபோவனம் வரை செல்லவேண்டும். மாலை வேளையிலும் அது வரும் போது எதிர்நோக்கிச் சென்று அழைத்து வரவேண்டும். (வேண்டலணி)

சு॥ இத்யா ப்ரஸாத²ா த²ஸ்யா ஸ்த்வம் பரிசர்யாபரோ ப³வ ।
அவிக்³ந மஸ்துதே ஸ்தே¹யாஃ பிதேவ து³ரிபுத்ரிணாம் ॥ 89

(ப-ரை) இதி = இவ்வாறு: த்வம் = நீ; ஆப்ரஸாத²ாத் = அருள் சுரக்கும்வரை; அஸ்ய = இந்த நந்தினீ தேனுவினுடைய; பரிசர்யா = தொண்டு செய்துவருவதில்; பரஃ = விருப்பமுடையவனாக; ப³வ = ஆவாய்; தே = உனக்கு; அவிக்³நம் = இடையூறின்றி; அஸ்தி = இருக்கக கடவது; பிதேவ = நீ தந்தையர் போன்று; புத்ரிணாம் = நல்ல புதல்வர்களுடையவர்களின்; து³ரி = முன்பு; ஸ்தே¹யாஃ = இருப்பாயாக.

(க-ரை) நீ இப்போது சொன்னபடி நந்தினீ தேனுவின் அருள் பெறும் வரை அவளின் பணிவிடையில் ஈடுபாடு கொண்டிருப்பாயாக. உனக்கு எவ்விடையூறும் இல்லாதிருக்கட்டும்; உன் தந்தையார் பொன்று உனக்கும் நன்மக்கட் பேறுண்டாகட்டும். (சுருங்கச் சொல்லணி)

சு॥ ததே¹தி ப்ரதி ஜக்³ராஹ ப்ரீதிமாங் ஸபரிக்²ரஹஃ ।
ஆதே²ஶம் தே²ஶகாலஜ்ஞஶ் ஶிஷ்யஶ் ஶாஸிதராநதஃ ॥ 90

(ப-ரை) தே²ஶஃ = அக்கினி வெளிப்படுமிடமும், கால = அக்கினியின் அந்தி நேரமும்; ஜ்ஞஃ = தெரிந்தவனாதலால்; ப்ரீதி

மாந்=மகிழ்வித்தலில் மேம்பட்ட; ஶிஷ்ய:=சீடனான; (திலீப மன்னன்); ஸபரிக்[2]ரஹ:=மனைவியுடன் கூடியவனாய்; ஆநத:=கீழ்ப்படிந்தவனாய்; ஶாஶிது:=ஆணையிடும்; கு[2]ரோ:=ஆசானாகிய வசிட்டருடைய; ஆதே[2]ஶம்=கட்டளையை; ததே[1]தி=அவ்வாறே ஆகட்டுமென்று, ப்ரதிஜக்[2]ராஹ=ஏற்றுக்கொண்டான்.

(க-ரை) இடம், காலம், அறிந்த நற்சீடனாகிய திலீப மாவரசன் மனைவியோடு, மகிழ்ச்சி கொண்டவனாய், அவ்வாறே ஆகுகவென்று கூறி, ஆசானின் கட்டளைப்படி நடந்துக் கொள்வதாக (வசிட்டரிடம்) கூறினான். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ அத[1] ப்ரதே[2]ாஷே தே[2]ாஷஜ்ஞஸ் ஸம்வேஶாய விஶாம்பதிம் ।
ஸூநுஸ் ஸூந்ரிதவாக் ஸ்ரிஷ்டுர் விஸஸர்ஜோர்ஜித ஶ்ரியம்॥ 93

(ப-ரை) அத[1]=பிறகு, ப்ரதே[2]ாஷே = சாயங்காலங்களில், தே[2]ாஷஜ்ஞ: = வித்துவானும், ஸூந்ரிதவாக்=வாய்மையில் பிரியங் கொண்டவனும், ஸ்ரஷ்டு=பிரம்மாவுக்கு, ஸூநு:=மகனுமான, (வசிட்டர்), ஊர்ஜித=நிச்சயிக்கப்பட்ட, ஶ்ரியம்=சம்பத்துக்களுடைய, விஶாம்பதிம்=அரசனாகிய திலீப மகாராஜாவை, ஸம்வேஶ்ய=உறங்கும் பொருட்டு, விஸஸர்ஜ=ஆணையிட்டார்.

(க-ரை) பிறகு மாலைவேளையில் அறிஞனும் வாய்மைப் பிரியனும் பிரமனின் மகனும் ஆன வசிட்டர், அனுக்கிரகம் பெற்ற திலீப் மாமன்னனை, தூங்கும்படி ஆணையிட்டார். (வேண்டலணி)

சு ॥ ஸத்யாமபி தபஸ்ஸித்[2]தெ[3]ள நியமாபேக்ஷயா முநி: ।
கல்பவித் கல்பயாமாஸ வந்யாமே வாஸ்ய ஸம்வித[2]ாம் ॥ 94

(ப-ரை) கல்பவித் வேதாங்க சாத்திரங்கள் ஆறில் ஒன்றாகிய 'கல்ப'மென்னும் சாத்திரங் கற்று அதன்படி விரதங்களை நடத்தி வைப்பவராய; முநி:=வசிட்டமுனி; தபஸ்ஸித்[2]தெ[3]ள=தவத்தின் முழுப்பலன்; ஸத்யாமபி=அடைந்திருந்தும்; நியம=கோசேவா விரதத்தின் செயல் முறைகளின்; அபேக்ஷயா=விழைந்ததால்; அஸ்ய=இந்த திலீப் மன்னனுக்கு; வந்யாமேவ=காட்டிலேயே; பிறத்த; ஸம்வித[3]ாம்=தருப்பை என்னும் நாணற்புல் முதலிய படுக்கைக் குரிய பொருட்களை; கல்பயாமாஸ=சம்பாதித்தான்.

(க-ரை) விரதங்கள் நடத்திவைக்கும் விதிமுறைகள் அறிந்த வசிட்டர் அரசனுக்குகந்த உணவை சம்பாதிக்கும் திறனிருந்தும் காட்டிலேயே பிறந்த நாணல்புல் முதலிய பொருட்களை திலீப

மகாராஜனுக்குப் படுக்கையாகச் செய்து உதவினார். (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ நிர்தி²ஷ்டாம் குலபதிநா ஸ பர்ணஶாலாம்
அத்⁴யாஸ்ய ப்ரயத பரிக்²ரஹ த்விதீயஃ।
தச்சி¹ஷ்யா த்⁴யயந நிவேதி²தாவஸாநாம்
ஸம்விஷ்டஃ குஶஶயநே நிஶாம் நியாய ॥ 95

இதி காளிதா²ஸக்ருதௌ ரகுவம்ஶ மஹாகாவ்யே ப்ரத¹மஸ்ஸர்க³ஃ

(ப-ரை) ஸஃ=அந்த திலீபமாமன்னன்; குலபதிநா=முனிவர் மறபின் சிரேட்டரான வசிட்டரால்; நிர்தி²ஷ்டாம்=காண்பிக்கப் பட்ட; பர்ணஶாலாம்=குடிலில்; அத்⁴யஸ்ய=இருந்து; ப்ரயத= தூய்மையானவனாய்; குஶஶயநே = தருப்பை படுக்கையில்; ஸம்விஷ்டஸ்ஸந்=உரங்கியவனாய்; தத்=அந்த வசிட்டருடைய; ஶிஷ்ய=சீடர்கள்; அத்⁴யயந=பின்னிரவு வேத பாடங்களை ஓதினதால்; நிவேதி²த=அறிவிக்கப்பட்ட; அவஸாநாம்=முடிவுற்ற தாலாய; நிஶாம்=இரவை; நியாய=போக்கினான்.

(க-ரை) திலீப மன்னவன் தன் குலகுருவாய வசிட்டரால் காண்பிக்கப்பட்ட குடிலில் இருந்து நியமத்துடன் மனைவியுடன் அவ்விரவு தருப்பை சயனத்தில் படுத்திருந்து வைகரையில் வசிட்டரின் சீடர்கள் வேதபாடங்கள் ஓதும் நாதங்களைக்கேட்டு விழித்துக்கொண்டான். (நிகழ்வினவிற்சியணி)

இது மாககவி காளிதாசனா லியற்றப்பட்ட ரகுவம்சத்தில் முதல் சருக்கத்திற்குத் திருத்தணிவாழ் ஸ்ரீவித்யானந்தா எனும் செ. ராமலிங்காசாரியரால் இயற்றம்பட்ட தெளிவுரை.

ரகுவம்ச மகா காவியம்

இரண்டாம் சருக்கம்

சு ॥ அத1 ப்ரஜாநா மதி3ப꞉ ப்ரபா3தே
ஜாயா ப்ரதிக்2ராஹித க2ந்த3 மால்யாம்।
வநாய பீத ப்ரதிப2த்2த3 வத்ஸாம்
யஶோத3நோ தே3நு ம்ரிஷேர் முமோச॥ 1

(ப-ரை) அத1=பாதி இரவுக்குப் பிறகு; யஶோத3ந꞉= புகழையே பொருளாகக் கொண்ட; ப்ரஜாநாம் = குடிகட்கு; அதி3ப꞉=பிரபுவான திலீபன்; ப்ரபா3தே=வைகறையில்; ஜாயாப்ரதிக்3ராஹித=மனைவியாகிய சுதக்ஷிணா தேவியால் ஏற்றுக்கொண்ட; க2ந்த3=சந்தனம்; மால்யம்=பூமாலையும் உடைய; பீத=குடிக்கப் பட்டு; ப்ரதிப2த்2த3=கட்டப்பட்டுள்ள; வத்ஸாம்; கன்றைவுடைய; ரிஷே꞉=வசிட்டருடைய; தே3னும்=நந்தினி தேனுவை; வநாய= காட்டிற்குச் சென்று வருவதற்காக; முமோச=அவிழ்த்துவிட்டான்.

(க-ரை) பொழுது விடிந்ததும் திலீபமன்னன் நந்தினி தேனுவை, தன் மனைவியால் சந்தனம் பூசவைத்து, பூமாலை யுடன் அலங்கரித்து, கன்றைப் பால் குடிக்கவைத்து; பிறகு கட்டி வைத்து; அப்பசுவை காட்டிற்குப் போகவிட்டான். (நிகழ்வினவிற் சியணி)

சு ॥ தஸ்யா꞉ கு1ரந்யாஸ பவித்ர பாம்ஸு
மபாம்ஸு லாநாம் து3ரிகீர்தநீயா।
மார்க3ம் மநுஷ்யேஶ்வர த3ர்ம பத்நீ
ஶ்ருதே ரிவார்த1ம் ஸ்மிருதி ரந்வ க2ச்ச1த்॥ 2

(ப-ரை) அபாம் ஶுலாநாம்; பதிவிரதைகளுடைய; து3ரி= கடைசியில்; கீர்தநீயா=புகழத்தக்க; மநுஷ்யேஶ்வர=திலீபமன்ன னுக்கு; தர்மபத்நீ=தரும பத்தினியாகிய சுதக்ஷிணாதேவி; கு2ர= குளம்புகளுக்கு; ந்யாஸ=இடுவதால்; பவித்ர=தூய; பாம்ஸும்= தூசியையுடைய; தஸ்யா=அந்த நந்தினி தேனுவின்; மார்க2ம்= வழியை; ஸ்மிருதி꞉=மனு முதலியவர்களின் வாக்குகள்; ஶ்ருதே꞉= வேதவாக்கின்; அர்த1மிவ=செல்வம் போன்றே; அந்வக2ச்ச1த்= தொடர்ந்து செல்வதுபோன்று இருந்தது.

(க-ரை) பதிவிரதாமணியும் திலீப மன்னனின் மனைவியுமான சுதக்ஷிணாதேவி நந்தினீ பசுவின் குளம்புகளால் சிதறடிக்கப்பட்ட தூசுகளுடன் கூடிய வழியைத் தொடர்ந்து சென்றனள். அவள் சென்றது எவ்விதமிருந்ததெனில் வேதத்தின் பொருள்களைத் தொடர்ந்து மனுவாதி ஸ்மிருதிகள் செல்வது போன்று இருந்தது. (நிகழ்வினவிற்சி மற்றும் புகழ்பொருளுவமையணி)

சு॥ நிவர்த்ய ராஜா த²யிதாம் த²யாளு
ஸ்தாம் ஸௌரபே³யீம் ஸுரபி⁴ர்யஶோபி⁴꞉ ॥
பயோ த⁴ரீபூ⁴த சதுஸ் ஸமுத்³ராம்
ஜுகோ³ப கோ³ரூப த⁴ராமி வோர்வீம் ॥ 3

(ப-ரை) த²யாளு꞉=தயவுள்ளவனும்; யஶோபி⁴꞉=புகழாரங்களால்; ஸுரபி⁴=அழகியவனும் ஆகிய; ராஜா=திலீப மன்னவன்; த²யிதாம்=மனைவியாகிய சுதக்ஷிணையை; நிவர்தய=தடுத்து; ஸௌரபே³யீம்=காமதேனுவின் மகளாகிய; தாம்=அந்த நந்தினீ பசுவை; பயோத⁴ரீபூ⁴த=முலைகளான; சது꞉=நான்காகிய; ஸமுத்³ராம்=கடல் உடையதாய்; கோ³ரூப=பசு உருவை; த⁴ராம்=பூண்டிருக்கும்; உர்வீம்இவ=பூமியைப் போன்று; ஜுகோ³ப=காத்தான்.

(க-ரை) தயாளுவாகிய திலீப மன்னன் தன் மனைவியைத் தடுத்து. கடல் நான்கும் சூழ்ந்த நிலப்பரப்பைக் காப்பதுபோல், கடல்களுக்கு இணையாகிய நான்கு முலைகளுடைய நந்தினீதேனுவை காப்பாற்றினான். (புகழ்பொருளுவமையணி)

சு॥ வ்ரதாய தேநாநுசரேண தே⁴நோ꞉
ந்யஷேதி⁴ ஶேஷோऽப்யநுயாயி வர்க³꞉ ।
நசாந்யதஸ் தஸ்ய ஶரீர ரக்ஷா
ஸ்வவீர்ய கு³ப்தா ஹிமநோ꞉ ப்ரஸூதி꞉ 4

(ப-ரை) வ்ரதாய=பசுவை சேவிக்கும் விரதத்திற்காக; தே⁴நோ꞉=நந்தினீ என்னும் பசுவிற்கு; அநுசரேண=ஊழியனாகிய; தேந=அந்த திலீப மன்னனால்; ஶேஷோபி=மீதியாயினும்; அநுயாயி=ஊழியர்களுடைய; வர்க³꞉=கூட்டம்; ந்யஷேதி⁴꞉=நிறுத்தப்பட்டது; தஸ்ய=அந்த திலீப மன்னனுடைய; ஶரீர=உடலின்; ரக்ஷாச=பேணுவது; அந்யத꞉=மற்றொரு மனிதனால்; ந=இல்லை; ஹி=எக்காரணத்தால்; மநோ꞉=மனுவென்னும் மன்ன

னுடைய; ப்ரஸூதைः = மக்கள்; ஸ்வ = தம்முடைய; வீர்ய = வன்மையால்; குப்தா = காக்கப்பட்டதோ.

(க-ரை) மனு வம்சத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் சுய பலத்தால் தங்களைத் தாங்களே காத்துக்கொண்டனர், அதனால் பசுவை சேவித்துவந்த திலீப மாமன்னன் பிறர் உதவி தேவையின்மையால், ஏவலாட்களைத் திரும்பிச் செல்லும்படி அனுப்பி விட்டான். (வீறுகோளணி)

சு ॥ ஆஸ்வாத²வத்²பி⁸ः கப²ளை ஸ்த்ரிணா நாம்
கண்டூ²யனைர் த³ம்ஶ நிவாரணைஶ்ச।
அவ்யாஹதைः ஸ்வைர க²தைஶ்ச தஸ்யா
ஸ்ஸம்ராட் ஸமாராத⁸ந தத்பரோऽபூ⁸த்॥ 5

(ப-ரை) ஸம்ராட் = பூமண்டலாதிபதியாகிய திலீபமன்னன்; ஆஸ்வாத²வத்²பி⁸ः = சுவைக்கத் தக்கவையாகிய; த்ரிணாநாம் = புற்களின்; கப²ளைः = தீவனங்களாலும்; கண்டூ²யநைः = பறண்டுதலால்; த³ம்ஶः = காட்டு ஈக்களின் (உபத்திரவத்தை) நிவாரணைஶ்ச = ஓட்டி விடுவதாலும்; அவ்யாஹதைः = தடுக்கக் கூடாத; ஸ்வைர க²தைஶ்ச = சுயமான போக்கினாலும்; தஸ்யாः = அந்த பசுவின்; சாஸமாராத³ந = பணிபுரிவதில்; தத்பரः = விரும்பியவன்; அபூ⁸த் = ஆனான்.

(க-ரை) மண்டலாதிபனான திலீபமன்னன் செழிப்பான நல்ல புல்லைத் தந்தும், அதனைப் பறண்டிக் கொடுத்து காடடீக்களை ஓட்டியும், தடையின்றி சுயேச்சையாகத் திரியும்படி செய்தும், நந்தினீ தேனுவுக்குப் பணீ செய்தலில் மிக நாட்டமுடையவனாக இருந்தான் (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ ஸ்தி¹தஸ் ஸ்தி¹தா முச்சலிதः ப்ரயாதாம்
நிஷேதுஷீ மாஸந ப²ந்த³தீ³ரः।
ஜலாபி³லாஷீ ஜலமாத³ த²ாநாம்
சா¹யேவதாம் பூ³பதி ரந்வக²ச்ச¹த்॥ 6

(ப-ரை) பூபதி³ः = திலீப மன்னன்; ஸ்தி¹தாம் = அது நின்றுள்ள போது; ஸ்திதஸ்ஸந் = நின்றவனாயும்; ப்ரயாதாம் = போகும்போது; உச்ச¹லிதஸ்ஸந் = போவானாகி; நிஷேது²ஷீம் = உட்காரும்போது; ஆஸந = பதுமாசனம்; ப²ந்த⁸ः = போட்டு; தீ⁸ரஸ்ஸந் = திறம்பட

உட்கார்ந்தவனாயும்; ஜலம் = தண்ணீர்; ஆத[2]தா[3]நாம் = உட்கொள்ளும்போது; அபி[3]லாஷீ ஸந் = விரும்பியவனாயும்; தாம் = அந்த நந்தினியை; சா[1]யேவ = நிழல்போன்று அநவக[2]ச்ச[1]த் = தொடர்ந்து சென்றான்,

(க-ரை) மேலும், அந்த திலீப மன்னன் நந்தினீதேனு நிற்கும்போது தானும் நின்று, அது போகும்போது தானும் சென்று, உட்காரும்போது உட்கார்ந்தும், தண்ணீர் குடிக்கும்போது; தண்ணீர் பருகியும், இவ்வாறு அதனை நிழல்போன்று தொடர்ந்தான் (நிகழ்வினவிற்சி மற்றும் உவமையணி)

சு ॥ ஸங்யஸ்த சிஹ்நாமபி ராஜ்யலக்ஷ்மீம்
தேஜோ விஸேஷாநுமிதாம் த[2]தா[2]ந:।
ஆஸீத[2] நாவிஷ்க்ரித த[2]ாநராஜி:
அந்தர் மத[2]ாவஸ்த[1] இவ த்[2]விபேந்த்[2]ர: ॥ 7

(ப-ரை) ஸந்யஸ்த = களையப்பட்ட; சிஹ்நமபி = குடை சாமரம் முதலிய அரசு குறிப்புகள் உண்டாகியும்; தேஜோவிஸேஷ: = ஒளியின் மிகுதியால், அநுமிதாம் = எண்ணத்தக்க, ராஜ்யலக்ஷ்மீம் = அரசு என்னும் இலக்குமியை, த[2]த்[3]ாந: = தொடுத்துள்ள திலீப மன்னன், அநாவிஷ்க்ரித = புறத்தோற்றம் அளிக்காதுள்ள, த[3]ாந = மதஜலத்தின்; ராஜி: = கோடுகள் உள்ளதும், அந்த: = உள்ளடங்கிய, மத[2] = திமிரின், அவஸ்த[1]: = நிலைமை உடைய, த்[2]விபேந்த்[2]ர இவ = யானைத் தலைவன் போல், ஆஸீத் = ஆனான்.

(க-ரை) நீக்கப்பட்ட குடை, சாமரம் போன்ற அரசக்குறிகள் உடைய திலீப மன்னன், மதஜலம் வெளியே தோன்றாது உள்டங்கிய நிலைமையுடைய யானைத் தலைவனைப் போன்று, அதிசயமான ஒளியினால் அரசரேறு என்னும் எண்ணத்தை வெளிப்படுத்தலானான். (வீறுகோளணி)

சு॥ லதா ப்ரதா நாத்[2]க்[2]ரதி[3]தை: ஸகேஸை:
அ்தி[3]ஜ்ய த[3]ந்வா விசசார த[2]ாவம் ।
ரக்ஷாப தே[2]ஸாந் முநிஹோம தே[3]நோ:
வந்யாந் விநேஷ்யந்நிவ து[2]ஷ்ட ஸத்வாத் ॥ 8

(ப-ரை) லதா = கொடிகளின், ப்ரதாந = வளைந்த நுண்ணிய கொடிகளில், உத[2]க்[2]திை[3]த[3]: = எடுத்துக்கட்டப்பட்ட, கேஸை: =

தலைமயிருடையவனாய், உபலக்ஷிதః = தோன்றும், ஸः = அந்த திலீப மன்னன், அதி³ஜ்ய = தொடுக்கப்பட்ட நாணையுடைய, த³ந்வாஸந் = வில்லுடையவனாய், முநி = வசிட்ட முனிவருடைய ஹோமதே³நோः = வேள்விப் பசுவின், ரக்ஷ = காப்பாற்றும், அப தே²ஶாத் = போலிக் காரணத்தகல், வந்யாந் = காட்டில் பிறந்த, து²ஷ்டஸதத்வாந் = கெட்டவிலங்குகளை, விநேஷ்யந்நிவ = தண்டிப்பவன் போல், த²ாவம் = காட்டில், விசசார = திரிந்து வந்தான்.

(க-ரை) திலீப மன்னன் வளைந்த நுண்ணிய கொடிகளால் தலைமயிர்களை எடுத்துக் கட்டிக்கொண்டு,] வில்லேந்தியவனாய் ஓமத்திற்குதவும் நந்தினி தேனுவைக் காப்பாற்றும் பொய்க்காரணத் தால் காட்டிலுள்ள கொடிய விலங்குகளை தண்டிப்பவன் போல் காட்டில் திரிந்து வந்தான் (கருத்துடையடைகொளியணி)

சு॥ விஸ்ரிஷ்ட பார்ஶ்வாநுசரஸ்ய தஸ்ய
பார்ஶ்வ த்³ருமாः பாஶப்³ரிதா ஸமஸ்ய ।
உதீ²ரயாமாஸு ரிவோந் மத³ாநாம்
ஆலோக ஶப்³த³ம் வயஸாம் விராவைः॥ 9

(ப-ரை) விஸ்ரிஷ்ட = விடப்பட்ட; பார்ஶ்வ = பக்கங்களில் உள்ள; அநுசரஸ்ய = ஏவலாட்களை உடைய; பாஶப்³ரிதா = வருணனுக்கு; ஸமஸ்ய = நிகரான; தஸ்ய = அந்த திலீப ராஜன்; பார்ஶ்வ = பக்கங்களில் உள்ள; த்³ருமாः = மரங்கள்; உந்மதா²நாம் = மிகுந்த மதம்பிடித்த; வயஸாம் = பறவைகளின்; விராவைः = ஓசை யால்; ஆலோக ஶப்³த³ம் = பார்த்து செய்யும் ஒலிகளும்; உதீரயா மாஸுரிவ = சொல்லினவோ என்பது போன்று இருந்தன.

(க-ரை) திலீபமன்னன் தன்னிருபுறங்களில் வரும் ஏவலாட் களை விட்டவனாயும், வழியில் இருபுறங்களில் உள்ள மரங்கள், அவற்றின் மீதுள்ள பறவைகளின் ஒலிகளால், வழியில் ஆங்காங் குள்ள சிறப்புகளைப் பாருங்கள் என பக்கத்தில் தொடர்ந்து வருவோர் கூறுவது போன்று இருந்தது. (தொகை யுவமையணி)

சு ॥ மருத் ப்ரயுக்தாஶ்ச மருத்ஸகா¹ப³ம்
தமர்ச்ய மாரா த³பி³வர்த மாநம் ।
அவாகிரந் பா²லலதாः ப்ரஸூநைः
ஆசாரலாஜை ரிவ பௌர கந்யாः ॥ 10

(ப-ரை) மருத் = காற்றால்; ப்ரயுக்தா: = ஏவப்பட்ட, பா²லலதா: = இளங்கொடிகள்; ஆராத் = சமீபத்தில்; அபி³வர்தமானம் = எதிரில் வரும்; மருத்ஸக¹ = அக்கினியைப்போல்; ஆப³ம் = ஒளிவீசும், அர்ச்யம் = தொழத்தக்க, தம் = அந்த திலீபனை, ப்ரஸூநை = பூக்களால், பௌரகந்யா: = பட்டணத்து கன்னியர்கள், ஆசார = மறைபையொட்டி, லாஜை: இவ = பொரிகளைச் சொரிவது போல். அவாகிரந் = உதிர்த்தன.

(க-ரை) காற்றால் அலையும் இளங் கொடிகளிலிருந்து வாயுவின் நண்பனான அக்னியைப் போல் பிரகாசத்துடன் அருகில் வந்துக் கொண்டிருக்கும் திலீபமாமன்னன் மீது உதிர்ந்துவரும் பூக்கள், பட்டணத்துள்ள கன்னிப்பொண்கள் மரியாதைக்காக அருகில் வரும் அரசன்மீது சொரியும் பொரிகளைப்போன்று, அக்கொடிகள்; அக்கினி நண்பனான வாயுவால் தூண்டப்பட்டவைகளாய், பூக்களைத் தெளிப்பது போன்று இருந்தது. (தொகையுவமையணி)

ஸு ॥ த³நுர்ப்³ரி தோ꞉ப்யஸ்ய த³யார்த்³ர பா³வம்
ஆக்¹யாத மந்த꞉ கரணை ர்விஶங்கை꞉।
விலோகயந்த்யோ வபுராபு ரக்ஷ்ணாம்
ப்ரகாம விஸ்தார ப¹லம் ஹரிண்ய꞉ ॥ 11

(ப-ரை) த³நு꞉ = வில்லை, ப்³ரித꞉அபி = ஏந்தியவனாக இருந்தும், அஸ்ய = இந்த திலீப மன்னனுடைய, விஶங்கை꞉ = அச்சமற்ற, அந்த꞉ காரண꞉ = மனத்தாலும், த³யா = தயவால், ஆர்த்³ர = நனைந்த, பா²வம் = எண்ணம் உடைத்தாய், ஆக்¹யாதம் = கூறப்பட்ட, வபு꞉ = உடலை, விலோகயந்த்ய꞉ = பார்த்துக்கொண்டுள்ள, ஹரிண்ய꞉ = பெண்மான்கள், அக்ஷ்ணாம் = கண்களின், ப்ரகாம = மிகுந்த, விஸ்தார = விரிவான, ப¹லம் = பயன்களை, ஆபு³꞉ = அடைந்தன.

(க-ரை) திலீப மன்னன் வில்லேந்தியுள்ளதால், அச்சமூட்டுவதாக இருந்த போதிலும் அச்சத்தை நீக்கும் தயவுடன் கூடிய எண்ணத்தைக் குறிக்கும் அவனுடைய சுந்தரவதனங்கண்ட பெண் மான்கள் தம் அகன்ற கண்களால் பார்ப்பதால் அவற்றின் விரிவை பலிக்கச் செய்தன. அதாவது தமது அகன்ற கண்களால் அச்சமின்றியே நோக்கினவென்பனவாம் (அகமலர்ச்சியணி)

ஸு॥ ஸ கீசகைர் மாருதபூர்ண ரந்த்³ரைஃ
கூஜத்²பி³ ராபாதி²த வம்ஶ க்ரித்யம்।
ஶுஶ்ராவ குஞ்ஜேஷு யஶஸ் ஸ்வமுச்சைஃ
உத்²கீ²யமாநம் வநதே²வதாபி³ ஃ॥ **12**

(ப-ரை) ஸஃ = அந்த திலீப மன்னன்; மாருத = காற்றால்; பூர்ண = நிரப்பப்பட்ட; ரந்த்³ரைஃ = துவாரங்கள் உள்ளவை ஆன தால்; கூஜத்² பி³ஃ = தொனிக்கும்; கீசகைஃ = மூங்கில்களால்; உச்சைஃ = உரத்த; ஆபாதி²த = ஊட்டப்பட்ட; வம்ஶஃ = துளைகள் உள்ள வாத் தியத்தின்; கரித்யம் யத²ாதத²ா = செய்கை போன்று உண்டாகும் படி; குஞ்ஜேஷு = புதர்களில்; வநதே²வதாபி³ஃ = வனதெய்வங் களால்; உத்²கீ²யமாநாம் = உரத்த கானம் செய்யப்படும்; ஸ்வம் = தனது; யஶஃ = புகழ் குறித்து; ஶுஶ்ராவ = கேட்டான்.

(க-ரை) அந்த திலீப மன்னன் மூங்கில்களில் காற்று சேர்வ தால் உண்டான இனிய புல்லாங்குழல் ஒலியைக் கேட்டான். அவ் வேணு நாதமானது வனதேவதைகள் தன் புகழைப் புகழ்ந்துப் பாடியது போலிருந்தது. (பெருமையணி)

ஸு॥ ப்ரிக்தஸ் துஷாரைஃ கி²ரி நிர்ஜ¹ ர¹ாணம்
அநோக ஹாகம்பித புஷ்பக²ந்தி³ஃ।
த மாதபக்லாந்த மநாதபத்ரம்
ஆசாரபூதம் பவநஸ் ஸிஷேவே॥ **13**

(ப-ரை) நிர்ஜராணாம் = மலையருவி வெள்ளத்தின்; துஷாரைஃ = திவலைகளால்; ப்ரிக்தஃ = நனைக்கப்பட்டதும்; அநோகஹ = மரங்களின்; ஆகம்பித = அசைந்த; புஷ்பஃ = பூக்களின்; க²ந்தீ³ = நறுமணமுடைய; பவநஃ = காற்று; அநாதபத்ரம் = குடைய யற்றுள்ளவனாதலால்; ஆதப = வெய்யிலால்; க்லாந்தம் = சோர் வுற்றுள்ளவனும்; ஆசார = நல்லொழுக்கத்தால்; பூதம் = புநிதமான வனும்; தம் = (ஆகிய) அந்த திலீப மன்னனை; ஸிஷேவே = சேவித்தன.

(க-ரை) அந்த திலீபமன்னவன் விரதம் பூண்டதால் குடைப் பிடித்துக்கொள்ளாமல், வெய்யிலில் சோர்வுற்றிருந்தமையின், வாயு வானது ஆசாரசீலனான அவன்மீது மலையருவிகளின் நீரினால் தெரித்த திவலைகளைத் தெளித்து, மரங்களை அசையச்செய்து, அவற்றின் பூவிலெழும் நறுமணங்களை வீசிக்கொண்டே அவனை

சேவித்துக் கொண்டிருந்தது. அதாவது, குடைப்பிடிக்காது சென் தால் சோர்வுற்ற திலீபன்மீது குளிர்ந்த நறுமணங் கூடிய தென் வீசியது என்பதாம் (பெருமையணி)

சு ॥ ஶஶாம வ்ரிஷ்ட்யாபி விநா த^{2}வாக்^{2}நி:
ஆஸித்^{2} விஶேஷா ப^{1}லபுஷ்ப வ்ரித்^{2}தி^{3}:।
ஊநம் நஸத்வே ஷ்வதி^{3}கோ ப^{2}பா^{2}தே^{3}
தஸ்மிந் வநம் கோ^{2}ப்தரி கா^{2}ஹமாநே॥ 14

(ப-ரை) கோ^{2}ப்தரி = காவலனான; தஸ்மிந் = அந்த திலீப மன்னன்; வநம் = காட்டை; கா^{2}ஹமாநே அபி = நுழைந்தபோது; வ்ரிஷ்ட்யா விநா அபி = மழையைத் தவிர்த்து; த^{2}வாக்^{2}நி: = காட்டுத்தீ ஶஶாம = அடங்கிவிட்டது; ப^{1}ல = பழங்கள்: புஷ்ப = பூக்கள் வ்ரித்^{2}தி^{3}: = பெருக்கு; விஶேஷா = அதிகரித்தல்; ஆஸீத் = ஆயிற்று ஸத்வேஷு = விலங்குகளில்; அதி^{3}க: = பிரபலமான புலி முதலிய நப^{2}பா^{2}தே^{3} = துன்புறுத்தவில்லை:

(க-ரை) அந்த திலீபமன்னன் காவலனானதால், வனத்தில் நுழைந்ததும் மழைப் பொழியாமலேயே காட்டுத்தீ அடங்கி விட்டது; பழங்கள், பூக்கள் விருத்தி அடைந்தன; புலிமுதலிய கொடூரமான விலங்குகள் யான்கள் போன்ற சாதுவான விலங்கு கட்குத் தீங்கு செய்யவில்லை. (சுருங்கச்சொல்லணி)

சு ॥ ஸஞ்சார பூதாநி தி^{2}க^{2}ந்தாரணி
க்ரித்வா தி^{2}நாந்தே நிலயாய க^{1}ந்தும்।
ப்ரசக்ரமே பல்லவராக^{3} தாம்ரா
ப்ரபா^{3} பதங்க^{2}ஸ்ய முநே ர்ச தே^{3}நு:॥ 15

(ப-ரை) பல்லவ = துளிர்களின்; ராக^{2} = நிறம்போன்று; தாம்ரா = சிவந்த; பதங்க^{2}ஸ்ய = சூரியனின்; ப்ரபா^{3} = ஒளியும்; முநே: = முனிவருடைய; தே^{3}நு: = நந்தினிப்பசுவும்; தி^{2}க் அந்தராணி = திக்குகளனைத்திலும்; ஸஞ்சார = திரிவதால்; பூதாநி = தூய்மையுள்ளவைகளாக; க்ரித்வா = செய்து; தி^{2}நாந்தே = மாலையில்; நிலயாய = மறைதலுக்காக; (வீட்டிற்கு) க^{2}ந்தும் = போவதற்கு ப்ரசக்ரமே = தொடங்கியது.

(க-ரை) தளிர்கள் போன்ற சிவந்த சூரிய ஒளி உலகெங்கும் பரவி தூய்மையாக்கி, மறைவதுபோல், வசிட்டரின் செந்நிறப்

பசுவான அந்த நந்தினீ தேனுவானது அக்காட்டில் சஞ்சாரம் செய்து, தூய்மையாக்கி, மாலைவேளையில் வீடுதிரும்புவதற்காகப் புறப்பட்டது. (எடுத்துக்காட்டுவமையணி)

சு॥ தாம் தே²வதா பித்ரதி¹தி¹ க்ரியார்த²ாம்
அந்வக்²யயௌ மத்³யம லோகபாலஃ ।
ப³பௌ³ ளச ஸா தேந ஸதாம் மதேந
ஶ்ரத்³தே³வ ஸாக்ஷாத்³விதி³ நோபபந்நா ॥ 16

(ப-ரை) மத்³யமலோக = பூவுலகை; பாலஃ = பரிபாலனஞ் செய்து வந்த திலீப மன்னன்; தே²வதா = தேவர்களுடைய; பித்ரி = பிதுர்தேவதைகளின்; அதி¹தி² = சுற்றங்களுடைய; க்ரியா = யாகம், சிராத்தம். தானங்களே; அர்த¹ாம் = பிரயோசனமாகக் கொண்ட; தே³நும் = நந்தினீதேனுவை; அந்வக் = தொடர்ந்து யயௌ = சென்றான்; ஸதாம் = சத்புருஷர்களுக்கு; மதேந = விருப்பமான; தேந = அந்த திலீப மன்னனோடு; உபபந்நா = கூடிய; ஸாச = அந்த நந்தினீ பசுவும்; ஸதாம் = சற்புருடர்கட்கு; மதேந = சம்மதமான; விதி³நா = அனுட்டானத்துடன்; உபபந்நா = கூடியுள்ள; ஸாக்ஷாத் = காணக்கூடிய; ஶ்ரத்³தே³ந = ஆத்தீக புத்தியைப் போல்; ப³பௌ³ள = மிளிர்ந்தது.

(க-ரை) பூமியாளுந் திலீப மன்னன் தேவர்கட்குப் பிரியமான வேள்விகளுக்கும், தென்புலத்தார்க்கு நிறைவளிக்கும் திவசங்கட்கும், விருந்துக்குகந்த தானங்களுக்கும் நெய் முதலியவற்றைக் கொடுப்பதால் ஆதாரமாய் நிற்கும் நந்தினியை தொடர்ந்து சென்றான். சற்புருடர்களால் சேவிக்கப்படும் திலீப மன்னனுடன் போகும் அந்த நந்தினி பசு நற்காரியங்கள் செய்யும் கண்கண்ட ஊக்கம் புலப்படுவது போன்று பிரகாசித்தது. (உவமையணி)

சு॥ ஸபல்வ லோத்தீர்ண வராஹ யூத¹ா
ந்யாவாஸ வ்ரிக்ஷோந்முக¹ ப²ர்ஹிணாநி ।
யயௌ ம்ரிக²ாத்³யாஸித ஶாத்வலாநி
ஶ்யாமாயமா நாநி வநாநி பஶ்யந் ॥ 17

(ப-ரை) ஸஃ = அந்த திலீப ராஜா, பல்வல = சிறுகுளங்களிலிருந்து, உத்தீர்ண = வெளிப்பட்ட, வராஹ பன்றிகளின், யூத³ாநி = கூட்டங்களுடையதும், ஆவாஸ = வசிக்கத்தக்க, வ்ரிக்ஷ = மரங்

களுக்கு, உந்முக[1] = எதிரான, அத்[3]யாஸிந = ஏறிய, ஸாத்[2]வலாநி = பசும்புற்றறைகள் உடையதும், ஸ்யாமாயமநாநி = கருமையான; வநாநி = காடுகளை, பஸ்யந்ஸந் = பார்த்துக் கொண்டே, யாயௌ = பயணமானான்.

(க-ரை) அந்த திலீப மன்னன் அற்பக் குளங்களிலிருந்து புறப்பட்டு வந்த பன்றிகளின் கூட்டங்கள் உடையதும், வசிக்கத் தக்க மரங்களை விட்டு எதிர்நோக்கிவரும் மயில்களை உடையதும், கருநிறமானதுமாகிய காடுகளைப் பார்த்துக்கொண்டே பயணமானான். (விரிவுவமையணி)

சு ॥ ஆபீந பா[3]ரோத்[2]வஹந ப்ரயத்நாத்
க்[3]ரிஷ்டிர் கு[3]ருத்வாத் வபுஷோ நரேந்த்[2]ர ஃ।
உபா[3]வலஞ்சக்ரதுரஞ்சிதாப்[3]யாம்
தபோவநா வ்ரித்தி பத[1]ம் க[2]தாப்[3]யாம் ॥ 18

(ப-ரை) க்[3]ரீஷ்டி = அப்போது சூலாகி இருந்து ஈன்றுவந்த நந்தினீ தேனுவும்; நரேந் த்[2]ரஸ்ச = திலீபமன்னனும்; உபௌ[3] = இவ்விருவரும்; ஆபீந = மடியின்; பா[3]ர = பளுவால்; உத்[2]வஹந் = தாங்குவதில்; ப்ரயத்நாத் = முயற்சியால்; வபுஷஃ = உடலின்; கு[2]ருத்வாச்ச = பாரத்தால்; அஞ்சிதா ப்[3]யாம் = நேர்த்தியான; க[2]தாப்[3]யாம் = பயணத்தால்; தபோவந = தபோவனத்திலிருந்து; ஆவ்ரித்தி பத[1]ம் = வரும் வழியை; அலஞ்சக்ரதுஃ = அலங்கரித்தனர்

(க-ரை) ஒரு கன்றையீன்ற நந்தினீ பாரத்துடன் கூடிய மடியுடையதாயும்; திலீபவரசன் பருத்த உடலுடனும் வந்துக்கொண்டிருக்கையில் பார்க்க மிக அழகாக யிருந்தனர். (தொடர்புயர்வு நவிற்சியணி)

சு ॥ வஸிஷ்டதே[3]நோ ரநுயாயிநம் தம்
ஆவர்தமாநம் வநிதா வநாந்தராத் ।
ப[2]பௌ[3]ள நிமேஷாலஸ பக்ஷ்ம பங்திஃ
உபோஷிதாப்[3]யா மிவலோச நாப்[3]யாம் ॥ 19

(ப-ரை) வஸிஷ்டதே[3]நோஃ = வசிட்டரின் பசுவாகிய நந்தினீ தேனுவுக்கு; அநுயாயினம் = பின்பற்றுபவனும்; வந அந்தராத் = காட்டுப் பிரதேசந்திலிருந்து; ஆவதமானம் = வந்துக்கொண்டிருக்கும்; தம் = அந்த திலீபமன்னனை; வநிதா = மிகுந்த அன்பு

கொண்ட சுதக்ஷிணா தேவி; நிமேஷ = கண்ணிமைத்தலால்; அவஸ = மெதுவான; பக்ஷ்ம = இமைகளின்; பங்க்திஸ் ஸதி = வரிசை உடையவளும்; லோசநாப்^{3}யாம் = கண்களால்; உபோஷிதாப்^{3}யாம் இவ = உபவாசம் செய்தவனுடைய செய்கையைப் போன்று; ப^{2}பௌ^{3} - பருகினாள்.

(க-ரை) நந்தினீ தேனுவின் பின்னால் காட்டிலிருந்து வரும் திலீபமன்னனை மிகுந்த அன்போடு கூடிய சுதக்ஷிணா தேவி, உபவாசஞ் செய்தவர்கள் அதிக தாகத்துடன் தண்ணீர் பருகுவது போல், கண்கொட்டாமல் தன் கண்பார்வையால் அருந்தினாள். அதாவது தன் கணவனை இமைக் கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள். (பதப்பொருட் காட்சியணி)

சு ॥ புரஸ்க்ரிதா வர்த்மநி பார்தி^{1}வேந
ப்ரத்யுத்^{2}க^{2}தா பார்தி^{1}வ த^{3}ர்மபத்ந்யா।
தத^{2}ந்தரே ஸா விரராஜ தே^{3}நுঃ
தி^{2}நக்ஷபா மத்^{3}யக^{2}தேவஸந்த்^{3}யா ॥ 20

(ப-ரை) வர்த்மநி = வழியில், பார்தி^{1}வேந = திலீபமகாராஜனுக்கு, புரஸ்க்ரிதா = முன்னால் வருவதும்; பார்தி^{1}வ த^{3}ர்மபத்ந்யா = மன்னனுடைய தருமபத்தினியாகிய சுதக்ஷிணா தேவியால், ப்ரத்யுத்^{2}கதா = எதிர்கொண்டதுமாகிய, ஸா = அந்த, தே^{3}நுঃ = நந்தினீபசு, தத் = அந்த சுதக்ஷிணை திலீபர்களுக்கு, அந்தரே = நடுவில், தி^{2}நக்ஷபா = பகல் இரவுகளின், மத்^{3}ய = இடைக்காலத்தை; க^{2}தா = அடைந்த, ஸந்த்^{3}யே = சந்திக்காலத்தைப் போல், விரராஜ = ஒளித்தது.

(க-ரை) திலீப மன்னனுக்கும், எதிர்க்கொண்டழைத்துவரும் சுதக்ஷிணா தேவிக்கும் இடையில் வழி நடந்துவரும், நந்தினி தேனுவானது, பகல் வண்ணம்போன்ற வெண்ணிற ஆடையணிந்த அரசனுக்கும் இரவு வண்ணத்துக்குச் சமமான கறுப்பு (அல்லது நீல) உடையணிந்த அரசிக்கும் இடையில் செந்நிற நந்தினீ தேனு சந்திவேளையின் வண்ணம் போன்று தோன்றுவதாயிற்று. (தொகையுவமையணி)

சு ॥ ப்ரத^{2}க்ஷிணீ க்ரித்ய பயஸ்விநீம் தாம்
ஸு$^{-}$தக்ஷிணா ஸாக்ஷத பாத்ர ஹஸ்தா।
ப்ரணம்ய சாநர்ச விஶால மஸ்யாঃ
ஶ்ரிங்காந்தரம் த்^{2}வாரமிவார்த^{1} ஸித்^{2}தே^{3}ঃ ॥ 21

(ப-ரை) ஸ அக்ஷத பாத்ரஹஸ்தா = அட்சதைகள் உள்ள பாத்திரம் ஏந்திய கைகளை உடைய; ஸுதக்ஷிணா = சுதக்ஷிணா தேவி. பயஸ்வினீ = மிகவும் பால் உள்ள, தாம் = அந்த நந்தினீ பசுவை, ப்ரதக்ஷிணீ க்ரித்ய = வலம் வந்து, ப்ரணம்ய = வணங்கி, அஸ்யா: = இந்த நந்தினியின், விஶாலம் = நீண்ட, ஶ்ரிங்க[2] = கொம்புகளின், அந்தரம் = நடுவே, அர்த[1]ஸித்[2]தே[3] = எண்ணம் ஈடேறும் பொருட்டு, த்[2]வாரம் இவ = வாயில் போன்று, அநர்ச = பூசை செய்தாள்.

(க-ரை) அக்ஷதைகளிருந்த பாத்திரத்தை கையிலேந்திய சுதக்ஷிணா தேவி பால் மிகுந்த நந்தினீ தேனுவுக்கு வலம்வந்து வணங்கி, அதனுடைய விரிந்து நீண்ட கொம்புகளுக்கிடையில். தன் எண்ணம் ஈடேறும் பொருட்டுப் பூசை செய்தாள். (சிறப்பு நிலையணி)

சு ॥ வத்ஸோத்ஸுகாऽபி ஸ்தி[1]மிதா ஸபர்யாம்

ப்ரத்யக்[2]ர ஹீத் ஸேதி நநந்த[2]துஸ்தௌ ।

ப[3]க்த்யோப பந்நேஷு ஹிதத்[2]விதா[3]நாம்

ப்ரஸாத[2] சிஹ்நாநி புர: ப[1]லாநி ॥ 22

(ப-ரை) ஸா = அந்த நந்தினீ தேனு, வத்ஸ = கன்றின் மீது, உத்ஸுகா அபி = அலைந்த போதிலும், ஸ்தி[1]மிதா ஸதி = அசையாது, ஸபர்யாம் = பூசையை, ப்ரத்யக்[2]ரஹீத் = ஏற்றுக்கொண்டது, இதி = என்பதால், தௌ = அந்த, சுதக்ஷிணா திலீபர்கள், நந்த[2]து: = மகிழ்ந்தனர், ப[3]க்த்யா = பக்தியுடன், உபபந்நேஷு = கூடியுள்ளவர்கள் விஷயமாய், தத்[2]விதா[3]நாம் = அந்த நந்தினியைப்போன்ற பெருமையுள்ள, ப்ரஸாத சிஹ்நாநி = அருளின் அறிகுறிகள், புர: ப[1]லாநிஹி = முன்னோடியான பலன்களை உடையன அல்லவா!

(க-ரை) நந்தினி தேனு தன் கன்றை நோக்கிச் சென்று பால் கொடுக்க எண்ணியிருந்த போதிலும், அசையாது அவர்கள் செய்த பூசையை ஏற்றுக் கொண்டது. இதனால் சுதக்ஷிணையும் திலீபனும் மகிழ்வடைந்தனர். பக்தர்கள் சார்பில் நந்தினி தேனுவைப் போன்ற பெருமையுடைய கருணாமூர்த்திகளின் செய்கைகள முன்னோடியான பலன்களைக் கொடுக்கவல்லவை அன்றோ! (கருத்துடையணி மற்றும் கருத்துடையடைகொளியணி)

கூ॥ கு²ரோ ஸ்ஸ த²ாரஸ்ய நிபீட்²ய பாதௌ
ஸமாப்ய ஸாந்த்³யஞ்ச விதி³ம் தி³லீப: ।
தோஷாவஸாநே புநரேவ தோ²க்³த்³ரீம்
பே³ஜே பு³ஜோச்சி¹ந்நரிபு ர் நிஷண்ணாம் ॥ 23

(ப-ரை) பு³ஜ = ஓயாத தோள்வலியால், உச்சி¹ந்நரிபு: = மிகுதியின்றி வெட்டப்பட்ட பகைவர்களுடைய, திலீப: = திலீப மன்னன், ஸ்த²ாரஸ்ய = பத்தினியோடு கூடிய, கு²ரோ: = ஆசானின், பாதௌ² = அடிகளுக்கு, நிபீட்²ய = தொழுது, ஸாந்த்²யம் = அந்திப் பொழுதில் செய்யத்தக்க, விதி³ம்ச = அநுட்டானங்களை, ஸமாப்ய = முடித்துக்கொண்டு, தோ²ஹ அவஸாநே = (பால்) கறந்த பின்பு, நிஷண்ணாம் = உட்கார்ந்து அமர்ந்த, தோ²க்²த்³ரீம் ஏவ = கறவலுற்ற நந்திலி தேனுவை, பே³ஜே = சேவித்தனர்.

(க-ரை) பிறர் உதவியின்றி பகைவர்களை வென்றதால் அச்சமற்ற திலீப மன்னன், பத்தினியுடன் கூடிய வசிட்டரை அடிகள் தொட்டு வணங்கி, மாலை வேளை சந்தியா வந்தனாதிகளை நிறைவேற்றிவிட்டு, பால் கறந்த பிறகும் அந்த நந்தினி பசுவையே சேவித்தனர் (நிகழ்வினவிற்சியணி)

சி॥ தா மந்திக ந்ய ஸ்த ப²லிப்ரதீ²பாம்
அந்வாஸ்ய கோ²ப்தா க்²ரிஹிணீ ஸஹாய: ।
க்ரமேண ஸுப்தா மநுஸம் விவேஶ
ஸுப்தோத்தி¹தாம் ப்ராத ரநூத² திஷ்ட¹த் ॥ 24

(ப-ரை) கோ²ப்தா = பசுவைக் காப்பவனாகிய திலீப மன்னன்; க்ரிஹிணீ ஸஹாயஸ்ஸந் = மனைவி துணையாய் வர; அந்திகந்யஸ்த = அருகில் வைக்கப்பட்ட; ப²லி = உணவுகளை; ப்ரதீபாம் = விளக்குகளும் உள்ள; த²ாம் = அவ்வாறு உட்கார்ந்திருக்கும் நந்தினி பசுவை; அந்வாஸ்ய = தழுவியபடி உட்கார்ந்துகொண்டவனாய்; க்ரமேண = முறையே; ஸுப்தாம் = தூங்கிய நந்தினியை; அநுஸம் விவேஶ = பின்பற்றி தூங்கிவிட்டனர்; ப்ராத: = காலையில்; ஸுப்த = தூங்கி; உத்தி¹தாம் = எழுந்த நந்தினி பசுவை; அநூத² திஷ்ட¹த் = பின்தொடர்ந்து எழுந்தனர்.

(க-ரை) பசுவைக் காப்பதில் முனைந்த திலீப மன்னன் பத்தினி உதவியால் அந்த நந்தினி பசுவின் அருகில் இருந்து அதன் உணவுகளை விளக்கு வைத்துக் கொண்டு, அதன் செய்கைகளை

தழுவலானான். அதாவது அந்தப் பசு படுக்கும்போது படுத்தும், உறங்கும்போது உறங்கியும், அது துயிலெழும்போது தானும் எழுந்தும் இவ்விதம்—அதனைப் பின்பற்றி வந்தனர். (நிகழ்வின விற்சியணி)

கூ॥ இத்த^{1}ம் வ்ரதம் த^{3}ாரயதஃ ப்ரஜார்த^{1}ம்
ஸமம் மஹிஷ்யா மஹநீய கீர்த்தேஃ ।
ஸப்த வ்யதீயு ஸ்த்ரிகுணாநி தஸ்ய
தி^{2}நாநி தீ^{2}நோத்^{3}த^{3}ரணோசித தஸ்ய ॥ 25

(ப-ரை) இத்த^{1}ம் = இவ்விதமாய்; ப்ரஜார்த^{1}ம் = மகப்பேறுக்காக; மஹிஷ்யா ஸமம் = தரும பத்தினி சுதக்ஷிணா தேவியுடன் கூடி; வ்ரதம் = பசுவை சேவிக்கும் விரதத்தை; த^{3}ாரயதஃ = ஏற்றுள்ள; மஹநீய = தொழத்தக்க; கீர்தே = புகழ்வாய்ந்த; தீ^{2}ந = எளியோர்களின்; உத்^{3}த^{3}ாரண = எளிமை போக்குவதில்; உசித தஸ்ய = அறிந்தவனாகிய; தஸ்ய = அந்த திலீப மன்னன்; த்ரிகுணாநி = மும்மடங்குகளாகிய; ஸப்த = ஏழாகிய; தி^{2}நாநி = நாட்கள்; வ்யதீயுஃ = கடந்தன.

(க-ரை) இவ்விதமாய் மிக்க புகழ் வாய்ந்தவனாய எளியோரின் எளிமையைப் போக்கவல்லவனாய, திலீப மன்னன், பட்டத்து ராணியுடன் இருபத்தோர் நாட்கள் பசுசேவையைச் செய்தான். (நிகழ்வினை விற்சியணி)

கூ॥ அந்யேத்^{2}யு ராத்மாநுசரஸ்ய ப^{3}ாவம்
ஜிஜ்ஞாஸமாநா முநிஹோம தே^{3}நுஃ ।
க^{2}ங்க^{2}ா ப்ரபாதாந்த நிருட^{1} ஶ^{3}ாஸம்
கௌ^{2}ரீ கு^{2}ரோர் க^{3}ஹ்வர மாவிவேஶ ॥ 26

(ப-ரை) அந்யேத்^{2}யுஃ = மறுநாள்; முநிஹோமதே^{3}நுஃ = வசிட்ட முனிவருடைய வேள்விப் பசு; ஆத்ம அநுசரஸ்ய = தனக்கு சேவை செய்துவரும் திலீப ராஜனின்; ப^{3}ாவம் = எண்ணத்தை; ஜிஜ்ஞாஸமாநா = அறியும் எண்ணங் கொண்டதாய்; க^{2}ங்க^{2}ா = கங்கையாற்றின்; ப்ரபாத = பாயுமிடத்து; அந்த = அருகில்; நிருட^{3} = முளைத்த; ஶ^{3}ாஸம் = இளம் புல்லுடைய; கௌரீ = பார்வதிக்கு; கு^{2}ரோஃ = தந்தையாகிய இமயமலையின்; க^{2}ஹ்வரம் = குகைக்குள்; ஆவிவேஶ = பிரவேசித்தது.

(க-ரை) மறுநாள் அதாவது இருபத்து இரண்டாம் நாள் நந்தினீபசு தன்னை பின்பற்றிய திலீபனுடைய பக்தி எவ்வளவு திடமானது என்று அறிய எண்ணியதாய், அவனை சோதிக்கவே, கங்கையாறு பாயும் இடத்திற்கு அருகில் புற்றரைகள் உள்ள இமய மலையின் ஒரு குகைக்குள் நுழைந்தது. (பிரிதாராய்ச்சியணி)

சு ॥ ஸா து2ஷ்ப்ரத3ர்ஷா மநஸா஽பி ஹிம்ஸ்த்ரைஃ
ரித்யத்2ரி ஶோபா3 ப்ரஹிதேக்ஷணேந।
அலக்ஷிதாப்3யுத்பதநோ ந்ரிபேண
ப்ரஸஹ்ய ஸிம்ஹஃ கிலதாம் சகர்ஷ॥ 27

(ப-ரை) ஸா = அந்த நந்தினிபசு; ஹிம்ஸ்த்ரைஃ = புலிமுதலிய கொடிய மிருகங்களால்; மநஸாபி = மனதாலும்; து2ஷ்ப்ரத3ர்ஷா = தூக்கத்தாலும் அசட்டைசெய்துவிட முடியாதது; இதி = இதனால்; அத்1ரி = இமயத்தின்; ஶோபா3 = ஒளியில்; ப்ர ஹித = வைக்கப்பட்ட; ஈக்ஷணோ = பார்வைகள் உடைய; ந்ரிபேண = திலீப மன்னனால்; அலக்ஷித = பாராமலிருக்கும்; அப்3யுத்பதநஃ = எதிரில் குதித்தெழுந்த; ஸிம்ஹஃ = சிங்கம்; தாம் = அந்த நந்தினி தேனுவை; ப்ரஸஹ்ய = நிர்பந்தமாக; சகர்ஷ கில = இழுத்தது அன்றோ!

(க-ரை) அந்தப்பசு புலிமுதலிய கொடிய மிருகங்களால் வெல்லக் கூடாதது என்று எண்ணி, இமயத்தின் ஒளியைப்பார்த்துக் கொண்டிருந்த திலீபமன்னனால் அறியப் படாமல் ஒரு சிங்கம் அந்தப் பசுவின்மீது விழுந்து அதை கட்டாயமாக இழுத்தது. (மேன்மேலுயற்சியணி)

சு ॥ ததீ2ய மாக்ரந்தி2த மார்தஸாதோ4ஃ
குஹா நிப2த்2த3 ப்ரதி ஶப்2த2 தீ2ர்க3ம்।
ரஸ்மி ஷ்விவாத2ாய நகே2ந்த்2ர ஸக்தாம்
நிவர்தயாமாஸ ந்ரிபஸ்ய த்3ரிஷ்டம் ॥ 28

(ப-ரை) கு2ஹாநிப2த்2த3 = குகைகளில் கட்டப்பட்ட; ப்ரதிஶப்2த2 = மாற்றொலியால்; தீ2ர்க3 = நீண்ட; ததீ2யம் = அந்த நந்தினீ தேனுவின்; ஆக்ரந்தி2தம் = கத்துதல்; ஆர்த = ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டவர்கட்கு; ஸாதோ4ஃ = இதமானதைச் செய்யும் ந்ரிபஸ்ய = திலீபமன்னனுடைய; நகே2ந்த்2ரஸக்தாம் = இமயத்தைச் சார்ந்த; த்3ரிஷ்டிம் = பார்வையை; ரஸ்மிஷு = வலிக்கயிற்றால்;

ஆத²ரயேவ = பெற்றுக்கொண்டதோ வென்பதுபோல்; நிவர்தயாமாஸ = திருப்பியது.

(க-ரை) குகையில் எழுந்த எதிரொலியால், கொடுமை செய்யப்படும் அந்த பசுவின் கத்தலானது, ஆபத்தில் அகப்பட்டவர்கட்கு உதவும் திலீபமன்னனுடைய, மலைமீது பட்டிருந்த பார்வையானது வலிக்கயிற்றை இழுத்ததுபோன்று பின்னுக்கு இழுத்தது. அதாவது அந்த பசுவின் பரிதாபமான ஓசை கேட்டவுடன் அவ்வரசன் திரும்பிப்பார்த்தான். (முறையிலுயர்வு நவிற்சியணி)

சு ॥ ஸ பாடலாயாம் க²வி தஸ்தி¹வாம்ஸம்
த³நுர்த³ர: கேஸரிணம் த³த²ர்ஶ ।
அதி³த்ய காயாமிவ த³ாது மய்யாம்
லோத்³ர த்²ருமம் ஸாநுமத: ப்ரபு¹ல்லம ॥ 29

(ப-ரை) த³நுர்த³ர: = வில்லேந்திய; ஸ: = அந்த திலீபமன்னன்; பாடலாயாம் = செந்நிறமுள்ள; க²வி = பசுவின்மீது; தஸ்தி¹வாம்ஸம் = இருக்கும்; கேஸரிணம் = சிங்கத்தை; ஸாநுமத: = மலையின்; த³ாதுமய்யம் = தாதுக்களின் வேறுபாடுகள்; அதி³த்ய காயாம்இவ = நிலத்தின் மேல் உள்ள; ப்ர¹புல்ல = மலர்ந்த; லோத்³ரத்²ருமமிவ = லோத்திரமென்னும் மரத்தைப்போன்று; த³த²ர்ஶ = பார்த்தான்.

(க-ரை) வில்லாளனாகிய திலீபமன்னன் மலைக் குகைக்குள் சிவந்த நந்தினியின்மீது தோன்றும் வெண்மையான சிங்கத்தைக் கண்டான். அது காவியெனும் தாதுப்பொருள்கள் அடங்கிய மலைமீது விரிக்கப்பட்ட, லோத்திர மரம் போன்று இருந்தது. (உவமையணி)

சு ॥ ததோ ம்ரிகே²ந்த்²ரஸ்ய ம்ரிகே²ந்த்²ரக²ாமீ
வத³ாய வத்³யஸ்ய ஶரம் ஶரண்ய: ।
ஜாதாபி³ஷங்கே²ா ந்ரிபதிர் நிஷங்க²ாத்
உத்²த³ர்து மைச்ச¹த் ப்ரஸபே³ாத்² த்³ரிதாரிவ ॥ 30

(ப-ரை) தத: = சிங்கத்தைக் கண்ட பின்பு; ம்ரிகே²ந்த்²ரக²ாமீ = சிங்கம் போன்று நடக்கும்; ஶரண்ய = காப்பதில் பழகிய; ப்ரஸப³: = கட்டாயமாக; உத்²த்³ரித = கொல்லப்பட்ட; அரி: = பகைவருள்ள; ந்ரிபதி: = திலீபமன்னன்; ஜாத = பிறந்த; அபி³ஷங்க²ஸ்ஸந் =

அவமானமுடையவனும்; வத்⁴யஸ்ய = கொல்லத்தக்க; ம்ரிகே²ந்த்³ரஸ்ய = சிங்கத்தை; வத⁴ாய = கொல்வதற்கு; நிஷங்க³ாத் = அம்புராப் பொதியிலிருந்து; ஶரம் = பாணங்களை; உத்³த⁴ர்தும் = எடுக்க; ஐச்ச¹த் = விரும்பினான்.

(க-ரை) அரசன் தன்னை மதியாமல் பசுவின்மீது விழுந்த சிங்கத்தைக் கொல்ல அம்பை எடுக்க முயன்றான். (குணத்தால் குணமுண்டாகா விகழ்சியணி)

சு ॥ வாமேதரஸ் தஸ்ய கரః ப்ரஹர்துః
நக¹ ப்ரபா⁴ ரூஷித கங்க பத்ரே ।
ஸக்தாங்கு³ளிஸ் ஸாயக புங்க¹ ஏவ
சித்ரார்பிதாரம்ப⁴ இவாவதஸ்தே¹ ॥ 31

(ப-ரை) ப்ரஹர்துః = தாக்குவதில் கைதேர்ந்த; தஸ்ய = அந்த திலீபனுடைய; வாமேதரః = வலதுகை; நக¹ః = நகங்களின்; ப்ரப⁴ா = ஒளியால்; ரூஷித = அடர்ந்த; கங்க = ஒருவிதப் பறவையின்; பத்ரே = சிறகுகள் உடைய; ஸாயக = பாணத்தின்; புங்க¹ ஏவ = மூலப் பிரதேசத்திலிருந்து; ஸக்தாங்கு³ளிஸ்ஸந் = தொடப்பட்ட விரல்கள் உடையதாய்; சித்ர = ஓவியத்தில்; அர்பித = எழுதப்பட்ட; ஆரம்ப⁴ இவ = அம்புகளை எடுப்பதுபோன்று; அவதஸ்தே¹ = இருந்தது.

(க-ரை) திலீப மன்னனுடைய கை அம்புராப் பொதியிலிருந்து வரும் அம்புகளை எடுக்க முயன்றது ஓவியத்தில் எழுதப்பட்ட சித்திரம்போல் நகரமுடியாமல் இருந்துவிட்டது. (விரியுவமையணி)

சு ॥ பா³ஹுப்ரதிஷ்டம்ப⁴ விவ்ரித்³த⁴ மந்யுః
அப்⁴யர்ண மாக³ஸ் க்ரித மஸ்ப்ரிஶத்³பி⁴ః ।
ராஜா ஸ்வதேஜோபி⁴ ரத³ஹ்ய தாந்தః
போ⁴கீ³வ மந்த்ரௌஷத⁴ ருத்³த⁴ வீர்யః ॥ 32

(க-ரை) பா³ஹு = தோள்களின்; ப்ரதிஷ்டம்ப⁴ = அசைவின்மையால்; விவ்ரித்³த⁴ = மிகுதியான; மந்யுః = கோபமுண்டாய; ராஜః = திலீப மன்னன்; மந்த்ரௌஷத⁴ருத்³த⁴ வீர்யః = மந்திரத்தாலும், மருந்தாலும் தடுக்கப்பட்ட வலிமையுடைய; போ⁴கீ³வ = நாகம் போன்று; அப்⁴யர்ணம் = அருகில் உள்ள; ஆக³ஸ்க்ரிதம் = குற்றமுள்ள; அஸ்ப்ரிஶத்³பி⁴ః = தொடாமலுள்ள; ஸ்வதேஜோபி⁴ః = தனது ஒளியால்; அந்தః = தனக்குள்ளே; அத³ஹ்யத = எரிக்கப்பட்டான்.

(க-ரை) திலீப மன்னன் அருகில் உள்ள அபகாரியாகிய சிங்கத்தின்மீது தன் வலிமையை பயன்படுத்த முடியாமல், மந்திரத்தாலும், மருந்தாலும் கட்டுப்படுத்தப்பட்டு செயலிழந்து கடத்துக்குள் அடக்கப்பட்ட நாகம் எவ்வாறு கோபத்தால் தனக்குள்ளேயே எரிந்து நிற்குமோ, அதுபோன்று மிகுந்த கோபம் உடையவனானான். (உவமையணி)

சு ॥ தமரார்ய க்²ரிஹ்யம் நிக்²ரிஹீத தே⁸நுঃ
மநுஷ்யவாசா மனுவம்ஶ கேதும் ।
விஸ்மாயயங் விஸ்மித மாத்மவ்ரித்தெள
ஸிம்ஹோரு ஸத்வம் நிஜக²ாத³ ஸிம்ஹঃ ॥ 33

(ப-ரை) நிக்²ரிஹீததே⁸நுঃ = வருத்தப்பட்ட நந்தினிதேனுவை உடைய; ஸிம்ஹঃ = சிங்கம்; ஆர்யக்²ரிஹ்யம் = நல்லார்களின் ஒரு தலையாய; மனுவம்ஶகேதும் = மனுவின் மரபிற்கு சின்னமாகிய, ஸிம்ஹ உருஸ்த்வம் = சிங்கம் போன்று மிக்க வலிமையுடைய ஆத்ம வ்ரித்தெள = தன் தோள் வலி செயலற்றமைக்கு; விஸ்மிதம் = வியந்தவனாகிய; தம் = அந்த திலீப மன்னனிடம்; மநுஷ்ய வாசாம் = மானிடவாக்குகளால்; விஸ்மாய யந்ஸ்ந் = வியப்படையுமாறு நிஜகா²த³ = கூறியது.

(க-ரை) நல்லார்க்கொருதலையாய் நிற்பவனும், மனுவம்சத்தின் கொடிமரம் போன்றுள்ளவனும், சிங்கம் போன்ற தன் தோள் வலி செய்கையற்றமைக்கு வியந்தவனும் ஆகிய அந்த திலீப மன்னனைக் கண்டு, நந்தினியைப் பிடித்துள்ள சிங்கமானது அவன் வியக்கும்படியாக மனித வாக்குகளால் கூறத் தொடங்கியது. (உவமையணி)

சு॥ அலம் மஹீபால தவ ஶ்ரமேண
ப்ரயுக்த மப்யஸ்த்ரமிதே வ்ரித¹ா ஸ்யாத் ।
ந பாத²போர்மூல நஶக்திரம்ஹந்
ஸிலோச்சயே மூர்சதி மாருதஸ்ய ॥ 34

(ப-ரை) ஹேமஹீபால = ஓ அரசே! தவ = உன்னுடைய; ஶ்ரமேண = சிரமம்; அலம் = போதும்! இதঃ = என்னிடம்; ப்ரயுக்தம் அபி = விடப்பட்ட; அஸ்த்ர = அம்பானது; வ்ரித¹ா = வீணானது; ஸ்யாத் = ஆகும்; தத¹ாஹி = அதுசரி; பாத²பஉந்மூலந = மரங்களை நாசப்படுத்துவதில்; ஶக்தி = திறமை வாய்ந்த; மாருதஸ்ய = வாயு

வின்; ரம்ஹ꞉=வேகமானது; ஶிலோச்சயே=மலையினிடம்; நமூர்ச[1]தி=பாயாது.

(க—ரை) ஓ, திலீப மன்னா! நீ சிரமங்கொள்ளத் தேவையில்லை; தற்போது என்மீது அம்பு பாய்ச்சினாலும் வீணே ஆகும். மரங்களைப் பெயர்த்து நாசப்படுத்தக் கூடிய காற்றின் வேகமானது மலையினிடம் பயன்படுத்த முடியாதன்றோ? (இகழ்வினவிற்சியணி)

சு॥ கைலாஸ கௌ[2]ரம் வ்ரிஷ மாருருக்ஷோ꞉
பாத[2]ார்பணானுக்[2]ரஹ பூதப்ரிஷ்ட[1]ம்।
அவேஹிமாம் கிங்கர மஷ்டமூர்தே꞉
கும்போ[3]த[2]ரம் நாம நிகும்ப[3] துல்யம் ॥ 35

(ப—ரை) கைலாஸ கௌ[2]ரம்=கயிலைப் போன்ற தூய்மையான வ்ரிஷப[3]ம்=எருதை; ஆருருக்ஷோ꞉=ஏறநினைத்த; அஷ்டமூர்தே꞉=பரமசிவனுடைய; பாத[2] அர்பண=அடிகளை வைத்தலென்னும் கருணையால்; பூதப்ரிஷ்ட[1]ம்=புனிதத் தன்மையடைந்த முதுகுடைய; நிகும்ப[3]துல்யம்=நிகும்பன் என்பவனுக்கு நிகரான; கும்போ[3]ாதரம்நாம=கும்போதரன் என்னும் பெயருடைய; மாம்=என்னை; கிங்கரம்=பரமசிவனுடைய சேவகன் என்பதை; ஆவேஹி=அறிவாயாக.

(க-ரை) வெள்ளிமலைப் போன்ற தூய்மையான வெண்ணிற நந்தி மீது ஏற விரும்பும் சிவனுடைய பாதங்கள் அவருடைய அனுக்கிரகத்தால் வைக்கப்பட்டுத் தூய்மையான முதுகுடைய என்னை ஈசனுடைய சேவகனென்றும் நிகும்பன் என்பவனுக்கு நிகரான கும்போதரன் என்பவன் என்று தெரிந்துகொள். (விரிவுவமையணி)

சு॥ அமும் புர꞉ பஶ்யஸி தே[2]வத[2]ாரும்
புத்ரீக்ரிதோ஽ஸௌ வ்ரிஷப[3] த்[3]வஜேந ।
யோ ஹேம கும்ப[3] ஸ்தந நிஸ் ஸ்ரிதாநாம்
ஸ்கந்த[3]ஸ்ய மாது꞉ பயஸாம் ரஸஜ்ஞ꞉ ॥ 36

(ப-ரை) புர꞉=முன்னாலிருக்கும்; அமும்=இந்த; தே[2]வத[2]ாரும்=தேவதாரமென்னும் மரத்தை; பஶ்யஸி=காண்கின்றாயல்லவா; அஸௌ=இந்த மரமானது; வ்ரிஷப[3]த்[3]வஜேந=பரமசிவனால்; புத்ரீக்ரித꞉=மகனைப் போல் சுவீகாரம் செய்யப்பட்டது; ய꞉=எந்த

(தேவதாரு) மரமானது; ஸ்கந்த[3]ஸ்ய = குமாரஸ்வாமிக்கு; மாது: = தாயாகிய பார்வதி தேவியின்; ஹேமகும்ப[3] தந = பொற்குடங்கள் போன்ற கொங்கைகளிலிருந்து; நிஸ்ஸ்ரிதாநாம் = ஒழுகிய; பய ஸாம் = பாலின், (தண்ணீரின்); ரஸஜ்ஞ = சுவையை அறிந்துள்ளது (ஸ்தா)

(க-ரை) அரசே! இதோ எதிரில் உள்ள தேவதாரு மரத்தைக் காண்கின்றாயல்லவா? இது பரமசிவனால் மகன் போன்று வளர்க்கப் பட்டது. குமாரசுவாமியின் தாயாகிய பார்வதி அம்மையின் முலை யிலிருந்து சுரந்த பாலின் சுவை அறிந்ததாகும் (தொடர்புயர்வு நவிற்சியணி)

சு ॥ கண்டூ[2]யமாநேந கடம் கத[2]ாசித்
வந்யத்[2]விபே நோந் மதி[1]தா த்வக[2]ஸ்ய।
அதை[1]வ மத்ரே ஸ்தநயா ஶுஶோச
ஸேநாந்ய மாலீட[3] மி வாஸுராஸ்த்ரை: ॥ 37

(ப-ரை) கத[1]ாசித் = முன்பு ஒருபோது: கடம் = கன்னத்தை கண்டூ[2]யமாந = சொறிந்துகொண்டிருந்த; வந்யத்விபேந = காட்டு யானையால்: அஸ்ய = இந்த தேவதாரு மரத்தின்; த்வக் = பட்டை; உந்மதி[1] = காயப்படுத்தப்பட்டது (தேய்க்கப்பட்டது); அத[1] = பிறகு; அத்[2]ரே: தநயா = இமவான் மகளாகிய பார்வதி; அஸுர அஸ்த்ரை: = அரக்கர்களின் அம்புகளால்; ஆலீட[3]ம் = தாக்கப்பட்ட; ஸேநாந்யம் இவ = குமாரஸ்வாமியைப் போன்று; ஏநம் = இம்மரத் திற்காக; ஶுஶோச = வருந்தினாள்.

(க-ரை) முன்பு ஒருபோது காட்டு யானை ஒன்று இந்த மரத் தின் மீது தன் கன்னத்தைத் தேய்த்துக் கொண்டதால் அதன் பட்டை பழுதாயிற்று; அதை கண்ணுற்ற பார்வதி தேவி முருகன் அரக்கர்களின் அம்புகளால் அடியுண்டபோது அடைந்த துயரம் போன்று துயருற்றாள். (உருவகவுயர்வு நவிற்சியணி)

சு ॥ தத[2]ா ப்ரப்[3]ரித்யேவ வந த்விபாநாம்
த்ராஸார்த[1] மஸ்மிந்நஹ மத்[2]ரிகுக்ஷௌ।
வ்யாபாரித: ஶூலப்[3]ருதா வித[3]ாய
ஸிம்ஹத்வ மங்காக[2]த ஸத்வ வ்ரித்தி: ॥ 38

(ப-ரை) தத²ர ப்ரப்³ரித்யேவ = அது முதற்கொண்டு; வநத்³ விபாநாம் = காட்டு யானைகளின்; த்ராஸார்த்¹ம் = பயத்திற்காக; ஶிவப்³ரிதா = பரமசிவனால்; அங்க ஆக²த = அருகில்வந்த; ஸத்வ = பிராணிகளையே; வ்ரித்தி = உணவாகக் கொண்டுவாழ; சிம்ஹத்வம் = சிங்க வடிவுடன்; வித²ய = இருக்கச் செய்து; அஸ்மிந் = இந்த; அத்²ரி குக்ஷௌ = மலைக்குகையில்; அஹம் = நான்; வ்யாபாரிதஃ = நியமிக்கப்படுள்ளேன்.

(க-ரை) அது முதற்கொண்டு ஈசனார் காட்டுயானைகளின் பயத்திற்காக, எனக்கிந்த சிங்க உரு கொடுத்து, இம்மரத்தை யண்டிவரும் விலங்குகளையே உணவாகக் கொண்டு, என்னை இம்மலைக் குகைக்குள் இருந்துவர நியமித்தார். (நிகழ்வினவிற்சியணி)

ஸ ॥ தஸ்யாலமேஷா க்ஷுதி³தஸ்யத்ரிப்த்யை
ப்ரதி²ஷ்டகாலா பரமேஶ்வரேண ।
உபஸ்தி¹தா ஶோணித பாரணாமே
ஸுரத்²விஷ ஶ்சாந்த்²ரமஸீ ஸுதே⁰வ ॥ 39

(ப-ரை) பரமேஶ்வரேண = பரமசிவனால்; ப்ரதி²ஷ்டகாலா = நிச்சயிக்கப்பட்ட உணவு வேளையில்; உபஸ்தி¹தா = கிடைத்த; ஏஷா = இந்தப் பசுவின்; ஶோணித = ரத்தத்தின்; பாரணா = பாரணையானது; ஸுரத்²விஷஃ = ராகுவின்; த்ரிப்த்யை = மன நிறைவுக்காக; சாந்த்²ரமஸீ = சந்திரனின்; ஸுதே⁸வ = அமுது போன்று; க்ஷுதி⁸தஸ்ய = பசியுண்ட; தஸ்யமே = எனது; த்ரிப்த்யை = மனநிறைவுக்காக; அலம் = போதுமானது.

(க-ரை) பரமசிவனால் நிச்சயிக்கப்பட்ட உணவுவேளையில் அகப்பட்ட இப்பசுவின் ரத்தங் குடித்துப் பசிநீங்குதலானது ராகுவிற்கு சந்திரனுடைய அமுது கிடைப்பதால் உண்டான மன நிறைவு போன்று, பசியுற்றிருக்கும் எனக்கு மனநிறை வளிக்கிறது. (விரியுவமையணி)

ஸ ॥ ஸத்வம் நிவாதஸ்வ விஹாய லஜ்ஜாம்
கு²ரோர் ய²வாந் த²ர்ஶித ஶிஷ்ய ப⁸க்திஃ।
ஶஸ்த்ரேண ரக்ஷ்யம்ய த²ஶக்ய ரக்ஷம்
நத த்²யஶஶ் ஶஸ்த்ர ப்³ரிதாம் க்ஷிணோதி ॥ 40

(ப-ரை) ஸః = அப்படிப்பட்ட; த்வம் = நீ; லஜ்ஜாம் விஹாய = வெட்கம்விட்டு; நிவர்தஸ்வ = திரும்பிவிடு; ப³வாந் = நீ; கு³ரோః = குருவுக்கு; த³ர்ஶித = காண்பிக்கும்; ஶிஷ்ய = சீடனுடைய; ப⁸க்திః = அன்புகொண்டுள்ளவன்; ரக்ஷ்யம் = காக்கத்தக்க; யத் = எந்தப் பொருளானது; ஶஸ்த்ரேண = படையால்; அஶக்ய ரக்ஷம் = காப்பாற்ற முடியாமற் போயிற்றோ; தத் = அந்தப் பொருள்; ஶஸ்த்ரப்³ரிதாம் = வில்லாளர்களின்; யஶः = புகழை நக்ஷிணோதி = போக்காது.

(க-ரை) அரசே! உபாய மறியா நீ வெட்கம் விட்டுத் திரும்பிப் போவாயாக. நீ ஆசானிடம் அன்பு கொண்டவனே. காக்கக்கூடிய பொருளானது படைவலிமையால், காக்கக் கூடாது போகக்கூடிய தடை உண்டாகி, இயலாது போகும்போது, படையேந்தியவர்களுக்குப் புகழைத் தாழ்த்தாது. (எதிர்மறையணி)

சு ॥ இதி ப்ரக²ல்ப³ம் புருஷாதி³ராஜோ
ம்ரிகாதி³ ராஜஸ்ய வசோ நிஶம்ய ।
ப்ரத்¹யாஹதாஸ்த்ரோ கி²ரிஶப்ரப⁸வாத்
ஆத்மந் யவஜ்ஞாம் ஶிதி⁰லீ சகார ॥ 41

(ப-ரை) புருஷாதி⁸ராஜः = திலீப மன்னன்; இதி = இவ்வாறு கூறிய; ப்ரக²ல்ப³ம் = ஆகுலமாண; ம்ரிக²ாதி⁸ராஜஸ்ய = சிங்கத்தின் வசः = வார்த்தைகளை; நிஶம்ய = கேட்டு; கி²ரிஶ = பரமசிவனுடைய ப்ரப⁸வாத் = மகிமையால்; பரத்யாஹத = அடிக்கப்பட்ட; அஸ்த்ரஸ்ஸந் = ஆயுதங்களுடையவனாய்; ஆத்மநி = தன்னைப்பற்றிய; அவஜ்ஞாம் = அவமான்தை; ஶிதி³லீ சகார = விட்டுவிட்டான்.

(க-ரை) பேரரசன், இவ்வாறு ஆதுலத்துடன் கூறிய சிங்கத்தின் மொழிகளைக் கேட்டு, ஈசனின் மகிமையால், தனது படைவலிமை பலியாமற் போனதற்காக மனதில் அவமானமாக எண்ணவில்லை. (வனப்புநிலையணி)

சு ॥ ப்ரத்யப்²ரவீச்சைவ மிஷ¬ப்ரயோ கே²
தத்பூர்வ ஸங்கே² விதத¹ ப்ரயத்நः ।
ஜட²க்ரிதஸ் த்ர்யம்பக² வீக்ஷணேந
வஜ்ரம் முமுக்ஷ¬ந் நிவ வஜ்ரபாணி ॥ 42

(ப-ரை) தத் = அந்த; பூர்வஸங்கே² = முதல் தடையாக; இஷுப்ரயோகே² = பாணத்தை விடுவதில்; விதத¹ப்ரயத்நஃ = பயனற்றுப் போனதால் சோர்வுற்றவனாதலால்; வஜ்ரம் = வஜ்ராயுதத்தை; முமுக்ஷுந் = விடுதற்கெண்ணிய; த்ர்யம்ப²க வீக்ஷணே ந = பரமசிவனின் பார்வையால்; ஜடீ²க்ரிதஃ = உணர்வற்று நின்ற; வஜ்ரபாணிஃ இவஸ்தி¹தஃ = தேவேந்திரனைப்போல் உள்ள; ந்ரிபஃ = திலீப மன்னன்; ஏநம் = இந்த சிங்கத்தைக்கண்டு; ப்ரத்யப்²ரவீச்ச = பதில் கூறலானான்.

(க-ரை) ஈசனுடைய பார்வையால் செயலற்றுப்போன தோள் வலியுடைய இந்திரனைப்போல், அம்பெய்தலின் வீண் முயற்சியடைந்த திலீப மன்னன் சிங்கத்தை நோக்கிப் பதில் கூறலானான், (உவமையணி)

சு॥ ஸம்ருத்²த³ சேஷ்டஸ்ய ம்ரிகே²ந்த்²ர காமம்
ஹாஸ்யம் வசஸ்தத்² வத²ஹம் விவக்ஷுஃ ।
அந்தர்க²தம் ப்ராணப்³ரிதாம் ஹிவேத²
ஸர்வம் ப³வாந் ப³ாவ மதோ஽பி³ த³ாந்யே ॥ 43

(ப-ரை) ஹே, ம்ரிகே²ந்த்²ர = ஏ, சிங்கமே; ஸம்ரித்²த³ சேஷ்டஸ்ய = அடங்கிய செய்கைகள் உடைய; மம = எனது; தத்வசஃ = அந்த சொற்கள்; காமம் = மிக; ஹாஸ்யம் = பரிகஸிக்கக்கூடியவை; யத் = எந்த (வாக்கை); அஹம் = நான்; விவக்ஷுஃ = சொல்ல நினைத்தேனோ; ஹி = எக்காரணத்தால்; ப³வாந் = நீ; ப்ராணப்³ரிதாம் = பிராணிகளுடைய; அந்தர்க²தம் = மனதிலடங்கிய; ஸர்வம் = சகலமன; ப³ாவம் = எண்ணங்களை; வேத² = தெரிந்துகொள்வாயோ அதஃ = அக்காரணத்தால்; அபி³த²ாஸ்யே = சொல்வேன்.

(க-ரை) ஏ, சிங்கமே! அடங்கிய சேட்டைகளுடைய நான் சொல்லும் வார்த்தைகள் பரிகாசம் செய்யத் தக்கவையே, ஆனாலும், நீ பிறருடைய குறிப்பறிந்து அவர்களின் மனத்தடங்கிய எண்ணங்களை அறியும் திறன் படைத்துள்ளாய்; ஆதலின், எனது எண்ணத்தைச் சொல்கிறேன். (முரண்விளைந்தழிவணி)

சு॥ மாந்யஸ்ஸ மே ஸ்த¹ாவர ஜங்க²மாநாம்
ஸர்க²ஸ்தி¹தி ப்ரத்யவஹார ஹேதுஃ ।
கு²ரோ ரபீத²ம் த³நமாஹி தாக்²நேஃ
நஸ்யத் புரஸ்தாத் அநுபேக்ஷணீயம் ॥ 44

(ப-ரை) ஸ்த^{1}ாவர=செடிகொடிகள் முதலிய அசையாதவை களும்; ஜங்க^{2}மாநாம்=அசைகின்றவாகிய விலங்குகள் மானிடர் முதலியவற்றின்; ஸர்க^{2}=பிறப்பிற்கும்; ஸ்தி^{1}தி=காப்பதற்கும்; ப்ரத்யவஹார=அழிப்பதற்கும்; ஹேதுஃ=காரணமாயுள்ள; ஸஃ=பர மேசுவரன்; மே=எனக்கு; மாந்யஃ=தொழத்தக்கவர்; புரஸ்தாத்= முன்பாக; நஶ்யத்=நாசமாக்கக் கூடிய; இத^{2}ம்=இந்தப் பசு வடி வுள்ள; அக்^{3}நேஃ=கார்ஹபத்யம். ஆஹவநீயம், தக்ஷிணாக்னி களையுடைய; கு^{2}ரோஃ=ஆசிரியரான வசிட்டருடைய; த^{3}நமபி= கைப்பொருளை; அநுபேக்ஷணீயம்=உதாசீனம் செய்வதற்கில்லை.

(க-ரை) சராசரங்களின் ஆக்கல், காத்தல், அழித்தலாகிய முக்காரியங்கட்குக் காரணமாகவுள்ள ஈசன் எனக்குத் தொழத் தக்கவர். மூவன்னிகளுடைய எனது குருநாதரின் கைப்பொருளா கிய இதோ நிற்கும் இப்பசு நாசமடைந்துக்கொண்டிருக்கையில் நான் அதைப் பார்த்துக் கொண்டிருக்கவும் உதாசீனஞ் செய்வதற்கும் இல்லை. (ஏதுவணி)

சு ॥ ஸத்வம் மதீ^{2}யேந ஶரீர வ்ரித்திம்
தே^{2}ஹேந நிர்வர்தயிதும் ப்ரஸீத^{2} ।
தீ^{2}நாவஸா நோத்ஸுக பா^{2}ல வத்ஸா
விஸ்ரிஜ்யதாம் தே^{3}நுரியம் மஹர்ஷேஃ । 45

(ப-ரை) ஸஃ=அம்மாதிரியான; த்வம்=நீ; மதீ^{2}யேந=எனது; தே^{2}ஹேந=உடலினால்; ஶரீரவ்ரித்திம்=உன்னுடலில் எழுந்த பசியை; நிவர்தயிதும்=நீக்கிக் கொள்ள; ப்ரஸீத^{2}=இரங்குவாய்; தி^{2}நஅவ ஸாந=அந்தி வேளையில்; உத்ஸுக=உற்சாகத்துடன் கூடிய; ப^{2}ால வத்ஸா=இளங்கன்றையுடைய; மஹர்ஷேஃ=மகாரிஷி யினுடைய; இயம்=இந்த; தே^{3}நுஃ=நந்தினி தேனுவை; விஸ்ரிஜ் யதாம்=விடுவிக்கப்படுவது ஆகுக.

(க-ரை) சிங்கமே! எந்தனுடலைக் கொண்டு நீ உந்தன் பசியைப் போக்கிக்கொள்ள இரங்குவாயாக. மாலை வேளையில் ''என் தாய் வருவாள்'' என மிகுந்த உற்சாகத்துடன் எதிர்நோக்கி நிற்கும் இளங்கன்றையுடைய இப்பசுவாகிய நந்தினியை விடுவாய். (ஏதுவணி)

சு ॥ அத²ாந்த³காரம் கி³ரிக³ஹ்வ ராணாம்
த³ம்ஷ்ட்ரா மயூகை²: ஶகலாநி குர்வந் ।
பூ⁴யஸ் ஸபூ⁴தே ஶ்வர பார்ஶ்வ வர்தீ
கிஞ்சித்¹ விஹஸ்யார்த¹பதிம் ப³ப⁴ாஷே ॥ 46

(ப-ரை) அத²:=பிறகு; பூ⁴தேஶ்வர=பரமேசுவரனுக்கு; பார்ஶ்வவர்தீ=கிங்கரனான; ஸ:=அச் சிங்கமானது; கி³ரிக³ஹ்வராணாம்=இமயத்திலிருக்கும் குகையின்; அந்த⁴காரம்=இருளை; த³ம்ஷ்ட்ரா=கோரைப் பற்களின்; மயூகை²:=ஒளியால்; ஶகலாநி=துகள்களாக; குர்வந்ஸந்=செய்பவனாய்; கிஞ்சித்=கொஞ்சம்; விஹஸ்ய=சிறித்துவிட்டு; அர்த¹பதிம்=திலீப மன்னனைக் கண்டு; பூ⁴ய:=மறுபடியும்; ப³ப⁴ாஷே=கூறியது.

(க-ரை) ஈசனுடைய ஏவலாளனாகிய அந்த சிங்கம் இமயத்தின் குகையிலுள்ள இருளைப் போக்கவல்ல, ஒளிமிகுந்த தனது கோரைப் பற்கள் அகப்பட சற்றே சிறித்துவிட்டு, மேலும், அம்மன்னனைக் கண்டு மறுபடியும் கூறலாயிற்று. (உருவகவுயர்வு நவிற்சியணி)

சு ॥ ஏகாதபத்ரம் ஜக³த: ப்ரபு⁴த்வ
நவம் வய: காந்த மித³ம் வபுஶ்ச ।
அல்பஸ்ய ஹேதோர் ப³ஹு ஹாது மிச்ச²ந்
விசார மூட⁴: ப்ரதிப⁴ாஸி மே த்வம் ॥ 47

(ப-ரை) ஏக ஆதபத்ரம்=இரண்டற்றகுடையை உடைய; ஜக³த:=உலகின்; ப்ரபு⁴த்வம்=ஆட்சியை; நவம்=புதிய; வய:=இளமை; காந்தம்=அழகான; இத³ம்=இந்த; வபு:=உடலை; ப³ஹு=பலவற்றை; அல்பஸ்ய=சொற்பமான; ஹேதோ:=பலனை நோக்கி; ஹாதும்=விடுவதற்காக; இச்ச²ந்=எண்ணும்; த்வம்=நீ; மே=எனக்கு; விசார=நன்மை தீமை காரியங்களை விமரிசனம் செய்வதில்; மூட⁴:=மடத்தனமுடையவனாக; ப்ரதிப⁴ாஸி=தோன்றுகின்றாய்.

(க-ரை) ஒரே குடையின் கீழுள்ள உலகனைத்தையும் ஆட்சி செய்யும் நீ, புது இளமையும் அழகிய உடல் முதலியன உள்ள அவற்றாலாகக் கூடிய நன்மை தீமைகள் விசாரணை செய்து, சொற்பமான பலனை நோக்கி, அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, மடமையுள்ளவன் போல் தோன்றுகிறாய். (வஞ்சனவிற்சியணி)

சு॥ பூ³தாநுகம்பா தவ ¹ச தி²யம் கெ²ளஃ
ஏகா ப³வத் ஸ்வஸ்திமதீ த்வத³ந்தே ।
ஜீவந் நபுந ஶ ஶவ து²பப்லவே ப்⁴யஃ
ப்ரஜாஃ ப்ரஜாநாத¹ பிதேவ பாஸி ॥ 48

(ப-ரை) தவ = உனக்கு; பூ²த அநுகம்பாத் = பிராணிகளிடத்தில் அன்புண்டேல்; த்வத் அந்தே ஸதி = உனக்கு நாசம் ஏற்பட்டுக் கொண்டிருக்க; ஏகா = ஒன்றாகிய; இயம் கெ²ளஃ = இந்த நந்தினி பசு; ஸ்வஸ்திமதீ = நலம் பெற்றுள்ளது; ப³வேத் = ஆயிற்று; ஹே ப்ரஜாநாத¹ = ஓ அரசனே! த்வம் = நீ; ஜீவந் புநஃ = உயிர்த்திருப்பாயாகில்; பிதேவ = உன் தகப்பனார் போன்று; ப்ரஜா = குடிகளை; உபப்லவேப்⁴யஃ = உபத்திரவங்களினின்று; ஶஶ்வத் = எப்போதும் பாஸி = காப்பாற்றுவாய்.

(க-ரை) நீ உன்னுயிரைப் போக்கிக் கொண்டால் இந்த நந்தினி தேனு மட்டுமே நலமாக வாழும். குடிகளைக் காக்கும் நீ உயிருடன் வாழ்ந்து வந்தாயானால் எல்லா மக்களையும் உனது தகப்பனார் போல நிரந்தரமாக காப்பாற்றிக் கொண்டிருப்பாய் (வஞ்சப்புகழ்ச்சியணி)

அவ ॥ அறநெறி தவறாது குருவின் பயம் நீங்க உபாயம் கூறுகிறது.

சு॥ அதை¹க தே³நோ ரபராத³ சண்டாத்
கு²ரோஃ க்ரிஶாநு ப்ரதிமாத்² பிபே³ஷி ।
ஶக்யோஃஸ்ய மந்யுர் ப³வதா விநேதும்
க²ாஃ கோடிஶஸ் ஸ்பர்யதா க³டோத்³நீஃ ॥ 49

(ப-ரை) அத¹ = மற்றொரு விதத்தி³ல் = ஏகதே³நோ; = ஒன்றான நந்தினீ தேனுவை உடையவனாகலான்; அபராத¹ = பசுவை உதாசீனஞ் செய்த தவறுக்காக; சண்டாத் = கோபமுள்ளவன் ஆதலின்; க்ரிஶாநு = யஜ்ஞேசனே; ப்ரதிமாத = உவமையாகக் கொண்ட; கு²ரோஃ = வசிட்டரால்; பிபே³ஷி = பயப்படுகிறாயா; அஸ்ய = இவ்வசிட்டருடைய; மந்யுஃ = கோபம்; க³ட உத்³நீஃ = குடம்போன்ற மடியுடைய; கோடிஶஃ = கோடிக்கணக்கிலான; கே²ாஃ = பசுக்களை; ஸ்பர்யதா = வழங்கும்; ப³வதா = உன்னால்; விநேதும் = போக்க; ஶக்யஃ = வல்லது.

(க-ரை) அதுவுமின்றி ஒரே ஒரு பசுவை உள்ள வசிட்டருக்கு, பசுவைப் போக்கிய சினத்தை சகிக்கமாட்டாரென்று நினைக்கிறாயா? நீ குடம்போன்ற மடியுடைய பசுக்கள் கோடானுகோடியாக கொடுத்து அக்கோபத்தைப் போகச் செய்யவல்லவனே. (உவமையணி மற்றும் வஞ்சப் புகழ்ச்சியணி)

சு ॥ தத்[2]ரக்ஷ கல்யாண பரம்பராணாம்

பே[3]ாக்தார மூர்ஜஸ்வல மாத்ம தே[2]ஹம் ।

மஹீதல ஸ்பர்ஶந மாத்ர பி[3]ந்நம்

பு[2]த்[2]த[3]ம்ஹி ராஜ்யம் பத[2]மைந்த்[2]ர மாஹு: ॥ 50

(ப-ரை) தத் = அந்தக் காரணத்தால்; கல்யாண = சுபங்களின்; பரம்பராணாம் = தொடர்களை; பே[3]ாக்தாரம் = அனுபவித்துக் கொண்டு வரும்; ஊர்ஜஸ்வலம் = வலிமையுடைய; ஆத்ம = உன்னுடைய; தே[2]ஹம் = உடலை; ரக்ஷ = காப்பாற்றிக்கொள்; பு[2]த்[2]த[3]ம் = நிறைவுற்ற; ராஜ்யம் = நாட்டை; மஹீதல = பூமியின்; ஸ்பர்ஶந மாத்ர = தொடர்பினால் மட்டும்; பி[3]ந்நம் = வெவ்வேறாகிய; ஐந்த்[2]ரம் = புலன்களைச் சார்ந்த; பத[2]ம் = இடமாக; ஆஹு: = சொல்கின்றனர்.

(க-ரை) அதனால், பல சவுக்கியங்களை அனுபவித்துக் கொண்டுவரும் உனது வலிபொருந்திய உடலைக் காப்பாற்றிக் கொள். இப் பசுவை அலட்சியம் செய்வதால் இந்திர பதவியற்றுப் போகுமென நினைக்கிறாய் போலும், முன்னோர்கள் எல்லாம் பொருள்களினால் நிறம்பிய நாட்டை. ஆள்வதை, பூமியைச் சார்ந்த இந்திர பதவியெனக் கூறுவார்கள். (வஞ்சநவிற்சியணி)

சு ॥ ஏதாவ து[2]க்த்வா விரதே ம்ரிகே[2]ந்த்[2]ரே

ப்ரதிஸ்வநே நாஸ்ய கு[2]ஹா க[3]தேந ।

ஶிலோச்சயோ(அ)பி க்ஷிதிபால முச்சை:

ப்ரீத்யா தமேவார்த[1] மபா[3]ஷதேவ ॥ 51

(ப-ரை) ம்ரிகே[2]ந்த்[2]ர: = சிங்கம்; ஏதாவத் = இவ்வளவு வார்த்தைகளை, உக்த்வா = சொல்லி; விரதேஸதி = சும்மாயிருக்கையில்; கு[2]ஹா ஆக[3]தேந = குகையிலிருந்துவந்த; அஸ்ய = அந்த சிங்கத்தின் ப்ரதிஸ்வநேந = எதிரொலியால்; ஶிலோச்சயோ(அ)பி = இமயமலையும்; ப்ரீத்யா = அன்புடன்; க்ஷிதிபாலம் = திலீபமன்னனை

நோக்கி; தம் அர்த²மேவ=அதே பொருளை; உச்சைः=உரக்க; அப³ாஷதேவ = சொல்லிற்றோ வென்பதுபோன்றிருந்தது.

(க-ரை) சிங்கம் இவ்வாறு கூறிவிட்டு வாளாயிருக்கையில் அச்சிங்கத்தின் எதிரொலியானது இமயமலையுங்கூட, அன்பினால் உரத்தக் குரலில் உரைந்ததோவென்பது போன்று தோன்றியது. (பின்வருவிளக்கணி)

சு॥ நிஶம்ய தே²வாநுசரஸ்ய வாசம்
மநுஷ்ய தே²வः புநரப்யுவாச
தே³ந்வா தத²த்³யாஸிந காதராக்ஷ்யா
நிரீக்ஷ்யமாண ஸ்ஸுதராம் தயாளுः ॥ 52

(ப-ரை) தே²வ அநுசரஸ்ய=பரமசிவனுடைய ஏவலாளாகிய சிங்கத்தின்; வாசம்=வாக்கை; நிஶம்ய=கேட்டு; மனுஷ்ய தே²வः= மாந்தர்கட்குப் பிரபுவாகிய திலீப மன்னன்; தத் அத்³யாஸிந=ஆக்கிரமிப்பால்; காதர = அச்சத்துடன் கூடிய; அக்ஷ்யச=கண்களுடைய; தே³ந்வா=நந்தினி தேனுவால்; நிரீக்ஷ்யமாண= பார்க்கப்படுபவனாய்; புநரபி=மறுபடியும்; உவாச=கூறினான்.

(க-ரை) சிங்கம் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே, சிங்கத்திடம் சிக்குண்ட நந்தினி தேனுவானது தன்னைப் பயத்துடன் பார்த்துக் கொண்டிருப்பதையுங் கண்டு மிகுந்த தயவுடன், மறுபடியும் சிங்கத்திடம் கூறினான் (தகுதியணி)

அ॥ என்ன சொல்கிறான் என்பது :—

சு॥ க்ஷதாத் கில த்ராயத இத்யுத²க்²ர
க்ஷத்ரஸ்ய ஶப்²தே²ா பு³வநேஷு ரூட⁴ः ।
ராஜ்யேந கிம் தத்²விபரீத வ்ரித்தேः
ப்ராணை ருபக்ரோஶ மலீமஸைர்வா ॥ 53

(ப ரை) உத்²க²ர = உன்னதமான; க்ஷத்ரஸ்ய= அரச மரபின்; ஶப்²த³ः=சொல்லிய சொல்; க்ஷதாத்=நாசமாவதிலிருந்து; த்ராயதே இவ=காப்பாற்றப் படுவதென்று; பு³வநேஷு=உலகில்; ரூட⁴ः கில=அறியப்பட்டதன்றோ; தத்=அந்த; அரச மரபிற்கு; விபரீத வ்ரித்தேः=மாறுபட்ட நடவடிக்கையுடைய புருடனுக்கு; ராஜ்யேந=அரசாள்வதால்; கிம்=என்ன பயன்; உபக்ரோஶ=நிந்

தனையால்: மலீமஸ: = அழுக்குற்ற; ப்ராணைர்வா = உயிராலும்; கிம் = என்ன பயன் உண்டு.

(க-ரை) 'க்ஷத்ரம்' என்றாலே நாசமாவதிலிருந்து காப்பாற்றுதல் என்பது உலகில் அறிந்த பொருளன்றோ? அதற்கு மாறாய நடவடிக்கையுடைய புருடனுக்கு அரசபதவி இருந்து என்ன பயன்? நிந்தனையால் அழுக்குற்ற உயிரானது இருந்து மட்டும் என்ன பயன்? (சுருங்கச் சொல்லணி)

அவ ॥ அப்பசுவைப்பற்றி மேலும் கூறுகிறான்.

சு ॥ கத¹ந்நு ஶக்யோऽநுநயோ மஹர்ஷே:
விஶ்ராணநா த²ந்ய பயஸ்விநீநாம் ।
இமாமநூநாம் ஸுரபே³ரவேஹி
ருத்³ரௌஜஸாது ப்ரஹ்ருதம் தவாऽஸ்யாம் ॥ 54

(ப-ரை) மஹர்ஷே: = வசிட்டனுடைய; அநுநயோநு = சினத்தை; அந்ய = பிற; பயஸ்விநீ நாம் = கறவைகள்; விஶ்ராணநாத் = கொடுப்பதால்; கத¹ம் = எவ்வாறு; ஶக்ய: = தணிக்க முடியும்; இமாம் = இந்த நந்தினியை; ஸுரபே³: = காமதே³னுவைவிட; அநூநாம் = குறைந்தது அன்று என; ஆவேஹி = அறிந்துகொள்; அஸ்யாம் = இந்த நந்தினீதேனு; த்வயா = உன்னால்; ப்ரஹ்ருதந்து = தாக்குண்டது என்றாலோ; ருத்³ரௌஜஸா = ஈசனின் சாமர்த்தியத்தால் (மட்டுமே).

(க-ரை) வேறு கறவைகளை நான் வசிட்டருக்குக் கொடுத்தாலும் அவர் கோபம் எவ்வாறு தணிக்க முடியும்? இந்த நந்தினீ தேனுவானது காமதேனுவிற்குக் குறைந்தது அன்று. இப்படிப்பட்ட காமதேனுவை ஈசனார் வலியாலன்றி உன்னால் தாக்கக் கூடியதாக எனக்குத் தோன்றவில்லை. (உடனிகழ்ச்சியணி)

சு ॥ ஸேயம் ஸ்வதே²ஹார்பண நிஷ்க்ரியேண
ந்யாய்யா மயா மோசயிதும் ப³வத்த: ।
ந பாரணாஸ்யா த்²விஹதா தவைவம்
ப³வே த²லுப்த ஶசமுநே: க்ரியார்த¹: ॥ 55

(ப-ரை) ஸேயம் = இந்த நந்தினீபசு; மயா = என்னால்; ஸ்வதே²ஹார்பண = என்னுடலைக் கொடுத்தலென்னும்; நிஷ்க்ரி

யேண = காரியத்தால்; ப⁸வந்தஃ = உன்னால்; மோசமிதும் = விடு வித்தலானது; ந்யாய்யா = முறையானது; ஏவம் = இவ்வாறிருக்கர்; தவ = உன்னுடைய; பாரணா = உணவு; விஹதா = அடியுண்டதாக; நஸ்யாத் = ஆகாது; முநேஃ = முனிவருடைய; க்ரியார்த¹ஶ்ச = வேட்டல் என்னும்; அர்த¹ஶ்ச = பயனும்; அலுப்தஃ = குறைவற்ற தாக; பவேத் = ஆகின்றது,

(க-ரை) இந்த நந்தினீ தேனுவுக்கு மாறாக எனது உடலை நீ ஏற்று இதை விட்டுவிடுவது முறையானது. இதனால் உனக்குப் பசி நீங்குவது மல்லாமல் வசிட்டருடைய வேட்டல் முதலிய தொழில் களுக்கும் குறைவில்லாமல் இருந்துவிடும். (எளிதின் முடிபணி)

அவ ॥ நீ எவ்வாறோ நானுமவ்வாறென்கிறான்.

சு॥ ப⁸வா நபீத²ம் பரவா நவைதி
மஹாந் ஹி யத்ந ஸ்தவ தே³வத³ாரௌ ।
ஸ்த¹ாதும் நியோக்து ர்நஹி ஶக்ய மக்²ரே
விநாஶ்ய ரக்ஷ்யம் ஸ்வய மக்ஷதேந ॥ 56

(ப-ரை) பரவாந் = சுவாமி வயத்தனாய; ப⁸வாந் அபி = நீயும் இத²ம் = இந்த சொல்லப் போகும் உண்மையை; அவைதி = அறிந்து கொள்கிறாய்; ஹி = எக்காரணத்தால்; தவ = உனக்கு; தே⁸வத³ா ரௌ = தேவதாரு மரத்தின் சார்பில்; மஹாந் = அதிகமான; யத்நஃ = முயற்சியோ; ரக்ஷ்யம் = காப்பாற்றக்கூடிய (பொருளை): விநாஶ்ய = நாசமாக்கி; ஸ்வயம் = தான்; அக்ஷதேந = மனங் கோணாது நிய மித்த; நியோக்துஃ = சுவாமியி(குருவி)ன்; அக்²ரே = முன்னால்; ஸ்த¹ாதும் = நான் நிற்க; நஶக்யம்ஹி = முடியாதன்றோ!

(க-ரை) ஏ, சிங்கமே! நீயும் சுவாமிக்கு ஊழியன். உனக்கு தேவதாரு மரம் எவ்வாறு ஆதரிக்கத் தக்கதும் அதிசயமுமானதோ அதாவது எவ்வாறு காக்கப்பட்டு வருகிறதோ, அதுபோல், அவசி யம் என்னால் ரட்சிக்கக் கூடியது, இப்பசு. இந்நிலையில், நான் மட்டும் இதனை அலட்சியம் செய்துவிட்டு, எவ்வாறு எனது ஆசான் முன் நிற்பேன்? (குறிப்பு நவிற்சியணி)

அவ ॥ அதனால் எப்படியும் அது பாதுகாக்க வேண்டியதே என்கிறான்,

சு॥ கிமப்யஹிம்ஸ்யா ஸ்தவசேந் மதோகஹம்
யஶ ஶ்ஶரீரே ப⁸வ மே தயாளுঃ ।
ஏகாந்த வித்⁸வம்ஸிஷு மத்²வித⁸ாநாம்
பிண்டேஷ்வநாஸ்த¹ா க¹லு பௌ⁸திகேஷு ॥ 57

(ப-ரை) கிமபி = அல்லது; அஹம் = நான்; தவ = உனக்கு; அஹிம்ஸ்ய = கொல்லாமல் விடப்பட்ட; மத ஶ்சேத் = சம்மதிப்பேனா கில்; தர்ஹி = அப்போதும்; மே = எனக்கு; யஶঃ = புகழ் என்னும்; ஶரீரே = உடலளிக்க; த³யாளுঃ = தயவுள்ளவனாக; ப⁸வ = ஆவாய்; மத்²வித⁸ாநாம் = என் போன்ற அறிவுடையோர்க்கு; ஏகாந்த = அவசியம்; வித்⁸வம்ஸிஷு = நசிக்கப் போகும்; பௌ⁸திகேஷு = பூமி முதலாய பூதங்களின் மாறுபாடுகளாலாய; பிண்டே²ஷு = உடல்களில்; அனாஸ்த¹ா க¹லு = விரும்பப்படாததன்றோ?

(க-ரை) என்னைக் கொல்லலாகாதென்ற எண்ணம் உனக்குளதேல் எனக்குப் புகழெனும் அழியா உடலை வழங்குவாயாக. என்னைப் போன்ற மானிடர்கட்கு என்றுமழியாப் புகழுடலை எய்துவது தவிர்த்து, அழியக்கூடிய இவ்வுடல் மீது பற்று இராததன்றோ? (தன்மைநவிற்சியணி)

அ ॥ நட்பால் பின்பற்றலாமென்று கூறுவான் தொடங்கினான்,

சு ॥ ஸம்ப⁸ந்த⁸ மாப⁸ாஷண பூர்வ மாஹு
வ்ரித்த ஸ்ஸநெள ஸங்க²தயோ ர்வநாந்தே ।
தத்²பூ⁸த நாத¹ாநுக² நார்ஹஸித்வம்
ஸம்ப²ந்தி⁸நோ மே ப்ரணயம் விஹந்தும் ॥ 58

(ப-ரை) ஸம்ப²ந்த⁸ம் = நட்பை; ஆப⁸ாஷண = பேசுவதையே; பூர்வம் = காரணமாக கொண்டதாய்; [ஆஹுঃ = கூறுகின்றனர்; ஸঃ = அவ்வாறாய நட்பு; வநாந்தே = காட்டின் அருகாமையில்; ஸங்க²தயோঃ = சம்மந்தப்பட்ட; நௌ = நம்மிருவர்க்கும்; வ்ரித்தঃ = நடந்தது; தத் = அது காரணத்தால்; ஹேபூ⁸த நாத¹ா நுக² = ஓ, ஈசனுடைய கிங்கரனான சிங்கமே! ஸம்ப⁸ந்தி⁸நঃ = நண்பனான; மே = எனக்கு; ப்ரணயம் = கேட்டவை; விஹந்தும் = வீணாக்க; நார்ஹஸி = தகுந்தவன் அன்று.

(க-ரை) பேசுவதே நட்புக்குக் காரணமானதென்பார்கள். அந்த நட்பு நம்மிருவர்க்கும் இவ்வனத்தின் அருகில் ஏற்பட்டது.

அதனால். பூதநாதனுடைய கிங்கரனாகிய ஓ, சிங்கமே! நீ நண்பனாகிய எனது வேண்டுகோளைத் தவிர்க்கப் பார்ப்பது அறமன்று. (குறிநிலையணி)

ஸு ॥ தசே¹தி க²ாம் முக்தவதே தி²லீப:
ஸத்²ய ப்ரதிஷ்டம்ப³ விமுக்த பா²ஹு: ।
ஸந்யஸத ஶஸ்த்ரோ ஹரயே ஸ்வதே³ஹம்
உபாநயத் பிண்ட மி வாமிஷஸ்ய ॥ 59

(ப-ரை) தசே¹தி = அப்படியே ஆகட்டுமென்று; கா²ம் = நந்தினி தேனுவை; முக்தவதே = விட்டுவிட்ட; ஹரயே = சிங்கத்திற்கு; ஸத்²ய: = உடனே; ப்ரதிஷ்டம்ப³ = கட்டிவிருந்து; விமுக்த = விடுபட்ட; பா³ஹு: = தோள்களுடைய; தி²லீப: = திலீப மன்னன்; ஸந்யஸ்த = விடப்பட்ட; ஶஸ்த்ரஸ்ஸந் = ஆயுதங்களை உடையவனாய்; ஸ்வதே³ஹம் = தன்னுடலில் உள்ள; ஆமிஷஸ்ய; மாமிசத்தை = பிண்டம் இவ = கவளங்களாகக் கொய்து;உபாநயத் = சமர்ப்பித்தான்.

(க-ரை) அவ்வாறே ஆகட்டுமென்று கூறி சிங்கமானது நந்தினியை விட்டுவிட்டது. உடனடியாக சிங்கத்தின் மகத்துவத்தால், கட்டுப்பட்டிருந்த தோள்வலி இப்போது தன் வசமானதால், தன் செய்கைகளால் படைகொண்டு தன் உடலிலிருந்து மாமிசத்தை யறுத்து, கவளங்களாய் செய்து, சிங்கத்தின் எதிரில் நின்று சமர்ப்பித்தான். (தகுதியணி)

ஸு॥ தஸ்மிந் க்ஷணே பாலயிது: ப்ரஜாநாம்
உத்பஸ்யதஸ் ஸிம்ஹ நிபாத முக்²ரம் ।
அவாங் முக¹ஸ்யோபரி புஷ்பவ்ரிஷ்டி:
பபாத வித்²யாத³ர ஹஸ்த முக்தா ॥ 60

(ப-ரை) தஸ்மிந்க்ஷணே = அவ்வேளையில்; உக்²ரம் = பயங்கரமான; ஸிம்ஹநிபாதம் = சிங்கம் தன்மீது வீழ்தலை; உத்பஶ்யத = எண்ணிக் கொண்டிருக்கும்; அவாங் முக¹ஸ்ய = நிலநோக்கும்; ப்ராஜாநாம் = குடிமக்களுக்கு; பாலயிது: = ஆள்பவனாகிய திலீப மன்னன்; உபரி = மீது; வித்²யாத²ர = (தேவர்களில் ஒரு வகையைச் சார்ந்த) வித்யாதரர்களுடைய; ஹஸ்த = கைகளால்; முக்தா = விடப்பட்ட; புஷ்பவர்ஷ: = பூமாரி; பபாத = பொழிந்தது.

(க-ரை) உடனே அச்சப்படும் வண்ணம், சிங்கமானது தன் மீது விழுவதுபோல் இருப்பதைக் கண்டு தலையை வளைத்துக் கொண்டு நிலத்தை நோக்கி நிற்கும் திலீப மன்னன் மீது வித்யாதரர்கள் பூமாரி பொழிந்தனர். (வியப்பணி)

ஸு॥ உத்திஷ்ட[1] வத்ஸே த்யம்ரிதாயமாநம்
வசோ நிஶம்யோத்தி[1]தமுத்தி[1]தஸ்ஸந் ।
த[2]த[2]ர்ஶ ராஜாஜநநீமிவ ஸ்வாம்
க[2]ா மக்[2]ரதஃ ப்ரஸ்ரவணீம் ந ஸிம்ஹம் ॥ 61

(ப-ரை) ராஜா = அந்த திலீப மன்னன்; அம்ரிதாயமநம் = அமுதைப் போன்றதும்; உத்தி[1]தம் = பிறந்ததும்; ஹேவத்ஸ = ஓ, குழந்தாய்! உத்தி[2]ஷ்ட = எழுந்திரு; இதி = என்னும்; வசஃ = சொல்லை; நிஶம்ய உத்தி[1]தஸ்ஸந் = எழுந்திருந்தவனாய்; அக்[2]ரத = முன்னால்; ப்ரஸ்ரவணீம் = பால் சுரந்துகொண்டுள்ள; க[2]ாம் = நந்தினி தேனுவை; ஸ்வாம் = தன்னுடைய; ஜநநீம் இவ = தாயைப் போல்; த[2]த[2]ர்ஶ = பார்த்தான்; ஸிம்ஹந்து = சிங்கத்தையோ; நத[3]த[2]ர்ஶ = கண்டானில்லை.

(க-ரை) திலீப மன்னன், 'குழந்தாய்! எழுந்திரு' என்னும் அமுதம் போன்ற சொற்ளைக் கேட்டு எழுந்தான். அப்போது தன் முன்னால் தாய்ப்போல் நின்றுள்ள நந்தினி பசு பாலைப் பொழிந்துக் கொண்டிருந்தது. சிங்கம் காணாது போயிற்று. (வேண்டல் மற்றும் உவமையணி)

ஸு॥ தம்விஸ்மிதம் தே[3]நு ருவாச ஸாதே[3]ா
மாயாம் மயோத்[2]ப[3]ாவ்ய பரீக்ஷிதோஸி
ரிஷிப்ரப[3]ாவாந் மயிநாந்தகோஃபி
பரபுஃ ப்ரஹர்தும் கிமுதாந்ய ஹிம்ஸ்ரஃ ॥ 62

(ப-ரை) விஸ்மிதம் = வியந்துள்ள; தம் = அந்த திலீப மன்னனை நோக்கி; தே[3]நுஃ = நந்தினீ தேனுவானது; உவாச = கூறியது; ஹேஸாதே[3]ா = சாதுவாகிய திலீப மன்னா! மயா = என்னால்; மாயா = மாயையால்; உத்[2]ப[3]ாவ்ய = உண்டாக்கி; பரீக்ஷிதஃ = சோதிக்கப்பட்டவன்; அஸி = ஆனாய்; ரிஷிப்ர ப[3]ாவாத் = வசிட்டர் மகிமையால்; அந்தகஃ அபி = இயமனும்; மயி = என்னிடம்; ப்ரஹர்தும் = கொல்ல; ப்ரபுஃ = சமர்த்தன்; ந = அல்லன்; அந்ய

ஹிம்ஸ்ர=பிற கொடிய விலங்குகள்;கிமுத=அதெப்படி ப்ரப⁴வ:= சமர்த்துள்ளவை; ந=ஆகா.

(க-ரை) அப்போது வியந்துக்கொண்டிருக்கும் திலீப ராஜா வுடன் நந்தினீ தேனு சொன்னதாவது; "உன்னைச் சோதிப் பதற்கு இம்மாய்கையை உண்டாக்கினேன். நீ சாது. வசிட்டருடைய மகாத்மியத்தால் என்னை எமனும் அணுக முடியாது; இவ்வாறிருக்க பிற கொடிய விலங்குகள் என்னை என்ன செய்யக் கூடும்?" (நிர நிறையணி)

சு ॥ ப⁸க்த்யா கு²ரௌ மய்யநுகம்பயா ச
ப்ரீத்யா஽ஸ்மி தே புத்ர வரம் வ்ரிணீஷ்வ ।
நகேவலாநாம் பயஸாம் ப்ரஸூதி
மவேஹி மாம் காமது²க³ாம் ப்ரஸந்நாம் ॥ 63

(ப-ரை) ஹேபுத்ர = மகனே! கு²ரௌ = வசிட்டரிடம்; ப⁴க்த்யா=பக்தியாலும், மயி=என்னிடம்; அநுகம்ப யாச= தயவாலும்; தே=உனக்கு; ப்ரீதா=மகிழ்வுடையவள்; அஸ்மி= ஆகிறேன்; வரம்=வேண்டுகோளை; வ்ரிணீஷ்வ=கேட்பாயாக; தத¹ாஹி=அதுசரி; மாம்=என்னை; கேவலாநாம்=இணையற்ற; பயஸாம்=பாலுக்கு; ப்ரஸூதிம்=காரணமானவளாக; நாவேஹி= அறியவேண்டா; கிந்து = மேலும் என்னவெனில்;ப்ரஸந்நாம்= அனுக்கிரக முள்ளவளாகிய என்னை; காமது²க³ா=விரும்பிய வற்றைக் கொடுக்கக் கூடியவளென்று; ஆவேஹி=தெரிந்துக் கொள்வாயாக.

(க-ரை) மகனே! உனக்குள்ள குருபக்தியைக் குறித்தும், என் மீதுள்ள தயவுக்கும் உவந்தேன். உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்: நான் மனநிறைவுற்றால் தேவர்களைப்போல் எண்ணிய வற்றையெல்லாம் கொடுக்கவல்லவளாக என்னை அறிந்துக்கொள். (கற்றோர் நவிற்சியணி)

சு ॥ ததஸ்ஸமாநீய ஸ மாநிதார்தீ¹
ஹஸ்தௌ ஸ்வஹஸ்தார்ஜித வீரஶப்²த²: ।
வம்ஶஸ்ய கர்தார மநந்த கீர்திம்
ஸுதக்ஷிணாயாம் தநயாம் யயாசே ॥ 64

ı-ரை) ததஃ = பிறகு; மாநிதார்தீ[1] = பரிசுவழங்கப்பட்ட
ாரையுடைய; ஸ்வஹஸ்த = தம் கைகளால்; ஆர்ஜித =
ித்த; வீர = வீரனென்னும்; ஶப்[2]த[2]ஃ = சொல்லுடைய;
அந்த திலீபமன்னன்; ஹஸ்தெள = கைகளை; தமாநீய =
டு; வம்ஶஸ்ய = குலத்திற்கு; கர்தாரம் = தலைவனும்; அநந்த
= என்றென்றும் புகழுடைய; தநயம் = மகனை; ஸுதக்ஷிணா
சுதக்ஷிணைக்கு உண்டாக; யயாசே = கேட்டான்.

ı-ரை) அப்போது பல இரப்பாரை மகிழச் செய்யும் மாபெரும்
ாளனும், தன் தோள்வலியால் பலரைவென்று வீரனென்னும்
டந்து தாழ்மையறியா திலீபமன்னன், தான்றாழ்ந்தவன்
கைக்கூப்பி தன்மரபிற்கு கர்த்தாவாய் மிகுந்த புகழ்தேடும்
ாத் தன் பட்டத்து தேவியாகிய சுதக்ஷிணா தேவிக்கு அருள
டுமென்று இரந்தான். (வேண்டலணி)

ந்தாந காமாய ததே[1]தி காமம்
ராஜ்ஞே ப்ரதி ஶ்ருத்ய பயஸ்வி நீஸா ।
ு[2]க்[2]த்[3]வா பயஃ பத்ரபுடே மதீ[2]யம்
புத்ரோப பு[2]ங்க்க்ஷ்வேதி தமாதி[3]தே[2]ஶ ॥ 65

ı-ரை) ஸா = அந்த; பயஸ்விநீ = நந்தினீதேனு; ஸந்தாநகா
= மகன் வேண்டுமென விழையும்; ராஜ்ஞே = திலீபமன்னனுக்
ததே[1]தி = அவ்வாறே ஆகட்டுமென்று; காமம் = வரத்தை;
ஶ்ருத்ய = சூளுரைசெய்து; ஹேபுத்ர = ஓமகனே! மதீயம் =
; பயஃ = பாலை; பத்ரபுடே = தொன்னையில்; து[2]க்[2]த்[3]வா =
ு; உபபு[3]ங்க்க்ஷ்வா = குடிப்பாயாக; இதி = என்று; தம் = அந்த
மன்னனுக்கு; ஆதி[2]தே[2]ஶ = ஆணையிட்டது.

க-ரை அந்த நந்தினீபசுவானது அவ்வாறே ஆகுக என்று
ரித்து, "மகனே! நீ ஒரு தொன்னையில் என் பாலைக்
ுக் குடி" என்று ஆணையிட்டது. (வேண்டலணி)

த்ஸஸ்ய ஹோமார்த[1] விதே[2]ஶ்ச ஶேஷம்
கு[2]ரோ ரநுஜ்ஞா மதி[3]க[2]ம்ய மாதஃ ।
ுத[2]ஸ்ய மிச்ச[1]ாமி தவோப பே[3]ாக்தும்
ஷஷ்டாம்ஶ முர்வா இவ ரக்ஷிதாயாம் ॥ 66

(ப-ரை) ஹேமாத꞉ = அம்மையே! வத்ஸஸ்யபீதம் = கன்று குடித்த மீதியை; ஹோம = வேள்வியெனும்; ஆர்த[1] = கிரிகையின்; விதே[3]ஶ்ச = அனுட்டானத்தில்; ஶேஷம் = மீதமான; தவ = உன்னுடைய; ஊத[3]ஸ்யம் = பாலை; ரக்ஷிதாயாம் = காக்கப்பட்ட; உர்வ்யா = பூமியின்; ஷஷ்டாம்ஶம் இவ = ஆறில் ஒரு பங்குபோல்; கு[2]ரோ꞉ = ஆசிரியருடைய; அநுஜ்ஞாம் = அனுமதியை; அதி[3]க[2]ம்ய = பெற்று; உபபோ[3]க்தும் = அருந்த; இச்சாமி = எண்ணுகிறேன்

(க-ரை) அதற்குத் திலீப மன்னன்: "அன்னையே! உனது கன்றுக்கும் ஓமத்திற்கும் பயன்படுத்தி மிகுதியான உன்பாலை, என்னால் ஆளப்படும் பூமியின் பலனில் ஏற்படும் ஆறில் ஒரு பங்கு போல், ஆசிரியரின் அனுமதி பெற்று அருந்த விழைகின்றேன்" என்று நந்தினி பசுவிடம் நவின்றான். (தன்மைநவிற்சியணி)

சு॥ இத்த[1]ம் க்ஷிதீஶேந வஶிஷ்ட தே[3]நு꞉
விஜ்ஞாபிதா ப்ரீததரா ப[2]பூ[3]வ ।
தத[2]ந்விதா ஹைமவதாச்ச குக்ஷே꞉
ப்ரத்யாயயா வாஶ்ரம மஶ்ரமேண ॥ 67

(ப-ரை) இத்த[1]ம் = இவ்விதமாக; க்ஷிதீஶேந = திலீப மன்னனால்; விஜ்ஞாபிதா = விண்ணப்பிக்கப்பட்ட; வஶிஷ்டதே[3]நு꞉ = வசிட்டருடைய நந்தினியெனும் பசுவானது; ப்ரீததரா = களிப்படைந்தது; ப[2]பூ[3]வ = ஆயிற்று; தத[2]ந்விதா = அந்த திலீபமன்னனுடன் கூடிய; ஹைமவதாத் = இமயத்தின்; குக்ஷே = குகையிலிருந்து; அஶ்ரமேண = சோர்வின்றி; ஆயயாச = வந்து சேர்ந்தது.

(க-ரை) இவ்வாறு திலீபமன்னன் விண்ணப்பித்ததைக்கேட்ட நந்தினி பசுவானது களிப்படைந்து இமயத்துக் குகையை விட்டு சோர்வின்றி, ஆச்சிரமத்தை அடைந்தது. (நிகழ்வினவிற்சியணி)

சு॥ தஸ்ய꞉ ப்ரஸந் நேந்து[2]முக[1]꞉ ப்ரஸாத[2]ம்
[2]குருர் ந்ரிபாணம் கு[2]ரவே நிவேத்ய ।
ப்ரஹர்ஷ சிஹ்நாநுமிதம் ப்ரியாயை
ஶஶம்ஸ வாஸா புநருக்த மேவ ॥ 68

(ப-ரை) ப்ரஸந்ந இந்து[2] = நின்மலமாய மதியைப் போன்று; முக[1]꞉ = முகமுடைய; ந்ரிபாணாம் = அரசர்களுக்கு; கு[2]ரு꞉ = ஆசா

னாகிய திலீபமன்னன்; ப்ரஹர்ஷ=உவகையால்; சிஹ்ந=முகம் முதலியவற்றின் அறிகுறிகளால்; அனுமிதம்=எண்ணிய; தஸ்ய= நந்தினி தேனுவின்; ப்ரஸாத³ம்=அனுக்கிரகத்மைத; புநருக்தமேவ= மறுபடியும் சொல்லிய; வாசா=வாக்குகளால்; கு³ரவே=வசிட்டருக்கு; நிவேத்ய=விண்ணப்பித்து; ப்ரியாயை=அன்புள்ள மனைவியாகிய சுதக்ஷிணா தேவிக்கு; ஶஶம்ஸ=சொன்னான்.

(க-ரை) நந்தினியின் அனுக்கிரகமானது முகம் போன்ற உருப்புகளின் வாயிலால் தெரிந்தாலும், அரசனான திலீபமன்னன, களிபெருக்கால், நந்தினி பசு வந்த சங்கதியும் வசிட்டருக்கு அறிவித்து, பிறகு அன்பு மனைவிக்கும் சொன்னான். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ஸ நந்தி³நீ ஸ்தந்ய மநிந்த³தாத்மா
ஸத்³வத்ஸலோ॥ வத்ஸ ஹுதாவஶேஷம் ।
பபௌ வஶிஷ்டே¹ந க்ரிதாப்³யநுஜ்ஞ
ஶ்ஶுப்⁸ரம் யஶோ மூர்தமிவாதி த்ரிஷ்ணா ॥ 69

(ப-ரை) அநிந்தி²த=குற்றமற்ற; ஆத்மா=சுபாவமுள்ள; ஸத்= நல்லார்களிடம்; வத்ஸல=பிரியமுள்ளவன்; ஸঃ=(ஆகிய) அந்த திலீபமன்னன்; வஶிஷ்டே¹ந=வசிட்டரால்; க்ரித=செய்யப்பட்ட; அப்³யநுஜ்ஞஸ்ஸந்=அனுமதி உள்ளவனாய்; வத்ஸ = கன்று (குடித்து) ஹுத=ஓமத்திலும் (பயன்பட்ட) அவஶேஷம்=மிகுதியான; நந்தினீ=நந்தினீ தேனுவின்; ஸ்தந்யம்=பாலை;ஶுப்⁸ரம் சுத்தமானதும்; மூர்தம்=அளக்கப்பட்டதும்; (ஆனதை) யஶঃ இவ= புகழைப் பெறுவதுபோல்; அதித்ரிஷ்ணஸ்ஸந்=மிக்க ஆசையுடன்; பபௌ=குடித்தான்.

(க-ரை) திலீபமன்னன் வசிட்டரின் அனுமதிபெற்று, கன்றுக்கும் ஓமத்திற்கும் பயன்பட்டதுபோக, மீதமாயிருந்த நந்தினியின் பாலை மிக ஆசையோடு குடித்தான். (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ ப்ராதர்யதே¹ாக்த வ்ரத பாரணாந்தே
ப்ராஸ்த¹ாநிகம் ஸ்வஸ்த்யயநம் ப்ரயுஜ்ய ।
தௌ த³ம்பதீ ஸ்வாம் ப்ரதி ராஜத⁰ாநீம்
ப்ரஸ்த¹ாபயா மாஸ வஶீ வஶிஷ்ட¹ঃ ॥ 70

(ப-ரை) வஶீ=புலனடக்கமுள்ள; வஶிஷ்ட1:=வசிட்டர்; ப்ராத:=வைகரையில்; யதே1ாக்த=முறைப்படியான; வ்ரத= கே3ாஸேவாவிரத; பாரணா=பாரணைக்கு; அந்தே=பிறகு; ப்ராஸ்த1ாநிகம்=பிரயாணகாலத்திற்கு ஏற்ற; ஸ்வஸ்த்யயநம்= ஆசீர்வாதத்தை; ப்ரயுஜ்ய; பயன்படுத்தி; தௌ=அந்த தம்பதிகளை; (சுதக்ஷிணை திலீபர்களை) ஸ்வாம்=தமது; ராஜ3த3ாநீம் ப்ரதி=பட்டணம் நோக்கி; ப்ரஸ்த1ாபயா மாஸ=அனுப்பிவைத்தார்.

(க-ரை) பொழுது புலர்ந்ததும் சுதக்ஷிணையும், திலீபனும், கே3ா சேவையென்னும் விரதத்தையும், உண்ணுதலும் முடித்துக் கொண்டு விட்டபிறகு, வசிட்டர் அவர்களைப் பயணகாலத்து வாழ்த்துக்களை நவின்று அவர்களின் நகரத்திற்கு அனுப்பி வைத்தார். (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ ப்ரத3க்ஷிணீ க்ரித்ய ஹுதம் ஹுதாஶம்
அநந்தரம் ப3ர்து ரருந்த3தீ: ச ।
தே3நும் ஸவத்ஸாம் ச ந்ரிப: ப்ரதஸ்தே1
ஸந்மங்களோ த3க்3ரதர ப்ரப3ாவ: ॥ 71

(ப-ரை) ந்ரிப:=திலீப மன்னன்; ஹுதம்=அவி சொரிதலால் கொழுந்துவிட்டெரியும்; ஹுதாஶம் = அக்கினியை; ப3ர்து:= பதியாகிய வசிட்டரை; அநந்தரம்=பிறகு; அருந்த3தீம்=அருந்ததீ தேவியை; ஸவத்ஸம்=கன்றுடன் கூடியுள்ள; தேநுஞ்ச=நந்தினி தேனுவையும்; ப்ரத3க்ஷிணீக்ரித்ய=வலம் வந்து வணங்கி; ஸத் மங்களம்=நல்லாசிகளால்; உத3க்3ரதர=மிக்க மேன்மையுள்ள; ப்ரப3ாஸ்ஸந் = மகிமை உடையவனாய்; ப்ரதஸ்தே1 = புறப்பட்டான்.

(க-ரை) திலீப மன்னன் அவி சொரிந்ததால் கொழுந்து விட்டெரியும் அக்கினியையும், வசிட்டரை, அருந்ததியை, கன்றுடன் கூடிய நந்தினி தேனுவை முறையே வலம் வந்து வணங்கி, நகரத்திற்குப் புறப்பட்டான் (வினைமுதல் விளக்கணி)

சு॥ ஶ்ரோத்ராபி3ராம த்3வநிநா ரதே1ண
ஸத3ர்ம பத்நீ ஸஹித ஸ்ஸஹிஷ்ணு: ।
யயா வநுத்2க3ாத ஸுகே1ந மார்கே2
ஸ்வநேந பூர்ணேவ மநோரதே1ந ॥ 72

(ப-ரை) த³ர்மபத்நீஸஹிதঃ = தன் மனைவி சுதக்ஷிணா தேவியுடன் கூடினவனாய்; ஸஹிஷ்ணு = விரோதிகளால் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்பவனும ஆகிய; ஸঃ = அந்த திலீப மன்னன்; ஶ்ரோத்ர = காதுகளுக்கு; அபி⁸ராம = இனிமையான; த்⁸வநிநா = ஒலியுள்ள; மார்கே² = வழியில்; அநுத்³க⁸ாத = கற்கள் முதலிய தடையற்றும்; ஸ்யந்தே¹ந = நிறைவேறிய; மநோரதே¹ந = விருப்பம் கொண்டு; யயௌ = புறப்பட்டான்.

(க-ரை) நோற்றல் முதலியவற்றால் உண்டாகும் வருத்தங்களைத் தாங்கும் திலீப மன்னன் தன் பத்தினியுடன் கூடி, தன் விருப்பம் ஈடேறியதால், வழியில் கற்கள்முதலியன இல்லாது சுகமாய் ஓடும் தேரில், காதுக்கினிமையான ஒலிகளைக் கேட்டு ரசித்திக் கொண்டே சென்றான். (பெருமையணி)

சு॥ தமாஹி தௌத்ஸுக்ய மத³ர்ஶநேந
ப்ரஜாঃ ப்ரஜார்த¹ வ்ரத கர்ஶிதாங்க²ம் ।
நேத்ரை பபுஸ்த்ரிப்தி மநாப்நு வத்²பி⁸ঃ
நவோத³யம் நாத¹ மி வௌஷதீ⁸நாம் ॥ 73

(ப-ரை) அத³ர்ஶநேந = இடம் பெயர்ந்து அத்துணை நாட்களும் காணமுடியாமற் போனதாலும்; ஒளி குறைந்ததால் காண முடியாமதிருந்ததாலும்; ஆஹித ஔத்ஸுக்யம் = தன் எண்ணமீடேற விழைந்தவனும்; ப்ரஜார்த = உலகத்தையாள மகப்பேறுக்கென; வ்ரத = கோ²ாசேவையில் ஈடுபட்டிருந்ததாலும்; கர்ஶித = இளைத்துப் போன; அங்க²ம் = உடலையுடைய; நவோத³யம் = புதிதாய் தோன்றிய; தம் = அந்த திலீபராஜனை; ப்ரஜாঃ = குடிமக்கள்; த்ரிப்திம் = மன நிறைவை; அநாப்நுவத்²பிঃ = அடையாமலுள்ள; நேத்ரைঃ = கண்களால்; ஓஷதீ⁸நாம் = கொடிகளுக்கு; நாத¹மிவ = அதிகாரியாகிய சந்திரனைப் போல்; பபுঃ = பார்த்தனர்.

(க-ரை) வசிட்டரின் ஆச்சிரமத்திற்குச் சென்று அங்கு சிலகாலம் நந்தினி தேனுவின் சேவையில் விரதம் பூண்டு மெலிந்த உடலுடையவனும் மகப்பேறு வரம் பெற்றுத் திரும்பிவந்த திலீப மன்னனை, குடிமக்கள் வளர்பிறை மதியைக் காண்பதுபோல் மிகுந்த அவாவுடன் மனநிறைவின்றி பார்த்தனர். அதாவது சில காலம் அவ்வரசனைக் காணா திருந்தாலும், அவர் உடல் மெலிந்து காணப்பட்டதாலும், ஈடேறிய எண்ணத்துடன் திரும்பிவந்ததாலும்

அவனை, குடிமக்கள் ஆவலுடன் வெகுநேரம் பார்த்துக்கொண்டே இருந்தனர். (உவமை மற்றும் நிகழ்வினவிற்சியணி)

ௗ ॥ புரந்த²ர ஶ்ரீः புரமுத்பதாகம்
ப்ரவிஶ்ய பௌரை ரபி³நந்த்²ய மாநः ।
பு³ஜே பு³ஜங்கே²ந்த்ர ஸமாநஸாரே
பூ⁴ய ஸ்ஸபூ⁴மே ர்து⁴ர மாஸஸஜ்ஜ ॥ 74

(ப-ரை) புரந்தத²ர = தேவர்கோனின்; ஶ்ரீः = செல்வம் போன்று செல்வமுடைய; ஸः = அந்த திலீப மன்னன்; பௌரைः = நகர மக்களால்; அபி³ நந்த்²ய மாநः = மகிழப் பட்டவனாய்; உத்பதாகம் = ஏற்றப்பட்ட கொடியுடைய; புரம் = நகரத்தை; ப்ரவிஶ்ய = நுழைந்து; பு³ஜங்கே²ந்த்²ர = ஆதிசேடனுக்கு; ஸமாந = நிகரான; ஸாரே = வலிமையுடைய; பு³ஜே = தோளில்; பூ⁴யः = மறுபடியும்; பூ³மேः = பூமியின்; து³ரம் = பாரத்தை; ஆஸஸஜ்ஜ = தாங்கினான்.

(க-ரை) தேவேந்திரனைப் போல் செல்வமுடைய திலீா மன்னன் மக்களால் துதிக்கப்பட்டவனாய், கொடிகள் ஏற்றப்பட்ட நகரத்தில் நுழைந்து மறுபடியும் பூபாரம் தாங்கி அரசாண்டான். (விரியுவமையணி)

ௗ ॥ அத¹ நயநஸமுத்த¹ம் ஜ்யோதி ரத்ரேரிவ த்³யௌः
ஸுரஸரிதி²வ தேஜோ வஹ்நி நிஷ்ட்¹யூத மைஶம் ।
நரபதி குலபூத்யை க²ர்பு³மாத³த்த ராஜ்ஞீ
கு²ருபி³ ரபி³நிவிஷ்டம் லோகபாலாநு பா⁸வைः ॥ 75

இதி காளிதாஸ க்ரிதௌ ரகு²வம்ஶ மஹாகாவ்யே த்விதீய ஸ்ஸர்க²ः

(ப-ரை) அத¹ = பிறகு; த்³யௌः = ஆகாயம்; அத்ரேः = அத்ரி மா முனியின்; நயந ஸமுத்த¹ம் = கண்களில் பிறந்த; ஜ்யோதி ரிவ = சந்திரனைப்போல்; ஸுரஸரித் = தேவகங்கை; வஹ்நி = அக்கினியால்; நிஷ்ட்¹யூதம் = வைக்கப்பட்ட; ஐஶம் = பரம சிவனைச் சார்ந்த; தேஜः = குமாரஸ்வாமியைப் போலும்; ராஜ்ஞீ = சுதக்ஷிணாதேவி; நரபதி = திலீப மன்னனின்; குல = வமிசத்தின்; பூ⁴த்யை = ஐசுவரியத்திற்காக; கு²ருபி³ = பெரிதான; லோகபால =

திக்குப்பாலர்களின்; அநுப^{3}ாவைঃ = ஒளிகளால்; அபி^{3} நிவிஷ்டம் = நுழையப்பட்ட; க^{2}ர்ப^{3}ம் = சூலை; ஆத^{3}த்த = பெற்றனள்.

(க-ரை) பிறகு, சுதக்ஷிணாதேவி சந்திரனைப் போன்ற ஒளியுடன், முருகனைப் போன்ற பராக்கிரமத்துடன், திக்குப்பாலர்களின் ஆக்கத்துடன் கூடிய மகனுள்ள சூல்கொண்டாள். (தொகையுவமையணி)

இது காளிதாஸ ரியற்றிய ரகுவம்ச மகா காப்பியத்தில் இரண்டாம் சருக்கத்திற்குத் திருத்தணிவாழ் ஸ்ரீவித்யாநந்தரெனும் செ. ராமலிங்காசாரியரா லியற்றப்பட்ட தெளிவுரை.

ரகுவம்ச மகா காவியம்

மூன்றாம் சருக்கம்

சு॥ அதே1ப்ஸிதம் ப3ர்து ருபஸ்தி1தோத2யம்
ஸகீ1ஜநோ த்2வீக்ஷண கௌமுதீ2 முக1ம் ।
நித2ாந மிக்ஷ்வாகு குலஸ்ய ஸந்ததே
ஸஸுதக்ஷிணா தெ2ளஹ்ரித லக்ஷணம்த2தெ2ள ॥

(ப-ரை) அத1 = கருந்தரித்த பிறகு; ஸுத2க்ஷிணா = ஸுத க்ஷிணா தேவி; உபஸ்தி1தோத2யம் = பலனடைந்த; ப3ர்துঃ = பதியாகிய திலீப மன்னனுக்கு; ஈப்ஸிதம் = எண்ணிய எண்ணத்தின் உருவாயும்; ஸகீ2ஜந = தோழிகளின்; உத்2வீக்ஷண = பார்வைக்கு; கௌமுதீ2முக1ம் = நிலவு தோன்றுவது போன்றும்; இக்ஷ்வாகு குலஸ்ய = இக்ஷ்வாகு அரசன் மறபில்; ஸந்ததேঃ = பாரம்பரியத்திற்கு; நித2ாநம் = மூலக்காரணமாகிய; தெ2ளஹ்ரித2 = சூலின்; லக்ஷணம் = சின்னத்தை; த2தெ2ள = அடைந்தாள்.

(க-ரை) பிறகு சுதக்ஷிணா தேவி தன் பர்த்தாவுக்குப் பிரியமாகவும் தோழிகளின் கண்களுக்கு விருந்தாகவும் இக்ஷ்வாகுவின் மறபிற்கு காரணமாகியுள்ள சூலின் அறிகுறிகளை அடைந்தாள். (ஒற்றை மணிமாலையணி)

சு ॥ ஶரீரஸாத2ா த2ஸமக்3ர பூ3ஷணா
முகே1நஸாऽலக்ஷ்யத லோ3த்ர பாண்டுநா ।
தநுப்ரகாஶே நவிசேயதாரகா
ப்ரபா3த கல்பா ஶஶிநேவ ஶர்வரீ ॥ 2

(ப-ரை) ஶரீர = உடலின்; ஸாத2ாத் = மெலிவால்; அஸமக்2ர = மிதமான; பூ3ஷணா = நகைகள் அணிந்தவளாயும்; லோத்3ர = லோத்திரமென்னும் பூப்போன்று; பாண்டுநா = வெண்மையான; முகே1ந = முகத்துடன்; உபலக்ஷிதா = தோன்றும்; ஸா = அந்த சுதக்ஷிணா தேவி; விசேய = தேடினாலன்றி காணக்கூடிய; தாரகா = விண்மீன்களையுடைய; தநு = சொற்பமாகிய; ப்ரகாஶேந = ஒளியுடைய ப்ரப3ாத கல்பா = காலைநேரத்து; ஶஶிநா = சந்திரனுள்ள; ஶர்வரீவ = இரவுபோல்; அலக்ஷ்யத = தோற்றங்கொண்டாள்.

(க-ரை) உடல் மெலிந்தமையால். சில நகைகளை மட்டும் அணிந்த சுதாக்ஷிணா தேவி லோத்திரப்பூ போன்ற வெளுத்த முகமுள்ளவளாய் சில விண்மீன்கள் மட்டும் காணக்கூடிய வைகறை வேளைக்கு நிகராய இரவில்தோன்றி சற்றே ஒளியுள்ள சந்திரனைப் போல் மக்களால் பார்க்கப்பட்டான். (உவமை மற்றும் புனைவுளி யொப்புமைக் கூட்டவணி)

சு॥ தத²ாநநம் ம்ரித்ஸுரபி³ க்ஷிதீஶ்வரோ
ரஹஸ்யுபாக்³ராய ந த்ரிப்தி மநாயயௌ ।
கரீய ஸிக்தம் ப்ரிஷிதை꞉ பயோமுசாம்
ஸுசிவ்யபாயே வநராஜி பல்லவம் ॥ 3

(ப-ரை) க்ஷிதீஶ்வர꞉ = திலீப மன்னன்; ரஹஸி = தனிமையில்; ம்ரித் = மண்ணால்; ஸுரபி³ = நறுமணமுடைய; தத் = அந்த சுதக்ஷிணாதேவியின்; ஆநநம் = முகத்தை; உபாக்³ராய = முகர்ந்து; ஶுசிவ்யபாயே = முதுவேனில் கடைசியில்; பயோமுக¹ாம் = மேகங்களின்; ப்ரிஷிதை꞉ = திவலைகளால்; ஸிக்தம் = நனைக்கப்பட்ட; வனராஜி = நீர்த்தாமரையால் ஏற்பட்ட; பல்வலம் = அற்பமான குட்டையை; உபாக்³ராய = முகர்ந்து; கரீவ = யானையை போல்; த்ரிப்திம் = மன நிறைவை; அநாயயௌ = அடையாமற்போனான்.

(க-ரை) திலீப மன்னன் தனிமையில் மண்ணுண்டமையால் மணம் கொண்ட அந்த சுதக்ஷிணா தேவியின் முகம், வேனிற்கால மேகங்களின் திவலைகளால் நனைந்த காட்டிலுள்ள சிறு குட்டைகளின் மணத்தை யானை முகர்ந்து மனநிறைவற்றதுபோல் திருப்தி அடையவில்லை (கரவுவெளிப்படுப்பணி மற்றும் பதப்பொருட்காட்சியணி)

சு ॥ தி²வம் மருத்வாநிவ பே⁰ாக்ஷ்யதே பு³வம்
தி²க³ந்த விஸ்ராந்ரதே¹ா ஹி தத்ஸுத꞉ ।
அதே¹ாபி⁰லாஷே ப்ரத¹மம் தத¹ாவிதே²
மநோபு²லம் த³ந்யரஸாந்விலங்க்³யஸா ॥ 4

(ப-ரை) ஹி = எக்காரணத்தால்; தி²க் அந்த = திசை முனைகளில்; விஶ்ராந்த = பரவிய; ரத¹꞉ = தேர் உடைய; தத்ஸுத꞉ = அந்த சுதக்ஷிணா தேவிமகன்; மருத்வாந் = இந்திரன்; தி²வமிவ = தேவருலகமும் போன்று; பு³வம் = பூமியை; பே³ாக்ஷ்ய = அனுபவிப்பானோ; அத꞉ = அக்காரணத்தால்; ப்ரத¹மம் = ஆதியில்; ஸா = அந்த

சதக்ஷிணா தேவி; தத¹ாவிதே³ = மண்ணுருவான; அபிலாஷே = பிற பொருள்களை; விலங்க்³ய = விட்டு; மநः = மனதை; ப²ப²ந்த³ = கட்டினாள்.

(க-ரை) அந்த ஸுதக்ஷிணாதேவி பூமியனைத்தும் ஆளும் மகனைப் பெறுவதற்காய அறிகுறிகளாக பிறபொருள்களை விட்டு மண்ணுருவாய பொருளையே முதலில் விரும்பியவள் ஆனாள். (விரியுவமை மற்றும் விதியணி)

ஸு॥ ந மே ஹ்ரியா ஶம்ஸதி கிஞ்சி தீ³ப்ஸிதம்
ஸ்ப்ரிஹாவதீ வஸ்துஷு கேஷு மாக³தீ³ ।
இதிஸ்ம ப்ரிச்ச¹த்யநுவேல மாத்²ரிதः
ப்ரியா ஸகீ¹ ருத்தர கோஸ லேஶ்வரः ॥ 5

(ப-ரை) மாகதீ³ = (மகதநாட்டரசு மகளான) சுதக்ஷிணா தேவி; ஹ்ரியா = வெட்கத்தால்; கிஞ்சித் = எதனை; ஈப்ஸிதம் = விரும்பிய பொருளோ அதை; மே - எனக்கு; நஶம்ஸதி = செப்ப மாட்டாள்; கேஷு = எந்த; வஸ்துஷு = பொருட்களில்; ஸ்ப்ரிஹா ஸதி = விருப்பமுள்ளதோ; இதி = இவ்வாறென்று; அநுவேலம் = ஒவ்வொரு கணமும்; ஆத்²ரிதः = ஆதரவுடன் கூடிய; உத்தரகோஶ லேஶ்வரः = திலீப மன்னன்; ப்ரியா = சுதக்ஷிணாதேவியின்; ஸகீ³ = தோழிகள்; ப்ரிச்¹ச ஸ்ம = கேட்டான்.

(க-ரை) சுதக்ஷிணா தேவி வெட்கத்தால் தனக்கெதன் மீது விருப்பமுண்டோ அதை கூறமாட்டாள். அதனால், அவளுக்கு எப்பொருள் மீது விருப்பமுண்டோ அதனை அறிந்துக் கொள்வதற்கு திலீபன் அவளது தோழிகளை அவ்வப்போது ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தான். (நுட்பவணி)

ஸு॥ உபேத்ய ஸா தே²ாஹத³ து²ःக¹ ஶீலதாம்
யதே²வ வவ்ரேத த²பஶ்ய த²ாஹ்ரிதம் ।
நஹீஷ்ட மஸ்யத்ரிதி²வே஽பி பூ³பதே
ரபூ³ த²நாஸாத்²ய மதி³ஜ்ய த³ங்வநः ॥

(ப-ரை) ஸா = அந்த சுதக்ஷிணாதேவி; தே²ாஹத² = சூல் கொண்ட எண்ணத்தால்; து²ःக¹ஶீலதாம் = வருத்தம்; உபேத்ய = அடைந்த; யத் = எப்பொருளை; வவ்ரே = விழைந்த

ணளோ; தத் = அப்பொருளை; ஆஹ்ரிதம் = கொண்டுவரப்பட்டதாய்; அபஶ்யதேவ = பார்த்தும்; ஹி = எக்காரணத்தால்; அதிஜ்யதந்வ = தொடுக்கப்பட்ட வில்லுடைய; அஸ்ய = இந்த; பூ; பதேঃ = திலீப மன்னனுக்கு; இஷ்டம் = விரும்பிய பொருள்; த்ரிதிவேঽபி = சொர்க்கத்திலும்; நாஸாத்யம் = அடைய முடியாததாய்; நாபூத் = இல்லாது போயிற்று

(க-ரை) சுதக்ஷிணாதேவி சூல் கொண்டனள் ஆதலால், எந்தப் பொருளை ஆசைப்பட்டாலும் அது கொண்டு வந்து தரப்படும். ஏனெனில் அவள் விரும்பும் பொருள் சொர்கத்தில் இருந்த போதிலும் அதை அடைதல் என்பது திலீப மன்னனுக்குப் பெற முடியாததன்று. (கருத்துடைய அடையணி)

சு॥ க்ரமேண நிஸ்தீர்ய சதேஹதவ்யதாம்
ப்ரசீயமாநாவயவா ரராஜஸா ।
புராண பத்ராபகமா தநந்தரம்
லதேவ ஸந்நத்த மநோஜ்ஞ பல்லவா ॥ 7

(ப-ரை) ஸா = அந்த சுதக்ஷிணாதேவி; க்ரமேண = படிப்படியாக; தேஹத = சூல்கொண்டவளின் விளைவாலாய; வ்யதாஞ்ச = துயரை; விஸ்தீர்ய = கடந்து; ப்ரசீயமாந = பேணப்பட்ட; அவ்யவாஸதீ = உறுப்புகளுடையவளாய்; புராண = பழைய (பழுத்த); பத்ர = இலைகளின்; அபகமாத் = உதிர்ந்த; அநந்தரம் = பிறகு; ஸந்நத்த = பிறந்த; மநோஜ்ஞ = மனதைக் கொள்ளைக்கொள்ளும்; பல்லவாம் = துளிரிலைகளுடைய; லதேந = கொடியைப் போன்று; ரராஜ = மிளிர்ந்தனள்.

(க-ரை) சுதக்ஷிணாதேவி வரவர சூல் உண்டான துயர்நீங்கி, உறுப்புகள் திடங்கொள்ள, பழுத்த இலைகள் உதிர்ந்த பிறகு, மனதைக் கொள்ளைக் கொள்ளும்படி தளிர்ந்துவரும் கொழுந்திலைகள்போன்று ஒளிமிக்கவளானாள், (நிகரெடுத்துக்காட்டுவமையணி)

அவ ॥ பிற அறிகுறிகளும் புனைந்துரைக்கப்படுகிறது.

சு॥ திநேஷு கச்சத்ஸு நிதாந்த பீவரம்
ததீய மாநீல முகம் ஸ்தநத்வயம் ।
திரஶ்சகார ப்ரமராபி வீநயோঃ
ஸுஜாதயோঃ பங்கஜ கோஶயோ ஶ்ரியம் ॥ 8

(ப-ரை) தி²நேஷு = சூல் கொண்டவள் எண்ணிய நாட்கள்; க²ச்ச¹த்ஸுஸத்ஸு = கடந்துகொண்டேசெல்கையில்; நிதாந்த = மிகவும்; பீவரம் = பருத்த; ஆநீல = அனைத்தும் கருமையான; முக¹ம் = முலைநுனிகளுடைய; தத்³யம் = அந்த சுதக்ஷிணாதேவியின்; ஸ்தநத்வயம் = இரு முலைகளும்; ப்³ரமர = வண்டுகளாலும்; அபி³லீநயோ: = சூழப்பட்ட; ஸுஜாதயோ: = அழகான; பங்கஜ கோஶயோ: = தாமரை மொட்டுக்களின்; ஶ்ரியம் = ஒளியை; திரஸ் சகார = தோற்கடித்தன.

(க-ரை) பல பொருட்கள் மீது ஆசைக்கொள்ளும் நாட்கள் கழியவே சுதக்ஷிணாதேவியின் கொங்கைகளனைத்திலும் கறுநிறம் படர, கறுத்த முலை நுனிகளுடையவளாய், மேலே வண்டுகள் சூழா நிற்கும் தாமரை மொட்டுகளின் ஒளியை தோற்கடித்தாள். (தற்குறிப்பணி)

சு॥ நித³ாந க³ர்ப³ா மிவ ஸாக³ராம்ப²ராம்
ஶமீ மிவாப்³யந்தரலீந பாவகாம் ।
நதீமிவாம்த ஸ்ஸலிலாம் ஸரஸ்வதீம்
ந்ரிப ஸ்ஸஸத்வாம் மஹிஷு மமந்யத ॥ 9

(ப-ரை) ந்ரிப: = திலீப மன்னன்; ஸஸத்வாம் = சூல் கொண்டுள்ளவளும்; மஹிஷீம் = பட்டதரசியாகிய; சுதக்ஷிணாதேவியை; நித³ாந = நிதியை; க²ர்ப³ம் = வயிற்றில் உள்ள; ஸாக³ராம்ப²ரா மிவ = பூமியைப் போன்று; அப்³யந்தர = இடைப் பிரதேசத்தில்; லீந = அடங்கியுள்ள; பாவகாம் = வன்னியைஉடைய; ஶமீமிவ = வன்னிமரம் போல்; அந்த: = உள்ளடங்கிய; ஸலிலாம் = நீருள்ள; ஸரஸ்வதீம் = சரஸ்வதி என்ற ஆறு போன்றும்; அமந்யத = எண்ணினான்.

(க-ரை) திலீப மன்னன் கருவுற்றிருந்த சுதக்ஷிணாதேவியை ரத்தினங்களடங்கிய பூமியைப் போலும், வன்னியைக் கருவில் கொண்டுள்ள வன்னிமரம் போன்றும், அந்தர்வாகினியாகிய சரஸ்வதி நதிபோன்றும் நினைத்தான். (அதாவது—அந்த கருவிலுள்ள மகவு அரசனாய், ஒளி மிகுந்து மிகத்தூய்மையானவனாக இருப்பான் என்று எண்ணினான்) (விரிவுவமையணி)

சு॥ ப்ரியாநுராக³ஸ்ய மநஸ்ஸமுந்நதே:
பு³ஜார்ஜிதாநாம்ச தி²க³ந்த ஸம்பத³ாம் ।

யத²ாக்ரமம் பும்ஸவநாதி³கா: க்ரியா
த்⁸ரிதே ்சா தீ²ரஸ்ஸத்²ரிஶ ர்வ்யத⁸த்தஸ: ॥ 10

(ப-ரை) தீ³ர: = வித்வானான; ஸ: = திலீபமன்னவன்; ப்ரியா = அன்புள்ளவளான சுதக்ஷிணா தேவி மீது; அநுராக²ஸ்ய = அன்புக்கும்; மநஸ்ஸமுந்நதே: = உதாரத்திற்கும்; பு³ஜஆர்ஜிதாநாம் = தோள்வலிமையால் சம்பாதித்த; தி³க் அந்த = திசை முனைகளில்; ஸம்பத³ாஞ்ச = செல்வங்களுக்கும்; த்⁸ரிதே ்ச = மகன் உண்டாகப் போகிறான் என்ற மகிழ்ச்சியால்; ஸத்²ரிஶீ = தகுந்த; பும்ஸவந = சீமந்தம்; ஆதி²கா: = முதலிய; க்ரியா: = சடங்குகளை; யத²ாக்ரமம் = முறை தவறாது; வ்யத³த்த = செய்தான்.

(க-ரை) பண்டிதனாகிய திலீப மன்னன் அன்பு மனைவியான சுதக்ஷாதேவி அன்புக்கும், தன் உதாரத்திற்கும், தோள் வலிமையால், எல்லாதிசைகளிலும் சம்பாதித்த செல்வங்கட்கும், மகன் பிறக்கிறானென்ற மகிழ்ச்சிக்குகந்தவாறு சீமந்தம் முதலிய கிரிகைகளை முறைதவறாது செய்தான். (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ ஸுரேந்த்²ர மாத்ராஶ்ரித க²ர்ப⁸கௌ²ரவா
த்ப்ரயத்ந முகதாஸநயா க்²ரிஹாக²த: ।
தயோபசாரா ஞ்ஜலி கி¹ந்ந ஹஸ்தயா
ஸநந்த பாரிப்லவ நேத்ரயா ந்ரிப: ॥ 11

(ப-ரை) க்ரிஹ ஆக²த: = இல்லத்தை நோக்கி வந்த; ந்ரிப: = திலீப மன்னன்; சுரேந்த்²ர = திக்குப் பாலர்களின்; மாத்ரா = அம்சங்களாலும்; ஆஶ்ரித = நுழையப்பட்ட; க²ர்ப⁸ = கருவின்; கௌரத் = பளுவால்; ப்ரயத்ந = முயற்சியாலும்; முக்த = விடப்பட்ட; ஆஸநயா = பீடமுள்ளவளும்; உபசார = உபசாரத்தின் பொருட்டு; அஞ்ஜலி = அஞ்சலியில்; கி¹ந்ந = துயருடன் கூடிய; ஹஸ்தயா = கைகள் உடையவளும்; பாரிப்லவ = சஞ்சலமான; நேத்ரயா = கண்களுடையவளும்; (ஆகிய) தயா = அந்த சுதக்ஷிணா தேவியால் ஸநந்த = மகிழ்ந்தான்.

(க-ரை) திலீபமன்னன் தன் இல்லம் சேர்ந்து, திக்குப் பாலர்களின் புகழைப் பெற்று, வயிற்றிலுள்ள சிசுவின் பளுவால் மிக்க முயற்சியுடன் தனக்கு மரியாதை யளிக்கும் தன் அன்பு மனைவியாகிய, சுதக்ஷிணா தேவியைக் கண்டு களித்தான். (பொதுமையணி)

ஃ ॥ குமார ப்[3]ரித்யா குஶலை ரநுஷ்டி[1]தே
பி[3]ஷக்[2]பி[3] ராப்தை ரத[1] க[2]ர்ப[3] ப[3]ர்மிணி ।
பதிঃ ப்ரதீதঃ ப்ரஸ வோந்முகீ[1]ம் ப்ரியாம்
த[2]த[2]ர்ஶ காலே தி[2]வ மப்[3]ரிதா மிவ ॥ 12

(ப-ரை) அத[1]=பிறகு; குமாரப்ரித்யா=குழந்தை மருத்துவத்தில்; குஶலைঃ = நிபுணரான; ஆப்தைঃ = நட்புடைய; பி[3]ஷக்[2]பி[3]=மருத்துவர்களால்; க[2]ர்ப[3] ப[3]ர்மிணி=கருவைப் பேணுதல்; அநுஷ்டி[1]தே ஸதி=செய்யப்பட்டது; காலே=பத்தாம் மாதம்; (முதுவேனிற்குப் பிறகு); ப்ரஸவ=பெறுவதற்கு; உந்முகீ[1]=எதிர் நோக்கும்; ப்ரியாம்=அன்புமிக்க சுதக்ஷிணா தேவியை; அப்[3]ரிதா= முகில் சூழ்ந்த; தி[2]வமிவ=வானம் போன்று; பதிঃ=பர்த்தாவான திலீப மன்னன்; ப்ரதீதஸ்ஸந்=மகிழ்வுற்று; த[2]த[2]ர்ஶ=கண்டான்.

(க-ரை) கர்ப்பிணி மருத்துவத்தில் நிபுணர்களான தனது நண்பர்களைக் கொண்டு எல்லா மருத்துவமும் செய்துக்கொண்டிருக்க, பத்தாம் மாதம் முதுவேனிற் கடந்து மழைப் பொழியத் தக்கதாய் அடர்ந்த முகில்கள் சூழ்ந்துள்ள வானம்போன்று பிரசவ வேதனையோடிருந்த சுதக்ஷிணா தேவியை திலீபமன்னன் மகிழ்ச்சியோடு கண்டான். (உருவகவணி)

ஃ ॥ க்[2]ரஹைஸ்ததঃ பஞ்சபி[3] ருச்ச ஸம்ஸ்தி[1]தைঃ
அஸூர்யகை[2] ஸ்ஸூசித ப[3]ாக்[2]ய ஸம்பத[2]ாம் ।
அஸூத புத்ரம் ஸமயே ஶசீஸமா
த்ரிஸாத[3]நா ஶக்தி ரிவார்த்[1] மக்ஷயம் ॥ 13

(ப-ரை) ததঃ=பிறகு; ஶசீஸமா=சசீதேவிக்கு நிகரான; ஸா=அந்த சுதக்ஷிணா தேவி; ஸமயே=பத்தாம் மாதத்தில்; உச்ச=சிறப்பிடங்களில்; ஸம்ஸ்தி[1]தைঃ=உள்ளவையும்; அஸூர்யகை[2] = பரியோடு சேராதுமுள்ள; பஞ்சபி[3]ঃ = ஐந்தாகிய; க்ரஹைঃ=கிரகங்களாய்; ஸூசித=குறிக்கும்; ப[3]ாக்யஸம்பத[2]ம்= செல்வமிக்க; புத்ர=மகனை; த்ரி=வலிமைமிக்க மந்திரங்கள்; ஸாத[3]நா=கொடுக்கவல்ல; ஶக்திঃ=வலிமை; அக்ஷயம்=அழிவற்ற அர்த[1]மிவ=பொருள் போன்று அஸூத=பெற்றனர்.

(க-ரை) பிரபுக்கள் பொதுவாக அவரவர் பாக்கியத்தைப் பொருத்து இரண்டு மூன்று நான்கு கோள்கள் உச்சமான வீடுகளில்

உள்ளபோது பிறக்கின்றனர். அவ்வாறிருக்க; மிக உயர்ந்த பதவி யைக்குறிக்கும் ஐந்து கிரகங்களும் மறையாமல் மிக உச்சத்தில் உள்ள நல்லவேளையில்: அரசாட்சியானது பிறர் அடையப்படாத ஆலோசனைகளை, துணிவெனும் அரசியலின் அமைவின் உருவா கிய வலிமை எவ்வாறு மேன்மை மிக்க செல்வத்தை கொடுக்குமோ, அவ்வாறே சசீதேவிக்கு நிகரான சுதக்ஷிணாதேவி மாபெரும் பாக்கியவானாகிய மகனை ஈன்றாள். (மிகுதினவிற்சியணி)

சு॥ தி²ஶ: ப்ரஸேது² ர்மருதோ வபு ஸ்ஸுக²ா:
ப்ரத²க்ஷிணார்சி ர்ஹவி ரக்²நி ராத²தே² ।
ப²பூ³வ ஸர்வம் ஶுப³ஶம்ஸி தத்க்ஷணம்
ப³வேஹி லோகாப்³யுத²யாய தாத்²ரிஶீம் ॥ 14

(ப-ரை) தத்க்ஷணம் = அப்போது; தி²ஶ: = திக்குகள்; ப்ரஸேது: = தூய்மையாயிற்று; மருத: = வாயுக்கள்; ஸுகா = உல்லாச மாக; வபு: = வீசிற்று; அக்நி: = வேள்வி நாதனான அக்கினி; ப்ரத³க்ஷிண = வலஞ்சூழலும்; அர்சிஸ்ஸந் = கொழுந்துகளுடையவ னாய் ஹவி = நெய் முதலிய அவிகளை; ஆத²தே² = ஏற்றனர்; இத்த¹ம் = இதுபோல்; ஸர்வம் = எல்லாமும்; ஶுபஶம்ஸி = நன்மை யைக்குறிப்பன; ப²பூ³வ = ஆயிற்று; தத¹ாஹி = அதுபோலவே; தாத்²ரிஶீம் = அந்த ரகுமன்னனைப் பேயன்றவர்களின்; ப³வ: = பிறப்பானது; லோக = உலகத்தின்; அப்³யுத²யாய = மேன்மைக்கே; ப¹வதி = ஆகிறது.

(க-ரை) அப்போது திசை நான்கும் தூய்மையாய் ஒளித்தன. தென்றல் இதமாக வீசியது. அக்னியானவன் வலமாகச் சுழலும் கொழுந்துவிட்டுக் கொண்டு அவிகளை ஏற்றான். இம்மாதிரி உலக நன்மைக்கு தேவர்களின் மகிழ்ச்சியை அறிவிக்கும் எல்லா நல்ல அறிகுறிகளும் தென்பட்டன. (மாலைவிளக்கணி)

சு॥ அரிஷ்ட ஶய்யாம் பரிதோவிஸாரணா
ஸுஜந்மந ஸ்தஸ்ய நிஜேந தேஜஸா
நிஶீத² தீ²பாஸ் ஸஹஸா ஹதத்²விஷோ:
ப²பூ³வு ராலேக்¹ய ஸமர்பிதா இவ ॥ 15

(ப-ரை) அரிஷ்ட = பிரசவ விடுதியில்; ஶய்யாம் = படுக்கையை பரித: = எங்கும், விஸாரிணா = பரவும்; ஸுஜன்மந: = தகுந்த

பரப்புடைய; தஸ்ய = அந்த மகவின்; நிஜேன = தன்னுடைய; தேஜஸா = ஒளியில்; ஸஹஸா = சீக்கிரமாக; ஹத = போக்கப்பட்ட; த்[2]விஷஃ = ஒளியுள்ள; நீஶீத[3] = நள்ளிரவில்; தீபாஃ = விளக்குகள்; ஆலேக்[1]ய = சித்திரத்தில்; ஸமர்பிதா = வைக்கப்பட்டவை போன்று; ப[2]பூ[3]வ = ஆயிற்று.

(க-ரை) பிரசவ விடுதியில் படுக்கையில் வைக்கப்பட்டுள்ள சிசுவின், எங்கும் பரவிய ஒளியால் புறக்கணிக்கப்பட்ட விளக்குகள், சித்திரங்களில் காண்பவைப் போன்று ஆயிற்று. (மிகுதினவிற்சியணி)

சு ॥ ஜநாய ஶுத்[2]த[3]ாந்த சராய ஶம்ஸதே
குமார ஜந்மாம்ரிதஸம் மிதாக்ஷரம் ।
அதே[2]ய மாஸீத் த்ரயமேவ பூ[3]பதேஃ
ஶஶிப்ரப[3]ம் ச[1]த்ரமுபேச சாமரே ॥ 16

(ப-ரை) பூ[3]பதேஃ = திலீப மன்னனுக்கு; அம்ரித = அமுதுடன்; ஸம்மித = நிகரான; அக்ஷரம் = எழுத்துக்கள் உள்ள; குமாரஜந்ம = மகனின் பிறப்பை; ஶம்ஸதே = கூறும்; ஶுத்[2]த[3]ாந்த = அந்தப்புரத்தில்; சராய = வாழும்; ஜநாய = மக்களுக்கு; ஶஶி = சந்திரனின்; ப்ரப[3]ம் = ஒளியைப்போல் ஒளிக்க; ச[1]த்ரம் = குடையை; உபே[3] = இரண்டான; சாமரேச = சாமரங்களும்; த்ரயமேவ = மூன்றுமே; அதே[2]யம் = கொடுக்கக்கூடாதது; ஆஸீத் = ஆயிற்று.

(க-ரை) திலீப மன்னனுக்கு அமுதுக்கு நிகரான எழுத்துக்கள் உண்டாகும்படி மகனின் பிறப்பை அறிவித்த அந்தப்புறத்தில் வாழ் மகளிருக்கு வெண்குடையும் சாமரங்கள் இரண்டுமாக மூன்றுந் தவிர மற்றவை யாவும் அன்பளிப்பாக அளிவிக்கப்பட்டன. (ஏனெனில், அவை மூன்றும் அரசர்க்கு இன்றியமையாதிருக்க வேண்டியவை). (வீறுகோளணி).

சு ॥ நி[1]வாத பத்[2]ம ஸ்திமிதேந சக்ஷுஷா
ந்ரிபஸ்ய காந்தம் பிப[3]தஸ் ஸுதாநநம் ।
மஹோத[2]தே[3]ஃ பூரஇவேந்து[2] தர்ஶநாத்
கு[2]ரு ப்ரஹர்ஷஃ ப்ரப[2]பூ[3]வ நாத்மநு ॥ 17

(ப-ரை) நிவாத = காற்றில்லாத இடத்திலுள்ள; பத்ம = தாமரையைப் போல்; ஸ்தி[1]மிதேந = அசைவற்ற; சக்ஷுஷா =

கண்ணால்; காந்தம்=மனதுக்குகந்த; ஸூத ஆநநம்=மகனுடைய முகத்தை; பிப^{2}தஃ=பார்த்துக் கொண்டுள்ள; ந்ரிபஸ்ய=திலீப மன்னனுடைய; கு^{2}ருஃ=அதிகமான; ப்ரஹர்ஷ=மகிழ்ச்சி; இந்து^{2} த^{2}ர்ஶநாத் = சந்திரனைப்பார்த்தால்; கு^{2}ருஃ = அதிகான; மஹோத^{2}தே^{8}ஃ=பெருங்கடலை; பூர இவ=வெள்ளம் நிரப்புவது போல்; ஆத்மநி=உடலில்; நப்ரப^{2}பூ^{3}வ=பிடிக்காமற் போயிற்று.

(க-ரை) ஸமுத்திரன் முழுமதியைப் பார்த்தபோது பொங்கி நிற்பதுபோல், திலீபமன்னன் குமாரனின் மனங்கவர் முகத்தைக் கண்கொட்டாது, காற்றில்லா விடத்தில் தாமரையைப்போல் அசை வற்றக் கண்ணால் பார்த்தவண்ணம் ஆனந்தத்தில் மூழ்கி இருந் தான். (உவமையணி)

சி॥ ஸ ஜாதகர்மண்யதிலே தபஸ்விநா
தபோவநா தே^{2}த்ய புரோத^{8}ஸா க்ரிதே ।
தி^{2}லீபஸூநுர் மணி ராகரோ த்^{2}ப^{3}வஃ
ப்ரயுக்த ஸம்ஸ்கார இவாதி^{3}கம் ப^{2}பெ^{3}ள ॥ 18

(ப-ரை) ஸஃதி^{2}லீபஸூநுஃ=அந்த திலீப மன்னனுடைய மகன்; தபஸ்விநா=தவத்திற் சிறந்த; புரோத^{8}ஸா=வசிட்டரால்; தபோ வநாத்=தவம் செய்யும் காட்டிலிருந்து; ஏத்ய=வந்து; அகி^{1}லே= எல்லா; ஜாதகர்மணி=ஜாத கருமம் என்னும் சடங்குகள்; க்ரிதே ஸதி=செய்துக் கொண்டிருக்க; ப்ரயுக்த=செய்யப்பட்ட; ஸம்ஸ் காரஃ=சாணைப் பிடித்தல் முதலிய தொழில்களால் உண்டாகிய; ஆகரஃ=கனியில்; உத்^{2}ப^{8}வஃ=பிறந்த; மணிரிவ=ரத்தினங்களைப் போல்; அதி^{8}கம்=மிகவும்; ப^{2}பெ^{3}ள=மிளிர்ந்தான்.

(க-ரை) தபோவனத்திலிருந்து புரோகிதரான வசிட்ட முனிவர்தாம் வந்திருந்து அரசகுமாரனுக்கு ஜாதகருமம் முதலிய சடங்குகள் அனைத்தும் நடத்திக் கொடுத்ததால், அந்த மகவு வசிட் டர் மந்திர மகிமையால், சுரங்கத்திலிருந்து வெட்டி எடுத்துவந்த மணிக்குச் சாணை பிடித்தால் எவ்வாறு அதிகப் பிரகாசமாக இருக்குமோ அதுபோல் பிரகாசித்தான். (மென்மேலுயற்சியணி)

சு॥ ஸுக^{1}ஶ்ரவோ மங்க^{2}ள தூர்ய நிஸ்வநாஃ
ப்ரமோத^2 ந்ரித்தைஸ் ஸஹ வாரயோஷிதாம் ।
ந கேவலம் ஸத^{2}மநி மாக^{2}தீ^{8}ஃ பதேஃ
பதி வ்யஜ்ரிம்ப^{8}ந்த தி^{2}வௌகஸா மபி ॥ 19

(ப-ரை) ஸு^{1}ஶ்ரவாঃ = செவிக்கினிய; மங்க^{2}ள = பொலிவுக்குகந்த; தூர்ய = பல இசைக் கருவிகளின்; நிஸ்வநாঃ = ஒலிகள்; வாரயோஷிதாம் = வேசியர்களின்; ப்ரமோத^{2} = மகிழ்ச்சியாலான; ந்ரித்தைஸ்ஸஹ = நாட்டியத்துடன்; மாக^{2}தி^{3}பதேঃ = திலீப மன்னனுடைய; ஸத்^{3}மநி கேவலம் = வீட்டிலேயே; ந வ்யஜ்ரிம்ப^{3}ந்த = பரவவில்லை; கிம்து = மேலும்; தி^{2}வௌகஸாம் = தேவர்களின்; பத்^{1}யபி = ஆகாயத்திலும்; வ்யஜ்ரிம்ப^{3}ந்த = பரவியது.

(க-ரை) செவிக்கினிய மங்கள வாத்தியங்களும், கீதங்களும், வேசியர்களின் நாட்டியங்களும் திலீப மன்னனுடைய வீட்டில் மட்டுமன்றி ஆகாயத்திலும் (ஒலித்தன) செய்யப்பட்டது. (வினை முதல் விளக்கணி)

சு॥ ந ஸம்யத ஸ்தஸ்ய ப^{2}பூ^{3}வரக்ஷிது
த்^{2}விஸர்ஜயே த்^{2}யம் ஸுதஜந்ம ஹர்ஷிதঃ ।
ருணாபி^{3}த^{3}ாநாத்ஸ்வயமேவ கேவலம்
தத^{2}ா பித்ருணா முமுசேஸ ப^{2}ந்த^{3} நாத் ॥ 20

(ப-ரை) ஸுத = மகனுடைய; ஜந்ம = பிறப்பால்; ஹர்ஷிதஸ்ஸந் = மகிழ்ந்தவனாய்; யம் = யாரை; விஸர்ஜயேத் = விடுவிப்பானோ; ரக்ஷிது = காப்பாற்றுகிறவனாகிய; தஸ்ய = அந்த திலீப மன்னனுக்கு; ஸம்யதঃ = கட்டுண்ட குற்றவாளிகள்; நபூ^{2}வ = இல்லாமலிருந்தனர்; கிந்து = மற்றும்; தத^{2}ா = அக்காலத்தில்; ஸঃ = அந்த திலீப மன்னன்; பித்ருணாம் = தென்புலத்தாருடைய; ருண = கடன் என்னும்; அபி^{3}த^{3}ாநாத் = பெயருடைய; ப^{2}ந்த^{3}நாத் = கட்டிலிருந்து; ஸ்வயமேவ கேவலம் = தானொருவன் மட்டுமே; முமுசே = விடுதலைப் பெற்றான்.

(க-ரை) திலீப மன்னன் வெகுவாக அறனறிந்து அரசாண்டான். அதனால், திருடு முதலிய குற்றங்கள் நடந்ததில்லை. குடிகளில், எவரும் கைதுசெய்யப்படவில்லை. அதனால், தனக்குண்டாய மகப்பேறின் மகிழ்ச்சியால் கருணை கூர்ந்து சிறையிலிருந்து விடுவிக்கக்கூடிய குற்றவாளிகள் ஒருவருமில்லை. அதற்குப் பதிலாக, தானே தனக்கு மகன் பிறந்ததால், தென்புலத்தாரின் கடனிலிருந்து, விடுவித்துக் கொண்டான். (முறையிலுயர்வு நவிற்சியணி)

சு ॥ ஶ்ருதஸ்ய யாயாத^{2}ய மந்த மர்ப^{3}க
ஸ்தத^1ா பரேஷாம் யுதி^{3}சேதி பார்தி^{1}வஃ ।
அவேக்ஷ்ய த^3ாதோர் க^{2}மநார்த^1 மர்த^{1}வி
ச்சகார நாம்நா ரகு^{3}மாத்ம ஸம்ப^{3}வம் ॥ 21

(ப-ரை) அர்த^{1}வித் = சொற்பொருளை தெரிந்தவனாகிய; பார்தி^{1}வஃ = திலீப மன்னன் அயம் = இந்த; அர்ப^{3}கஃ = குழந்தை; ஶ்ருதஸ்ய = நூல்களின்; அந்தம் = கரையை; யயாத் = அடைந்தவனாகி; க^{2}மநார்த^{1}ம் = வரும்பொருளை; அவேக்ஷ்ய = ஆலோசித்து ஆத்மஸம்ப^{3}வம் = தன் மகனை; ரகு^{2}ம் = ரகுவென்னும்; நாம் நா = பெயர்சூட்ட; சசார = செய்தான்.

(க-ரை) சொல்லின் பொருளை யறிந்த திலீப மன்னன் தன் மகன் நூலறிவும், பகை வெற்றியும் அடைவானெனத் தெரிந்து அவனுக்கு அப்பொருள் அடங்கப்பெற்ற 'ரகு^{3}' என்ற பெயர் சூட்டினான். (காரணமாலையணி)

சு ॥ பிதுஃ ப்ரயத்நா த்ஸ ஸமக்^{2}ர ஸம்பத^{2}ஃ
ஶுபை^{3}ஶ் ஶரீராவ யவைர் தி^{2}நேதி^{2}நே ।
புபோஷ வ்ரித்^{2}தி^{3}ம் ஹரித^{2}ஶ்வ தீ^{2}தி^{3}தே
ரநுப்ரவேஶா தி^{2}வ ப^3ாலசந்த்^{2}ரமாஃ ॥ 22

(ப-ரை) ஸஃ = அந்த ரகுமகாராஜன்; ஸமக்^{2}ர ஸம்பத^{2}ஃ = பரிபூரணமான செல்வமுள்ளவனாய்; பிதுஃ = தந்தையாகிய திலீப மன்னனுடைய ப்ரயத்நாத் = முயற்சியால்; ஶுபை^{3}ஃ = அழகான; ஶரீர = உடலின்; அவயவைஃ = உறுப்புகளால்; ஹரித^{2}ஶ்வ = பரிதியின்; தீ^{2}தி^{3}தேஃ = சுடர்களை; அநுப்ரவேஶாத் = ஒட்டி நுழைவதால்; ப^3ாலசந்த்^{2}ரமா இவ = இளமதியைப்போல்; தி^{2}நேதி^{2}நே = நாள்தோறும்; வ்ரித்^{2}தி^{3}ம் = வளர்தல்; புபோஷ = பேணினான்.

(க-ரை) ரகுமன்னன் சகல சம்பத்துக்களுமுடைய தன் தகப்பனாரான திலீப மன்னனுடைய பேணுதலால், அழகான உடலுறுப்புகள் கொண்டுள்ளவனாய், மதியின் வளர்பிறை ரவியின் சுடர்களால் நாள்தோறும் வளர்வது போன்று வளர்ந்து வந்தான். (நிகரெடுத்து காட்டுவமையணி)

சு॥ உமாவ்ரிஷாங்கௌ ஶரஜந்மநா யத^1ா
யத^1ா ஜயந்தேந ஶசீ புரந்த^{3}ரௌ ।

தத[1]ா ந்ரிபஸ்ஸாச ஸுதேந மாக[2]தீ[3]
நநந்த[2]து ஸ்தத் ஸத்[2]ரிசேநதத்ஸமௌ ॥ 23

(ப-ரை) உமாவ்ரிஷாங்கௌ = பார்வதியும் பரமேசுவரனும்; சரஜந்மநா = குமாரஸ்வாமியால்; யத[1]ா = எவ்வாறு; நநந்த[2]து: = மகிழ்ந்தனரோ; சசீ புரந்த[2]ரௌ = சசீதேவியும் இந்திரனும்; ஜயந்தேந = ஜயந்தன் என்னும் மகனால்; யத[1]ா = எவ்வாறு; நநந்த[2]து: = மகிழ்வுற்றனரோ; தத[1]ா = அவ்வாறு; தத்ஸமௌ = அந்த பார்வதீபரமசிவன் சசீ தேவேந்திரர்கள் போல் நிகரான; ஸா = அந்த; மாக[2]தீ[3] = சுதக்ஷிணா தேவியும்; ந்ரிப: ச = திலீப மன்னனும்; தத் = அந்த குமரன் ஜயந்தர்கள் போல்; ஸத்ரிசேந = நிகராய; ஸுதேந = மகனால்; நநந்த[2]து: = மகிழ்ந்தனர்.

(க-ரை) பார்வதி பரமசிவனார்களும், சசியும் தேவேந்திரர் களும் முறையே அவர்களின் மகன்களாகிய முருகன், ஜயந்தன் களால் எவ்வாறு மகிழ்ந்தனரோ அதேபோல், அவர்களுக்கு நிகரான சுதக்ஷிணா திலீபர்கள் அந்த தேவ மகன்களுக்கு நிகரான தம் மகனுடன் மகிழ்ந்தனர். (நிகர்தொடர்முழுதுவமையணி)

சு॥ ரத[1]ாங்க[2] நாம்நோ ரிவ ப[3]ாவ ப[2]ந்த[3]நம்
ப[2]பூ[3]வ யத் ப்ரேம பரஸ்ப ராச்ரயம் ।
விப[3]க்த மப்யேக ஸுதேந தத்தயோ:
பரஸ்பரஸ்யோபரி பர்யசீயத ॥

(ப-ரை) ரத[1]ாங்க[2] நாம்நோரிவ = சக்ரவாளம் என்னும் புட் களின் ஆண் பெண்ணினம் போன்று; தயோ: = அந்த சுதக்ஷிணா திலீபர்களுக்கு; ப[3]ாவப[2]ந்த[2]நம் = மனதையீர்க்கும்படியான; பரஸ் பராச்ரயம் = ஒன்றோடொன்றொத்த; யத் = எந்த; ப்ரேம = அன் பானது ப[2]பூ[3]வ = ஆயிற்றோ; தத் = அந்த நட்பு; ஏகா = ஒருவரான; ஸுதேந = மகனால்; விப[3]க்தமபி = பிரிக்கப்பட்டதாயினும்; பரஸ்பரஸ்ய = ஒருவர்க்கொருவரின்; உபரி = மீதும்; பர்யசீயதே = வளர்ந்தது.

(க-ரை) சுதக்ஷிணா தேவியும் திலீபமன்னனும் ஒருவரை மற்றவர் இடையறாது நினைத்துக் கொண்டு மிகுந்த அன்பு கொண் டிருந்தனர். அவர்கள் ஒரே மகனான ரகுமன்னனிடம் கொண்ட மிகுந்த அன்பானது அவர்களிடையே இருந்துவந்த அன்பைக் குறைத்துவிடவில்லை. (கருத்துடையடையணி)

சு ॥ உவாச தா³த்ர்யா ப்ரத²மோதி³தாநிம்
த்யயௌ ததீ³யா மவலம்ப்³ய சாங்கு³ளிம் ।
அபூ⁴ச்ச நம்ரஃ ப்ரணிபாத ஶிக்ஷயா
பிதுர்முத³ம் தேந ததாந ஸோऽர்ப⁴கஃ॥ 25

(ப-ரை) ஸஃ = அந்த; அர்ப⁴க = குழந்தை; தா⁴த்ர்யா = செவிலித் தாயால; ப்ரத²ம = முதலில்; உதி³தாநிம் = கற்பிக்கப்பட்ட சொற்களை; உவாச = சொன்னான்; ததீ³யாம் = அந்த செவிலித் தாயினுடைய; அங்கு³ளிம் = விரலை; அவலம்ப்³ய = பிடித்துக் கொண்டு; யயாச = நடந்து வந்தான்; ப்ரணிபாத = வணங்குதல் பற்றிய; ஶிக்ஷயா = கற்பித்தலினால்; நம்ரஃ = வணக்கம் செலுத்து தல்; அபூ⁴தி³திசயத் = ஆனான் என்பது எதுவுண்டோ; தேந = அக்காரணத்தால்; பிதுஃ = தகப்பனாரன திலீப மன்னனுக்கு; முத³ம் = மகிழ்ச்சியை; ததாந = பரவச் செய்தான்.

(க-ரை) அக்குழந்தை செவிலித் தாயால் கற்பிக்கப்பட்ட சொற்களை உச்சரித்துக்கொண்டும்; அவளின் விரல்களைப் பிடித்துக்கொண்டு நடக்கவும், தாய் தந்தை ஆசான்களுக்கு வணக்கம் செலுத்தவும் கற்றான். இவற்றைக் கண்ணுற்ற தந்தை யாகிய திலீப மன்னன் மிகுந்த மகிழ்வெய்தினான். (பொதுமையணி)

சு ॥ தமங்க மாரோப்ய ஶரீரயோக³ஜை
ஸ்ஸுகை²ர் நிஷிஞ்சந்த மிவாம்ரிதம் த்வசி ।
உபாந்த ஸம்மீலித லோசநோ ந்ரிப꞉
சிராத் ஸுதஸ்பர்ஶ ரஸஜ்ஞதாம் யயௌ ॥ 26

(ப-ரை) ஶரீர = உடலின்; யோக³ = சம்மந்தமாக; ஜைஃ = பிறந்த; ஸுகை²ஃ = சுகங்களால்; த்வசி = தோலில்; அமிரிதம் = அமுதத்தை; நிஷிதஞ் சம் இவஸ்தி²தம் = மொழிவதுபோல் தோன்றும்; தம் = அக்குமாரனை; அங்கம் = தொடைமீது; ஆரோப்ய = ஏற்றிக்கொண்டு; உபாந்த = அருகிலுள்ள இடங்களில்; ஸம்மீலித = சுமக்கப்பட்ட; லோசநஸ்ஸந் = கண்களுடையவனாய்; சிராத் = வெகுகாலம்; ஸுத = மகனுடைய; ஸ்பர்ஶ = தொடுதலினால்; ரஸ = உணர்வை; ஜ்ஞதாம் = உணர்ந்தவனுடைய ஞானத்தை; யயௌ = அடைந்தான்.

(க-ரை) அன்பால் தொடுமளவில் அமுதுபோன்று தோன்றும் உடலுடைய மகனை வெகுகாலம் குழந்தை இல்லாதிருந்த திலீப

மன்னன் தன் தொடைமீது வைத்துக்கொண்டு, மகனை யெடுத்துக் கொள்வதால், உண்டான மகிழ்ச்சியை கண்கள் மூடிக்கொண்ட வனாய் அனுபவித்தான். (பாதி கண்கள் மூடுதலானது பேரா னந்த்தின் குறிப்பாகும்). (நினைப்பணி)

சு ॥ அமம்ஸ்த சாநேந பரார்த்[1]ய ஜந்மநா
ஸ்தி[1]தே ரபே[3]த்தா ஸ்தி[1]திமந்த மந்வயம் ।
ஸ்வமூர்தி பே[3]தே[2]ந கு[2]ணாக்[2]ர வர்திநா
பதிঃ ப்ரஜாநா மிவ ஸர்க[3] மாத்மநঃ ॥ 27

(ப-ரை) ஸ்தி[1]தேঃ=மரியாதைக்கு; அபே[3]த்தா=ஆள்பவ னாகிய; ஸঃ=அந்த திலீப மன்னன்; பர்யார்த[1]=மேன்மையான; அந்வயம்=வம்சத்தை; ப்ரஜாநாம்=மக்களுக்கு; பதிঃ=பிரபுவான; கு[2]ண=சத்துவம் முதலிய குணங்களிலும்; வித்தை வினயங்களிலும்; அக்[2]ரவர்திநா = முதலில் நடந்த; ஸ்வ = தன்னுடைய; மூர்திபே[3]தே[2]ந=அவதாரவிசேடமாய விஷ்ணுவால்; ஆத்மநঃ= தன்னுடைய; ஸ்ர்க[2]மிவ=ஆக்கலைப் போன்று; ஸ்திதி மந்தம்= நிலையுள்ளதாக; அமம்ஸ்த=எண்ணினான்;

(க-ரை) பிரஜாதிபதியாகிய பிரமன் சத்துவகுணம் மிகுந்த வனாய் தன் அவதாரமாயுள்ள விஷ்ணுவால் தன்னுடைய படைப்பு காக்கப்படுகிறதென்று எண்ணுவதுபோல் உலகவழக்கிற்கு எதிராக திலீப மன்னன், வரத்தின் மகத்துவத்தால், நல்லோரையில் உத்தம மான பிறவியெடுத்த தன்மகன் ரகுமகா ராஜனுக்கு உண்டாய அதிசயிக்கத் தக்க அடக்கம் முதலிய குணங்களால் தன் வம்சத் திற்குப் புகழைத் தேடித்தருவானென்று நிச்சயித்தான். (உவமை யணி)

சு ॥ ஸ வ்ரித்தசௌலঃ சலகாக பக்ஷঃ
அமாத்ய புத்ரைஸ் ஸவயோபி[3] ரந்விதঃ ।
லிபேர் யத[1]ாவத் க்[2]ரஹணேநவாங்மயம்
நதீ[2]முகே[1] நேவ ஸமுத்[3]ர மாவிஶத் ॥ 28

(ப-ரை) வ்ரித்த சௌலঃ = செய்யப்பட்ட சௌலமென்னும் கிரிகை (காதணிவிழா)வுடைய; ஸঃ= அந்த ரகுமன்னன்; சல= அசைகின்ற; காகபக்ஷঃ=தலைமுடியுடையவ[2]னும்; ஸவயோபி[3]= தன் வயதுக்குச் சமமான வயதுள்ள நண்பர்களான; அமாத்ய புத்ரைঃ=அமைச்சர்களின் மைந்தர்களோடு; அந்விதஸ்ஸந்=

கூடினவனாய்; லிபே:=ஐம்பதெழுத்துக்களின் எழுதும் பயிற்சி; ய[1]ாவத க்[2]ரஹணேந=நன்கறிந்து; பயின்றதால்; வாங்மயம்= சொற்றொகுப்பை; நதீ[2]=ஆற்றின்; முகே[1]ந=கழிமுனையால்; கஶ்சித்=ஏதோ ஒரு (முதலை முதலிய நீர்வாழ்) பிராணி; ஸமுத்[2]ரம் இவ=கடல்போன்று; ஆவிஶத்=பிரவேசித்தது.

(க-ரை) ரகுமன்னன் காதணி முதலிய சடங்குகள் செய்வித்த பிறகு, அசையும் தலைமுடியுடன் சமவயதுடைய மந்திரிகளுடைய பிள்ளைகளுடன் கூடி வாசித்துக் கொண்டுள்ள அவனுக்குச் சொற்றொகுப்புக்கள் யாவும் ஆற்றின் கழிமுகத்திலிருந்து நீர்வாழ் முதலை முதலான பிராணிகள் கடலுக்குள் எளிதில் பிரவேசிப்பது போல், அறிந்துக் கொண்டான். (விரிவுவமையணி)

சு॥ அதே[1]ாபநீதம் விதி[3]வத்[2] விபஶ்சிதோ
விவிந்யு ரேநம் கு[2]ரவோ கு[2]ருப்ரியம் ।
அவந்த்[3]ய யத்நாஶ்ச ப[2]பூ[3]வ ரத்ரதே
க்ரியாஹி வஸ்தூய ஹிதா ப்ரஸீத[3] ॥ 29

(ப-ரை) அத[1]=பிறகு; விதி[3]வத்=நூன்முறைப்படி; உபநீதம்=பூநூல் அணிவித்து; கு[2]ருப்ரியம்=ஆசான்களுக்கு மிகுந்த அன்புடன் நடப்பவனாய்; ஏநம்=இந்த ரகுமன்னனை; விபஶ்சித:=புலவர்களாய; கு[2]ரவ:=குரவர்கள்; அத்ர=இந்த ரகுவின்பட்சம்; அவந்த்[2]ய=வீணாகாத; யத்நாஶ்ச=பிரயத்னம் உள்ளவர்களாய்; பபூ[2]வ:=ஆனார்கள்; தத[2]ாஹி=அப்படி இருக்கையில்; க்ரியா=பயிலுதல்; வஸ்து=நல்லவனிடம்; உபாஹிதா ஸதி=பயன்படுத்தப்பட்டதாக; ப்ரஸீத[2]தி=பலிக்கிறது.

(க-ரை) பிறகு பூநூல் அணிவிக்கப்பட்டு, குருமார்களுக்கு அன்பு சுட்டும் ரகுமன்னனுக்கு வித்வான்களான உவாத்திகள் கல்வியை கற்பித்தனர். அவர்களின் முயற்சிகள் வீணாகாமல் மிகவும் பலனளித்து வந்தன. எவ்வாறெனின், நன்னிலத் திட்ட விதைகள் நற்பயனளித்தல் கண்கூடன்றோ, (மென்மேலுயற்சியணி)

சு॥ தி[3]யஸ் ஸமக்[2]ரைஸ் ஸகு[2]ணை ருத[2]ாரதீ[3]:
க்ரமாச் சதஸ்ரஶ் சதுரர்ண வோபமா: ।
ததாரவித்யா: பவநாதி பாதிபி[2]:
தி[2]ஶோ ஹரித்[2]பி[3]ர்ஹரிதா மிவேஶ்வர: ॥ 30

(ப-ரை) உத³ார=மேலாய; தீ²:=புத்தியுள்ள; ஸ:=அந்த ரகுமன்னன்; ஸமக்³ரை:=முழுமையான; தி³ய:=புத்தியுடைய; கு³ணை:=சேவித்தல் முதலியகுணங்களால்! சதுரர்ணவை=நான்கு கடல்களே; உபமா:=உவமையாக உள்ளதும்; சதஸ்ர:=நான்காய; வித்³யா!=தருக்கம் முதலிய வித்தைகளும்; ஹரிதாம்=திக்கு களுக்கு; ஈஶ்வர:=பிரபுவான சூரியன்! பவந=காற்றை; அதிபாதிபி³:=மீறும்படியான; ஹரித்³பி³:=குதிரைகளால்; சதஸ்ர:=நான்காய; திஶஇவ=திக்குகள் போன்று; க்ரமாத்=முறையே; ததார=தாண்டினான்.

(க-ரை) திக்குகட்டுகு அதிபனாகிய சூரியன் நான்கு கடல்கள் போன்ற நான்கு திசைகளின், காற்றினை மிஞ்சும் வேகமுடைய தனது புரவிகளால் எவ்வாறு தாண்டுவானோ அதுபோல், நற்குணங்களின் குன்றாய் விளங்கும் ரகு சேவித்தல் முதலிய புத்தியும் குணங்களும், காற்றை மிஞ்சும் வேகம் அனைத்தையும் பயன்படுத்தி நான்கு வித்தைகள், தருக்காதி சாத்திரங்கள், ஆகிய வற்றைக் கடந்தான். (சிறப்பணி)

சு ॥ த்வசம் ச மேத்⁴யாம் பரித³ாய ரௌரவீ
மஶிக்ஷி தாஸ்த்ரம் பிதுரேவ மந்த்ரவத் ।
ந கேவலம் தத்³கு³ரு ரேகபார்தி¹வ:
க்ஷிதாவபூ⁸ தே³க து⁸நுர் த⁸ரோஃபிஸ: ॥ 31

(ப-டர) மேத்⁴யாம்=பரிசுத்தமான; ரௌரவீம்=மானைச் சார்ந்த; த்வசம்ச=தோலை; பரித³ாய அணிந்து; மந்த்ரவத்=மந்திரத்துடன் கூடிய; அஸ்த்ரம்=ஆக்னேயம் முதலிய=பாணங்களை; பிதுரேவ=தகப்பனாரைப் போலவே; அஶிக்ஷித=பயின்றான்; தத்³குரு³:=அந்த ரகுவின் தந்தையாகிய திலீப மன்னன்; ஏகபார்தி¹வ:=ஒரே அரசனாகி; நாபூ⁸த்=ஆகவில்லை; கிந்து=மேலும் என்னவெனில்;

(க-ரை) மேலும் ரகுமன்னன் கறுநிற மான்தோல் அணிந்து பிரம்மசாரியாய் மந்திரத்துடன் கூடிய ஆக்னேயம் முதலிய பாணங்களை விடும் கல்விகளை தந்தையாகிய திலீப மன்னனிடமே கற்றான். ஏனெனில், அந்த தீலீப மன்னன் அரசனாக இருந்ததே அல்லாது வில்வித்தையில் அப்போதிருந்த அத்துணைபேர்களைவிட நிபுணனாக இருந்தான். (தன்மை நவிற்சியணி)

சு ॥ மஹோக்ஷதாம் வத்ஸதரஸ் ஸ்ப்ரிஶந்நிவ
த்[2]விபேந்த்[2]ர ப[3]ாவம் கலப[3]ஶ் ஶ்ரயந் நிவ ।
ரகு[2]ঃ க்ரமா த்[2]யௌவநபி[3]ந்ந ஶைஶவঃ
புபோஷ காம்பீ[3]ர்ய மநோஹரம் வபுঃ ॥ 32

(ப-ரை) ரகுঃ = ரகுமன்னன்; க்ரமாத் = முறையே; யௌவந = இளம்பருவத்தால்; பி[3]ந்ந = போக்கிய; ஶைஶவஸ்ஸந் = குழந்தைப் பருவமுடையவனாய்; மஹோக்ஷதாந் = பெருங் காளைப்பருவத்தை; ஸ்ப்ரிஶந் = அடைந்த; வத்ஸதர இவ = கன்றுபோலும்; த்விபேந்த்[2] ரபா[3]வம் = பெரிய யானைப் பருவம்; ஶ்ரயந் = அடைந்த; கலப[3] இவ = யானைக்குட்டி போலும்; காம்பீ[3]ர்யமநோஹரம் = சபல பாவனையால் மனதைக் கவரும் அழகான; வபுঃ = உடலை; புபோஷ = பேணினான்.

(க-ரை) பிறகு ரகுமன்னன் இளம் பருவமடைந்து பேரேறு போன்று, பெரிய கரியைப் போலும் பருவமடைந்து, கெட்டச் செய்கைகள் யாதுமின்றி, மிக கம்பீரமும், நல்ல அழகும் உள்ள உடல் உடையவன் ஆனான். (தன்மை நவிற்சியணி)

சு ॥ அத[1]ாஸ்ய கோ[2]தாந விதே[3] ரநந்தரம்
விவாஹ தீ[2]க்ஷாம் நிர்வர்த யத்[2]கு[2]ருঃ ।
நரேந்த்[2]ர கந்யாஸ் தமவாப்ய ஸத்பதிம்
தமோ நுத[3]ம் தக்ஷஸுதா இவாப[2]பு[3]ঃ ॥ 33

(ப-ரை) கு[2]ருঃ = தந்தையாகிய திலீப மன்னன்; அஸ்ய = இந்த ரகு மன்னனுக்கு; கோ[2]த[2]ாந = பசுவை நன்கொடையாக அளித்தல் என்னும் கிரிகை; விதே[3]ঃ = செய்வதைவிட; அநந்தரம் = பிறகு; விவாஹ = திருமண; தீக்ஷாம் = விரதத்தை; நிவர்தயத் = நிறைவேற்றப்பட்டான்; அத[1] = பிறகு; நரேந்த்[2]ரகந்யாঃ = அரச கன்னியர்கள்; தம் = அந்த ரகுமன்னனை; தக்ஷஸுதாம் = ரோகிணி முதலிய விண்மீன்கள்; தமோநுத[3]மிவ = சந்திரனைப்போல்; ஸத்பதிம் = நல்ல கணவனாக; அவாப்ய = அடைந்து; ஆப[2]பு[3]ঃ = மிளிர்ந்தான்

(க-ரை) தந்தையாகிய திலீப மன்னன் ரகுமன்னனுக்கு கோதானத்துடன் கூடிய திருமணத்தை முடித்து வைத்தான். அரச கன்னியர்களாகிய அம்மணப் பெண்கள் நல்ல கணவனை அடைந்து ரோகிணி முதலிய விண்மீன்கள் சந்திரனைக் கணவனாக அடைந்ததுபோல் மகிழ்ந்தனர். (நிரநிறையணி)

சு ॥ யுவா யுக²வ்யாயத பாஹுர்ம்ஸல:
கவாடவக்ஷா: பரிணத்²த³ கந்த³ர: ।
வபு: ப்ரகர்ஷா த²ஜயத்² கு²ரும் ரகு²:
தத¹ாऽபி நீசைர் விநயா த²த்²ரிஶ்யத ॥ 34

(ப-ரை) யுவா = இளம் பருவத்தனனாகிய; யுக² = நுகத் தடியைப் போன்ற; வ்யாயத = நீண்ட; ப²ாஹு: = தோள்களுடைய வனும்; அம்ஸல: = பருத்தவனும்; கவாட = கதவைப்போன்ற; வக்ஷ: = மார்புடையவனும்; பரிணத்²த³ = விரிவான; கண்ட¹: = கழுத் துடையவனாகிய; ரகு³: = ரகுமன்னன்; வபு: = உடலின்; ப்ரகர்ஷாத் = அதிகத்தால்; கு²ரும் = தந்தையாகிய திலீப மன்னனை; அஜயத் = வென்றான்; தத¹ாபி = ஆயினும்; விநயாத் = அடக்கத்தால்; நீசை: = அற்பனாக; அத்²ரிஶ்யத் = காணப்பட்டான்.

(க-ரை) ரகுமன்னன் யௌவன முடையவன் ஆதலால், தந்தையாகிய திலீப மன்னனைவிட நீண்ட தோள்கள், விரிந்த மார்பு, பருத்த கழுத்து இவை பெற்றிருத்தலால், மேம்பட்டவ னாகவும், அடக்கம் கொண்டுள்ளதால், மிகவும் சொற்பமானவனா கவும் இருந்தான். அதாவது-தந்தையாகிய திலீபனைவிட யௌவ னத்தால் வலிமையுடையவனாக இருப்பதில் அதிகமாகவும், அடக்கம் காட்டுவதால் சொற்பமானவனாகவும் இருந்து வந்தான். (உவமை மற்றும் வாக்கியப் பொருட்காட்சியணி)

சு॥ தத: ப்ரஜாநாம் சிரமாத்மநா த்⁴ரிதாம்
நிதாந்த கு²ர்வீம் லகு³ இஷ்யதா து⁴ரம் ।
நிஸர்க² ஸம்ஸ்கார விநீத இத்யஸௌ
ந்ரிபேண சக்ரே யுவராஜ ஶப்²த ப⁴ாக் ॥ 35

(ப-ரை) தத: = பிறகு; ஆத்மநா = தன்னால்; சிரம் = வெகு காலமாக; த்⁴ரிதாம் = ஆண்டுவரப்பட்டதும்; நிதாந்த = மிகவும்; கு²ர்வீம் = அதிகமான; ப்ரஜாநாம் = மக்களுடைய; து⁴ரம் = காக்கும் பளுவையும்; லகு³இஷ்யதா = அற்பமாகச் செய்யப்போகும்; ந்ரிபேண = திலீப மன்னனால்; அஸௌ = இந்த ரகுமன்னன்; நிஸர்க² = சுபாவத்தாலும்; ஸம்ஸ்கார = நூல் பயின்றதாலும்; விநீத: = அடக்கமுள்ளவன்; இதி = என்பதால்; யுவராஜ = இளவரசன் என்னும்; ஶப்²த² = சொல்லை; ப⁴ாக் = அடைந்தவனாக; சக்ரே = செய்யப்பட்டான்.

(க-ரை) திலீப மன்னன் தான் வெகுகாலமாக செய்துவந்த குடிகளை ஆளும் முயற்சியை குறைத்துக் கொள்ளும் சுபாவத்தாலும், நூல்களைப் பயின்றதால் அடக்கமுடைய ரகுமன்னனுக்கு இளவரசு பட்டமளித்தான். (விதியணி)

சு॥ நரேந்த்[2]ர மூலாயதநா த[2]நந்தரம்
தத[2]ாஸ்பத[2]ம் ஶ்ரீர் யுவராஜ ஸம்ஜ்ஞிதம் ।
அக[3]ச்ச த[2]ம்ஶேந கு[2]ணாபி[3]லாஷிணீ
நவாவதாரம் கமலா தி[2]வோத்பலம் ॥ 36

(ப-ரை) கு[2]ண = அடக்கம் முதலிய குணங்களை அதாவது நறுமணத்தை; அபி[3]லாஷிணீ = விழையும்; ஶ்ரீ; = அரசெனும் இலக்குமி; நரேந்த்[2]ர = திலீப மன்னனெனும்; மூலாயதநாத் = முதலிடத்திலிருந்து; அநந்தரம் = அருகில் உள்ளவனும்; யுவராஜ ஸம்ஜ்ஞிதம் = இளவரசனெனும் பெயருடைய; தத் = அந்த ரகுவென்னும்; ஆஸ்பத[2]ம் = இடத்தை; கமலாத் = தாமரையிலிருந்து; நவ = புதிய; அவதாரம் = பிறப்புடைய; உத்[2]பல இவ = நீராம்பல் போல்; அம்ஶேந = பாகத்தால்; அக[3]ச்ச[1]த் = அடைந்தாள்.

(க-ரை) நறுமணத்தை விழையும் இலக்குமி மாலையில் வாடும் தாமரையிலிருந்து, குவளையை அடைவது போல்; அடக்கம் முதலிய குணங்களை விழையும் அரசெனுமிலக்குமி திலீபமன்னனிடமிருந்து பிறகுவரும் இளவரசனான ரகுமகாராஜனை அடைந்தனள். (நிரநிறையணி)

சு ॥ விப[3]ாவஸுஸ் ஸாரதி[3]நேவ வாயுநா
க[3]நவ்யபாயேந க[2]ப[3]ஸ்திமா நிவ ।
ப[2]பூ[3]வதே நாதிதராம் ஸுதுஸ்ஸஹஃ
கடப்ரபே[3]தே[2]ந கரீவ பார்தி[1]வஃ ॥ 37

(ப-ரை) ஸாரதி[3]நா = உதவியாகிய; வாயுநா = காற்றால்; விப[3]ாவ ஸுரிவ = அக்கினியைப் போல்; க[3]நவ்யபாயேந = கூதிர்ப் பருவத்தால்; க[2]ப[3]ஸ்திமாந் இவ = சூரியனைப் போன்றும்; கட = கன்னம்; ப்ரபே[3]தே[2]ந = உடைவதால்: கரீவ = யானையைப் போலும்; பார்தி[1]வஃ = திலீப மன்னன்; தேந = அந்த ரகு[3]மன்னனால்; அதிதராம் = மிகுந்த; ஸுது[2]ஸ்ஸஹ = சகிக்கக் கூடாதவன்;
ʼ ன்.

(க-ரை) வாயுவுடன் கூடிய அக்கினியும், முகில்கள் அடங்கியுள்ள கூதிர்க்காலத்து சூரியனும், மதநீர் சொரியும் யானையும் எவ்வாறு சகிக்க முடியாதவைகளாக இருக்குமோ அதுபோல், ரகுவுடன் கூடிய திலீபமன்னன் அசாத்தியனாக இருந்தான். (நிகரெடுத்துக் காட்டுவமையணி)

சு ॥ நியுஜ்ய தம் ஹோம துரங்க² ரக்ஷணே
த³நுர்த³ரம் ராஜஸுதை ரநுத்³ரிதம் ।
அபூர்ண மேகே ஶதக்ர தூபம :
ஶதம் க்ரதூநாம் அபவிக்⁸ந மாபஸ: ॥ 38

(ப-ரை) ஶதக்ரது = தேவேந்திரனை; உபம: = உவமையாகக் கொண்ட; ஸ: = திலீப மன்னன்; ராஜஸுதை: = அரசப்புதல்வர்களால்; அநுத்³ரிதம் = கூடி; த³நுர்த³ரம் = வில்லேந்தியுள்ள; தம் = அந்த ரகுமன்னனை; ஹோம = வேள்விக்குரிய; துரங்க² = குதிரைகளை; ரக்ஷணே = காப்பதில்; நியுஜ்ய = நியமித்து; ஏகேந = ஒரு வேள்வியால்; அபூர்ணம் = குறைந்த; க்ரதூநாம் = அசுவ மேதங்களின்; ஶதம் = நூறை; அபுவிக்⁸நம் யத¹ாதத¹ா = குறைபாடுகள் வாரா வண்ணம்; அப = அடைந்தான்.

(க-ரை) தேவேந்திரனுக்கு நிகரான திலீபமன்னன் அரசப் புதல்வர்களே பரிவாரங்களாக உள்ள ரகுமன்னனை வேள்விக்குரிய புரவிகளைக் காக்கும் வேலையில் நியமித்து ஒன்று குறைவான நூறு (தொண்ணூற்றொன்பது) அசுவமேத யாகங்களைச் செய்தான். (உவமை மற்றும் வீறுகோளணி)

சு ॥ தத: பரம் தேந மக¹ாய யஜ்வநா
துரங்க² முத்ஸ்ரிஷ்ட மநர்க²ளம் புந: ।
த³நுர்ப்³ரிதா மக்²ரத ஏவ ரக்ஷிணாம்
ஜஹார ஶக்ர: கில கூ²ட⁸ விக்ரஹ: ॥ 39

(ப-ரை) தத:பரம் = தொன்னூற்றொன்பது புரவிவேள்விகளும் செய்து முடித்த பிறகு; யஜ்வநா = முறைப்படி வேள்வி செய்த; தேந = அந்த திலீப மன்னனால்; மக²ாய = வேள்வி செய்ய; உத்ஸ்ரிஷ்டம் = விடப்பட்ட; அநர்க²ளம் = தடையற்ற; துரங்க²ம் = குதிரையை; த³நுர்ப்³ரிதாம் = வில்லேந்திய, ரக்ஷிணாம், காவலாளிகளின், அக்²ரதஏவ = முன்னாலேயே; ஶக்ர: = தேவேந்திரன்; கூ²ட⁸ = மறைந்த; விக²ரஹஸ்ஸந் = உடலுடன்; ஜஹாரகில = கவர்ந்தான்.

(க-ரை) பிறகு திலீப மன்னவன் மறுபடியும் நூறாவது அசுவமேத யாகம் செய்தற் பொருட்டு விடப்பட்டு அட்டியிலாது செல்லும் குதிரையை, அதைக் காக்கும் வில்லாளர்களுக்கெதிரிலேயே தேவேந்திரன் மறைந்த உடலுடையவனாக வந்து அதைக் கவர்ந்து சென்றுவிட்டான். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ விஷாத^{2} லுப்த ப்ரதிபத்தி விஸ்மிதம்
குமார ஸைந்யம் ஸபதி^{3} ஸ்தி^{1}தம் சதத்^{1}
வஶிஷ்ட தே^{3}நு ர்ச யத்^{2}ரிச்ச யாக^{2}தா
ஶ்ரித ப்ரப^{3}ாவ த^{3}த்^{2}ரிஶேஂத^{1} நந்தி^{1}நீ ॥ 40

(ப-ரை) தத் = அந்த; குமார = ரகுமன்னனின்; ஸைந்யம் = படைகள்; தத்க்ஷணம் = உடனடியாக; விஷாத^{2} = எண்ணிய எண்ணம் ஈடேறாது பங்கமடைந்ததால்; லுப்த = கடந்த; ப்ரதிபத்தி = செய்யக்கூடிய ஞானமுண்டாகியதாய்; விஸ்மிதம் ஸத் = வியப்புடன் கூடியதாய்; ஸ்தி^{1}தஞ்ச = இருந்ததாயிற்று; அத^{1} = பிறகு; ஶ்ருத = கேள்வியுற்ற; ப்ரப^{3}ாவ = மகத்துவமுடைய; யத்^{2}ரிச்சயா = தானாக; ஆக^{2}தா = வந்த; நந்தி^{2}னீ = நந்தினிஎன்னும் பெயருடைய; வஶிஷ்டதே^{3}நுர்ச = வசிட்டருடைய பசுவை; த^{2}த்ரு^{2}ஶே = பார்க்க நேர்ந்தது,

(க-ரை) ரகுமன்னனுடைய படைகள் தாமிழந்த புரவியைக் குறித்து மனங்கலங்கினவர்களாய் செய்வதறியாது வியப்புற்றிருந்தனர். அவ்வமயம் எப்பசுவினுடைய மகத்துவத்தை முன்பு அவர்கள் கேள்வியுற்றிருந்தனரோ அந்த நந்தினி என்னும் பெயருடைய வசிட்டரின் பசுவானது தானாகவே அங்கு வரலாயிற்று. (தொடர்பின்மையணி)

சு॥ தத^{2}ங்க நிஷ்யந்த^{2} ஜலேந லோசநே
ப்ரம்ரிஜ்ய புண்யேந புரஸ்க்ரிதஸ் ஸதாம் ।
அதீந்த்^{2}ரி யேஷ்வ ப்^{3}யுப பந்ந த^{2}ர்ஶநோ
ப^{2}பூ^{3}வ ப^{3}ாவேஷு திலீப நந்த^{2}நः ॥ 41

(ப-ரை) ஸதாம் = நன்மக்களால்; புரஸ்க்ரிதः = பூசை செய்யப்பட்ட; தி^{3}லீபநந்த^{2}நः = திலீபனுடைய மகனான ரகுமகாராஜாவின்; புண்யேந = தூய்மையால்; தத் = அந்த நந்தினி பசுவின்; அங்க = உடலுறுப்புகளிலிருந்து; நிஷ்யந்த^{2} = வெளிப்பட்ட திரவமெனும்;

ஜலேந=நீரால் (அதாவது மூத்திரத்தாலும்); லோசநே=கண்களை; ப்ரம்ரிஜ்ய=கழுவிக்கொண்டு; அதீந்த்[2]ரியேஷ்வபி=புலன்களை மீறினவனாயினும்; ப[3]ாவேஷு=பொருள்களில்; உபபந்ந=பிறந்த; த[2]ர்ஶந=கண்கூடாய் பார்க்கும் வல்லமையுடையவனாக; ப[2]பூ[3]வ=ஆனான்.

(க-ரை) ரகுமன்னன் புனிதப் பசுவின் மூத்திரத்தால் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, அதன் மகிமையால், மாந்தர் கண்களுக்கு அகப்படாத பொருள்கள் யாவும் அவன் கண்களுக்குத் தோன்றும் வல்லமையைப் பெற்றான். (எளிதின் முடிபணி)

சு ॥ ஸபூர்வதஃ பர்வத பக்ஷ ஶாதநம்
த[2]த[2]ர்ஶ தே[2]வம் நரதே[3]வ ஸம்ப[3]வஃ ।
புநஃ புநஃ ஸூத நிஷித்[2]த[3] சாபலம்
ஹரந்த மஶ்வம் ரத[1]ரஸ்மி ஸம்யதம் ॥ 42

(ப-ரை) நரதே[2]வ=திலீப மன்னனால்; ஸம்ப[3]வஃ=உண்டாய; ஸஃ=அந்த ரகுமன்னன்; புநஃ புநஃ=மேலும் மேலும்; ஸூத=தேரோட்டியான 'மாதலி' என்பவனால்; நிஷித்[2]த[3]=தடுக்கப்பட்ட; சாபலம்=வேகமாய் ஓடும்; ரத[1]=தேரின்; ரஸ்மி=வலிக்கயிற்றால்; ஸம்யதம்=கட்டப்பட்ட; அஶ்வம்=குதிரையை; ஹரந்தம்=கடத்திச் செல்லும்; பர்வத பக்ஷஶாதநம்=முன்பு மலைகளின் இறகுகளை வெட்டி வீழ்த்தியவன்; (தேவேந்திரன்); பூர்வதஃ=கீழ்த்திசையிற் செல்வதை; த[2]த[2]ர்ஶ=கண்டான்.

(க-ரை) தேவேந்திரன் தன் தேரோட்டியால் அந்தக் குதிரையை தன் தேரின் வலிக்கயிற்றால் தேருக்குக் கட்டி, கடத்திக் கொண்டு கீழ்த்திசையை நோக்கிச் செல்வதை ரகுமன்னன் கண்டான். (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ ஶதைஸ் தமக்ஷ்ணா மநிமேஷ வ்ரித்திபி[3]ர்
ஹரிம் விதி[3]த்வா ஹரிபி[3]ஶ்ச வாஜிபி[3]ஃ ।
அவோச தே[3]நம் க[2]க[2]நஸ்ப்ரிஶா ரகு[3]ஸ்
ஸ்வரேண தீ[3]ரேண நிவர்தயந் நிவ ॥ 43

(ப-ரை) ரகு[2]=ரகுமன்னன்; தம்=அந்த குதிரையைக் கொண்டு செல்கிறவனை; அநிமேஷவ்ரித்திபி[2]ஃ=கொட்டாத கண்கள்; ஶதைஃ=நூற்றுக்கணக்கானவற்றாலும்; ஹரிபி[3]ஃ=பச்சை

நிறமுள்ள; வாஜிபி³: ச=குதிரைகளாலும்; ஹரிம்=தேவேந்திரன் என்று; விதி³த்வா=அறிந்து; க²க²நஸ்ப்ரிஶா=ஆகாயம் பரவக் கூடிய; தீ³ரேண=கம்பீரமான; ஸ்வரேண=குரலுடன்; நிவர்த யந்நிவ=பின்னுக்குத் திருப்புகிறவன்போல்; ஏநம்=தேவேந்திரனை நோக்கி; அவோசத்=கூறினான்.

(க-ரை) அப்போது ரகுவானவன் குதிரையைக் கடத்திச் செல்வோன், கொட்டா இமைகளுடன் கூடிய ஆயிரங் கண்கள் உள்ளவனாகவும் இருப்பதால் தேவேந்திரனென வறிந்து, அவனைத் தடுப்பவன்போல் உரத்தக் குரலில் அவனை நோக்கி நவின்றான். (கரவு வெளிப்படுப்பணி)

சு ॥ மக¹ாம்ஶ ப³ாஜாம் ப்ரத¹மோ மநீஷிபி³:
தமேவ தேவேந்த்³ராஸத³ நிக²த்³யஸே ।
அஜஸ்ர தீக்ஷா ப்ரயதஸ்ய மத்²கு³ரோ:
க்ரியா விக³ாதாய கத¹ம் ப்ரவர்தஸே ॥ 44

(ப-ரை) ஹேதே³வேந்த்ர=ஓ, தேவேந்திரனே!=மநீஷிபி³:= அறிவாளிகளால்; த்வமேவ=நீயே; மக¹=வேள்விகளில்; அம்ஶ:= அவிப் பகுதிகளை; ப³ாஜாம்=உண்டுவரும் தேவர்களில்; ப்ரத¹ம:= முதல்வனாக; ஸத³ா=எப்போதும்; நிக²த்³யதே=சொல்லப் படுகின்றாய்; தத¹ாபி=அப்படி இருந்தும்; அஜஸ்ர=எப்போதும்; தீக்ஷா=யாக தீக்ஷையில்; ப்ரயதஸ்ய=நியமம் பெற்றுள்ள; மத்கு³ரோ:=என் தகப்பனாராகிய திலீப மன்னனுடைய; க்ரியா விக³ாதாய=வேள்வியைக் வெருக்க; கத¹ம்=எவ்வாறு; ப்ரவர் தஸே=நடந்துக்கொள்கிறாய்?

(ட-ரை) ஓ தேவேந்திரனே! வேள்விகளில் அவிஸ் பகுதிகளைப் புசிக்கும் தேவர்களில் நீயே முதலானவன் என்று சொல்லப் படுகிறாய். அப்படியிருக்க என் தந்தையார் செய்யும் வேள்வியை நீயே ஏன் கெடுக்க முயல்கிறாய்? (முரண் விளைந்தழிவணி)

சு ॥ த்ரிலோக நாதே³ந ஸத³ா மக¹த்³விஷ
ஸ்வயா நியம்யா நநு தி³வ்ய சக்ஷுஷா ।
ஸசேத் ஸ்வயம் கர்ம ஸுத³ர்ம சாரிணாம்
தவ மந்தராயோ ப³வஸி ச்யுதோ விதி³: ॥ 45

(ப-ரை) த்ரிலோக=மூவுலகங்கட்கும்; நாதே¹ந=தலைவனான; தி³வ்ய சக்ஷுஷா=ஞானதிருட்டி உடைய; த்வயா=

உன்னால்; மக¹த்²விஷஃ = வேள்விக்கு கெடுதி செய்வோர்; ஸத²ா = எப்போதும்; நியம்யா நநு = தண்டிக்கத் தக்கவர்களன்றோ? ஸஃ = அப்படிப்பட்ட; த்வம் = நீ; த³ர்மசாரிணா = அறத்தைக் கடைப் பிடிப்பவர்களின்; கர்மஸு = வேள்விகட்கு; ஸ்வயம் = சுயமாக (நீயாக)வே; அந்தராயஃ = கெடுதி செய்பவன்; ப³வஸிசேத் = ஆனாயாகில்; விதி³ஃ = கடமைகள்; ச்யுதஃ = வீழும்.

(க-ரை) மூவுலகங்கட்கும் தலைவனாகிய நீ, வேள்விக்குக் கெடுதி செய்வோர்களை ஞானக் கண்ணால் எப்போதும் அறிந்து தண்டிக்கவேண்டிய நீயே கடமைகளைச் சரிவர செய்து வருவோரின் வேள்விகட்கு கெடுதி செய்வயேல் அந்த கடமைகள் நின்றுபோமல்லவா? (ஏதுவணி)

சு ॥ தத³ங்க³ மக்³ர்யம் மக³வந் மஹாக்ரதோ
ரமும் துரங்க³ம் ப்ரதிமோக்து மர்ஹஸி ।
பத¹ஶ்ஶுசேர் த³ர்ஶயிதார ஈஶ்வரா
மலீமஸா நாத³த³தே நபத்²த³திம் ॥ 46

(ப-ரை) ஹே, மக³வந் = ஓ இந்திரனே! தத் = அதனால்; மஹாக்ரதே = அசுவமேத யாகத்திற்கு; அங்க³ம் = கருவியானதும்; அக்³ர்யம் = மேலானதும்; அமும் துரங்க³ம் = ஆகிய இப்புரவியை; ப்ரதிமோக்தும் = விட்டுவிட; அர்ஹஸி = தக்கவனாகின்றாய்; தத¹ாஸி = அதுசரி; ஶுசேஃ = தூய்மையான; பத¹ஃ = வழியை; த³ர்ஶயிதாரஃ = காண்பிக்கும்; ஈஶ்வரஃ = பெரியோர்கள்; மலீமஸாம் = கெட்ட; பத்²த³திம் = வழியை; நாத³த³தே = ஏற்கமாட்டார்கள்.

(க-ரை) ஓ, தேவேந்திரனே! அதனால், நீ பெரும் வேள்வியான அசுவமேத யாகத்தைச் செய்ய இன்றியமையாக் கருவியாகிய இப்புரவியை விட்டு விடுவாயாக. நல்வழியை நாடி, பிறர்க்கு வழி காட்டியாய் நிற்கும் பெரியோர்கள் கெட்ட வழியை நாடமாட்டார்கள். (வேண்டலணி)

சு॥ இதி ப்ரக³ல்ப³ம் ரகு³ணா ஸமீரிதம்
வசோ நிஶம்யாதி³பதிர் தி³வௌகஸாம் ।
நிவர்தயாமாஸ ரதம் ஸவிஸ்மயஃ
ப்ரசக்ரமே ச ப்ரதி வக்து முத்தரம் ॥ 47

(ப-ரை) இதி=இவ்வாறு; ரகு³ணா=ரகு²மன்னனால்; ஸமீரிதம்=கூறப்பட்ட; ப்ரக²ல்ப³ம்=கம்பீரமான; வச:=வார்த்தைகளை; நிஶம்ய=கேட்டு; தி²வௌகஸாம்=தேவர்கட்கு; அதி³பதி:=பிரபுவான தேவேந்திரன்; ஸவிஸ்மயஸ்ஸந்=வியந்தவனாய்; ரத²ம்=தேரை; நிவர்த்யாமாஸ=பின்னுக்குத் திருப்பினான்; உத்தரம்=பதிலை; ப்ரதிவக்தும்=திரும்பவும் சொல்ல; ப்ரசக்ரமே=தொடர்ந்தான்.

(க-ரை) இவ்வாறு ரகுமன்னவன் கூறிய கம்பீரமான சொற்களைக் கேட்ட இந்திரன் வியப்படைந்தவனாய் தன்னுடைய தேரை பின்னுக்குத் திருப்பி பதில் கூறத் தொடங்கினான். (நிகழ் வினவிற்சியணி)

சு॥ யத²ார்த²² ராஜந்ய குமார தத்தத²ா
யஶஸ்து ரக்ஷ்யம் பரதோ யஶோத³நை: ।
ஜக³த் ப்ரகாஶம் தத²ஶேஷ மிஜ்யயா
ப³வத்²கு³ருர் லங்க³யிதும் மமோத்யா ॥ 48

(ப-ரை) ஹேராஜந்ய குமார=ஓ, அரச குமாரனே! யத்=எந்த வாக்யத்தை; ஆத்த=சொல்கின்றாயோ; தத்=அவ்வாக்கியம்; தத²ா=அவ்வாறே; கிந்து=மற்றுமென்னவெனின்; யஶோத³ந:=புகழையே ஆக்கமாகக் கொண்டவர்களால்; பரத:=பகைவர்களால்; யஶ:=புகழ்; ரக்ஷ்யம்=காக்கப்படத் தக்கது; ப³வத்=உன்னுடைய; கு²ரு:=தந்தையான திலீப மன்னன்; ஜக²த்=உலகத்தில்; ப்ரகாஶம்=புகழுடையதும்; அஶேஷம்=அனைத்துமாய; மம=எனது; தத்=அந்த புகழை; இஜ்யா=வேள்வியால்; லங்க³யிதும்=மீறுவதற்கு; உத்²யத:=முயற்சித்தான்.

(க-ரை) அரசகுமாரனே! நீ சொன்னது சரியே. ஆனாலும், புகழையே ஆக்கமெனக் கருதி நடப்போர்கள் தங்களது புகழுக்கூறுதனைப் பிறர் விளைவிக்காமல் காத்துக்கொள்வார்கள். இது மிக அவசியம். உன் தந்தை உலகறிந்த என் புகழை இழிவுபடுத்த முயற்சித்தான். (பிரிதினவிற்சியணி)

சு॥ ஹரிர் யதை²க: புருஷோத்தமஸ் ஸ்மிரிதோ
மஹேஶ்வரஸ் த்ர்யம்ப²க ஏவ வாஸர: ।
தத²ா விது³ர் மாம் முநயஶ்ஶதக்ரதும்
த்²விதீய கா²மீ நஹி ஶப்³த³² ஏஷஸ: ॥ 49

(ப-ரை) யதா = எவ்வாறு; ஹரிঃ = விஷ்ணுவானவர்; ஏக ஏவ = ஒருவரே; புருஷோத்தமঃ = புருடோத்தமனாக; ஸ்மிரிதঃ = எண்ணப்படுகிறாரோ; யதா = எவ்வாறு; த்ர்யம்பகஏவ = ஈசனே, மஹேஶ்வரঃ = மகேசுவரனாக; ஸ்ம்ரித = எண்ணப்படுகிறாரோ; அபரঃ = மற்றொருவர்; ததா = அவ்விதம்; நஸ்மிரித = எண்ணப்படுவதில்லை; ததா = அதுபோல்; முநயঃ = முனிவர்கள்; மாம் = என்னை; ஶதக்ரதும் = நூறு வேள்வியனாக; விதுঃ = அறிகின்றனர்; நঃ = எங்களுடைய; ஏஷঃ = இந்த மூவிதமான; ஶப்தঃ = சொல்; த்விதீயகாம் = இரண்டாமவனை அடையக் கூடியது; நஹி = அன்று.

(க-ரை) எவ்வாறு விட்டுணுவைப் புருடோத்தமனென்றும், ஈசனை மகேசுவரனென்றும் சொல்லப்படுகிறதோ அவ்வாறே முனிவர்கள் என்னையும் 'ஶதக்ரது'—அதாவது - நூறு வேள்விகள் செய்தவன் என்பார்கள். இப்பெயர்கள் மூன்றும் முறையே எங்கள் மூவருக்கு மட்டும் உரியவை; மற்றவர்கட்குப் பொருந்தாது. (வாக்கியப் பொருட்காட்சியணி)

ரு॥ அதோऽயம் அஶ்வঃ கபிலாநு ஸாரிணா
பிதுஸ் த்வதீயஸ்ய மயாऽப ஹாரிதঃ।
அலம் ப்ரயத்நேந தவாத்ர மாநிதাঃ
பதம் பதவ்யாம் ஸகரஸ்ய ஸந்ததேঃ॥ 50

(ப-ரை) அதঃ = இதனால்; த்விதீயஸ்ய = உனது; பிதுঃ = தந்தையினுடைய; அயம் = இந்நூறாவதாகிய; அஶ்வঃ = குதிரை; கபில = கபிலரென்னும் முனிவரை; அநுஸாரிணா = அனுசரித்த; மயா = என்னால்; அபஹாரித = கடத்தப்பட்டது; அத்ர = இக்குதிரையில்; தவ = உன்க்கு; ப்ரயத்நேந = முயற்சி; அலம் = வேண்டாம்; ஸகரஸ்ய = சகரமா மன்னனின்; ஸந்ததேঃ = மரபினர்களின்; பதவ்யாம் = வழியில்; பதம் = அடிகளை; மாநித = வைக்காதே.

(க-ரை) இதனால், உன் தந்தையின் இந்நூறாவதாகிய புரவியை நான் கடத்திவந்தேன். இது சார்பாக நீயாதொரு முயற்சியும் செய்யவேண்டாம். ஏனெனில், முன்பு சகரமா மன்னனுடைய மகன்கள் வேள்வி புரவிக்காக கபில முனிவருக்குத் தொந்திரவு கொடுத்து நாசமடைந்ததுபோலாகிவிடும். (நிகரெடுத்துக்காட்டுவமையணி)

ஃ ॥ ததஃ ப்ரஹஸ்யாப ப[3]யஃ புரந்த[2]ரம்
புநர் ப[2]ப[3]ாஷே துரக[2]ஸ்ய ரக்ஷிதா ।
க்[3]ரிஹாண ஶஸ்த்ரம் யதி[2]ஸர்க[2]ஏஷதே
நக[1]லு வநிர்ஜித்ய ரகு[3]ம் க்ரிதீ ப[3]வாந் ॥ 51

(ப-ரை) ததஃ = பிறகு; துரக[2]ஸ்ய = குதிரைக்கு; ரக்ஷிதா = காவலான ரகுமன்னன்; ப்ரஹஸ்ய = சிரித்து; அபப[3]யஸ்ஸந் = அச்சமின்றி; புநஃ = மறுபடியும்; ஹே தே[2]வேந்த்[2]ர = ஓ, தேவர் கடங்கோனே! ஏஷஃ = இக்குதிரையை விடாததே; தே = உனக்கு; ஸர்கே[2]ாயதி = நிச்சயமானதாயின்; தர்ஹி = இப்போதே;ஶஸ்த்ரம் = ஆயுதத்தை; க்[3]ரிஹாண = ஏந்துவாயாக; ப[3]வாந் = நீ; ரகு[2]ம் = ரகுமன்னனை; அநிர்ஜித்ய = வெல்லாமலேயே; க்ரிதீ = நிறைவுற்றவனாக; நக[1]லு = ஆகமாட்டாய்.

(க-ரை) அப்போது குதிரையைக் காத்துவந்த ரகுமன்னன் சிரித்து, அச்சம் நீங்கியவனாய், தேவேந்திரனைக் கண்டு, ஓ, தேவராசனே! நீ இக்குதிரையை விடமுடியாதென்ற முடிவு செய்வாயாகில் நீ என்னுடன் போர் புரிந்து அல்லாது உன் எண்ணம் ஈடேறியதாக ஆகாது. (தன்குண மிகையணி)

ஃ ॥ ஸஏவ முக்த்வா மக[3]வந்த முந்முக[1]ஃ
கரிஷ்யமாணஃ ஸஶரம் ஶராஸநம் ।
அதிஷ்ட[1] த[2]ாலீட[3] விஶேஷ ஶோபி[3]நா
வபுஃ ப்ரகர்ஷேண விட[2]ம்பி[2] தே ஶ்வரஃ ॥ 52

(ப-ரை) ஸஃ = அந்த ரகுவரசன்; உந்முக[1]ஸ்ஸந் = எதிர் நின்று; மக[3]வந்தம் = இந்திரனை நோக்கி; ஏவம் = இவ்விதமாக; உக்த்வா = சொல்லி; ஶராஸநம் = வில்லை; ஸஶரம் = அம்புடன் கூடியதாக; கரிஷ்யமாண = செய்பவனாய்; ஆலீட[3] = வலதுகால் முன்வைத்து ஆயத்தம் செய்து; விஶேஷ = அதிகமான; ஶோபி[3]நா = மிளிர்கின்ற; வபுஃ = உடலின்; ப்ரகர்ஷேண = மேன்மையுடன்; விட[2]ம் பி[2]த = பின்பற்றப்பட்ட; ஈஶ்வரஸ்ஸந் = பரமேசனை உடைத்தவனாகி; அதிஷ்ட[1]த் = நின்றிருந்தான்.

(க-ரை) என்று கூறி, தேவேந்திரனுக்கெதிரில், வில்லேந்தி போர் செய்ய முயன்றவனாய் ஈசுவரனைப்போல் நின்றிருந்தான். (பொருட்காட்சியணி)

ச ॥ ரகே³ா ரவஷ்டம்ப³ மயேந பத்ரிணா
ஹ்ரிதி² க்ஷதோ கே²த்ரபி³த²ப்ய மர்ஷ: ।
நவாம்பு²த²ா நீக முஹூர்த லாஞ்ச¹நே
த³நிஷ் யமோக³ம் ஸமத²த்த ஸாயகம் ॥ 53

(ப-ரை) ரகே³ா: = ரகுமகாராஜனுடைய; அவஷ்டம்ப³மயேந = நிலையுள்ள; பத்ரிணா = அம்பினால்; ஹ்ரிதி² = இதயத்தில் = கே²த்ரபி³த் அபி = தேவேந்திரனும்; நவ = புதிய; அம்பு²த² = மேகங்களின்; அநீக = கூட்டத்திற்கு; முஹூர்த = கணநேரத்தில்; லாஞ்ச¹நே = சின்னமான; த³நுஷி = வில்லில்; அமோக³ = பழுதிலா; ஸாயகம் = அம்பை; நநுத³த்த = தொடுத்தான்.

(க-ரை) ரகுமன்னன் விடுத்த நிலைத்த பாணங்களால் மார்பைத் தாக்கப்பட்ட இந்திரன் கோபமுற்று, கணநேரம் புதிய முகில்களுக்கு அறிகுறியாகிய தனது வில்லை எடுத்து பழுதுபடாத தொரு பாணத்தை அதில் தொடுத்தான். (பொதுமையணி)

ச ॥ தி²லீப ஸூநோஸ் ஸ ப்²ரிஹத்² பு³ஜாந்தரம்
ப்ரவிஶ்ய பீ³மாஸுர ஶோணி தோசித: ।
பபாவநாஸ்வாதி²த பூர்வ மாஶுக²:
குதூஹலே நேவ மநுஷ்ய ஶோணித: ॥ 54

(ப-ரை) பீ³ம = அச்சமூட்டும்; அஸுர = அரக்கர்களின்; ஶோணித = ரத்தத்திய்; உசித: = அறிமுகமாய; ஸ: = அவ்விந்திரனால்; விடப்பட்ட; ஆஶுக²: = பாணம்; தி²லீபமாநே: = ரகு மன்னனுடைய; ப்²ரிஹத் = பெரிய; பு³ஜ = தோள்களின்; அந்தரம் = நடுவில் ப்ரவிஶ்ய = நுழைந்து; அநாஸ்வாதி²த பூர்வம் = இதற்குமுன் சுவைக்காத; மநுஷ்ய ஶோணிதம் = மனித ரத்தத்தை; குதூஹலேந = ஆர்வங் காட்டுவதுபோல்; பபௌ = குடித்தது.

(க-ரை) அச்சமூட்டும் அரக்கர்களின் ரத்தத்தைக் குடித்துப் பழகிய இந்திரனுடைய பாணமானது ரகுவின் அகன்ற மார்பில் நுழைந்து, முன்னெப்போதுமே சுவைத்திராத மனித ரத்த மெவ்வாறு இருக்குமோவென ஆர்வத்துடன் குடித்தது. (மிகை யொற்றுமை யுருவகவணி)

ரு ॥ ஹரே: குமாரோऽபி குமாரவிக்ரம
ஸ்ஸுர த்²விபாஸ்ப¹ாலந கர்கஶாங்கு²ளௌ ।

பு³ஜே ஶசீ பத்ரகவிஶேஷ காங்கிதே
ஸ்வநாம சிஹ்நம் நிசகா¹ந ஸாயகம் ॥ 55

(ப-ரை) குமார = முருகக் கடவுளின்; விக்ரமஃ = வீரத்துக்கு நிகரான; குமாரஃ அபி = ரகுமன்னனும்; ஸுரத்³விப = ஐராவதத்தின்; ஆஸ்ப¹ாலன = தட்டுவதால்; கர்கஶ - கடினமான; அங்கு³ளை = விரல்கள் உடைய; ஶசீ = சசீ தேவியின்; பத்ரகவிஶேஷஃ = மகரபத்திரம் முதலியவற்றின்; அங்கிதே = குறியுள்ளதாய் செய்யப்பட்ட; ஹரேஃ = தேவேந்திரனுடைய; பு³ஜே = தோள்களில்; ஸ்வ = தன்னுடைய; நாம = பெயரே; சிஹ்நம் = குறியாகவுள்ள; ஸாயகம் = பாணத்தை; நிசக¹ாந = நாட்டினான்.

(க-ரை) குமரனைப் போன்ற வீரமுடைய ரகுமகாராஜனும் ஐராவதமென்னும் யானையைத் தட்டுதலால் கடினமான தேவேந்திரனின் புயத்தில் தன்பெயர் அடையாளமுள்ள ஒரு பாணத்தை நாட்டினான். (விரியுவமையணி)

சு॥ ஜஹார சாங்யேந மயூர பத்ரிணா
ஶரேண ஶக்ரஸ்ய மஹாஶநி த்³வஜம் ।
சுகோப தஸ்மை ஸ ப்³ரிஶம் ஸுரஶ்ரியஃ
ப்ரஸஹ்ய கேஶவ்ய பரோபணாதி²வ ॥ 56

(ப-ரை) அந்யேவ = மற்றொன்றாய; மயூர பத்ரிணா = மயிலிறகுகளுடைய; ஶரேண = பாணத்தால்; ஶக்ரஸ்ய = தேவேந்திரனுடைய; மஹத் - மேன்மையான; அஶநி = வஜ்ராயுத உருவான; த்³வஜம் = கொடியை; ஜஹாரச = துண்டித்தான்; ஸஃ = அந்த தேவேந்திரன்; ஸுரஶ்ரியஃ = தேவர்களுடைய இலக்குமியின்; ப்ரஸஹ்ய = பலாத்காரமாக; கேஶஃ = மயிர்களின்; பரோபணாதி²வ = தரிப்பது போன்று; தஸ்மை = அந்த ரகுமன்னரிடம்; ப³ரிஶம் = மிகுந்த; சுகோப = கோபமுற்றான்.

(க-ரை) மேலும் அந்த ரகுமன்னன் மிகுந்த வலிமையுள்ள தேவேந்திரனுடைய கொடியை மயிலிறகுகளுடைய மற்றொரு பாணத்தால் வீழ்த்தினான். இதனால், தேவர்களுடைய இலக்குமியின் மயிர்களை பலாத்காரமாக தறித்தது போலாயிற்று. தேவராஜன் ரகுவின்மீது வெகுண்டான் (மிகைபெற்றுவமை உருவகவணி)

சு ॥ தயோருபாந்தஸ் தி¹த ஸித்²த³ ஸைநிகம்
க²ருத்மதா ஶீ விஷபீ³ம த³ர்ஶநைஃ ।

ப²பூ³வ யுத்²த³ம் துமுலம் ஜயைஷிணோ
ரதே¹ா முகை¹ ரூர்த்²வ முகை¹ஶ்ச பத்ரிபி³꞉ ॥ 57

(ப-ரை) ஜயைஷிணோ꞉=வெற்றியை விரும்பிய; தயோ꞉= அவர்கள் இருவரும் (இந்திரனும் ரகுவும்) க²ருத்மத்=கருடனைப் போல்; ஆஶீவிஷ=பாம்புகளைப் போலும்; பீ³ம=அச்சமூட்டும்; த²ர்ஶநை꞉=பார்வையுள்ள; அதே¹ாமுகை꞉=கீழ்நோக்கியவையும்; ஊர்த்³வ முக¹ஶ்சைவ=மேநோக்கியவையும் ஆகிய; பத்ரிபி³꞉= பாணங்களால்; உபாந்த=அருகில் உள்ள இடத்தில்; ஸ்தி¹த= நின்றிருக்கும் ஸித்²த³=தேவர்கள்; ஸைநிகம்=படைகள் உள்ளதும் துமுலம்=ஓசையுள்ள; யுத்²த³ம்=போர்; ப²பூ³வ = ஆயிற்று. (நடந்தது)

(க-ரை) ஒருவரையொருவர் வெல்ல வேண்டுமென்ற எண்ணங் கொண்டு இந்திரனும் ரகுவும் கருடனும் பாம்பும் போலுள்ள பாணங் களை ஒருவர் மீதொருவர் எய்தினர். தேவேந்திரனின் பாணங்கள் கீணோக்கியும், ரகுவின் அம்புகள் மேனோக்கியும் பரவியன. சமீபத்திலுள்ள தேவர்களும் படைகளும் உடைய பெரும் போரா யிற்று. (உவமையணி)

௬ ॥ அதிப்ரப²ந்த³ ப்ரஹிதாஸ்த்ர வ்ரிஷ்டிபி³
ஸ்தமாஶ்ரயம் து²ஷ்ப்ர ஸஹஸ்ய தேஜஸ꞉ ।
ஶஶாக நிர்வாபயிதும் ந வாஸவஸ்
ஸ்வத ஶ்ச்யுதம் வஹ்நி மிவாத்³பி³ ரம்பு²த²꞉ ॥ 58

(ப-ரை) வாஸவ꞉=தேவராஜன்; அதிப்ரப²ந்த] = மிகவும் இடைவிடாது; ப்ரஹித=பயன் படுத்தப்பட்ட; அஸ்த்ர = ஆயுதங் களின்; வ்ரிஷ்டிபி³꞉=மழையால்; துஷ்ப்ரஹஸ்ய=துக்கத்தாலும் சகிக்க 'முடியாத; தேஜஸ꞉=பராக்கிரமத்திற்கு; ஆஶ்ரயம்=இருப் பிடமாகிய; தம்=அந்த ரகுமன்னனை; அம்புத²꞉=நீரினாலான; ஸ்வத꞉=தன்னாலும்; ச்யுதம்=வெளிப்பட்ட; வஹ்நிமிவ=அக்கி னியைப் போல்; நிர்வாபயிதும்=தணிக்கச் செய்ய; நஶஶாக= வல்லமையற்றுப் போனான்.

(க-ரை) தேவேந்திரன் இடைவிடாது தொடுத்துவிடும் பாணங் களின் தொடர்ச்சியால் எம்மாத்திரமும் சகிக்க முடியாத பிரதாபங் கொண்ட தன் னம்சத்தாலுண்டான ரகுமன்னனை, மேகமானது தண்ணீரால் தன்னுள்ளிருந்து வெளிப்பட்டு விழுந்த இடியை

எவ்வாறு தணிக்க முடியாதோ அவ்வாறு வெல்ல முடியாது போயிற்று. (விரியுவமையணி)

சு ॥ ததஃ ப்ரகோஷ்டே[1] ஹரி சந்த[2]நாங்கிதே
ப்ரமத்[1]யமா நார்ணவதீ[3]ர நாதி[2]நீம் ।
ரகு[3]ஃ ஶஶாங்கார்த[1] முகே[1]ந பத்ரிணா
ஶராஸநஜ்யா மலுநாத்[2] பி[2]டௌஜஸஃ ॥ 59

(ப-ரை) தத[2]ஃ = பிறகு; ரகு[3]ஃ = ரகுமன்னன்; ஹரிச[2]ந்தந = நற்சந்தனத்தால்; அங்கிதே = பூசப்பட்டுள்ள; ப்ரகோஷ்டே = முழங்கைக்குக் கீழ்; ப்ரமத்[2]யமாந = கடையப்பட்ட; அர்ணவ = கடலைப் போல்; தீ[3]ர = கம்பீரமாய்; நாந்தி[2]நீம் = ஒலிக்கும்; பிடௌஜஸஃ = தேவேந்திரனுடைய; அர்த[1] = பாதிமதிபோன்ற; முகே[1]ந = நுனி உடைய; பத்ரிணா = பாணத்தால்; அலுநாத் = அறுத்தான்.

(க-ரை) பிறகு ரகுமன்னன் தன் பாதிமதி போன்ற (அர்த்த சந்திர) பாணத்தால், தேவேந்திரனுடைய சந்தனம் பூசிய முழங்கைகளுக்குக் கீழ், கடையப்பட்ட கடல் போன்று அவ்வப்போது இழுப்பதால் ஏற்பட்ட பேரொலி செய்துக் கொண்டு இருந்த அவனது வில்லின் நாணை அறுத்துவிட்டான். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ஸ சாப முத்ஸ்ரிஜ்ய விவ்ரித்[2]த[3] மஸ்த்ரஃ
ப்ரணாஶநாய ப்ரப[2]லஸ்ய வித்[2]விஷஃ ।
மஹீத்[3]ர பக்ஷவ்யப ரோபணோசிதம்
ஸ்பு[1]ரத் ப்ரப[3]ாமண்டல மஸ்த்ர மாத்தே ॥ 60

(ப-ரை) விவ்ரித்[2]த[3] = பெருகிய; மத்ஸர = பகைக்கொண்ட; ஸஃ = அந்த தேவேந்திரன்; சாபம் = வில்லை; உத்ஸ்ரிஜ்ய = விட்டு; ப்ரப[2]லஸ்ய = வலிமிகுந்த; வித்[2]விஷஃ = பகைவனான ரகுமன்னனை ப்ரணாஶாய = அழிப்பதற்கு; மஹீத்[3]ர = மலைகளின்; பக்ஷ = இறகுகளை; வ்யபரோபண = வெட்டுவதில்; உசிதம் = பழகிய; ஸ்புரத் = ஒளிக்கும்; ப்ரப[3]ாமண்டலம் = கதிர்கள் உள்ள; அஸ்த்ரம் = வஜ்ராயுதத்தை; ஆத[3]தே[2] = பெற்றுக்கொண்டான்.

(க-ரை) பகைமை பெருகிய தேவேந்திரன் வில்லைக் கை விட்டு, மலைகளின் இறகுகளை வெட்டியதும், ஒளிமிக்கதுமான வஜ்ராயுதத்தை, வலிமிகுந்த பகைவனாகிய ரகுமன்னனைக் கொல்லும் பொருட்டு கையிலேந்தினான். (தன்மைநவிற்சியணி)

சு॥ ரகு^{3}ர் ப்^{3}ரிஶம் வக்ஷஸி தேந தாடிதஃ
பபாத பூ^{3}மௌ ஸஹஸைநி காஶ்ருபிஃ ।
நிமேஷ மாத்ரா த^{2}வதூ^{3}யச வ்யத^{1}ாம்
ஸஹோத்தி^{1}தஸ் ஸைநிக ஹர்ஷநிஸ்வநைஃ ॥ 61

(ப-ரை) ரகு^{3}ஃ=ரகுமன்னன்; தேந=அந்த வஜ்ராயுதத்தால்; ப்^{3}ரிஶம்=மிகுந்து; வக்ஷஸி=மார்பில்; தாடிதஸ்ஸந்=அடிப்பட்டவனாய்; ஸைநிக=படைகளுடைய; அஶ்ருபி^{3}ஸ்ஸஹ=கண்ணீருடன்; பூ^{3}மௌ=தரைமீது; பபாத=சாய்ந்தான்; நிமேஷமாத்ராத்=கணப் பொழுதில்; வ்யத^{1}ாம்=துன்பத்தை; அவதூய^{3}=விட்டவனாய்; ஸைநிக=ஸேனையின்; ஹர்ஷ=மகிழ்ச்சியால்; நிஸ்வநைஸ்ஸஹ=சிங்கநாதத்துடன்; உத்தி^{1}தஶ்ச=எழுந்திருந்தான்.

(க-ரை) ரகுமன்னன் அந்த வஜ்ஜிராயுதத்தின் மார்பில் அடியுண்டவனாகி, தன் சேனைகள் கண்ணீர் மல்க தரைமீது விழுந்து கண நேரத்தில் அதை அலட்சியம் செய்து உடனே எழுந்தான். அப்போது படைவீரர்கள் சிங்கநாதம் செய்தனர். (மிகுதிநவிற்சியணி)

சு॥ தத^{1}ாபி ஶஸ்த்ர வ்யவஹார நிஷ்டு^{1}ரே
விபக்ஷ ப^{3}ாவேஸ்திர மஸ்ய தஸ்துஷஃ ।
துதோஷ வீர்யாதிஶயேந வ்ரித்ரஹா
பத^{2}ம்ஹி ஸர்வத்ர குணைர் நிதீ^{3}யதே ॥ 62

(ப-ரை) தத^{1}ாபி=அந்த வஜ்ஜிராயுதத்தின் அடிப்படுதலிலும்; ஶஸ்த்ர வ்யவஹார=ஆயுதத் தொழிலால்; நிஷ்டு^{1}ரே=கடினமான; விபக்ஷப^{3}ாவே=பகைமையில்; ஸ்தி^{1}தம்=நிலையாக; தஸ்துஷஃ=இருக்கும்; அஸ்ய=இந்த ரகுமன்னனின்; வீர்யாதிஶயேந=பராக்ரமத்தின் மிகுதியால்; வ்ரித்ரஹா=தேவேந்திரன்; துதோஷ=மகிழ்வுற்றான்; தத^{1}ாஹி=அவ்வாறிருக்க; கு^{2}ணைஃ=குணங்களால்; ஸர்வத்ர=பகைவர், நட்டார், அலட்சியமாயினோர் ஆகிய எல்லாரிடமும்; பத^{2}ம்=சமபாவத்தை=நிதீ^{3}யதே=வைக்கப்படுகிறது.

(க-ரை) இவ்வாறு வஜ்ஜிராயுதத்தால் தாக்கியும், வெல்ல முடியாது நிற்கும் ரகுமன்னனுடைய அற்புதமான பராக்கிரமத்துக்குத் தேவேந்திரன் மெச்சினான். குணவான்களுக்குப் பகைவர் நட்டாராகிய அனைவரிடமும் சமப்பார்வை இருப்பது இயற்கை அன்றோ. (மிகுதி நவிற்சியணி)

சு ॥ அஸங்க² மத்²ரிஷ்வபி ஸாரவத்தயா
ந மே த்வத²ந்யேந விஸோட³ மாயுத³ம் ।
அவேஹி மாம்ப்ரீத ம்ரிதே துரங்க²மாத்
கிமிச்ச¹ஸீதி ஸ்பு¹டமாஹ வாஸவ: ॥ 63

(ப-ரை) ஸார வத்தயா = வலிமை மிக்கதாகையால்: அத்²ரிஷ்வபி = மலைகளிலும்; அஸங்க²ம் = தடையற்றிருந்த; மே = எனது; ஆயுத³ம் = வஜ்ஜிராயுதமானது; த்வத் அந்யேந = நீயல்லாது மற்றவரால்; நவிஸோட³ம்; சகிக்கப்படவில்லை; ஆவேஹி = தெரிந்துக்கொள்; துரங்க²ம் ஆத்³ரிதே = புரவியைத் தவிர்த்து; கிம் = எதை; இச்ச¹ஸி = விரும்புகிறாய்; இதி = என; வாஸவ: = தேவேந்திரன்; ஸ்பு¹டம் = தெளிவாக; ஆஹ = உரைத்தான்.

(க-ரை) தேவேந்திரன் ரகுமன்னனிடம், "மலைகளின் இறகுகளைத் தறித்த வலிமைமிக்க எனது வஜ்ஜிராயுதத்தின் தாக்குதலைத் தாங்கி நின்றவன் நீ ஒருவன் மட்டுமல்லாது மற்றெவருமே தப்பியதை யான் கண்டிலேன்; ஆகையால், உன்மீது எனக்கு அன்பு உண்டாகியது என அறிவாயாக; இப்புரவியைத் தவிர்த்து, வேறென்ன வேண்டுமோ கேள்" என்றான். (இன்பவணி)

சு ॥ ததோ நிஷங்க²ாத²ஸமக்²ர முத்²த்³ரிதம்
ஸுவர்ண புங்க¹ த்²யுதிரம் ஜிதாங்கு²ளிம் ।
நரேந்த்²ர ஸூநு: ப்ரதி ஸம்ஹரந் நிஷும்
ப்ரியம் வத²ம் ப்ரத்யவத² த்ஸுரேஸ்வரம் ॥ 64

(ப-ரை) தத: = பிறகு; நரேந்த்³ர ஸூநு: = ரகுமன்னன்; நிஷங்க²ாத் = அம்புறாப் பொதியிலிருந்து; அஸமக்²ரம் யத¹ாதத¹ா = முடிவுறாதது போன்று; உத்³ரிதம் = மேலுக்கெடுத்து; ஸ்வர்ண = பொன்னாலாய; புங்க¹ = பிடியின்; த்²யுதி = ஒளியால்; ரஞ்ஜித = மிளிரச் செய்த; அங்கு²ளிம் = விரல்களுடைய; இஷும் = பாணத்தையும்; ப்ரதி ஸம்ஹரஸ்ஸந் = பின்னுக்கு இழுத்துக் கொண்டவனாய்; ப்ரியம்வத³ = அன்பு மொழிகளால்; ஸுரேஸ்வரம் = தேவேந்திரனை நோக்கி; ப்ரத்யவதத் = பதிலைக் கூறினான்.

(க-ரை) அதற்கு ரகுமகாராஜன் அம்புறாப்பொதியிலிருந்து, பாதியளவுக்கு மேலே கொண்டுவந்த அம்பை மறுபடியும் அதிலேயே

விட்டுவிட்டு, நல்லதைச் சொல்லும் தேவேந்திரனைப் பார்த்து மறுமொழி நவின்றான். (தகுதியணி)

சு॥ அமோச்ய ம ஶ்வம் யதி² மந்யஸே ப்ரபே³ா
தத ஸ் ஸமாப்தே விதி³நைவ கர்மணி ।
அஜஸ்ர தீக்ஷாப்ரயதஸ் ஸ மத்²கு²ரு:
க்ரதோ ரஶேஷேண ப¹லேந யுஜ்யதாம் ॥ 65

(ப·ரை) ஹேப்ரபே³ா = ஓ, தேவேந்திரனே! அஶ்வம் = புரவியை; அமோச்யம் = விடக்கூடாததாக; மந்யஸேயதி = நினைத்தாயெனின்; ததஃ = ஆனால்; அஜஸ்ரஃ = எப்போதுமே; தீ²க்ஷா = வேள்வி என்னும் விரதத்தில்; ப்ரயதஃ = ஆழ்ந்துள்ள; ஸ்ஃ = அந்த; மத்² கு²ருஃ = எனது பிதா; விதி³நைவ = நூல் (சாத்திரங்)களைக் கொண்டே; கர்மணி = வேள்வியென்னும் கிரிகையை; ஸமாப்தே = முடிக்கப்பட்டதாய் ஆவதற்கு; க்ரதோஃ = அசுவமேத யாகத்தின்; ப்¹லேந = பலனால்; அஶேஷேண = எல்லாவற்றுடனும்; யுஜ்யதாம் = கூடியுள்ளதாகட்டும்.

(க-ரை) ஐயனே! குதிரை விடத்தக்கதன்றென்று எண்ணுவையேல், விரதத்துடன் கூடிய எனது பிதாவின் அசுவமேத யாகப் பலனை (குதிரையின்றியே) நிறைவுற்றதாகச் செய்தருள்வாய். (வேண்டலணி)

சு॥ யத¹ாச வ்ரித்தாந்த மிமம் ஸதே²ாக²த
ஸ்த்ரிலோசநை காம்ஶதயா து²ராஸத²: ।
தவைவ ஸந்தே²ஶ ஹரா த்²விஶாம்பதிஸ்
ஶ்ரிணோதி லோகேஶ தத¹ா விதீ³யதாம் ॥ 66

(ப-ரை) ஸதே²ாக²தஃ = வீடு திரும்பிய; த்ரிலோசநைஃ = பரமேசுவரனுடைய; ஏகாம்ஶதயா = ஒரே அம்சமுடையவனாதலால் து²ராஸத²ஃ = கிடைக்கப்பெறாத; விஶாம்பதிஃ = நரேந்திரனாகிய திலீப மன்னன்; யத¹ா = எவ்வாறு; இமம் வ்ரித்தாந்தம் = இச்செய்தியை; தவ = உன்னுடைய; ஸந்தே²ஶஹராத் ஏவ = தூதுவனாலேயே; ஶ்ரிணோதி = கேட்கிறாரோ; ஹேலோகேஶ = ஓ தேவேந்திரனே! தத¹ா = அதுபோல்; தீ³யதாம் = செய்யப்படட்டும்.

(க-ரை) மேலும் ஈசுவர சம்மந்தமான எட்டு மூர்த்திகளுடன் யாக தீட்சையால் ஒரு மூர்த்தியாய் விளங்குவதால், மிக்க பராக்

கிரமமுடைய, வீட்டிலுள்ள, என் பிதாவான திலீபமன்னருக்கு இச்செய்தியை நீர் உமது தூதுவர் வாயிலாகவே சொல்லி அனுப்ப வேண்டும். (வேண்டலணி)

சு॥ த்தே^{1}தி காமம் ப்ரதி ஶுஶ்ருவாந் ரகே^{3}ா:
யத^{2}ாக^{2}தம் மாதலிஸாரதி^{3}ர் யயௌ ।
ந்ருபஸ்ய நாதிப்ரமநாஸ் ஸதே^{2}ா க்^{2}ருஹம்
ஸுதக்ஷிணாஸூநு ரபி ந்யவர்தத ॥ 67

(ப-ரை) மாதலிஸாரதி: = 'மாதலி' என்பவனைத் தேரோட்டியாகக் கொண்ட தேவேந்திரன்; ரகே^{3}ா: = ரகு மன்னனுடைய; காமம = எண்ணத்தை; ததே^{1}தி = அவ்வாறே ஆகட்டுமென்று; ப்ரதிஶுஶ்ருவாந் = சூளுரைத்தவனாய்; யத^{2}ாக^{2}தம் = வந்தது போலவே; யயௌ = திரும்பிச் சென்றனர்; ஸுதக்ஷிணா ஸூநுரபி = ரகுமன்னனும்; ஸதே^{2}ாக்ருஹம் = ஸபாமண்டபத்தை நோக்கி; ந்யவர்தத = திரும்பிச் சென்றான்.

(க-ரை) தேவேந்திரன் அவ்வாறே ஆகட்டுமென நவின்று திரும்பிச் சென்றான். ரகுமன்னனும் புரவியை இழந்த எண்ணத்துடன் தனக்குக் கிடைத்த வெற்றிக்கு மனநிறைவுறாமலேயே தன்னுடைய நகரத்திற்குச் சென்றுவிட்டான். (பொதுமையணி)

சு॥ த மப்^{3}யநந்த^{2} த்ப்ரத^{1}மம் ப்ரபே^{2}ாதி^{3}:
ப்ரஜேஶ்வரஶ் ஶாஸந ஹாரிணா ஹரேத: ।
பராம்ருஶந் ஹர்ஷ ஜலேந பாணிநா
தத^{2}ீய மங்க^{2}ம் குலிஶ வ்ரணாங்கிதம் ॥ 68

(ப-ரை) ஹரே: = தேவேந்திரனுடைய; ஶாஸநஹாரிணா = உத்தரவைக் கொண்டு செல்பவனால்; ப்ரத^{1}மம் = முதன்முதலில்; ப்ரபே^{2}ாதி^{3}த: = அறிவிக்கப்பட்ட; ப்ரஜேஶ்வர: = திலீப மன்னன்; ஹர்ஷஜலேந = ஆனந்தக் கண்ணீரால் குளிர்ந்த; பாணிநா = கைகளால்; குலிஶ = வஜ்ஜிராயுதத்தின்; வ்ரண = புண்களால்; அங்கிதம் = அடையாளமுள்ளதாய் செய்யப்பட்ட; தத^{2}ீயம் = அந்த ரகு மன்னனின்; அங்க^{2}ம் = உடலை; பராம்ருஶந் = தொடுக்கின்றவனாய்; தம் = அந்த ரகுவை; அப்^{3}யநந்த^{2}த் = பாராட்டினான்.

(க-ரை) தேவேந்திரன் திலீப மன்னனுக்குத் தன் தூதுவன் வாயிலாக அவ்வாறே சொல்லியனுப்ப, அதற்குத் திலீப மன்னன்

மிகுந்த மகிழ்வுற்று, வஜ்ஜிராயுதத்தால் அடியுண்ட ரகுவின் உடலை, தன் குளிர்ந்த கைகளால் தடவிக் கொடுத்து அவனை மெச்சிக்கொண்டான். (இன்பவணி)

ஈ ॥ இதி க்ஷிதீசோ நவதிம் நவாதி³காம்
மஹா க்ரதூநாம் மஹநீய சாஸநః :
ஸமாருருக்ஷுர் தி²வ மாயுஷః க்ஷயே
ததாந ஸோப¹ாந பரம்பராமிவ ॥ 69

(ப-ரை) இதி = முன்கூறியதுபோல்; மஹநீய = மகத்தான; சாஸநః = உத்தரவுடைய; க்ஷிதீசஃ = திலீப மன்னன்; மஹா மேன்மையான; க்ரதூநாம் = அசுவமேத யாகங்களின்; நவதி³காம் நவதிம் = தொண்ணூற்று ஒன்பதை; ஆயுஷః = ஆயுளை; க்ஷயே = தாண்டிய பிறகு; தி²வம் = தேவ வுலகை; ஸமாருருக்ஷுஸ்ஸந் = ஏறும் எண்ணம் கொண்டவனாய்; ஸோப¹ாந = படிகளின்; பரம் பராம் இவ = வரிசைப்போல்; ததாந = விரிவு படுத்தினான்.

(க-ரை) திலீப மன்னன் தன் ஆயுட் கடைசியில் தேவலோகம் செல்லும் எண்ணத்துடன் அதற்குப் படிகள் அமைத்தவாறு தொண்ணூற்றொன்பது அசுவமேத யாகங்களைச் செய்தான். (உருவகம்)

ஈ ॥ அத²ஸ விஷய வ்யாவ்ரித் தாத்மா யத²ாவிதி²ஸூநவே
ந்ரிபதிககுத²ம் த²த்வா யூநேஸிதாதப வாரணம் ।
முநிவந தருச்ச¹ாயாம் தே²வாம் தயா ஸஹ ஶிஶ்ரியே
க²ளித வயஸா மிக்ஷ்வாகூணா மித²ம் ஹிகுலபத்ரம் ॥ 70

இதி காளிதாஸ க்ரிதௌ ரகு³வம்ஸே மஹாகாவ்யே த்ரிதீய ஸ்ஸர்க²ஃ.

(ப-ரை) அத¹ = பிறகு; விஷயவ்யாவ்ருத்தாத்மா = கேட்டல் முதலிய புலன் வழிக் கொள்ளுதலிலிருந்து திரும்பிய; ஆத்மா = சித்த முடைய; ஸஃ = அந்த திலீபமன்னன்; யதாவிதி¹ = நூன்முறையை ஒட்டி; யூநே = இளம் வயதுடைய; ஸூநவே = மகனாகிய, (ரகு மன்னனுக்காக) ந்ரிபதி = அரசனுக்கு; ககுத²ம் = சின்னமாகிய; ஸிதாதபவாரணம் = வெண்குடையும்; த²த்வா = கொடுத்து; தயா = அந்த; தேவ்யா ஸஹ = சுதக்ஷிணா தேவியுடன்ஃ முநிவந = முநியுள்ள காட்டிலிருக்கும்; தரு = மரத்தின்; ச¹ாயாம் = நிழலில்; ஶிஶ்ரியே = அண்டினான்; தத¹ாஹி = அப்படியிருக்க: க²ளித = கடந்துவிட்ட;

வயஸாம் = வயதையுடைய; இக்ஷ்வாகூணாம் = இக்ஷ்வாகு நாட்டரசர் கட்கு; இதம் = இந்த (காட்டுக்குச் செல்லுதல்) குல = மறபில் கடைப்பிடித்துவரும்; வ்ரதம் ஹி = விரதமே யன்றோ!

(க-ரை) திலீப மன்னன் எல்லாந் துறந்து அரசனுக்கு அறி குறியாக வெண்குடையை இளம் வயதினான தன் மகனாகிய ரகு மகாராசனுக்கு ஒப்படைத்து மனேவியுடன் வானப் பிரத்த நெறியை நடத்துவதற்கு வனாந்திரம் சென்றான். இக்ஷ்வாகுவம்சத்து அரசர்களுக்கு, வயோதிக காலத்தில் வானப் பிரத்தமென்னும் ஆச்சிரமத்தைக் கடைப்பிடித்தல் வழக்கமே அன்றோ. (உடனிகழ்ச்சியணி)

இது காளிதாசனாலியற்றப்பட்ட ரகுவம்சத்தில் மூன்றாம் சருக்கத்திற்குத் திருத்தணிவாழ் ஸ்ரீவித்யானந்தரெனும் செ. ராம லிங்காசாரியாராலியற்றப்பட்ட தெளிவுரை.

ரகுவம்ச மகா காவியம்

நான்காம் சருக்கம்

௧॥ ஸராஜ்யம் கு2ருணாத2த்தம் பதி பத்2யாதி8கம் ப2பெ2ள ।
தி2நாந்தே நிஹிதம் தேஜஃ ஸவித்ரேவஹுதாஶநஃ ॥ 1

(ப-ரை) ஸஃ=அந்த ரகுமகாராசன்; கு2ருணா=தந்தையாகிய திலீப மன்னனால்; த2த்தம்=கொடுக்கப்பட்ட; ராஜ்யம்=அரசை; ப்ரதிபத்2ய=அடைந்து; திநாந்தே=மாலையில்; ஸவித்ரா= சூரியனால்; நிஹிதம்=கொடுக்கப்பட்ட; தேஜஃ=ஒளியை; ப்ரதிபத்2ய =அடைந்து; ஹுதாஶந இவ=வன்னியைப் போல்; அதி8கம்= மிகுதியாக; ப2பெ2ள=பிரகாசித்தான்.

(க-ரை) ரகுமன்னன் தன் தகப்பனராகிய திலீப மன்னனால் கொடுக்கப்பட்ட அரசையேற்று மாலை வேளையில் பரிதியால் கொடுக்கப்பட்ட ஒளிப் பொருந்திய வன்னியைப் போல் மிகவும் பிரகாசித்தான். (மிகையொற்றுமை உருவகவணி)

௨॥ தி2லீபாநந்தரம் ராஜ்யே தந்நிஶம்ய ப்ரதிஷ்டி1தம் ।
பூர்வம் ப்ரதூ8மிதோ ராஜ்ஞாம் ஹ்ருத2யேஃக்நி ரிவோத்தி1தம் ॥ 2

(ப-ரை) திலீபாநந்தரம்=திலீப மன்னனுக்குப் பிறகு; ராஜ்யே=நாட்டில்; ப்ரதிஷ்டி1தம்=இளவரசானாக்கப்பட்ட; தம்= அந்த ரகுமன்னனனை; நிஶம்ய=கேட்டு; பூர்வம் = முன்பு; (திலீபன் காலத்தில்); ராஜ்ஞாம்=பகைத்த அரசர்களின்; ஹ்ரித2யே=மனதில்; ப்ரதூ8மிதஃ=புகையைக் கண்டு; அக்2நிஃ=துயரத்தை; உத்தி1த இவ=ஒளித்ததோவென்று இருந்தது.

(க-ரை) எதிரி மன்னர்கள் தலீபனுககுப் பிறகு ரகுமகாமன்னன் இளவரசனானதைக் கேட்டதும், அவர்களுடைய இதயத்தில் புகைந்துக் கொண்டு இருந்தக் கனலானது தலை தூக்கியது போலாயிற்று. அதாவது திலீபன் விஷயத்தில் மிகவும் அச்சப்பட்டுக் கொண்டிருந்தனர்; அந்தப்பயம் இப்போது அதிகமாயிற்று. (மிகையதன் செய்கையுருவகவணி)

சு ॥ புருஹூத த்³வஜஸ்யேவ தஸ்யோந் நயந பங்க்தய:।
நவாப்³யுத்த¹ாந த்³ர்ஶிந்யோ நநந்து³: ஸப்ரஜா: ப்ரஜா:॥ 3

(ப-ரை) புருஹூத: = தேவேந்திரனுடைய; த்³வஜஸ்யேவ = கொடியைப் போன்ற; தஸ்ய = அந்த ரகு மன்னனுடைய; நவ— புதிய; அப்³யுத்²த¹ாந = உயர்வை; த்³ர்ஶந: = காணும்படியான; ஸப்ரஜா: = சந்ததியாருடன் கூடிய; ப்ரஜா: = மக்கள்; உத் = உயர்த்தப்பட்ட; நயந = கண்களின்; பங்க்த்யஸ் ஸத்²ய: = வரிசைகள் உடையவர்களாய்; நநந்த³து: = மகிழ்ந்தனர்;

(க-ரை) மக்கள் தம்முடைய மக்களுடன் கூடி ஒவ்வொரு வருடமும், அரசர்களால் செய்யப்படும் இந்திரக் கொடியின் விழாவில் அதன் உச்சியை எவ்வாறு கண்களை உயர்த்திப் பார்த்து மகிழ்வார்களோ அவ்வாறே புதிதாய் அரசுக்கு வந்த ரகுமன்னனுடைய மேன்மையைக் கண்ணாறக் கண்டு மகிழ்ந்தனர். (விரிவுரையணி)

சு ॥ ஸமமேவ ஸமாக்ராந்தம் த்³வயம் த்³விரத³க³ாமிநா ।
தேந ஸிம்ஹாஸநம் பித்ர்யம் அகி¹லம் சாரிமண்டலம் ॥ 4

(ப-ரை) த்³விரத³ = யானையைப் போல்; க³ாமிநா = செல்லும்; தேந = அந்த ரகுமன்னனால்; பித்ர்யம் = தகப்பனாரைச் சார்ந்த; ஸிம்ஹாஸநம் = அரியணையையும்; அகி¹லம் = எல்லா; அரி மண்டலம்; பகைவர்களின் நாடுகளையும்; த்³வயம் = ஆகிய இரண்டினையும்; ஸமமேவ = ஒரே நேரத்தில்; ஸமாக்ராந்தம் = பற்றிக் கொள்ளலாயிற்று.

(க-ரை) மதகரியைப் போன்ற நடையுடைய ரகுமன்னன் தன்னரியணையை ஏற்றவுடன் பகையரசர்கள் அவனுக்குப் பயந்து கீழ்ப்பணிந்தனர். (உவமை மற்றும் வீறுகோளணி)

அ ॥ சிங்காதனம் ஏறியபின் அவனது அரசு விளக்கப்படுகிறது.

க ॥ ச¹ாயாமண்டல லக்ஷ்யேண தமத்³ர்ஶ்யா கிலஸ்வயம் ।
பத்³மா பத்³மாதபத்ரேண பே³ஜேஸாம்ராஜ்ய தீக்ஷிதம் ॥ 5

(ப-ரை) ப³த்மா = இலக்குமியால்; ஸ்வயம் = தாமாக; அத்³ர்ஸ்யதம்கில = தென்படாதவனாய்; ச¹ாயாமண்டல = ஒளியின் திரளால் (குடையின் நிழலால் என்றும் தொனி) லக்ஷ்யேண = எண்ணக் கூடிய; பத்³மாத பத்ரேண = தாமரையென்னும் குடை

யால்; ஸாம்ராஜ்ய=நாடாண்மையில்; தீ[2]க்ஷிதம்=ஊக்கங் கொண்டுள்ள; தம்=அந்தரகு மன்னன்; பே[3]ஜே=அடைந்தனள்.

(க-ரை) ரகுமகாராஜன் அரியணையேறியதும் அவருக்குண்டாகிய ஒளியின் திரளானது தாமரை என்னும் குடையைப் போல் தெரிந்தது. இதனால், அரசனெனும் மலராள் அவனுக்குக் குடையைப் பிடித்துக் கொண்டிருப்பது போன்று இருந்தது. (உயர்வுனவிற்சியணி)

அ॥ மற்றும் அவனுக்கு நாமகளின் சாந்நித்தியம் கூறுதல்.

சு॥ பரிகல்பித ஸாந்நித்[3]யா காலேகாலேசவந்தி[2]ஷு ।
ஸ்துத்யம் ஸ்துதிபி[3] ரர்த்[1]யாபி[3]_ருப பத்தே ஸரஸ்வதீ ॥ 6

(ப-ரை) ஸரஸ்வதீச=சரசுவதி தேவியும்; காலேகாலே= உரிய காலத்தில்; வந்தி[2]ஷு=துதிப்பாடகர்களில்; பரிகல்பித= செய்யப்பட்ட; ஸாந்நித்[3]யாஸதி = ஸாந்நித்யமுடையவளாய்; ஸ்துத்யம்=துதிக்கத்தக்க ரகுமன்னனை; அர்த்[1]யாபி[3]ః=பொருள் நிறைந்த; ஸ்துதிபி[3]ః=துதிப்பாடல்களால் உபதஸ்தே[1]=தொழுதனர்.

(க-ரை) அந்தந்த வேளைகளில் வந்தியும் மாகதர்களும் ரகுமன்னனை, அவனது குணநலன்களைத் துதி செய்ய, அரசர்கள் விட்டுணு, திக்குப் பாலர்கள் போன்ற பெருமை உடையவர்கள் எனுங் கூற்றுக் கேற்ப, தேவ பாவனையோடு அவனை சரசுவதியே துதி செய்வது போன்று தோன்றிற்று. (உயர்வுளவிற்சியணி)

சு॥ மநு ப்ரபி[3]ர்திபிர் மாந்யைః பு[3]க்தா யத்[2]யபி ராஜபி[3]ః ।
தத[1]ாப்யநந்ய பூர்வேவ தஸ்மிந் நாஸீத்[2] வஸுந்த[3]ரா ॥ 7

(ப-ரை) வஸுந்த[3]ரா= பூமியானது; மநுப்ரபிர்திபி[3]ః=மநுவென்னும் மாமன்னன் முதலிய; மாந்யைః=பூசிக்கத்தக்க; ராஜபி[3]ః அரசர்களால்; பு[3]க்தாயத்[3]யபி=அனுபவிக்கப்பட்டதே; தத[1]ாபி= ஆயினும்; தஸ்மின்=அந்த ரகுமன்னனைப் பொறுத்தமட்டில்; அநந்ய பூர்வேவ=முன்பு பிறரால் அனுபவிக்காதது போல்; ஆஸீத் =ஆயிற்று.

(க-ரை) இப்புவியானது முன்பு மனு முதலிய புகழ்வாய்ந்த பல மன்னர்களால் ஆளப்பட்டதே ஆயினும் ரகுவின் அதிசயமான ஈதல்

போன்ற நற்குணங்களையொட்டி இதுபோன்ற அரசன் இதுவரை ஆண்டதில்லை என்ற புகழை அடைந்தான். (உயர்வுனர்விற்சியணி)

அவ ॥ அதற்குக் காரணங்கள் கூறப்படுகின்றன.

சு॥ ஸஹி ஸர்வஸ்யலோகஸ்ய யுக்த த²ண்டதயா மநঃ ।
ஆத²³த² நாதி ஶ்ரீதோஷ்ணோ நப³ஸ்வா நிவ த²ாக்ஷிணঃ ॥ 8

(ப-ரை) ஸঃ = அந்த ரகுமன்னன்; யுக்த = தகுந்த; த²ண்டதயா = தண்டனைகள் உடையவனாதலால்; ஸர்வஸ்வ = எல்லா; லோகஸ்ய = மக்களின்; மநঃ - மனதில்; நாதி ஶ்ரீதோஷ்ணঃ = மிகுந்த குளுமையும், மிக்க வெப்பமும் இல்லாத; த²ாக்ஷிண்யே = தெற்கிற் பிறந்த; நப³ஸ்வாநிவ = வாயுவைப் போல்; ஆத²த² = கொண்டனர்.

(க-ரை) ரகுமாமன்னன் தண்டிக்கத் தக்கவர்கட்கு எவ்வளவு தண்டனை தகுமோ அவ்வளவு மட்டுமே தெளிவுடன் வழங்கிவந்ததால் அவனுடைய ஆட்சியானது காற்று தேவைப்பட்டபோது சுகந்தரவல்ல தென்திசையிலிருந்து வீசும் தென்றல்போன்று, எல்லா மக்களுக்கும் மகிழ்விப்பதாக இருந்தது. (நிகழ்வினவிற்சி மற்றும் தொகையுவமையணி)

சு ॥ மந்தே²ாத்கண்ட¹ாঃ க்ரிதாஸ்தேந குணாதி³க²தா கு²ரௌ ।
ப¹லேந ஸஹகாரஸ்ய புஷ்போத்²க²ம இவ ப்ரஜாঃ ॥ 9

(ப-ரை) தேந = அந்தரகு; கு²ண அதி¹க²தயா = நற்குணங்கள் நிறைந்தவனாக இருந்தமையால்; ப்ரஜாঃ = மக்கள்; கு²ரௌ = அவன் தந்தையாகிய திலீப மன்னனைப் பொருத்தவரையில்; ஸஹகாரஸ்ய = இனிய மாமரத்தில்; ப¹லேந = பழத்தால்; புஷ்ப = பூவின்; உத்²க³ம இவ = பிறக்கும் தருணத்தில் உள்ளதுபோல்; மந்த = சொற்பமான; உத்கண்ட¹ாঃ = உற்சாகமுடையவர்களாக; க்ரிதாঃ = செய்யப்பட்டனர்.

(க-ரை) ரகுமகாராஜனின் அதிக நற்குணங்களை யொட்டி அவனது மக்களுக்குத் திலீப மன்னனிடம் வைத்திருந்த அன்பு குறைந்தது. எவ்வாறெனின், இனிய மாமரம் பூக்கும்போது மகிழ்வுண்டாகிறது. அது பலனளிக்கும்போது அம்மகிழ்ச்சி பெருகி

பூவின் மீதிருந்த மகிழ்ச்சி குறைந்துவிடுகிறது. (நிகரெடுத்துக் காட்டுவமையணி)

சு ॥ நயவித்2பி3ர் நவேராஜ்ஞீஸ் ஸதஸச் சோபத3ர்ஶிதம் ।
பூர்வ ஏவா ப3வத் பக்ஷஃ தஸ்மிந் நாப3வ து2த்தரஃ ॥ 10

(ப-ரை) நயவித்பி3ஃ = நீதி நூலறிஞர்களால்; நவே = புதியவனாகிய; ராஜ்ஞீ = ரகுமன்னன் விஷயத்தில்; ஸத் = அறப்போரையும்; அஸத்ச = வஞ்சனைப் போரையும்; உபத3ர்ஶிதம் = காண்பிக்கப்பட்டது; தஸ்மிந் = அந்த ரகுமன்னனிடம்; பூர்வ = முதலாம்; பக்ஷ ஏவ = அறப்போரே; அப3வத் = ஆயிற்று; உத்தர; = இரண்டாவதாகிய வஞ்சப் போர்; நாப3வத் = ஆகவில்லை.

(க-ரை) நீதி நூலறிஞர்கள் புதிதாக அரசை ஏற்ற ரகுவுக்கு அறப்போரையே பின்பற்றினார். அறமற்றதைப்பற்றிச் சிந்தித்ததே கிடையாது. (வீறுகோளணி)

சு ॥ பஞ்சாநாமபி பூ3தாநா முத்கர்ஷம் புபுஷுர் கு2ணாஃ ।
நவே தஸ்மிந் மஹீபாலே ஸர்வந் நவமிவா ப3வத் ॥ 11

(ப-ரை) பஞ்சாநாமபி = ஐந்தாகிய; பூ3தாநாம் = பூமி முதலிய பூதங்களின்; கு2ணாஃ = மண் முதலிய குணங்கள்; உத்கர்ஷம் = மேன்மையை; புபுஷுஃ = பேணின; தஸ்மிந் = அந்த ரகுமன்னன்; நவே = புதிய; மஹீபாலே ... தி = அரசனேயாயினும்; ஸர்வம் = எல்லாப் பொருளும்; நவமிவ = புதிதானது போல; ஆஸீத் = ஆயிற்று.

(க-ரை) ரகு மன்னனுடைய மேன்மையான அறவாட்சியில் காலத்திற் கேற்ப தவறாது நடத்திவந்தமையால், புவி முதலிய பஞ்ச பூதங்களின் குணங்கள் மேன்மையுற்றன. இதனால், அவனது புதிய அரசில் எல்லாமே புதியனவாகவே தோன்றின. (தன் குணமிகையணி)

சு ॥ யத1ா ப்ரஹ்லாத2நாச் சந்த்2ரஃ ப்ரதாபாத் தபநோ யத1ா ।
ததை1வ ஸோऽபூ3 த2ந்வர்தே1ா ராஜா ப்ரக்ருதி ரஞ்ஜநாத் ॥ 12

(ப-ரை) யத1ா = எவ்வாறு; சந்த்2ரஃ = சந்திரன்; ப்ரஹ்லாத2நாத் = மகிழ்வூட்டுவதால்; அந்வர்த1ஃ = ஏற்றப் பெயருடையவனோ; யத1ா = எவ்வாறு; தபநஃ = சூரியன்; ப்ரபாதாத் = வருத்துவதால்;

அந்வர்த²꞉ = தகுந்த பெயருடையவன் ஆகின்றானோ; தத²ா = அதுபோல்; ஸ꞉ ராஜா = அந்த ரகுமன்னன்; ப்ரக்ரிதி = மக்களின்; ரஞ்ஜநாத் = மகிழ்வுறச் செய்வதால்; அந்வர்த²꞉ = அதற்கேற்ற நற்புகழ் கொண்டவனாக; அபூ⁴த் = ஆனான்.

(க-ரை) சந்திரன் தன் மகிழ்வூட்டும் கதிர்களாலும், சூரியன் தன் வெப்பக் கதிர்களாலும் எவ்வாறு தகுந்த பெயர்கள் உடையவர்களாக இருக்கின்றனரோ அதுபோல், ரகுமன்னன் மக்களின் காதலுக்கேற்ப நற்பெயருடையவனாக விளங்கினான். (விரியுவமையணி)

௬ ॥ காமம் கர்ணாந்த விஶ்ராந்தே விஶாலே தஸ்ய லோசநே ।
சதுஷ்மத்தா து ஶாஸ்த்ரேண ஸூக்ஷ்ம கார்யார்த²த³ர்ஶிநா॥ 13

(ப-ரை) விஶாலே = விரிவான; தஸ்ய = அந்த ரகுமன்னவனுடைய; லோசநே = கண்கள்; காமம் = மிக்க; கர்ணாந்த = காதுகள் வரையில்; விஸ்ராந்தே = பரவின; சதுஷ்மத்தாது = கண்களுடையவனுடைய அறமோ; ஸூக்ஷ்ம = கூர்மையான; கார்யார்த² = செய்த்தொழில் காட்டுவன; ஶாஸ்த்ரேண = நூல்களாலேயே.

(க-ரை) ரகுமன்னனுடைய காதுகள் வரை கண்கள் பரவி இருந்தன. அதாவது அவை மிக விரிந்திருந்தன. அதுபோல், அவனுடைய நூற்பார்வையும் மிக விரிந்திருந்தது (விளக்கணி)

௬ ॥ லப்³த⁸ப்ரஶமந ஸ்வஸ்த²ம் அதை²நம் ஸமுபஸ்தி²தா ।
பார்தி²வ ஶ்ரீர் த்³விதீயேவ ஶரத் பங்கஜ லக்ஷணா ॥ 14

(ப-ரை) அத² = பிறகு; லப்³த⁸ = ஏற்றுக்கொண்ட அரசின்; ப்ரஶமந = நிலையடல்; ஸ்வஸ்த²ம் = அடங்கப்பெற்ற மனமுடைய; ஏநம் = இந்த ரகுமன்னன்; பங்கஜ = தாமரை மலர்களை; லக்ஷணா = சின்னங்களாகக் கொண்ட; ஶரத் = கூதிர்க்காலம்; த்³விதீயா = இரண்டாவதாகிய; பார்தி²வஶ்ரீ꞉ இவ = அரசப் பூமகள் போல, ஸமுபஸ்தி²தா = அடைந்தது.

(க-ரை) ரகுமன்னன் பகைவர்களின் தொல்லைகளற்றவனாய், நிலைத்த மனமுடையவனாக இருந்தான். அப்போது அவனடைந்த அரசெனும் இலக்குமிக்குச் சின்னமாய தாமரைகள் மலரும்படியான கூதிர்க்காலம் வந்தது. (புனைவுளிவிளைவணி)

சு॥ நிர்வ்ரிஷ்ட லகு3யி3ர் மேகை3ஃ முக்தவர்த்மா ஸுது2ஸ்ஸஹஃ ।
ப்ரதாயஸ் தஸ்ய ப3ானோ ச யுக2பத்3 வ்யாநஸே தி2ஶஃ ॥ 15

(ப-ரை) நிர்வ்ரிஷ்ட = மிகுதியின்றி பெய்துவிட்டவையாத லால்; லகு3யி3ஃ = இலேசான; மேகை2ஃ = மேகங்களால்; முக்த = விடப்பட்ட; வர்த்மா = பாதையுடையதாகலின்; ஸுது2ஸ்ஸஹஃ = சகிக்கமுடியாத; தஸ்ய = அந்த ரகுமன்னனின்; ப3ாநோ ச = சூரியனுடைய; ப்ரதாபஃ = வலிமையும் (வெய்யிலும்); யுக2பத் = ஒரே நேரத்தில்; தி2ஶஃ = திசைகளில்; வ்யாநஸே = பரவிற்று,

(க-ரை) மழை நன்கு பெய்து பூமி ஆகாயப் பாதைகள் மேகங் களால் விடுபட்டமையின் சகிக்க முடியாத வெய்யிலின் வலிமை திக்குகளில் பரவியது. அதாவது நன்றாக வெய்யில் காய்ந்ததற் கும் ரகுமன்னன் போர் தொடுக்க முயற்சி செய்யவும் தொடங்கலா யிற்று. (வாக்கியப் பொருட்காட்சியணி)

சு॥ வார்ஷிகம் ஸஞ்ஜஹார ரேந்த்2ரோ ரகு3ர் ஜைத்ரம் த3நுர் த2தெ3ள ।
ப்ரஜார்த1 ஸாக3னே தெளஹி பர்யா யோத்2யத கார்முகௌ ॥ 16

(ப-ரை) இந்2த்ரஃ = தேவேந்திரன்; வார்ஷிகம் = மழைக்காக; த3நுஃ = வில்லை; ஸஞ்ஜஹார = நிறுத்திக் கொண்டான்; ரகு3ஃ = ரகுமன்னன்; ஜைத்ரம் = வெற்றி தரும்; த3நுஃ = வில்லை; த2தெ3ள ஏந்தினான்; ஹி = எக்காரணத்தால்; தெள = அந்த இந்திரனும் ரகுவும்; ப்ரஜ = மக்களின்; அர்த1 = நன்மை; ஸாத3னே = பெறுவதில் பர்யாய = முறையே; உத்2யத = தொடுத்த கார்முகௌ = வில்லாள னாக ஆனார்கள்.

(க ரை) தேவேந்திரன் மழை பெயவித்தலின் பொருட்டு எடுத்த வில்லை இறக்கிக் கொண்டான். உடனே ரகுமன்னன் போர்புரிவதற்காக வில்லையேந்தினான். இவ்வாறாக மக்கள் நல்வாழ்விற்கு பயிர்கள் விளையும் பொருட்டு இந்திரனும், பகைவர் தொல்லை நீக்க ரகுமன்னனும் முறையே வில்லேந்தினார்கள். (நிகர்தொடர்முழுதுவமையணி)

சு॥ புண்டரீகாத பத்ரஸ்த1ம் விகஸத்காஶ சாமரஃ ।
ரிதுர் விடம்பயாமாஸ நபுநஃ ப்ராப தச்ச்2ரியம் ॥ 17

(ப-ரை) புண்ட³ரீக = வெண்டாமரையே; ஆதபத்ர: = குடையாகவுள்ளதும்; விகஸத் = மலர்ந்த; காஶ = நாணல் பூக்களே; சாமர: = விஞ்ஜாமரங்களாகவும் கொண்ட; ரிது: = கூதிர்க்காலம்; தம் = அந்த ரகுவை; விட³ம்பயாமாஸ = பின் தொடர்ந்து; தத் = அந்த ரகுமன்னனுடைய; ஶ்ரியம்புந: = ஒளியை; நப்ராப = அடையாமற் போயிற்று.

(க-ரை) கூதிர்காலம் வெண்டாமரையைக் குடையாகவும், நாணல் பூவை விஞ்ஜாமரையாகவும் கொண்டுள்ளதில், ரகுமன்னனைப் போன்று இருந்ததாய் தோன்றிற்று, ஆயினும், அவனுடைய ஆக்கத்தை அடைய முடியாது போயிற்று.(விரியுவமை மற்றும் எதிர்நிலையணி)

சு ॥ ப்ரஸாத³ ஸுமுகே¹ தஸ்மிந் சந்த்³ரேச விஶத³ப்ரபே³ ।
தத³ா சக்ஷுஷ்மதாம் ப்ரீதி ராஸீத் ஸமரஸாத்³வயோ: ॥ 18

(ப-ரை) ப்ரஸாத³ = அருளால்; ஸுமுகே¹ = நல்லமுகங்கொண்ட; தஸ்மிந் = அந்த ரகுமன்னனில்; விஶத³ = நிமலமான; ப்ரபே³ = ஒளி பொருந்திய; சந்த்³ரே = சந்திரனில்; த்³வயோ: = இவ்விருவரிலும்; தத³ா = அக்காலத்தில்; சக்ஷுஷ்மதாம் = கண்களுடையவர்களுக்கு; ப்ரீதி: = அன்பு; ஸமரஸா = சமமாக நுகர்வது; ஆஸீத் = ஆயிற்று.

(க-ரை) கருணையுடைய ரகுமன்னனின் முகத்தையும் நிர்மலமான ஒளியுடைய சந்திரனையும் காண்போருக்குச் சமமான அன்பை ஊட்டியது. (அகமலர்ச்சியணி)

சு ॥ ஹம்ஸ ஶ்ரேணீஷு தாராஸு குமுத்³வத்ஸுச வாரிஷு ।
விபூ⁸தயஸ் தத்³யாநாம் பர்யஸ்த¹ா யஶஸா மிவா ॥ 19

(ப-ரை) ஹம்ஸா = அன்னங்களுடைய; ஶ்ரேணீஷு = வரிசைகளிலும்; தாராஸு = விண்மீன்களிலும்; குமுத்³வத்ஸு = வெண்குவளைகள் உள்ள; வாரிஷுச = தண்ணீரிலும்; தத்³யாநாம் = அந்த ரகுமன்னனின் சார்பான; யஶஸாம் = புகழின்; விபூதய: = செல்வங்கள்; பர்யஸ்த¹ா இவ = பரவினவோ என்பதுபோலிருந்தன.

(க-ரை) அன்னங்களின் கூட்டத்திலும், விண்மீன்களிலும், வெண்குவளைகள் உள்ள தண்ணீரிலும், ரகுமன்னனின் மேன்மை பரவியுள்ளதோ என்பதுபோல் தோன்றியது. (குறிநிலையணி)

சு ॥ இக்ஷுச்ச²ய நிஷாதி³ந்ய: தஸ்ய கே³ாப்துர் கு³ணோத³யம் ।
ஆகுமார க³தே¹ாத்³ க³ாதம் ஶாலிகோ³ப்யோ ஜகு³ர்யஶ: ॥ 20

(ப-ரை) இக்ஷுச்ச²ய = கரும்புகளின் நிழலில்; நிஷாதி³ந்ய: = இருக்கும்; ஶாலி = நெற்பயிருக்கு, கோ³ப்ய: = காவல் காக்கும் பெண்கள்; கோ³ப்து: = காவலான; தஸ்ய = அந்த ரகுமன்னனுடைய கு³ணோத³யம் = குணங்களால் உண்டான; ஆகுமாரம் = வாலைப் பருவம் முதற்கொண்ட; கதே¹ா = கதைகளின்; உத்³க³ாதம் = தொடக்கம் உள்ள; யஶ: = புகழை; ஜகு³: = பாடினார்கள்.

(க-ரை) நெற்பயிருக்குக் காவலாக கரும்பின் நிழலில் உட்கார்ந் திருக்கும் பெண்கள்; வாலைப் பருவம் முதற்கொண்டு ரகு மன்னனுக் கிருந்த நற்குணங்களைப்பற்றி பாட்டுகளாகப் பாடிவந்தனர். (தகுதியணி)

சு ॥ ப்ரஸாத³ உத³யாத³ம்ப³: கும்ப³யோநேர் மஹௌஜஸ: ।
ரகோ³ா: பரிப³வா ஶங்கி:ஸேசக்ஷுபே³ த்³விஷதாம் மந: ॥ 21

(ப-ரை) மஹத் = மேலான; ஓஜஸ: = ஒளிமிக்க; கும்ப³யோநே: = கும்ப முனியெனும் அகத்தியருடைய; உத³யாத் = பிறப்பால்; அம்ப³: = நீரானது; ப்ரஸஸாத = நின்மலமாயிற்று; மஹத் = மேலாய; ஓஜஸ: = பராக்கிரமமுடைய; ரகோ³: = ரகுமன்னனின்; உத³யாத் = வளர்ச்சியால்; பரிப³வ = மதியாமையை; ஆஶங்கி = ஊகித்துக் கொண்டிருக்கும்; த்³விஷதாம் = பகைவரின்; மன: = மனமானது; சக்ஷுபே = தடுமாறியது.

(க-ரை) மிகுந்த ஒளிமிக்க அகத்தியரின் பிறப்பால் தண்ணீ ரானது நின்மல மாயிற்று. மிக்க பராக்கிரமமுடைய ரகுமன்னனின் அரசாட்சியால், பகைவர் மனதில் பேரச்சத்தை உண்டாக்கியது. (பொருட்காட்சியணி)

சு ॥ மதோ³த³க்³ரா: ககுத்³மந்த: ஸரிதாம் கூலமுத்³ருஜா: ।
லீலாகே¹ல மநுப்ராபு: மஹோ க்ஷாஸ் தஸ்யவிக்ரமம் ॥ 22

(ப-ரை) மத³ = மதங்கொண்டு; உத³க்³ரா = மேலான; ககுத்³மந்த: = திமிலை உடைய; மஹோக்ஷா: = எருதுகள்; ஸரிதாம் = நதிகளின்; கூலமுத்³ருஜா: = கரைகளை சீவிக்கொண்டுள்ள; லீலாகே¹லம் = விளையாட்டானது; தஸ்ய = அந்த ரகுமன்ன

னுடைய; விக்ரமம்=பராக்கிரமத்தை; அனுப்ராபுঃ=ஓட்டினவை (பின் தொடர்ந்தன)

(க-ரை) பருத்த முரிப்புள்ள எருதுகள் யதேச்சையாக பசும் புல்லை மேய்ந்து, மதங்கொண்டு, கொம்புகளால் கரைகளை சீவிக் கொண்டு வேடிக்கை செய்தன. இது ரகுமன்னவனின் பராக்கிரமத்தைக் காட்டுவதாக இருந்தது. (குறிநிலையணி)

சு ॥ ப்ரஸவைஸ்ஸப்த பர்ணாநாம் மத²க³ந்தி³பி³ ராஹதாঃ ।
அஸூயயேவ தந்நாக³ா: ஸப்ததை³வ ப்ரஸுஸ்ருவுঃ ॥ 23

(ப-ரை) மத²ঃ = மதங்கொண்டதால் கன்னங்களிலிருந்து ஒழுகும் நீரின்; க³ந்தி³பி³ =பரிமளம் போன்ற மணமுடைய; ஸப்த பர்ணாந²ாம்=ஏழிலைகளுடைய வாழைச் செடிகளின்; ப்ரஸவைঃ= புட்பங்களால்; ஆஹதாঃ=அடியுண்ட; தத்=அந்த ரகுமன்னனுடைய; நாகாঃ=யானைகள்; அஸூய ஏவ=பிறவற்றின் மீதுண்டாய பொறாமையால் செய்வதுபோல்; ஸப்ததை³வ= ஏழு விதங்களாகவே; ப்ரஸுஸ்ருவுঃ=மதத்தை விட்டன.

(க-ரை) ஏழிலைகளுடைய வாழைச் செடியில் யானையின் மதம் போன்ற வாசனையுடைய பூக்கள் மலர்வதால், தமக்குள்ள இவ்வாசனை இப்பூக்களில் உள்ளதென்ற பொறாமையால், அந்த மன்னனுடைய யானைகள் ஏழுவிதமான—அதாவது; அவற்றின் துதிக்கைத் துளைகள் 2, ஆண்குறி 1, கண்கள் 2, கன்னங்கள் 2 ஆக இவ்வேழு நிலைகளிலிருந்து மதத்தை ஒழுகச் செய்தன. (ஏழிலை வாழை மலர்விடுதலும் யானைக்கு மதம் பிடித்தலும் கூதிர் காலத்தின் இயல்பாகும்). (நிரனிறையணி)

சு॥ ஸரிதঃ குர்வதீ க²ாத²ா் பத¹ஶ்சாஶ்யா ந கர்த²மாந் ।
யாத்ராயை சோத²யாமாஸ தம்ஶக்தேঃ ப்ரத¹மம்ஶரத் ॥ 24

(ப-ரை) ஸரிதঃ=நதிகளை; க²ாத³ঃ=மேடுள்ளவைகளாலும், பத¹ஶ்ச=வழிகளை; ஆஶ்யாநி=உயர்ந்த; கர்த²மாந்=சேறுடையனவாகவும்; குர்வதீ=செய்கின்ற; ஶரத்=கூதிர்காலம்; தம்= அந்த ரகுமன்னனை; ஶக்தேঃ=உற்சாகத்தைவிட; ப்ரத¹மம்= முதலிலும்; யாத்ராயை=படையெடுத்துச்செல்ல; சோத²யாமாஸ= தூண்டின.

(க-ரை) கூதிர்க்காலம் பிறந்ததும் ஆறுகளில் உள்ள நீர் வற்றி, மேடுகள் உண்டாயின; வழியில் உள்ள சேறு உலர்ந்துவிட்டது. இதனால், வலிமை மிகுந்த ரகுவுக்கு படையெடுத்துச் செல்லத் தூண்டுவதாக விருந்து; உற்சாகமூட்டியது. (ஒன்றற்கொன்றுதவி யணி)

சு॥ தஸ்மை ஸம்யக்[2]கு[8]தோ வஹ்நிவாஜிநீராஜநா விதெ[8]ள ।
ப்ரத[2]க்ஷிணாசிர் வ்யாஜேந ஹஸ்தே நேவ ஜயம் த[2]தெ[2]ள ॥ 26

(ப-ரை) வாஜி = குதிரைகளின்; நீராஜநாவிதெ[8]ள = ஆலத்தி யெடுக்குந் தொழிலில்; ஸம்யக் = நூன் முறைப்படி; ஹுத: = ஓமம் செய்யப்பட்ட; வஹ்நி: = அக்கினி; ப்ரத[2]க்ஷிண = பிரதக்ஷிண உருவ முள்ள; அர்சி = கொழுந்துகளின்; வ்யாஜேந = போலியால்; ஹஸ்தேந = கையைப் போல்; தஸ்மை = அந்த ரகுமன்னனுக்கு; ஜயம் = வெற்றியை; த[2]தெ[2]ள = கொடுத்தது.

(க-ரை) ரகுமன்னன் குதிரைகளுக்காக நீராஜனம் என்னும் சாந்தி ஓமம் செய்தான். அதில் எழுந்த கொழுந்து வெற்றி கொடுப் பதாய் பிரதக்ஷிணமாகச் சுற்றியது. (கருத்துடையடைகொளி யணி)

சு॥ ஸ கு[2]ப்தமூலப்ரத்யந்த: ஶுத்த[8]பார்ஷ்ணிரயாந்வித: ।
ஷட்[2]வித[8]ம் ப[2]லமத[2]ாய ப்ரதஸ்தே[1] தி[2]க்[2]ஜிகீ[2]ஷயா ॥ 26

(ப-ரை) கு[2]ப்த = காக்கப்பட்ட; மூல = தான் வசிக்குமிடம் ப்ரத்யந்த: = அரணும்; ஶுத்[2]த[8] = படைகளால் காக்கப்பட்ட; பார்ஷ்ணி: = படைகளின் பின்புறமும்; அய = சுபங்களைத் தரவல்ல விதிகளுடன்; அந்வித: = கூடிய; ஸ: = அந்த ரகுமன்னவன்; ஷட் வித[8]ம் = ஆறுவகையான; ப[2]லம் = படை களை; ஆத[2]ாய = சேர்த்து கொண்டு; தி[8]க் = திக்குகளை; ஜிகீ[2]ஷயா = வெல்லும் எண்ணத் துடன்; ப்ரதஸ்தே[1] = புறப்பட்டான்.

(க-ரை) ரகுமன்னன் தன் பட்டணத்தையும் அருகில் உள்ள கருவூலத்தையும் அரணையுங் காக்கும்படியான படைகளை நிறுத்தி, தகுந்த தேவப்பிராமணர்கள் ஆசிகளைப் பெற்று, மூலபலம், ஏவலர் களையும் சேர்த்துக்கொண்டு நான்குத் திசைகளிலுள்ள நாடுகளை வெல்லும் எண்ணத்துடன் புறப்பட்டான். (சுருங்கச்சொல்லலணி)

ஸு ॥ அவாகிரந் வயோவ்ரித்[2]த[3]ாஃ தம் லாஜைஃ பௌர யோஷிதஃ ।
ப்ரிஷதை[2]ர் மந்த[3] ரோத்[2]தூ[3]தைஃ க்ஷீரோர்மய இவாச்யுதம் ॥ 27

(ப-ரை) வயஃ வ்ரித்[2]த[3]ாஃ = வயது முதிர்ந்த பெரியோர்களாகிய; பௌரயோஷிதஃ = பட்டணத்திலுள்ள பெண்மணிகள்; தம் = அவ்வாறு சென்றுக்கொண்டிருக்கும் ரகுமன்னனுக்கு; லாஜைஃ = பொரிகளைக் கொண்டு; க்ஷீரோர்மயஃ = பாற்கடல் அலைகள்; மந்த[2]ர = மந்தரமென்னும் மலையால்; உத்[2]த[3]ாதைஃ = சிதறடிக்கப்பட்ட; ப்ரிஷதைஃ = திவலைகளுடைய; அச்யுதம் இவ = மகா விட்டுணுபோன்று; அவாகிரந் = தெளித்தனர்.

(க-ரை) ரகு மாமன்னன் அவ்வாறு செல்லும்போது பட்டணத்திலுள்ள கிழவிகள் அவன்மீது அன்பும் சுபமும் அறிவிக்கவல்ல நெற்பொறிகளைத் தூவினார்கள். அது பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து தெறித்த திவலைகள் திருமாலின்மீது விழுந்தது போலிருந்தது. (தொடர்புயர்வு நவிற்சியணி)

ஸு ॥ ஸயயௌ ப்ரத்[1]மம் ப்ராசீம் துல்யஃ ப்ராசீந ப[2]ர்ஹிஷா ।
அஹித நநிலோத்[2]தூ[3]தைஃ தர்ஜயந் நிவ கேதுபி[3]ஃ ॥ 28

(ப-ரை) ப்ராசீந ப[2]ர்ஹிஷா = தேவேந்திரனுக்கு; துல்யஃ = நிகராய; ஸஃ = அந்த ரகுமன்னன்; அநில = வாயுவால்; உத்[2]தூ[3]தைஃ = முன்னால் வீசப்பட்ட; கேதுபிஃ = கொடிகளால்; அஹிதாந் = பகைவர்களை; தர்ஜயந்நிவ = அச்சப்படச் செய்பவன் போல்; ப்ரத[1]மம் = முதலில்; ப்ராசீம் = கீழ்த்திசை நோக்கி; யயௌ = சென்றான்.

(க-ரை) தேவேந்திரனுக்கு நிகரான ரகுமன்னன் பகைவர்கட்கு அச்சமூட்டும் அனுகூலமான வாயுவால் முன்னுக்குப் பறக்கும் கொடிகளுடன் முதன் முதலில் கீழ்த்திசையை நோக்கிச்சென்றான். (பதப்பொருட்காட்சியணி)

ஸு ॥ ரஜோபி[3]ஸ் யந்த[2]நோத்[3]தூ[2]தைஃ க[2]ஜைஶ்ச க[3]நஸந்நிபை[3]ஃ ।
பு[3]வஸ் ஸ்த[1]ல மிவவ்யோம குர்வந் வ்யோமேவ பூ[3]தலம் ॥ 29

(ப-ரை ஸ்யந்த[2]ந = தேர்களிலிருந்து; உத்[2]தூ[3]தைஃ = சிதறடிக்கப்பட்ட; ரஜோபி[3]ஃ = தூசிகளாலும்; [3]கநஸந்நிபை[3]ஃ = மேகங்களுக்கு நிகரான; கஜைஶ்ச = யானைகளோடும்; வ்யோம = ஆகாயம்; பு[3]வ = பூமியின்; ஸ்தலமிவ = இடம் போன்று; பூ[3]தம் = பூதலத்

தையும்; வ்யோமேவ = ஆகாயத்தையும்; குர்வந்ஸ்ந் = செய்தவனாய்; யயௌ = புறப்பட்டான்.

(க-ரை) அந்த ரகு மன்னனின் தேர்களுடைய தூசிகள் வானிற்படர்ந்து, ஆகாயம் பூமியைப்போல் தோற்றமளிக்க வல்லதாய் எங்கும் பரவியதாலும் புவிமீது யானைகளின் வண்ணத்தாலும் நடையாலும், பரிமாணத்தாலும் முகில்களுக்கு நிகராகப் போய்க் கொண்டிருப்பதால் பூமி ஆகாயம் போலும், ஆகாயமே பூமியாகவும், தோற்றமளிக்கப் புறப்பட்டுச் சென்றான்.

சு॥ ப்ரதாபோऽக்2ரே ததஃ ஶப்2த2ஃ பராக2ஸ் தத2நந்தரம் ।
யயௌ பஶ்சாத்2 ரத1ாதீதி சதுஷ்கந்தே2வ ஸாசமூஃ ॥ 30

(ப-ரை) அக்2ரே = முன்னால்; ப்ரதாபஃ = பெருமையும்; ததஃ = பின்னால்; ரத1ஆதி = தேர்கள் முதலியன உள்ள நால்வகைப் படைகள்; இதி = இவ்விதமாக; ஸா = அந்த; சமூஃ = படைகள்; சதுஃ = நான்காய; ஸ்கந்தே2வவ = வியூகம் (வகுப்பு) உண்டாயவைகளாய்; யயௌ = சென்றன.

(க-ரை) முன்னால் பிரதாபமும் பின்னால் படைகளின் ஆரவாரமும், அவர்கள் பின் படைகளின் பாதங்களிலிருந்து பறக்கும் தூசிகளும், அதன் பின் துணைப்படையும். இவ்வாறாக நான்கு வியூகமும் வகுக்கப்பட்டு. ரகுயின் படைகள் சென்றன. வினைமுதல் விளக்கணி)

சு॥ மருப்ரிஷ்ட1ாந் யுத3ம்ப3ாம்ஸி நாவ்யாஃ ஸுப்ரதரா நதீ2ஃ।
விபிநாநி ப்ரகாஶாநி ஶக்திமத்வாச் சகார ஸஃ ॥ 31

(ப-ரை) ஸஃ = அந்த ரகுமன்னன்; ஶக்திமத்வாத் = திறமையுள்ளவனாதலால்; மருப்ரிஷ்டாநி = கானல்களை; உத3ம்பாம்ஸி = தண்ணீர் உடையவதாகவும்; நாவ்யாஃ = கலங்களால்; நதி2ஃ = ஆறுகளை; ஸுப்3ரதரர் = எளிதில் கடக்கவல்லதாய்ச் செய்தும்; விபிநாபி = காடுகளை வெட்டிப் பாதைகளும்; சகார = செய்தனர்.

(க-ரை) ரகுமன்னன் திறமையுள்ளவனாதலால், நீரில்லா விடங்களில் நீருண்டாக்கியும், கலங்களால் கடக்கவல்ல ஆறுகளை எளிதில் கடக்கக் கூடியவைகளாகவும், காடுகளை வெட்டி இடப் பரப்பும் உண்டாக்கினான். (வீறுகோளணி)

ஸு॥ ஸ ஸேநாம் மஹதீம்கர்ஷந் பூர்வ ஸாக³ரகா³மிநீம் ।
ப²பெ²ள ஹரஜடாப்⁸ரஷ்டாம் க²ங்க²ாமிவ ப்³கீ²ரத¹ஃ ॥ 32

(ப-ரை) பூர்வ ஸாக²ரக²ாமிநீம் = கீழ்த்திசைக் கடலை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கும்; மஹதீம் = பெரிதாகிய; ஸேநாம் = படையை; க²ர்ஷந் = நடத்தும்; ஸஃ = ரகுமன்னன்; ஹரஜடாப்³ரஷ்டாம் = சிவனுடைய சடைமுடியிலிருந்து வீழ்ந்த; க²ங்க²ாம் = கங்கையை; கர்ஷந் = கொண்டு செல்லும்; ப³கீ²ரதஃஇவ = பகீரதனைப் போல்; ப²பெ³ள = மிளிர்ந்தான்.

(க-ரை) ரகுமன்னன் கீழ்த்திசைக்குப் படைகளைச் செலுத்துவது எவணிருந்ததென்றால், பகீரதன், சிவனுடைய சடாமுடியிலிருந்து வரும் கங்கையைக் கீழ்க்கடல் நோக்கிச் செலுத்தியது போலிருந்தது. அதாவது மிகப்பரவி இருந்தது. (புகழ்பொருளுவமையணி)

ஸு॥ த்யாஜிதைஃ ப¹லமுத்³க¹ாதஃ ப³க்²நைஶ்ச ப³ஹுதா³ந்ரிபைஃ ।
தஸ்யாஸீ து²ல்ப²ணோ மார்க²ஃ பாத²பைரிவ த²ந்திநஃ ॥ 33

(ப-ரை) ப¹லம் = ஊதியம்; த்யாஜிதைஃ = விடுவித்ததும்; உத்²க¹ாதை = பதவி நீக்கம் செய்யப்பட்டும்; ப²ஹுத³ = பல வழிகளில்; ப³க்²நைஶ்ச = வெல்லப்பட்டு; ந்ரிபைஃ = அரசர்களால்; பாத²பைஃ = மரங்களை; த²ந்திநஃ = யானைகள் முறிப்பதுபோல்; தஸ்ய = அந்த ரகுமன்னன்; மார்க²ஃ = வழி; உல்ப²ணஃ = பிரகாசமாவது; ஆஸீத் = ஆயிற்று,

(க-ரை) யானைகளால் மரங்கள் ஆட்டப்பட்டும், வேருடன் பிடுங்கப்பட்டும், உடைக்கவும் செய்யப்பட்டு, எவ்வாறு வழியானது விளங்குகிறதோ அவ்வாறு ரகுமன்னனும், பகைவரிடமிருந்து கப்பங்கள் பெற்றும் ஒடுக்குதல் முதலியவற்றால் அவன் திக்விஜயம் விளங்கிற்று. (விரிவுவமையணி)

ஸு॥ பௌரஸ்த்யாநேவ மாக்ராமம் ஸ்தாம் ஸ்தாந் ஜநபத²ாந்ஜயீ ।
ப்ராப தாளீவந ஶ்யாம முபகண்ட¹ம் மஹோத²தே³ஃ ॥ 34

(ப-ரை) ஜயீ = ஜயசீலனான ரகுமன்னன்; ஏவம் = மேலே கூறியவாறு; பௌரஸ்த்யாந் = கீழ்த்திசையில் தோன்றிய; தாம்ஸ்தாந் = அந்தந்த; ஜநபத²ாந் = நாடுகளை; ஆக்ரமந்ஸந் = பற்றிக்கொள்

வனாய்; தாளீ = பனைமரங்கள்; வந = காடுகளால்; ஶ்யாமம் = கருமையான; மஹோத³தே⁴꞉ = மாக்கடலின்; உபகண்ட²ம் = அருகில்; ப்ராப = அடைந்தான்.

(க-ரை) இவ்வாறு ரகுமன்னன் பகைவரை வென்றுக் கொண்டே, பனங்காடடர்ந்த கீழ்க்கடல் அருகில் சேர்ந்தான். (மென்மேலுயர்ச்சியணி)

சு॥ அநம்ராணாம் ஸமுத்³த⁴ர்து꞉ தஸ்மாத் ஸிந்து⁴ர யாதிவ ।
ஆத்மா ஸம்ரக்ஷிதை꞉ ஸிம்ஹை꞉ வ்ரித்திமா ஶ்ரித்ய வைதஸம் ॥ 35

(ப-ரை) அநம்ராணாம் = அடங்காதவர்களை; ஸமுத்³த⁴ர்து꞉ = நாசஞ்செய்யும்; தஸ்மாத் = அந்த ரகுமன்னனால்; ஸிந்து⁴ரயாதிவ = சிந்து ஆற்றின் வேகம் போன்று; ஸிம்ஹை꞉ = சிங்கநாட்டரசர்கள்; வைதஸம் = வேதஸம் என்னும் ஓர்வகை கொடியின்; வ்ரித்திம் = தொழிலைப் போல்; ஆஶ்ரித்ய = அண்டி; ஆத்மா = உடலை; ஸம்ரக்ஷித꞉ = காப்பாற்றிக்கொண்டான்.

(க-ரை) அடங்காதவர்களை நாசஞ்செய்யும் ரகுமன்னனுக்குப் பயந்து சிங்கள நாட்டு மன்னர்கள் ஆற்றுப் பெருக்குக்குவளைந்து கொடுக்கும் கொடியைப் போல் அடங்கியவர்களாய்த் தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள் (காரணமாலையணி)

சு॥ வங்காநுத்க¹ாய தரஸாநேதா நௌஸாத⁸நோத்³யதாந் ।
நிசக¹ாந ஜயஸ்தம்ப⁸ாந் க²ங்க³ா ஸ்ரோதோந்தரேஷு ச ॥ 36

(ப-ரை) நேதா = நாயகனான; ஸ꞉ = அந்த ரகுமன்னன்; நௌ = கலங்களின்; ஸாத⁸ந = உதவியால்; உத்³யதாந் = ஆயத்தமான; வங்காத் = வங்கநாட்டரசர்களை; தரஸா = வலிமையால்; உத்க¹ாய = நாசமாக்கி; க²ங்க²ா = கங்கையாற்றின்; ஸ்ரோத = வெள்ளத்திற்கு; அந்தரேஷு = இடையில் உள்ள நிலப்பகுதியை; ஜயஸ்தம்ப⁸ாந் = வெற்றிக் கொடியை; நிசக¹ாந = நட்டான்.

(க-ரை) ரகுமன்னன் கலங்களின் உதவியால் தாண்டி, வங்க நாட்டரசர்களை நாசமாக்கி, கங்கையாற்றுக்கு இடையில் உள்ள நிலப்பகுதியில் தன் வெற்றிக்கொடியை நாட்டினான். (வீறுகோளணி)

சு॥ ஆபாத²பத்²ம ப்ரணதாம் கலமா இவதே ரகு³ம் ।
ப²லைஸ் ஸம்வர்தயா மாஸுருத்க¹ாத ப்ரதிரோபிதாः ॥ 37

(ப-ரை) ஆபாத² பத்²ம=பாதகமலங்கள் வரை; ப்ரணதாः= வணங்குவோராதலால்; உத்க¹ாத = முன்பு அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டு; ப்ரதிரோஹிதः=மறுபடியும் அளிக்கப்பட்டவர் ஆகையால்; தே= அந்த வங்கத்தரசர்கள்! ஆபாத² பத்²ம= அடிகள்வரை ப்ரணதாः=வணங்கிய; (அவர்களை) உத்க¹ாத=முன்பு களையப் பட்டு; ப்ரதிரோபிதாः=பிறகு நடப்பட்ட; கலமா இவ= பயிர்களைப் போல்; ரகு²ம்=ரகுமன்னனுக்கு; ப²லைः=பொருள்களாலும்; தானியங்களாலும்; ஸுவர்த³யாமாஸ=நன்கு வளரச் செய்தனர்

(க-ரை) விதை விதைத்து முளைத்து நாற்றான பின்பு அவற்றைக் களைந்து மறுபடியும் நடப்பட்டுள்ள நெற்பயிர் கதிர்கள் விடும்போது வணங்கும் உருவத்தைப் போல்; அவற்றின் அடிவரை வளைந்து பயிரிட்டவனுக்குப் பலனாகக் கொடுத்து அவனை மகிழ் விப்பது போல், முதலில் பதவிநீக்கம் செய்து மறுபடியும் கொடுத்து விடப்பட்ட நாடுகளை உடைய வங்க நாட்டரசர் ரகுமன்னன் பாதங்கள் வரை தலை வளைத்து வணங்கிய பொருள்கள் கொடுத்து மகிழச் செய்தனர். (நிரெடுத்துக்காட்டுவமையணி)

சு ஸ தீர்த்வா கபிஶாம் ஸைந்யைः ப²த்²த²த்விரத² ஸேதுபி⁴ः ।
உத்கலைர்த³ர்சிதர்சிதபத¹ः களிங்க²ாபி⁴முகே¹ா யயௌ ॥ 38

(ப-ரை) ஸः= அந்த ரகுமகாராஜா; ப²த்²த⁸=கட்டப்பட்ட; த்²விரத²=யானைகளென்னும்; ஸேதுபி⁸ः=பாலமுள்ள; ஸைந் யைः=படைகளால்; கபிஶாம்=கபிசமென்னும் ஆற்றை; தீர்த்வா= தாண்டி; உத்கலைः=உத்கல நாட்டரசர்களால்; த³¹ர்ஶிதः=காட் டப்பட்ட; பத¹ஸ்ஸந்=வழியை நோக்கி; யயௌ=புறப்பட்டுச் சென்றான்.

(க-ரை) அந்த ரகுமன்னன் யானைகளை பாலமாக நிற்க வைத்து அதன் மீது தன் சேனைகளுடன் கபிஶா நதியைக்கடந்து, உத்கள நாட்டரசர்கள் காட்டிய பாதைகளில் நடந்து களிங்க நாட் டிற்குச் சென்றான். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ஸ ப்ரதாம் மஹேந்த்²ரஸ்ய மூர்த்⁴நிதீக்ஷ்ணம் ந்யவேஶயத் ।
அங்குஶம் த்²விரத²ஸ்யேவ யந்தா க²ம்பீ⁴ர வேதி²நः ॥ 39

(ப-ரை) ஸ꞉=அந்த ரகுமன்ன; மஹேந்த்²ரஸ்ய=மகேந்திர மலையின்; மூர்த்³நி=சிரத்தில்; தீக்ஷ்ணம்=சகிக்க முடியாத; ப்ரதாபம்=வலிமையை; யந்தா=சாரதி (ஓட்டுநர்) கம்பீ³ரவேதி³ந꞉=கம்பீரவேதி என்னும்; த்³விரத³ஸ்ய=யானையின்; மூர்த்³நி=சிரத்தில்; தீக்ஷ்ணாம்=கூரான; அங்குசமிவ=அங்குசம் போன்று; ந்யவேசயத்=குத்தினான்.

(க-ரை) தோல் துளைக்கப்பட்டு, ரத்தம் மாமிசம் கொட்டினாலும், பொருட்படுத்தாத மிகுந்த மதமுடைய கம்பீரவேதி என்னும் யானையின் சிரத்தின் மீது யானைப்பாகன் கூரான அங்குசத்தால் குற்றினதுபோல் ரகுமன்னன் ஏழு குலமலைகளுக்கு அரசனான மகேந்திரமலை மீது தன் பராக்கிரமத்தை விரிவுபடுத்தினான். (பெருமையணி)

சு ॥ ப்ரதி ஜக்³ராஹ காளிங்க³꞉ தமஸ்த்ரைர் க³ஜஸாத³ந꞉ ।
பக்ஷச்சே¹ தோ³த்³யதம் ஶக்ரம் ஶிலா வர்ஷீவ பர்வத꞉ ॥ 40

(ப-ரை) க³ஜஸாத³ந꞉=யானைகள் துணையாகக் கொண்ட; காளிங்க³꞉=களிங்க நாட்டரசன்; அஸ்த்ரை꞉=அம்புகளால்; தம்=அந்த ரகுமன்னனை; பக்ஷச்சே¹த³=இறகுகளை வெட்டுவதில்; உத்³யதம்=முயன்ற; ஶக்ரம்=தேவேந்திரனை; ஶிலாவர்ஷி=கற்களை மழைபோல் வீசும்; பர்வத இவ=மலையைப் போல்; ப்ரதி ஜக்³ராஹ=எதிர்க்கொண்டான்.

(க-ரை) பெரும்பான்மையான யானைகள் படைபலமாகக் கொண்ட களிங்க மன்னன், இறகுகளை வெட்டுவதற்கு முயன்ற தேவேந்திரன்மீது மலைகள் ஆலங்கட்டி (கல்மழைப்) பொழிந்தது போல் ரகுமன்னன்மீது ஆயுதங்களை விடுத்தான். (நிகர்தொடர் முழுதுவமையணி)

சு ॥ த்³விஷாம் விஷஹ்ய காகுத்ஸ꞉ தத்ர நாராச து³ர்தி³நம் ।
ஸந்மங்களஸ்நாதஇவ ப்ரதிபேதே³ ஜயஶ்ரியம் ॥ 41

(ப-ரை) காகுத்ஸ்த꞉=ரகுமன்னன் என்னும், தத்ர=மகேந்திர மலைமீது; த்³விஷாம்=பகைவர்களுடைய; நாராச=பாணங்களின்; து³ர்தி³நம்=மழையை; விஷஹ்ய=சகித்து; ஸத்மங்கள=சாத்திர விதிமுறைப்படி மங்களமான; ஸ்நாத இவ=குளியலடைந்தவன்போல்; ஜயஶ்ரியம்=வெற்றித் திருமகளை; ப்ரதிபேதே³=அடைந்தான்.

(க-ரை) ககுத்ஸ்தனுடைய மறபில் பிறந்த ரகுமன்னன் என்னும் மகேந்திர மலைமீது களிங்கனால் எய்யப்பட்ட பாணங்களென்னும் மழையில் சகிப்புத் தன்மையுடன் புனித நீராடுவதுபோல் நின்றிருந்தான். (பொருட்காட்சியணி)

சு॥ தாம்பூ2லீநாம் தளைஸ் தத்ர ரசிதாபாந பூ3மயஃ ।
நாரிகேளாஸவம் யோத3ஃ ஶாத்ரவம் வபபுர் யஶஃ ॥ 42

(ப-ரை) தத்ர = அம்மகேந்திர மலையில்; யோத3ாஃ = போர் வீரர்கள்; ரசிதா = செய்த; ஆபாநபூ3யஸ்ஸந்தஃ = அருந்தத்தக்க இடமுடையவர்களாய்; நாரிகேளாஸவம் = தேங்காயிலிருந்து செய்தெடுத்த ஆஸவத்தை; தம்பூலிநாம் த2ளைஃ = வெற்றிலைகளால்; ஶாத்ரவம் = பகைவர்களின்; யஶோவ = புகழைப் போல; பபுஃ = அருந்தினார்கள்.

(க-ரை) ரகுமன்னனுடைய படை வீரர்கள் மனம் போன போக்கில்; அம்மலை மீதுள்ள தென்னங்கள்ளை வெற்றிலைகளில் ஏந்திக்கொண்டு பகைவரின் புகழைக் குடிப்பது போல் அருந்தினார்கள். (உருவகவுயர்வுநவிற்சியணி)

சு॥ க்2ரிஹீத ப்ரதிமுக்தஸ்ய ஸத3ர்ம விஜயீத்ரிபஃ ।
ஶ்ரியம் மஹேந்த்2ர நாத1ஸ்ய ஜஹார நது மேதி3நீம் ॥ 43

(ப-ரை) த3ர்மவிஜயீ = அறம் பொருட்டு ஜயசீலனாகிய; ஸந்ரிபஃ = அந்த ரகுமன்னவன்; க்2ரீஹீத = ஏற்று; ப்ரதிமுக்தஸ்ய = விட்டுவிடப்பட்ட; மஹேந்த2ர நாத1ஸ்ய = களிங்க நாட்டரசனுடைய; ஶ்ரியம் = சம்பத்துக்களை; நஜஹார = கவர்ந்தானில்லை.

(க-ரை) வெற்றியே இயல்பாகக் கொண்ட ரகுமன்னன் கடமைக்காக முதலில் வெற்றி பெற்றாலும் பிறகு சரணடைந்தவர்களைப் பொருத்தருளுந் தன்மையுடையவனாதலால் மன்னிக்கப்பட்ட களிங்கமன்னனுடைய பொருள் மட்டும் பெற்றுக்கொண்டு அவனது நாட்டை அவனுக்கே விட்டுவிட்டான். (தன்குணமிகையணி)

சு॥ ததோ வேலாதடே ணைவ ப1லவத் பூக2மாலிநா ।
அக2ஸ்த்ய சரிதா மாஶ மநாஶாஸ்ய ஜயோ யயௌ ॥ 44

(ப-ரை) ததஃ = வெற்றிக்குப் பிறகு; ஸஃ = அந்த ரகுமன்னன்; ப1லவத் = காய்ந்துள்ள; பூக2 = கமுகு மரங்களின்; மாலிநா = வரிசை

களுடைய; வேலா தடநேவ = கடலோர இடத்திலேயே; அகஸ்த்ய சரிதாம் = அகத்திய முனிவராலடைந்த; ஆஶாம் = தென் திசையை நோக்கி; அநாஶாஸ்ய = வேண்டப்படாத; ஜயஸ்ஸந் = வெற்றி கண்டவனாய்; யயௌ = புறப்பட்டான்.

(க-ரை) தோல்வி அம்சமில்லாத ரகுமன்னன் கீழ்த் திசையி லிருந்து கனிந்த கமுகு மரங்களின் வரிசைகளுடைய கடலோர வழியே அகஸ்தியர் இருக்கும் தென்திசைக்குப் புறப்பட்டான். (தன் குணமிகையணி)

சு॥ ஸ ஸைந்ய பரிபோ⁴கே³ந க³ஜதா³ந ஸுக³ந்தி⁴நா ।
காவேரீம் ஸரிதாம்பத்யுঃ ஶங்கநீயா மிவாகரோத் ॥ 45

(ப-ரை) ஸঃ = அந்த ரகுமன்னன்; க³ஜதா³ந = யானைகளின் மத நீரால்; ஸுக³ந்தி⁴நா = நறுமணமுடைய; ஸைந்ய பரிபோ⁴கே³ந = படைகளில் உள்ளவர்களின் நுகர்தலால்; காவேரீம் = காவேரி யாற்றை; ஸரிதாம்பத்யுঃ = நதிகளின் பதியாகிய கடலோனுக்கு; ஶங்கநீயாமிவ = விசுவாசமற்றவள்போல்; ஆகரோத் = செய்தான்.

(க-ரை) ரகு மன்னனின் படையிலுள்ளவர் காவேரியில் குளிப் பதனாலும் அவர்கள் பூசிக்கொண்ட சந்தனத்தின் நறுமணமும்; யானைகள் தம் சிரங்களைக் கழுவிக்கொள்வதால் அவற்றின் மத வாசனையும் நதிகளின் பதியாகிய சமுத்திரன் காவேரிக்குப் பிறபுருடர்களின் சேர்க்கை உண்டாயிற்றோவென ஐயப்படும்படியாக கடல் வரையிலும் பரவியது. இதனால் அளவற்ற காலாட்படை, யானைப்படைகள் முதலியவை ரகுவுக்கு இருந்ததெனக் குறிக்கப் படுகிறது, (உருவகவுயர்வு நவிற்சியணி)

சு ॥ ப¹லை ரத்⁴யுஷிதாஸ் தஸ்ய விஜிகீ³ஷோர் க³தாத்⁴வநঃ ।
மரீசோத்³ ப்⁴ராந்த ஹாரீதாঃ மலயாத்³ரே ருபத்யகாঃ ॥ 46

(ப-ரை) விஜிகீ³ஷோঃ = வெற்றிகாண விரும்பும்; க³தஅத்⁴வநঃ = கடந்துவிட்ட வழியுடைய; (அல்லது-தீர்ந்துவிட்ட வழிநடை களைப்புடைய) தஸ்ய = அந்த ரகு மன்னனுடைய; ப³லைঃ = படை களால்; மரீச = மிளகு செடிகளில்; உத்³ப்⁴ராந்த = வாழும்; ஹாரீதாঃ = பச்சைநிறப் பறவைகளுடைய; மலயாத்³ரேঃ = மலய மலையின்; உபத்யகாঃ = அருகில் உள்ள நிலங்களை; அத்⁴யுஷிதாঃ = அடைந் தான்.

(க-ரை) ரகுமன்னன் படைகளுடன் வெகுதூரம் நடந்து பச்சைப்பறவைகள் நிறைந்துள்ள மிளகுச் செடிகள் உள்ள காடுகள் நிறைந்த மலயாசலத்தின் சரிவில் விடுதி செய்தான். (புணர் நிலையணி)

சு ॥ ஶஸம்ஶு: அஶ்வ க்ஷுண்ணாநாம் ஏலாநா முத்பதிஷ்ணவ: ।
துல்ய க^{2}ந்தி^{3}ஷு மத்தேப^3 கடேஷு ப^{1}லரேணவ: ॥ 47

(ப-ரை) அஶ்வ: க்ஷுண்ணாநாம் = குதிரைகளால் மிதியுண்ட; ஏலாநாம் = ஏலத்தின் கொடிகளிலிருந்து; உத்பதிஷ்ணவ: = பிறந்த; ப^{1}லரேணவ: = காய்களின் தூசிகள்; துல்ய க^{2}ந்தி^{3}ஷு = சமமான வாசனையுடைய; மத்தேப^{3}கடேஷு = மதயானைகளின் தலைகளில்; ஶஸம்ஶு: = ஒட்டிக்கொண்டன.

(க-ரை) குதிரைகளால் மிதியுண்ட ஏலக்காய்களின் தூசிகள் உயரப் பறந்து, அதே மணமுள்ள மதயானைகளின் தலைகளில் ஒட்டிக்கொண்டன. (தற்குறிப்பணி)

சு ॥ பே^{3}ாகி^{2} வேஷ்டந மார்கே^{2}ஷு சந்த^{2}நாநாம் ஸமர்பிதம் ।
நாஸ்ரஸத் கரிணாம் க்^{2}ரைவம் த்ரிபதீ^{2}ச் சே^{1}தி^{2}நாமபி ॥ 48

(ப-ரை) சந்த^{2}நாநாம் = சந்தன மரங்களுக்கு; பே^{3}ாகிவேஷ்டநமார்கே^{2}ஷு = பாம்புகள் சுற்றிக்கொண்ட வழித்தடங்களில்; ஸமர்பிதம் = வைக்கப்பட்ட; த்ரிபதீ^{2} = கால்கட்டுகளை; சே^{1}தி^{2}நாமபி = அறுத்துக் கொண்டுள்ளவை ஆயினும்; கரிணாம் = யானைகளுடைய; க்^{2}ரைவம் = கழுத்துக்குக் கட்டியுள்ள கயிறுகள்; நாஸ்ரஸத் = நழுவாமல் போயிற்று.

(க-ரை) சந்தன மரங்கட்குப் பாம்புகள் சுற்றிக் கொள்வதால் ஏற்பட்ட காடி (பள்ளங்)களில் மத யானைகளை கழுத்துக் கொலுசுகளால் கட்ட, அந்தக் கட்டு, கால் கொலுசுகளையும் அறுத்தெறியும் அவ்வேழங்களின் ஆர்ப்பாட்டத்திற்கும் கூட நழுவவில்லை, (உயர்வுநவிற்சியணி)

சு॥ திஶி மந்த^{2}யதே தேஜோ த^{2}க்ஷிணஸ்யாம் ரவேரபி ।
தஸ்யாமேவ ரகோ^{3}: பாண்ட்^{2}யா: ப்ரதாபம் நவிஷேஹிரே ॥ 49

(பரை) தக்ஷிணஸ்யாம் தி^{3}ஶி = தென்திசையில்; ரவேரபி = சூரியனுடைய; தேஜ: = ஒளியானது; மந்த^2ாயதே = குறைகிறது;

தஸ்யாம் ஏவ = அதே தென் திசையில்; பாண்டியமன்னவர்கள்; ரகோ²ஃ = ரகுமன்னனுடைய; ப்ரதாபம் - வீறின்; நவிஷேஹிரே = பொறுக்காது போயினர்.

(க ரை) தென்திசையில் தக்ஷிணாயன காலமானதால் சூரியன் பாண்டிய மன்னர்களுக்கு அஞ்சியவன் போன்று குறைந்த ஒளியுடையவனாகிறான்; அந்தப் பாண்டி மன்னர்கள் ரகுமன்னனுடைய வீறுக்கு சகிக்க முடியாமற் போனார்கள். (உயர்வுநவிற்சியணி)

சு॥ தாம்ரபர்ணீ ஸமேதஸ்ய முக்தாஸாரம் மஹோத³தே³ஃ ।
தே நிபத்ய த³து³ஸ் தஸ்மை யஶஸ் ஸ்வமிவ ஸஞ்சிதம் ॥ 50

(ப-ரை) தே = அந்தப் பாண்டிமன்னர்கள்; தாம்ரபர்ணீ = ஸமேதஸ்ய = தாமிரபர்ணி ஆறுடன் கூடிய; மஹோத³தே³ஃ = தென் மாக்கடலினின்று; ஸஞ்சிதம் = சம்பாதித்த; முக்தா ஸாரம் = முத்துக்களில் மேலானவற்றையும்; ஸ்வம் = தாமாக; ஸஞ்சிதம் = தேடிய; யஶஸ்வம் இவ = புகழ் போன்று; தஸ்மை = அந்த ரகுமன்னனுக்கு; நிபத்ய = வணங்கியவர்களாய்; த³து³ஃ = கொடுத்தான்.

(க-ரை) பாண்டிய மன்னர்கள் தாமிரபருணி ஆறு கடலில் கலக்குமிடத்தில் தேடியெடுத்த நல்லமுத்துக்களை ரகுமன்னனுக்கு வணங்கி செலுத்தி, அவர்களின் புகழை ஒப்படைப்பது போல் கொடுத்தனர். (தற்குறிப்பணி)

சு॥ ஸ நிர்விஶ்ய யதாகாமம் தடே ஷ்வாலீட³ சந்த³நௌ ।
ஸ்தநாநிவ தி³ஶஸ் தஸ்யாஃ ஶைலௌ மலய த³ர்து³ரௌ ॥ 51

அஸஹ்ய விக்ரமஸ்ஸஹ்யம் தூ³ராந்த முக்தமுதந்வதா ।
நிதம்ப³மிவ மேதி³ந்யாஸ் ஸ்ரஸ்தாம் ஶுகமலங்க³யத் ॥ 52

(ப-ரை) அஸஹ்யவிக்ரமஃ = சகிக்கமுடியாத பராக்கிரமமுடைய ஸஃ = அந்த ரகுமன்னன்; தடேஷு = கரையோரத்திலும் அதன் பக்கங்களிலும்; ஆலீட³ சந்த³நௌ = பரந்துள்ள சந்தன மரங்களும்; தஸ்யாஃ = அந்த; தி³ஶஃ = தென் திசையின்; ஸ்தநாவிவ ஸ்தி¹தௌ = கொங்கைகளோவெனத் தோற்றமளிக்கும்; மலயத³ர்து³ரௌ = மலயம் தர்துரம் என்ற பெயர்களுடைய; ஶைலௌ = மலைகளை; யத¹ாகாமம் = விரும்பியவாறு; நிர்விஶ்ய = நுகர்ந்து; உத³ந்வதா = சமுத்திரனால்; தூ³ராந்முக்தம் = தொலைவில் விடப்பட்ட; ஸ்ரஸ்த

= நழுவிய; அம்பு³ கம் = ஆடையுடைய; மேதிந்யா: = பூமியின்; நிதம் ப²ம் இவஸ்தி¹தம் = இடுப்பின் கீழ்ப்பாகமோ என்பது போன்று; ஸஹ்யம் = சஹ்ய மலையையும்; அலங்க⁰யத் = தாண்டினான்.

(க-ரை) கரையோரம் சந்தனமரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ள மலயம் தர்துரம் என்னும் இரண்டு மலைகளும் தென்திசை யெனும் மங்கையின் சந்தனம் பூசிய கொங்கைகளோ வென தன் விருப்பம்போல் நுகர்ந்துவிட்டு, பொருக்க முடியாத வீரமுடைய ரகு மன்னன் கடலை, தொலைவில் விட்ட ஸஹ்ய பருவதத்தை, பூதேவியின் ஆடை நழுவிய பிருட்டம் போல் தாண்டிச் சென்றனர். (மிகையொற்றுமையுருவகவணி)

ஊ ॥ தஸ்யாநீகைர் விஸர்பத்²பி⁸: அபராந்த ஜயோத்²யதை: ।
ராமாஸ் ரோத் ஸாரிதோ௨ப்⁸யாஸீத் ஸஹ்யலக்²ந இவார்ணவ:॥ 53

(ப-ரை) அபராந்த = மேற்கு நாடுகளில்; ஜய = வெற்றியில்; உத்யுதை: = முயன்று; விஸர்பித்²பி⁸: = சென்றுக் கொண்டிருக்கும்; தஸ்ய = அந்த ரகுமன்னனுடைய; அநீகை: = படைகளால்; அர்ணவ: = சமுத்திரன்; ராம = பரசுராமருடைய; அஸ்த்ர = ஆயுதங் களால்; உத்ஸாரிதோ।பி = விரட்டப்பட்டவை ஆயினும்; ஸஹ்ய = ஸஹ்ய பருவதமெனும் மலையை; லக்²ந இவ = பொருந்தியவன் போல்; ஆஸீத் = ஆயிற்று.

(க-ரை) மேலை நாடுககளை வெல்ல சஹ்யபருவதத்திற்கும் தென் கடலுக்கும் இடையே போகும் பரந்த ரகு மன்னனுடைய படைகள்; முன்பு பரசுராமர் பிராமணருக்குத் தானங்கொடுத்த நிலத்தைவிட அன்னியமான பூமியாய் ஏற்படுத்திக்கொள்ள, தன் னுடைய கோடாரியால் சஹ்ய பருவத்தின் சற்று தொலைவிலிருந்து அப்புறப்படுத்திய சமுத்திரத்துடன் மறுபடியும் சஹ்யபருவதத்தைக் கலந்துக்கொண்டவாறு இரண்டாம் கடல் தென்பட்டது. (தொடர் புயர்வு நவிற்சியணி)

ரு ॥ பயோத்ஸ்ரிஷ்ட விபூஷாணம் தேந கேரள யோஷிதாம் ।
அலகேஷு³ சமுரேணு: ஸூர்யப்ரதி நிதீ⁰க்ரித: ॥ 54

(ப-ரை) தேந = அந்த ரகுமன்னனுடைய; ப⁸ய = அச்சத்தால்; உத்ஸ்ரிஷ்ட = களையப்பட்ட; விபூஷாணாம் = ஆபரணங்களுடைய; கேரளயோஷிதாம் = கேரள நாட்டுப் பெண்களின்; அலகேஷு³ =

நெற்றியிலுள் மயிர்களில்; சமூரேணுঃ=படைகளின் தூசிகள்; சூர்ணப் ரதிநிதீ3க்ரிதঃ=குங்குமம் முதலிய தூள்களுக்கு உவமான மாகச் செய்யப்பட்டது.

(க-ரை) ரகு மன்னனுடைய பயத்தால் கேரளத்தரசப் பெண்கள் நகைகளைக் களைந்துவிட்டு ஓடத்தொடங்கினர். அப்போது ரகுவின் படைகளுடைய பாதங்களின் தூசியானது அவர்களின் கேசங்களுக்கு ஒட்டிக்கொண்டு குங்குமம் போல தோன்றியது (விரிபுவமையணி)

சு ॥ முரளா மாருதோத்2தூ3த மக2மத் கைதகம் ரஜঃ ।
தத்2யோத3 வாரவாணாநா மயத்ந படவாஸதாம் ॥ 55

(ப-ரை) முரளா=முரளா நதியுடைய; மாருத=வாயுவால்; உத்2தூ3த=சிதறடிக்கப்பட்ட; கைதகம்=தாழம் பூவைச் சார்ந்த; ரஜঃ=மகரந்தப்பொடி; தத்2யோத3ঃ=அந்தப் படைவீரர்களின்; வாரவாணாநாம்=கவசங்களுக்கு; அயத்ந படவாஸதாம்=முயலாமலே பூசப்பட்ட நறுமண முள்ளவையாக; அக2மத்=ஆயிற்று.

(க-ரை) வழியில் முரளா நதியிலிருந்து வீசிய குளிர்காற்றினால் அப்பக்கங்களில் செடிகளிலுள்ள தாழம்பூக்களின் மகரந்தப்பொடி ரகுவின் படைவீரர்களுடைய கவசங்களின்மீது படிந்து, முயலாமலே சந்தனத்தூள் தெளித்தாற்போலிருந்தது. (வேற்றுப் பொருள் வைப்பணி)

சு ॥ அப்3யபூ3யத வாஹாநாம சரதாம் கா3த்ர ஶிஞ்ஜிதைঃ ।
வரமபி3ঃ பவநோத்3தூ3த ராஜ3தாளீ வநத்3வநிঃ ॥ 56

(ப-ரை) சரதாம்=போய்க்கொண்டுள்ள; வாஹநாம்=குதிரைகளின்; கா3த்ரஶிஞ்ஜிதைঃ=உடல்களில் ஒலிக்கச் செய்யும்; வர்மபி3ঃ=கவசங்களால்; பவ நோத்2தூ3த=காற்றாலசைந்த; ராஜதாளீ=தாளிப் பனை; வந=தோட்டங்களின்; த்3வநிঃ=ஓசை; அப்3யபூ3யத=புறக்கணிக்கப்பட்டது.

(க-ரை) குதிரைகள் நடந்துக்கொண்டிருக்கையில், அவற்றின் கவசங்களுடைய ஓசை, காற்றுக்கு அசையும் தாளிப்பனை தோப்பிலிருந்து வரும் ஒலியையும் மிஞ்சியது. அதாவது இக்கவசத்தின் ஒலியில், இதுபோன்ற தாளிப்பனை ஓசையும் காதிற்கெட்டியது. (விரியுவமையணி)

சு ॥ க¹ர்ஜூரீ ஸ்கந்த²நத்²த³ாநாம் மதே²ாத்²க²ார ஸுக²ந்தி³ஷு।
கடேஷு கரிணாம்பேதுঃ புந்நாகே²ப்³யঃ ஶிலீமுக¹াঃ ॥ 57

(ப-ரை) க¹ர்ஜூரீஸ்கந்த்³=ஈச்சமரத்தின் அடிக்கு; நத்²த³ாநாம்=கட்டப்பட்ட; கரிணாம்=யானைகளின்; மத² உத்²க²ார= மதநீர் ஒழுகுதலால்; ஸுக²ந்தி³ஷு=நறுமணமுடைய கன்னங் கட்காக; ஶிலீமுக¹ாঃ=வண்டுகள்; புந்நாகே³ப்³யঃ பேதுঃ=புன்னா கமரங்களை விட்டுவிட்டன.

(க-ரை) ஈச்சமரத்தடிகளுக்குக் கட்டப்பட்ட யானைகளின் கன்னங்களில் ஒழுகும் நறுமணமுள்ள மதஜலத்திற்காக வண்டுகள் புன்னை மரங்களை விட்டுவிட்டன. அதாவது புன்னைப் பூக்களை விட்டுவிட்டு யானைகளின் மீது சாய்ந்தன (மொய்த்தன), (முறையி லுயர்வு நவிற்சியணி)

சு॥ அவகாஶம் கிலோத³ன்வாந் ராமா யப்³யர்தி¹தோ த³தெ³ள ।
அபராந்த மஹீபால வ்யாஜேந ரக³வேகரம் ॥ 58

(ப-ரை) உத³ந்வாந்=சமுத்திரன்; ராமாய=பரசுராமனுக் காக; அப்³யர்தி¹தஸ்ஸந்=இரந்தவனாய்; அவகாஶம்=இடம்; த³தெ³ளகில=கொடுத்தானன்றோ; ரக³வே து=ரகுமன்னனுக்காக வென்றாலோ; அபராந்த மஹீபால=மேற்றிசை அரசர்களின்; வ்யாஜேந=வீண்காரணத்திற்கு; கரம்=காணிக்கையை; த³தெ³ள =கொடுத்தான்.

(க-ரை) வருணன் முன்பு பரசுராமனால் இரக்கப்பட்டவனாய் சற்று இடம் கொடுத்தான். தற்போது ரகுமன்னனுக்கென்றாலோ மேற்றிசை மன்னர்களென்னும் சாக்கில் காணிக்கை அளித்தான். அதாவது பரசுராமனைக் காட்டிலும் ரகு மேம்பட்டவன் என்பது பொருள். (தற்குறிப்பணி)

சு॥ மத்தேப³ ரத²னோத்கீர்ண வ்யக்த விக்ரம லக்ஷணம் ।
த்ரிகூடமேவ தத்ரோச்சைர் ஜ்யஸ்தம்ப³ம்சகாரஸঃ ॥ 59

(ப-ரை) தத்ர=அந்த மேற்குத் திசையில்; ஸঃ=ரகுமன்னன்; மத்த இப³ ரத²ந=மத யானைகளின் தந்தங்களால் உண்டான; காயங்கள் என்னும்; வ்யக்த=நன்கு காணப்படும்; விக்ரமலக்ஷணம் =வீரத்தின் அறிகுறிகள் உள்ள; த்ரிகூடமேவ=திரிகூடமலையையே

உச்சை꞉=உயர்ந்த; ஜயஸ்தம்ப³ம்=வெற்றிக் கொடியாக; சகார=செய்தான்.

(க-ரை) ரகு மன்னனுடைய மதயானைகள் அவற்றின் தந்தங்களால் திரிகூடமலையைத் தாக்கி, அவனுடைய வெற்றிக்கு அறிகுறியாக எழுத்துக்கள் போன்ற கீறல்களை உண்டாக்கின. இதனால் உயர்ந்த அந்த மலை அவனுடைய வெற்றிக் கொடிபோல் தோற்றமளித்தது. (சிறப்பணி மற்றும் தற்குறிப்பணி)

சு॥ பாரஸீகாம்ஸ்ததோ ஜேதும் ப்ரதஸ்தே¹ ஸ்த¹லவர்த்மநா ।
இந்த்²ரியாக்¹யாநிவ ரிபூம் ஸ்தத்வஜ்ஞாநேந ஸம்யமீ ॥ 60

(ப-ரை) பிறகு. ஸ꞉=ரகுமன்னன்; ஸம்யமீ=யோகீசுவரன்; தத்வஜ்ஞாநேந=மெய்யறிவால்: இந்த்²ரியாக்¹யாந்=புலன்களென்னும் பெயர் பெற்றுள்ள; ரிபூந் இவ=பகைவர்களைம் போல்; ஸ்தலவர்த்மநா=கடலோரமுள்ள வழியில்; ப்ரதஸ்தே¹=புறப்பட்டான்.

(க-ரை) பிறகு, தவசியானவன் மெய்யறிவால் புலன்களென்னும் பகைவரை வெல்வது போன்று ரகு மன்னன் பாரசீக நாட்டு அரசர்களை வெல்லும்பொருட்டு கடலோரமுள்ள வழியில் புறப்பட்டு சென்றான். (நிகரெடுத்துக்காட்டுவமையணி)

சு ॥ யவநீ முக¹பத்²மா நாம் ஸேஹ மது³மத²ம் நஸ꞉ ।
ப²ாலாதபமிவாப்³ஜாநா மகால ஜலதே²ாத²ய꞉ ॥ 61

(ப-ரை) ஸ꞉=அந்த ரகுமன்னன்; யவநீ=யவந நாட்டுப் பெண்களின்; முக¹பத்²மாநாம்=தாமரைக்கு நிகரான முகங்களில்; ம³துமத²ம்=மதுவாலுண்டாகிய வெறியை; குறித்தக் காலமல்லாது மாறான காலத்தில்; ஜலத²=மேகங்களின்; உத²ய꞉=உண்டாதல் போன்று; அப்³ஜாநாம்=தாமரையின்; ப²ால ஆதபம் இவ=இளம் பரிதியைப் போல்; நஸேஹே=தாங்கமுடியாது போயிற்று.

(க-ரை) மழையிலாக் காலத்தில் மேகங்கள் உண்டாவது போலும், காலையில் பூக்கும் தாமரைப் பூக்களை ஒளிக்கச் செய்யும் வெய்யிலை மறைக்கும் தன்மையுடைய தாமரை முகங்கொண்டுள்ள பாரசீக நாட்டுப் பெண்கள் அவர்களது ஆடவர்களுடன் மதுவருந்தி மதங்கொண்டிருப்பதை ரகுமன்னன் கண்டு சகிக்காமற்போனான். அதாவது அவர்களின் உயர்வைக் கண்டு அவ்வாடவர்களுடன்

பெரும்போர் புரிய ரகுமன்னன் முயன்றான். (சொற்பொருட்பின் வருவிளக்கணி)

சு ॥ ஸங்க்²ராமஸ் துமுலஸ் தஸய பாஶ்சாத்யை ரஶ்வஸாத³நைஃ ।
ஶார்ங்க² கூஜித விஜ்ஞேய ப்ரதியோதே³ ரஜஸ்ய பூ³த் ॥ 62

(ப-ரை) தஸ்ய = அந்த ரகுமன்னனுக்கு; அஶ்வ ஸாத³நைஃ = புரவிகளே துணையாயுள்ள; பாஶ்சாத்யைஃ = மேநாட்டு மிலேச்சர்களுடன்; ஶார்ங்க² கூஜித = விற்களின் நாண் ஒலிகளால்; விஜ்ஞேய = அறிவிக்கப்பட்ட; ப்ரதியோதே³ = பகைவீரர்கள் உள்ள; ரஜஸி = தூசில்; துமுலஃ = பெரும் போர்; அபூ³த் = உண்டாயிற்று.

(க-ரை) அளவிலாக் குதிரைப் படைகள் உடைய துருக்கியர்களால் எழுப்பப்பட்ட புழுதியில் வில்லின் நாண்கயிற்றொலியால் மட்டும் அறியவல்ல பகைவரின் படைகளுடன் ரகுமன்னனுக்குப் பெரும் போர் உண்டாயிற்று. (மிகுதினவிற்சியணி)

சு ॥ ப³ல்லாப வர்ஜிதை ஸ்தேஷாம் ஶிரோபி³ஶ்ஶ்மஶ்ருலைர் மஹீம் ।
தஸ்தார ஸரக²ா வ்யாப்தைஃ ஸக்ஷௌ²த்ர படலைரிவ ॥ 63

(ப-ரை) ஸஃ = அந்த ரகுமன்னன்; ப³ல்ல = அம்புகளால்; அபவர்ஜிதைஃ = வெட்டப்பட்ட; ஶ்மஶ்ருலைஃ = வளர்ந்த தாடிகளுடைய; தேஷாம் = அம்மிலேச்சர்களுடைய; ஶிரோபி³ஃ = தலைகள்; ஸரக³ாஃ = தேன் வண்டுகளால்; வ்யாப்தைஃ = விரிவடைந்த; க்ஷௌத்³ர படலை ரிவ = தேன்கூடுகள் போன்று; மஹீம் = பூ³மியை; தஸ்தார = மறைத்தன.

(க-ரை) ரகுமன்னன் அம்புகளால் துருக்கியர்களின் கழுத்துக்களை வெட்டிச் சாய்க்க, அத்தலைகள் நீண்டதாடிகள் உடையவை ஆதலால், தேன் வண்டுகள் கட்டும் தேன்கூடுகள் போன்றிருந்தன. அவ்வாறு வெட்டுண்ட தலைகள் பூமியைக் காணமுடியாது மறைந்தன. (உவமை மற்றும் உயர்வுநவிற்சியணி)

சு॥ அபபீத ஶிரஸ்த்ராணாஃ ஶேஷாஸ்தம் ஶரணம்யயுஃ ।
ப்ரணிபாத ப்ரதீகாரஃ ஸம்ரம்பே⁴ாஹி மஹாத்மாநாம் ॥ 64

(ப-ரை) ஶேஷா = மீதமுள்ளவர்கள்; அபநீத = நீக்கப்பட்ட; ஶிரஸ்த்ராணாஸ் ஸந்தஃ = தொப்பிகள் உடையவர்களாய்; தம் = ரகுமன்னனை; ஶரணம் யயுஃ = சரணடைந்தனர்; தத²ாஹி =

அம்ஹுசரி; மஹாத்மநாம் = மகான்களுடைய; க்ஷோபி⁴ = கலக்கம்; ப்ரணிபாத = வணங்குதலை; ப்ரதீகார: = மாற்றுத் தொழிலுடையது.

(க-ரை) செத்தவர்கள் போக மிகுந்தவர்கள் தொப்பிகளைக் கழற்றிக் கொண்டு, ரகுமன்னனை சரணடைந்தனர். மகான்கள் பகைவர்களை செறுக்கையடக்குவதில் நோக்கமுடையவர்களே யன்றி, அவர்கள் அடங்கிய பின் கொல்லவேண்டுமென்ற சினம் கொள்வார்கள் அல்லர். (பெருமையணி)

சு॥ விநயந்தேஸ்ம தத்²யோத³ா மது²பி⁴ர் விஜயஶ்ரமம் ।
ஆஸ்தீர்ணாஜிந ரத்நாஸு த்³ராக்ஷாவலய பூ⁴மிஷு 65

(ப-ரை) தத்யோத⁴ா: = அந்த ரகு⁴வின் படைவீரர்கள்; ஆஸ்தீர்ண = பரப்பிய; அஜிநரத்நாஸு = மேலாய சருமங்கள் மீது; த்ராக்ஷாவலய பூமிஷு = திராட்சைப் பந்தல்கள் உடைய இடங்களில் அமர்ந்து; மது⁴பி: = மதுபானங்களால்; விஜயஶ்ரமம் = போரில் உண்டான களைப்பை விநயந்தேஸ்ம = போக்கிக் கொண்டனர்.

(க-ரை) அந்த ரகுமன்னனின் போர்வீரர்கள் திராட்சைப் பந்தல்களின் கீழ், தோல்களால் இருக்கைகள் அமர்த்திக் கொண்டு, உட்கார்ந்து, திராட்சை சாராயம் அருந்தி போரில் ஏற்பட்ட களைப்பைப் போக்கிக் கொண்டனர். (வினைமுதல் விளக்கணி),

சு॥ தத: ப்ரதஸ்தே¹ கௌபே³ரீம் ப⁴ாஸ்வாநிவ ரகு⁴ர் தி³ஶம் ।
ஶரைருஸ்த்ரை ரிவோதீ³ச்யாந் உ²த்த³ரிஷ்யந் ரஸாநிவ ॥ 66

(ப-ரை) தத: = பிறகு; ரகு⁴: = ரகுமன்னவன்; ப⁴ாஸ்வாநிவ = சூரியன்; உஸ்த்ரை ரிவ = கதிர்கள் உண்டாக்குதலால்; ரஸாநிவ = தண்ணீரை; உத்²த³ரிஷ்யந் = ஒழித்துவிடுவது போல்; ஶரை: = பாணங்களால் பகைவரை ஒழித்துவிட; கௌபே³ரீம் = குபேரனுடைய; தி³ஶம் = வடதிசையை நோக்கி; ப்ரதஸ்தே¹ = புறப்பட்டான்.

(க-ரை) பிறகு, ரகுமன்னன், சூரியன் தன் கதிர்களால், தண்ணீரை ஒழிக்க உத்தராயணத்தில் நடப்பதுபோல், தன் பாணங்களால், வடநாட்டிலுள்ள பகைவர்களை வெல்லும் நோக்கத்துடன் வடதிசையை நோக்கிச் சென்றான். (விரிவுவமையணி).

ஸு ॥ விநீதாத்²வஶ்ரமா ஸ்தஸ்ய சிந்து³தீர விவேஷ்டநை: ।
த²து³வுர் வாஜிந ஸ்கந்த³ாந் லக்²ந குங்கும கேஸராந் ॥ 67

(ப-ரை) ஸிந்து³தீர = சிந்துநதிக் கரையில்; விவேஷ்டநை: = புரளுவதால்; விநீத = போக்கிக் கொண்ட; அத்³வஶ்ரமா: = வழி நடத்தலால் உண்டான களைப்புடைய; தஸ்ய = அந்த ரகுமன்ன னின்; வாஜிந: = புரவிகள்; லக்²ந = பொருந்திய; குங்கும = குங்குமப் பூக்களின்; கேஸராந் = மகரந்தப் பொடிகளுடைய; ஸ்கந்த³ாந் = கழுத்துக்களை; த²து³வு: = அசைத்தன.

(க-ரை) சிந்துவென்னும் மேற்கு நோக்கிப்பாயும் ஆற்றங் கரையில் ரகுமன்னனுடைய புரவிகள் வழிநடந்த சிரமத்தைப் போக்கிக்கொள்ள புரண்டு அவற்றின் உடலை அசைத்தன. அப்போது அவற்றின் கழுத்துக்களில் ஒட்டிக்கொண்ட குங்குமப் பூக்களும் அவற்றின் மகரந்தப் பொடியும் உதிர்ந்தன. (அதாவது- அவ்விடம் அவ்வளவு அதிகமான குங்குமப் பூக்கள் இருந்தன.) (மிகுதினவிற்சியணி)

ஸு ॥ தத்ர ஹூணாவ ரோத³ாநாம் ப³ர்த்ருஷு வ்யக்த விக்ரமம் ।
கபோல பாடலாதே³ஶி ப³பூ³வ ரகு³வேஷ்டிதம் ॥ 68

(ப-ரை) தத்ர = அந்த வடக்குத் திசையில்; பர்த்ருஷு = பதிக ளிடம்; வ்யக்த = நன்கு தோன்றும்; விக்ரமம் = வலிமையுடைய; ரகு² சேஷ்டிதம் = ரகுவின் செய்கைகள்; ஹூண = ஹூண நாட்டரசர் களின்; அவரோத³ாநாம் = அந்தப்புரத்துப் பெண்களின்; கபோல = கன்னங்களில்; பாடல = சிவப்பிற்கு; ஆதே³ஶி = உபதேசிக்கத்தக் கது; ப²பூ³வ = ஆயிற்று.

(க-ரை) ரகு மன்னன் வடநாட்டரசர்களைக் கொன்றான். அவனுடைய திக்விஜயத்தில் அம்மன்னர்களின் மனைவிமார் துயரத் தால் கன்னங்களில் அடித்துக்கொண்டதால் அவை கறுகிப் போயிற்று. (ஒன்றற்கொன்றுதவியணி)

ஸு ॥ காம்பே³ாஜாஸ் ஸமரேஸோடு³ம் தஸ்ய வீர்ய மநீஶ்வரா:।
க³ஜாலாந பரிக்லிஷ்டை: அங்கோலைஸ் ஸார்த³ மாநதா: ॥ 69

(ப-ரை) காம்பே³ாஜா: = காம்போஜ நாட்டரசர்கள்; ஸமரே = போரில்; தஸ்ய = அந்த மன்னவன் ரகுவின்; வீர்யம் = பராக் கிரமத்தைத்; ஸோடு³ம் = பொறுக்க; அநீஶ்வராஸ் ஸந்த: = முடியாது

வர்களாய்; க3ஜ = யானைகளின்; ஆலாந = கால்கட்டுகளால்; அங்கோலை; அவிஞ்சி மரத்தினுடன்; ஆநதா: = வணங்கினார்கள்.

(க-ரை) காம்போஜ மன்னர்கள் ரகுமன்னனுடைய வலிமைக்கு நிற்க முடியாமல், அங்கோல விருட்சங்கள் அவற்றிற்குக் கட்டபட்ட யானைகளின் கால் சங்கிலியால் உரசப்பட்டு வளைந்து விடுவது போல் அவனுக்குக் கீழ்ப்படிந்தனர். (உவமையணி)

சு॥ தேஷாம் ஸத2ஶ்வ பூ3யிஷ்ட1ா: துங்க2 த்2ரவிண ராஶய: ।
உபத3ா விவிஶுஶ்ஶ ஶ்வந் நோத்ஸேகா: கோஸலேஶ்வரம் ॥ **70**

(ப-ரை) தேஷாம் = காம்பேஜ மன்னர்களுடைய; ஸத்அஶ்வ = நன்கு பழகிய குதிரைகளால்; பூ3யிஷ்ட1ா: = அதிகமான; துங்க2 = உன்னதமான; த்2ரவிண = பொன்களின்; ராஶய = ராசிகள் என்னும்; உப3த2ா: = காணிக்கைகள்; ஶஶ்வத் = அடிக்கடி; கோஸலேஶ்வரம் = ரகுமன்னனை; விவிஶு: = அடைந்தன; உத்ஸே. கா: = செருக்கு; நவிவிஶு: = அடையாது போயிற்று.

(க-ரை) அந்த காம்போஜ மன்னர்கள்ரகுராஜாவுக்கு உயர்ந்த வகுப்பைச் சார்ந்த புரவிகளையும், பொன்களையும் காணிக்கை யாக அளித்தனர். ஆயினும் இதனால், ரகுமன்னன் செருக்கடைய வில்லை,

சு॥ ததோ கௌ2ரீ கு2ரும்ஶைல மாருரோ ஹாஶ்வ ஸாத3ந: ।
வர்தயந்நிவ தத்கூடா நுத்3தூ3தைர் த3ாது ரேணுபி3: ॥ **71**

(ப ரை) தத: = பிறகு; அஶ்வஸாத3ந: = புரவிகளே கருவியாக உள்ள ரகுமன்னன்; கௌ2ரீகு2ரும் = பார்வதியின் தந்தையாகிய; ஶைலம் = இமய மலையை; உத்3தூ3தை: = குளம்புகளால் சிதறடிக் கப்பட்ட; த3ாதுரேணுபி3: = காவி முதலிய தாதுக்களின் தூசியால்; தத்கூடாந் = அவ்விமய மலையின் சிகரங்களை; வர்தயந் இவ = வளர்ப்பவன் போன்று; ஆருரோஹ = ஏறினான்.

(க-ரை) ரகுமன்னவனுடைய புரவிகள் இமயமலையைக் கடந்தன. அப்புரவிகள் நடந்துச் செல்கையில் காவி முதலிய தாது பொருள்களின் தூசிகளால் மலை வளர்ந்து வருவது போல் இருந்தது. (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ஶஶம்ய துல்ய ஸத்வாநாம் ஸைந்ய கோ³லாஹலமப்ய ஸம்ப்³ரமம் ।
(க-ரை) அந்த யானை நீரில் மூழ்கி வருவதால், அதன் கன்னங்களில் ஒழுகும் மதஜலமானது சற்று நேரம் நின்றிருந்த போதிலும், அந்த அஜமன்னனுடைய நாட்டு யானைகளைக் கண்டதும் அதன் கன்னத்தில் மறுபடியும் மதநீர் ஊறியது. (நிகழ் வினவிற்சியணி)

சு॥ ஸப்தச்ச¹த² க்ஷீரகடு ப்ரவாஹம்
அஸஹ்ய மாக்²ராய மத³ம் ததீ²யம் ।
விலங்கி³ தாதே³ாரண தீவ்ர யத்நா:
ஸேநா கஜேந்த்²ரா விமுக¹ா ப²பூ³வு: ॥ 48

(ப-ரை) ஸப்தச்ச¹த² = ஏழிலை வாழையின்; க்ஷீர = பாலைப் போல்; கடு = மணம் நிறைந்து; ப்ரவாஹம் = ஒழுகும்; அஸஹ்யம் = சகிக்கமுடியாத; ததீ²யம் = அந்த யானையின்; மத²ம் = மத நீரை; ஆக்³ராய = முகர்ந்த; விலங்கி³த = அலட்சியப்படுத்தப்பட்ட; ஆதே³ாரண = மாவத்தர்களின்; தீவ்ர = அதிகமான; யத்நா = முயற்சி வீணாக; ஸேந = படையிலுள்ள; க²ஜேந்த்²ரா: = யானைகள்; விமுக¹ா = திரும்பியனவாக; ப²பூ³வு: = ஆயிற்று.

(க-ரை) ஏழிலை வாழையில் வெளிப்படும் பால் போன்று நறுமணமுள்ள அந்த யானையின் மதஜலத்து மணம் வீசவே, அதை முகர்ந்த அவ்வரசனின் யானைகள் யாவும் அதைக் கண்டு சகிக்க முடியாமல் மாவத்தர்களின் கட்டுப்படுத்தும் முயற்சிகளை அலட்சிய படுத்தி அங்கு நில்லாது ஓடின. (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ஸச்சி¹ந்ந ப²ந்த³ த்²ருத யுக்²ய ஶூந்யம்
ப³க்²நாக்ஷ ப்ரயஸ்த ரத¹ம் க்ஷணேந ।

ராமா பரித்ராண விஹஸ்த யோத⁸ம்
ஸேநா நிவேஶம் துமுலம் சகார ॥ 49

(ப-ரை) ஸ꞉ = அந்த யானை; சி¹ந்ந = அறுபட்ட; ப³ந்த⁸ = கட்டுக்கயிறுகளுடைய; த்⁸ருத = ஓடிப்போன; யுக்³ய = புரவிகளுடைய; ஶூந்யம் = வறிதானதும்; ப⁸க்ந = உடைந்ததுமான; அக்ஷம் = அச்சுகளுடைய; பர்யஸ்தம் = வித்தியாசப்பட்ட; ரத¹ம் = தேர்கள் உடைய; ராமா = பெண்களின்; பரித்ராண = பராமரிப்பில்; விஹஸ்த = கலங்கிய; யோத¹ம் = படைவீரர்களுடைய; ஸேநா நிவேஶம் = படைகளின் விடுதிகளை; க்ஷணேன = கணநேரத்தில்; துமுலம் = கலக்கமுறுமாறு; சகார = செய்தது.

(க-ரை) அந்த யானை அஜமன்னன் விடுத்த விடுதிக்குச் சேன்று துன்புறுத்தவே, குதிரைகள் கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடின. தேர்களின் இருசுகள் உடைந்தன, படைவீரர்கள் அவரவர்களின் பெண்களைக் காப்பாற்றிக் கொள்வதில் கலங்கினார்கள். இவ்வாறு படைகள் பூராவும் கலங்கின. (மிகுதிநவிற்சியணி)

சு॥ தமாபத²ந்தம் ந்ரிபதே ரவத்⁸ய꞉
வந்ய꞉ கரீதி ஶ்ருதவாந் குமார꞉ ।
நிவர்தயிஷ்யந் விஶிகே¹ந கும்பே⁸
ஜகா⁸ந நாத்யாயத க்ரிஷ்ட ஶார்ங்க³꞉ ॥ 50

(ப-ரை) ந்ரிபதே꞉ = ராஜாவுக்கு = வந்யகரீ = காட்டு யானை; அவத்⁸ய꞉ = கொல்லக்கூடியது அன்று; இதி = இவ்வாறு ஶ்ருதவாந் = சாத்திரங்களாலறிந்த; குமார꞉ = அஜமன்னன்; ஆபத²ந்தம் = எதிரில் வரும்; தம் = அந்த யானையை; நிவர்தயிஷ்யந் = பின்னுக்கு மடக்க வெண்ணி; நாத்யாயத = மிக நீளமல்லாது; க்ரிஷ்ட = இழுக்கப்பட்ட ஶார்ங்க³ஸ்ஸந் = வில்லுடையவனாக; விஶிகே¹ந = பாணத்தால்; கும்பே⁸ = அந்த யானையின் மத்தகத்தில்; ஜகா⁸ந = அடித்தான்.

(க-ரை) போரிலல்லாது மற்றயிடங்களில் யானையைக் கொல்லலாகாது என்று நூலில் அறிந்த அஜமன்னன் எதிரில் வந்துக் கொண்டிருக்கும் யானையைப் பின்னுக்குத் திரும்பிப் போக, அதனுடைய மத்தகத்தின் மீது, வில்லை மிகவும் இழுக்காமலேயே அம்பு ஒன்றை எய்தினான். (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ ஸவித்²த³மாத்ரஃ கில நாக²ரூபம்
உத்ஸ்ரிஜ்ய தத்²விஸ்மித ஸைந்ய த்²ரிஷ்டஃ ।
ஸ்புரத் ப்ரப³ா மண்ட²ல மத்³யவர்தீ
காந்தம் வபுர்வ்யோம சரம் ப்ரபேதே² ॥ 51

(ப-ரை) ஸஃ = அந்தயானை; வித்²த³மாத்ரஃ கி¹ல = அடி பட்டவுடனே; நாக² ரூபம் = யானை உருவத்தை; உத்ஸ்ரிஜ்ய = விடுத்து; தத் = அந்த நடைமுறையால்; விஸ்மித = வியப்புற்ற; ஸைந்ய = படைகளால்; த்²ரிஷ்டஸ்ஸந் = பார்க்கப் பட்டு; ஸ்புரத் = ஒளிரும்; ப்ரபா³ = கதிர்களின்; மண்டல = திரளின்; மத்³யவர்தி = நடுவில் உள்ள; வ்யோமசரம் = ஆகாயத்தில் சுழலும்; வபுஃ = திவ்விய மான உடலை; ப்ரபேதே² = அடைந்த²து.

(க-ரை) அந்த யானை அந்த அடி பட்டவுடனே யானை உருவத்தை விட்டு படைவீரர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒளிமிக்க விண்ணில் மிளிரும் ஒரு திவ்வியமான உருவை அடைந்தது (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ அத¹ ப்ரப³ாவோப நதைஃ குமாரம்
கல்ப த்²ருமோத்தை¹ ரவகீர்ய புஷ்பைஃ ।
உவாச வாக்²மீ த³ஶந ப்ரப³ாபி³ஃ
ஸம்வர்தி தோரஸ் ஸ்த¹லதார ஹாரஃ ॥ 52

(க-ரை) அத¹ = பிறகு; ப்ரப³ாவ = மகிமையால்; உபநதை²ஃ = அடைந்த; கல்பத்²ரும = கற்பக விருட்சத்தில்; உத்தை¹ஃ = பிறந்த; புஷ்பைஃ = பூக்களால்; குமாரம் = அஜமன்னனை; அவகீர்ய = தூவி; த³ஶநப்ரப³ாபி³ஃ = பற்களின் ஒளியால்; ஸம்வர்தி³த = வளர்ச்சி யடைந்த; உரஸ் ஸ்தல = மார்பில்; தார = பெரிதாய; ஹாரஃ = முத்துச்சரமுடைய; வாக்²மீ = சொல்வன்மை மிக்க; ஸ = அப்புருடன் உவாச = சொன்னான்.

(க-ரை) சொல்வன்மை மிக்க அப்புருடன் தன் மகிமையால் தருவிக்கப்பட்ட கற்பகப் பூக்களை அஜமன்னன் மீது தூவி கூற லானான். அப்போது அவன் மார்பிலிருந்த முத்தாரமானது அவ னுடைய பற்கள் ஒளியால் மிகவும் ஒளிர்ந்தது. (மலர்ச்சியணி)

சு॥ மதங்க² ஶாபா த³வலேப மூலாத்
அவாப்தவா நஸ்மி மதங்க²ஜத்வம் ।

ஆவேஹி க²ந்த³ர்வ பதேஸ்தநூஜம்
ப்ரியம் வத¹ம் மாம் ப்ரியத²ர்ஶநஸ்ய ॥ 53

(ப-ரை) அவலேப = செருக்கு; மூலாத் = காரணத்தால்; மதங்க² = மதங்க ரிஷியின்; ஶாபாத் = சாபத்தால்; மதங்க²ஜத்வம் = யானை உருவை; அவாப்தவாந் = அடைந்தவன்; அஸ்மி = ஆனேன்; மாம் = என்னை; ப்ரியத²ர்ஶநஸ்ய = பிரியதரிசனன் என்னும் பெயருடைய; கந்த³ர்வபதே: = கந்தருவ அரசனுக்கு; தநூஜம் = மகனான ப்ரியம்வத²ம் = பிரியவதனென்ற பெயருடையவன் என்று; ஆவேஹி = அறிவாய்.

(க-ரை) நான் பிரியதரிசனன் என்னும் கெந்தருவ மன்னனுடைய மகன்; என் பெயர் பிரியம்வதன்; எனக்கு இருந்தசெருக்கால் மதங்கரிஷியின் சாபம் யானை உருவெடுக்கச் செய்தது. (சுருங்கச் சொல்லணி)

சு॥ ஸ சாநுநீத: ப்ரணதேந பஶ்சாத்
மயா மஹர்ஷிர் ம்ரிது²தா மக²ச்ச¹த் ।
உஷ்ணத்வ மக்²ந்யாதப ஸம்ப்ர யோக²ாத்
ஶைத்யம் ஹியத்ஸா ப்ரக்ரிதிர் ஜலஸ்ய ॥ 54

(ப-ரை) ஸ:ரிஷி: = அந்த மகாரிஷி (மதங்கன்) யும்; ப்ரணதேந = அடிபணிந்த; மயா = என்னால்; அநுநீதஸ்ஸந் = தணிக்கப்பட்டவனாய்; பஶ்சாத் = பிறகு; ம்ரிது³தாம் = அமைதியை; அக²ச்ச¹த் = அடைந்தார்; ஜலஸ்ய = நீருக்கு; உஷ்ணத்வம் = சூடு; அக்²நி = வன்னிக்கும்; ஆதப = வெய்யிலுக்கும்; ஸம்ப்ரயோக²ாத் = சேர்க்கை உண்டாயின்; ஶைத்யம் = குளுமை; யத் = ஏதுண்டோ; ஸா = அந்த குளிர்ச்சி; ப்ரக்ரிதி = இயற்கையானது.

(க-ரை) நான் வணங்கிக் கேட்டுக்கொள்ளவே மதங்கரிஷிக்கு மனமிளகி கருணை உண்டாயிற்று. நீரானது அக்கினியாலோ அல்லது வெய்யிலாலோ சூடேறினால், பிறகு அதன் இயற்கை குணம் ஆகிய குளிர்ச்சியை அடைகிறதல்லவா? அதாவது ரிஷிகள் குரோதமற்றவர்கள் என்பதாம். (நிகரெடுத்துக்காட்டுவமையணி)

சு॥ இக்ஷ்வாகு வம்ஶப்ரப³வோ யத²ாதே
பே³த்ஸ்யத்யஜ: கும்ப³ மயோ முகே¹ந ।
ஸம் யோக்ஷ்யஸே ஸ்வேந வபுர்மஹிம்நா
ததே²த்ய வோச த்ஸ தபோநிதி³ர்மாம் ॥ 55

(ப-ரை) இக்ஷ்வாகு வம்ஶப்ரப⁸வঃ=இக்ஷ்வாகு அரசமரபிற் பிறந்தவனாகிய; அஜঃ=அஜமன்னன்; யதா²=எக்காலத்தில்; தே= உன்னுடைய; கும்ப⁸ம்=மத்தகத்தில்; அயோ முகே¹ந=பாணத் தால்; பே³த்ஸ்யதி=தாக்குவானோ; தத¹ா=அக்காலத்தில்; ஸ்வேந=சுயமான; வபுர்மஹிம்நா = மகத்துவத்துடன் கூடிய உடலை; ஸம்யோக்ஷ்யஸி=அடைந்து விடுவாய்; இதி=என்று; ஸঃ தபோநிதி²ঃ=அந்த தவசி யானவர்; மாம்=எனக்கு; அவோசத் =சொன்னார்.

(க-ரை) இக்ஷ்வாகு வம்சத் தரசனான அஜமகாராஜன் உன் னுடைய மத்தகத்தில் பாணத்தால் என்று தாக்குவானோ அன்று நீ உன்னுடைய திவ்விய உருவத்தைப் பெற்றுவிடுவாய் என்று அந்த தவசியானவர் எனக்கு ஆணையிட்டார். (மாற்று நிலையணி)

சு ॥ ஸம்மோசிதஸ் ஸத்வவதா த்வயாऽஹம்

ஶாபாச்சிர ப்ரார்தி¹த த³ர்ஶநேந ।

ப்ரதிப்ரியம் சேத்² ப⁸வதோ நகுர்மாம்

வ்ரித¹ாஹிமே ஸ்யாத் ஸ்வபதே²ாப லப்²தீ³ঃ ॥ 56

(ப-ரை) சிரப்ரார்தி¹த=வெகுகாலமாய் கோரப்பட்ட; த³ர்ஶ நேந=தரிசனமுள்ள; ஸத்வதா=வலி பொருந்திய; த்வயா=உன் னால்; அஹம்=நான்; ஶாபாத்=சாபத்திலிருந்து; ஸம்மோசிதঃ= விடுவிக்கப்பட்டேன்; ப³வதঃ=உனக்கு; ப்ரதிப்ரியம்=பிரதி உப காரத்தை; நகுர்யாம்சேத்=செய்யாமற் போனேனாகில்; மே= என்னுடைய; ஸ்வபதே²ாபலப்²தி³=சுய பதவியில் அடைந்துள்ள கவுரவம்; வ்ரிதாஹி=வீணானது; ஸ்யாத்=ஆய்விடும்.

(க-ரை) நான் வெகுகாலமாக உன் தரிசனத்தை எதிர்பார்த் திருக்கையில். தற்போது பலவானாய உன்னால் நான் சாபத்தி னின்றும் விடுவிக்கப் பட்டேன். உனக்கு நான் பிரதி உதவி செய்ய வில்லையானால், என் பதவி வீணாகும். (மாற்று நிலையணி)

சு॥ ஸம் மோஹநம் நாம ஸகே¹ மமாஸ்த்ரம்

ப்ரயோக¹ ஸம்ஹார விப⁸க்த மந்த்ரம் ।

க²ாந்த⁸ர்வ மாத⁸த்ஸ்வ யதঃ ப்ரயோக்து

நசாரி ஹிம்ஸா விஜயஶ்ச ஹஸ்தே ॥ 57

(ப-ரை) ஹேஸகே[1] = ஓ நண்பனே! ப்ரயோக[2] ஸம்ஹார = பயன்படுத்துதல் திரும்பப் பெறுதல்களின்; விப[3]க்தமந்த்ரம் = பிரிக்கப்பட்ட மந்திரங்களுடைய; க[2]ாந்த[3]ர்வம் = கந்தருவர்களின்; ஸம்மோஹநம் நாம = சம்மோஹனம் என்னும் பெயருடைய; மம = என்னுடைய; அஸ்த்ரம் ஆத[3]த்ஸ்வ = அம்பைப் பெறுவாய்; யதஃ = எந்த சம்மோஹனாஸ்திரத்தால்; ப்ரயோக்துஃ = பயன்படுத்துவோனுக்கு; அரிஹிம்ஸக = சத்துருவால் துன்பம்; நச = இல்லையோ (அவனுக்கு) விஜயஶ்ச = வெற்றியும், ஹஸ்தே = உள்ளங்கைக் கனியாகும்.

(க-ரை) நண்பனே! எந்த அம்பைத் தொடுத்தால், பகைவர்களால் துன்பமின்றி அவர்கள் வெல்லப்படுவாரோ அந்த சம்மோகனாஸ்திரம் என்னும் அம்பை நான் உனக்குத் தருகிறேன்; பெற்றுக் கொள். அதை விடுவதற்கும் பெறுவதற்கும் தகுந்த கந்தருவரைச் சார்ந்த இரு மந்திரங்களையும் உனக்குபதேசிக்கிறேன். (விதியணி)

சு॥ அலம் ஹ்ரியா மாம் ப்ரதியங்முஹூர்தம்
த[2]யாபரோஃபூ[3]ஃ ப்ரஹரந் நபித்வம்
தஸ்மா து[2]பச்ச[1]ந்த[2]யதி ப்ரயோஜ்யம்
மயித்வயா ந ப்ரதிஷேத[3] ரௌக்ஷ்யம் ॥ 58

(ப-ரை) மாம்ப்ரதி = என்னைப் பற்றிய; ஹ்ரியா = (தாக்கியதால் ஏற்பட்ட) வெட்கம்; அலம் = போதும்; யத் = எக்காரணத்தாலும்; மாம் = என்னை; ப்ரஹரந்நபி = தாக்கியவனாயினும்; முஹூர்தம் = இரண்டரை நாழிகை காலம்; (60 நாழிகை = 24 மணி 1 நாள்) முஹூர்தம் = முகூர்த்த நேரத்தில்; த[2]யாபரஃ = தயையுள்ளவன்; அபூ[3]ஃ = ஆகிவிட்டாயோ; தஸ்மாத் = அதனால்; உபச்ச[1]ந்த[2]யதி = வேண்டிக்கொள்ளும்; மயி = என்னிடம்; த்வயா = உன்னால்; ப்ரதிஷேத[2]ரௌக்ஷ்யம் = பரிகாரமெனும் ஆண்மையை; நப்ரயோஜ்யம் = பயன்படுத்தக் கூடியதன்று.

(க-ரை) இதனைத் தாக்கி, இதனால் பிரதி உபகாரம் எங்ஙனே பெறுவதென்று வெட்காதே. என்மீது அம்பை எய்தியக் கணமே நீ என்னிடம் பச்சாத்தாபம் கொண்டு கருணை செய்தாய். அதனால் எனது வேண்டுகோளை ஏற்று என் உபகாரத்தை மறுக்காதே. (வேண்டவணி)

௬॥ ததே[1] த்யுபஸ்ப்ரிஸ்ய பயஃ பவித்ரம்
ஸோமோத்[2] ப[3]வாயா ஸ்ஸரிதோ ந்ரிஸோமஃ ।
உத[2]ங் முக[1]ஸ் ஸோ஽ஸ்த்ரவ த[2]ஸ்த்ர மந்த்ரம்
ஜக்[2]ராஹ தஸ்மாந் நிக்[2]ரிஹீத ஶாபாத் ॥ 59

(பதவுரை) ந்ரிஸோமஃ = ஆடவர்களில் மேம்பட்டவனாகிய அஸ்த்ரவித் = வில்வித்தை விற்பன்னனாகிய; ஸஃ = அந்த அஜ மன்னன்; ததே[1]தி = அவ்வாறே ஆகுக என்று; ஸோமோத்[2]ப[3] வாயாஃ = சந்திரனாற் பிறந்த; ஸரிதஃ = நருமதை ஆற்றின்; பவித்ர = தூய்மையான; பயஃ = தண்ணீரை; உபஸ்ப்ரிஸ்ய = ஆசமனம் செய்துகொண்டு; உத[2]ங்முகஸ்ஸந் = வடதிசையை நோக்கிய வனாய்; நிக்ரிஹீதஶாபாத் = போக்கிய சாபமுள்ள; தஸ்மாத் = அந்த பிரியம்வதனிடமிருந்து; அஸ்தரமந்த்ரம் = ஸம்மோகனாதி அஸ்திரமந்திரத்தை; ஜக்[2]ராஹ = பெற்றுக்கொண்டான்.

(கருத்துரை) மேன்மையான ஆண்மகனும், வில்வித்தை அறிஞனு மாகிய அஜமகாராஜன் அவ்வாறே ஆகட்டுமெனக் கூறி, புனிதமான நருமதையாற்றின் தண்ணீர் கொண்டு ஆசமனம் செய்து, சாபத்தி லிருந்து விடுபட்ட பிரியம்வதனிடமிருந்து ஸம்மோஹனாஸ்திரத் தைப் பெற்றுக்கொண்டான். (மாற்று நிலையணி)

௬ ॥ ஏவம் தயோ ரத்[3]வநி தை[2]வயோக[2]ாத்
ஆஸே து[2]ஷோஸ் ஸக்[1]ய மசிந்த்ய ஹேது ।
ஏகோயயௌ சைத்ரரத[1]ஃ ப்ரதே[2]ஶாந்
ஸௌ ராஜ்ய ரம்யா நபரோ விதர்[2]ப[3]ாந் ॥ 0

(பதவுரை) ஏவம் = மேற்கூறியவாறு; அத்[3]வந் = வழியில்; தை[2]வயோக[2]ாத் = தெய்வத்தாலாய; அசிந்த்ய = எண்ண முடியாத; ஹேது = காரணமுள்ள; ஸக்[1]யம் = நட்பை; ஆஸேது[2]ஷோஃ = அடைந்த; தயோஃ = பிரியம்வதன் முதலியவர்களுள்; ஏகஃ = ஒருவ னான பிரியம் வதன்; சைத்ரரத[1]ப்ரதே[2]ஶாந் = குபேரனுடைய பூங்காவனத்தை நோக்கி; யயௌ = புறப்பட்டுச் சென்றான்; அபரஃ = மற்றொருவனான அஜமன்னன்; ஸௌராஜ்ய = நல்லரசால்; ரம்யாந் = அழகான; விதர்ப[3]ாந் = விதர்ப நாட்டிற்கு; யயௌ = சென்றான்.

(கருத்துரை) இவ்வாறு நடுவழியில் தெய்வீகமாய் நினைக்க முடியாத அளவிற்கு நட்பு பெற்ற அவ்விருவருள் கந்தருவன் குபேர வனத்தை நோக்கியும, அஜமன்னன் நல்ல மன்னனைப் பெற்றுள்

ளதும் அழகியதும் ஆகிய விதர்ப நாட்டிற்கும் சென்றனர். (நிகழ் வினவிற்சியணி)

சு ॥ தம் தஸ்திவாம்ஸம் நக2ரோபகண்டே1
தத3ாக2மாரூட3 கு2ருப்ரஹர்ஷ: ।
ப்ரத்யுஜ் ஜக2ாம க்ரத1 கைஶிகேந்த்2ர:
சந்த்2ரம் ப்ரவ்ரித்2தே3ார்மி ரிவோர்மிமாலீ ॥ 61

(ப-ரை) நகர உபகண்டே1 = பட்டணத்தின் அருகில்; தஸ்தி2 வாஸம் = இருக்கும்; தம் = அந்த அஜமன்னன்; ஆகம ஆரூட3 = வந்ததால் யிறந்த; கு2ருப்ரஹர்ஷ: = அதிக மகிழ்ச்சியுண்டாகிய; க்ரத1கைஶிகேந்த்2ர: = விதர்ப நாட்டரசன்; ப்ரவ்ரித்2த3 ஊர்மி: = விரிந்த அலைகளுடைய; ஊர்மிமாலீ = சமுத்திரனுக்கு; சந்த்2ரமிவ = மதியைப்போல்; ப்ரத்யுஜ்ஜகாம = எதிர்க் கொண்டான்.

(க-ரை) தன் பட்டணத்திற்கருகில் அஜமன்னன் வந்த செய்தியைக் கேட்ட விதர்ப நாட்டரசன் மிக மகிழ்ந்து, அலைகள் பொங்கிய சமுத்திரம் சந்திரனை வரவேற்பதுபோல் அஜமகா ராஜனை எதிர்கொண்டழைத்தான். (புகழ்பொருள் உவமையணி)

சு ॥ ப்ரவேஶ்ய லசநம் புர மக்2ரயாமீ
நீசை ஸ்ததே1ாபாசர த2ர்பித ஶ்ரீ: ।
மேநே யத1ா தத்ர ஜநஸ் ஸமேத:
வைத2ர்ப3 மாக2ந்து மஜம் க்2ரிஹேஶம் ॥ 62

(ப-ரை) அக்2ரயாயீ = முன்னால் போகும்; நீசை: = வணங்கிய ஸ: = அந்த போஜமன்னன்; ஏநம் = இந்த அஜமன்னனை; புரம் = பட்டணத்தில்; ப்ரவேஶ்ய = நுழையச் செய்து; அர்பித ஶ்ரீ: ஸந் = அர்ப்பணம் செய்த செல்வ முடையவனாய்; தத2ா = அவ்வாறு; உபாசரத் = உபசரித்தான்; யத1ா = எவ்வாறு; தத்ர = அந்த பட்டணத்தில்; ஸமேத: = கூட்டங்கூடிய; ஜந: = மக்கள்; வைதர்ப3ம = போஜமன்னனை; ஆக2ந்துகம் = சுற்றமாக; மேநே = எண்ணினார்கள்; அஜம் = அஜமன்னனை; க்2ரிஹேஶம் = தம் வீட்டவர் போல்; மேநே = எண்ணினார்கள்.

(க-ரை) விதர்ப மன்னன் போஜனுக்கு முன்னால் மரியாதை களுடன் அழைத்துச் சென்று பட்டணத்தில் உள்ள மக்கள் திரண்டு வந்து போஜமன்னனைப் புது மனிதனாகவும், அஜமன்னனை சொந்தக்காரன் போலவும் எண்ணினார்கள். (மாற்று நிலையணி)

ஃ ॥ தஸ்யாதி³கார புருஷை: ப்ரணதை: ப்ரதிஷ்டா¹ம்
ப்ராக்² த்³வாரவேதி³ வநிவேஶித பூர்ணகும்ப³ாம் ।
ரம்யாம் ரகு³ப்ரதி நிதி³ஸ்ஸ நவோபகார்யாம்
பா³ல் யாத்பரா மிவ த³ஶாம்ந மத³நோऽப்யுவாஸ ॥ 63

(ப-ரை) ரகு³ப்ரதி நிதி³:=ரகுமன்னனையே உவமையாக உள்ள; ஸ:= அந்த அஜமன்னன்; ப்ரணதை:=வணங்கிய; தஸ்ய= அந்த போஜமன்னனுடைய; அதி³கார புருஷை:= அதிகாரிகளால்; ப்ரதிஷ்டா¹ம்=காட்டப்பட்ட; ப்ராக்²த்³வார=கிழக்குவாயிலின்; வேதி³=மேடையில்; விநிவேஶித=வைக்கப்பட்டிருந்த; பூர்ண கும்ப³ாம்=ரத்தினங்கள் பதைத்த கலசமுடைய; ரம்யாம்= அழகிய; நவ=புதிதாய; உபகார்யாம்= அரசமாளிகையை; மத³ந:=மன்மதன் பா³ல்யாத்=வாலைப் பருவத்திற்கு; பராம்= அப்பாலாகிய; த³ஶாம் இவ=யௌவனம் போன்று; அத்⁴யுவாஸ= அடைந்தான்.

(க-ரை) ரகுமன்னனுக்கு நிகரான அஜமன்னனை போஜ மன்னனுடைய அதிகாரிகள் வணங்கி காண்பிக்கவே, கிழக்கு வாயிலில் உள்ள மேடையில் அமைத்திருந்த ரத்தினங்கள் பதித்த கலசங்களுடைய, புதிய விடுதியில் மன்மதன் யௌவனத்தை அடைவதுபோல் நுழைந்தான். (புகழ்பொருளுவமையனி)

ஃ ॥ தத்ர ஸ்வயம்வர ஸமாஹ்ரித ராஜலோகம்
கன்யாலலாம கமநீய மஜஸ்ய லிப்ஸோ: ।
பா³வாவபோ³த³ கலுஷா த³யிதேந ராத்ரௌ
நித்³ரா சிரேண நயநாபி³முகீ¹ ப³பூ³வ ॥ 64

(ப-ரை) தத்ர= அந்த அரசமாளிகையில்; ஸ்வயம்வர=சுயம் வரத்திற்கு; ஸமாஹ்ரித= அழைக்கப்பட்ட; ராஜலோகம்= அரசர்கள் கூட்டம் நிறைந்த; கமநீயம்=விழையத்தக்க; கந்யாலலாம= மேலாய கன்னிகையை; லிப்ஸோ:= அடைய விரும்பிய; அஜஸ்ய= அஜமன்னனுக்கு; பா³வ அவபோ³த³= அவருடைய எண்ண மறிந்துவர; கலுஷா = திறமையற்ற; த³யிதேந=சிநேகிதி போன்று; ராத்ரௌ = இரவில்; நித்³ரா=தூக்கம்; சிரேண=வெகுகாலமாக; நயநாபி³முகி¹= கண்களுக்கெதிரில்; ப³பூ³வ=ஆயிற்று.

(க-ரை) அந்த அரசமாளிகையில் சுயம்வரத்திற்காக வந்த பல அரசர்கள் கூடியிருக்க, அழகுமிகுந்த இந்துமதி என்னும் கன்னிகை

தனக்குக் கிடைப்பாளா இல்லையா என்ற வருத்தத்துடன் அஜ மன்னனுடைய கண்களுக்குத்; தூக்கமானது, ஆண்மகனின் இங்கித மறியாத மடந்தையைப்போல் வெகுநேரத்திற்குப் பிறகு வந்தது. (புகழ்பொருளுவமையணி)

சு॥ தம் கர்ணபூ³ஷண நிபீடித பீவராம்ஸம்
ஶய்யோத்தரச்ச²த³ விமர்த³ க்ரிஶாங்க³ ராக³ம் ।
ஸூதாத்மஜாஸ் ஸவயஸஃ ப்ரதி²த ப்ரபோத³ம்
ப்ராபே²ரத³யந் நுஷஸி வாக்³பி⁴ ருத³ாரவாசஃ ॥ 65

(ப-உரை) கர்ணபூஷண = காதணிகளால்; நிபீடித = உரசிக் கொண்ட; பீவர = பருத்த; அம்ஸம் = தோளுடைய; ஶய்யா = படுக்கையின்; உத்²த³ரச்ச²த² = மேலுள்ள ஆடையின்; விமர்த³ = உரசுவதால்; க்ரிஶ = மெலிவாயப்போன; அங்க²ராகம் = மெய்ப் பூச்சுகளுடைய; ப்ரதி²த = மேன்மையான; ப்ரபோத³ம் = ஞான முள்ள; தம் = அந்த அஜமன்னனும்; ஸவயஸஃ = சமவயதுடைய; உத²ார = உறத்த; வாசஃ = வாக்குகளுடைய; ஸூதாத்மஜாஃ = சூத மகன்கள்; வாக்²பிஃ = துதிப்பாடல்களால்; உஷஸி = வைகறையில்; ப்ராபே²ரத³யந் = எழுப்பினார்கள்.

(க-உரை) காதணிகள் உரசுமளவுக்கு எடுப்பான தோள்கள் உடையவனும், அடர்த்தியாய் பூசிக்கொண்ட சந்தனம் பெண் சேர்க்கையின்றியே படுக்கைத் துணியால் உரசப்பட்டு உதிர்த்து விட்டவனும், நல்ல தெளிவுடையவனும் ஆகிய அஜமன்னனை, அவனுக்கு நிகரான வயதுடையவர்களாய வந்திமகன்கள் உறத்தக் குரலில் துதிப்பாடி வைகறையில் துயில்விட்டெழுப்பினார்கள். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ராத்ரிர்க²தா மதிமதாம் வரமுஞ்ச ஶய்யாம்
த⁴ாத்ரா த்²விதை⁴வ நநு தூ⁴ர்ஜ க²தோவிப⁴க்தா ।
தாமேகத ஸ்தவ பி⁴பு⁴ர்தி கு³ருர் விநித்³ரஃ
தஸ்யா ப⁴வா நபர து⁴ர்ய பத³ாவலம்பீ² ॥ 66

(ப-உரை) மதிமதாம்வர = புத்திமான்களில் சிறந்தவரான (அஜன்) ராத்ரிஃ = இரவு; க²தா = கடந்துவிட்டது; ஶய்யாம் = படுக்கையை; முஞ்ச = விட்டு; த⁴ாத்ரா = பிரமனால்; ஜ²கதஃ = உலகத்தின்; தூ⁴ஃ = பாரம்; த்²விதைவ = இருவிதங்களாக (அதாவது இருவரிடமே) விப⁴க்தாநநு = பிரிக்கப்பட்டுள்ளதன்றோ; தாம் = அந்த

உலக பாரத்தை; ஏகதঃ=ஒருபுறம்; தவ=உனது; கு²ருঃ=தந்தை; விநித்²ரஸ்ஸந்=விழிப்புள்ளவனாய்; பி²ப³ர்தி = தாங்குகிறான்; தஸ்யாঃ=அந்த பளுவுக்கு; ப³வாந்=நீ; அபர=மற்றொரு; து³ர்ய =தாங்குகிறவனாக; பதே²=வசிக்குமிடத்தில்; அவலம்பி²=அடைந்தவன்.

(க-ரை) சிறந்த அறிவுடைய அஜமன்ன! பொழுதுவிடிந்தது. படுக்கை விட்டெழுமின்! பிரமன் அரசு பாரத்தை அரசனான உமது தந்தையிடமும், இவ்வரசனான உம்மிடமும் வைத்துள்ளான். உமது பரிபாலனத்தை சரியாக செய்து வரவேண்டும். (வீறுகோளணி)

சு॥ நித்²ராவஶேந ப³வதாঽப்யநபேக்ஷமாணா
பர்யுத்ஸுகத்வ மப³லா நிஶி க¹ண்டி²தேந ।
லக்ஷ்மீர் விநோத²யதி யேநதி²க்²ந்தலம்பீ³
ஸோঽபி த்வதா²நநருசிம் விஜஹாதிசந்த்²ரঃ ॥ 67

(ப-ரை) நித்²ராவஶேந=தூக்கத்திற்குட்பட்ட; ப³வதா= உன்னில்; ப்ரயுத்ஸுகத்வம் அபி=அன்பும்; நிஶி=இரவில்; க¹ண்டி²தா=பரத்தையர் தோள்தோய ஒவ்வாத; அப²லேவ=நாயகியை போல்; அநபேக்ஷமாணா=உதாசீனஞ்செய்த; லக்ஷ்மீ=இலக்குமி; யேந=எந்த சந்திரனுடன்; விநோத²யதி=விளையாடுகின்றாளோ; ஸঃ=அந்த; சந்த்²ரோঽபி=சந்திரனும்; தி²க்=மேற்றிசையின்; அந்த=நுனியை; லம்பீ²ஸந்=அடைந்தவனாய்; த்வத்ஆநநருசிம் உனது முகத்தின் ஒளியை; விஜஹாதி=விடுகின்றான்.

(க-ரை) நீ உறக்கமென்னும் மாதுக்குட்பட்டவனாயிருக்கையில், கணவன் பரத்தையருடன் கூடியவாறறிந்து கோபித்துக்கொண்ட மாதுபோன்று, இலக்குமியானவள் வேறுவழியின்றி உன் முகத்திற்கிணையான சந்திரனுடன் விளையாடுகிறாள். அந்த சந்திரனும் உன் முக ஒளியைக் கண்டு வெளு வெளுத்துப் போய் மேற்றிசையில் மறைந்துக்கொண்டிருக்கிறான். ஆதலால், நித்திரை எழுந்து ஆதாரமற்ற அரசு என்னும் இலக்குமியைப் பெறுவாயாக. (வஞ்சகப்புகழ்ச்சி மற்றும் உவமையணி).

சு॥ தத்²வல்கு²நா யுக²ப து²ந்மிஷி தேந தாவத்
நத்²யঃ பரஸ்பரதுலா மதி³ரோஹதாம் த்²வே।
ப்ரஸ்பந்த² மாந பருஷேதர தாரமந்தঃ
சக்ஷுஸ்தவ ப்ரசலித ப்³ரமரஞ்ச பத்²மம் ॥ 68

(ப-ரை) தத் = அக்காரணத்தால்; வல்கு²நா = அழகிய; யுகபத்தாவத் = ஒரேநேரத்தில்; உந்மி தேந = மலர்வதால்; ப்ரஸ்பந்த²மாந = அசையும்; பருஷேதர = அழகுமிக்க; தாரம் = கண்ணிமைகளுடைய; தவ = உன்னுடைய; சக்ஷுஃ = கண்கள்; அந்தஃ = உள்ளே ப்ரசலித = அசையும், ப்³ரமரம் = வண்டுகளுடைய; பத்²மஞ்ச = தாமரைகள்; த்²வே = இரண்டும்; ஸத்²யஃ = உடனே; பரஸ்பர துலாம் = ஒன்றுடன் மற்றொன்றைப்போல் உவமையை; அதி²ரோஹதாம் = அடையக் கடவது.

(க-ரை) ஆகையால், அழகாய் இமைகளுடன் அசைந்துக் கொண்டு இருக்கும் உமது கண்களும் சுருங்கியபோது உள்ளேயே இருந்துக்கொண்டு அசையும் வண்டுகளுடைய, தாமரை மலரும், ஒரே நேரத்தில் மலர்வதால் ஒன்றுக்கொன்று நிகருள்ளதாய் இருக்கட்டும். (அதாவது சூரியன் தோன்றியதும் தாமரை மலர்கிறது. அதுபோல் நீரும் உமது கண்களைத் திறப்பீராக) (ஒன்றற்கொன்று தவியணி)

௬ ॥ வ்ரிந்தாச்ச்¹லத¹ம் ஹரதி புஷ்பமநோகஹாநாம்,
ஸம்ஸ்ரிஜ்யதே ஸரஸிஜை ரருணாம்ஶுபி³ந்நைஃ ।
ஸ்வாப³ாவிகம் பரகு³ணேந விப³ாதவாயுஃ
ஸௌரப்³ய மீப்ஸுரிவதே முக¹மாருதஸ்யா ॥ 69

(ப-ரை) விப³ாத வாயுஃ = வைகறையில் வீசும் காற்று: ஸ்வாப³ாவிகம் = இயற்கையான; தே = உன்னுடைய; முக¹மாருதஸ்ய = பெருமூச்சின்; ஸௌரப்³யம் = மணத்தை; பர = பிற; கு³ணேந = மணத்தின் குணத்தால்; ஈப்ஸுரிவ = அடைய எண்ணியது போல்; அநோகஹா நாம் = விருட்சங்களின்; ப்³லத¹ம் = பாழடைந்த; புஷ்பம் = பூக்களும்; வ்ரிந்தாத் = காம்புகளால்; ஹரதி = கவர்கின்றன; அருண = சூரியனுடைய; அம்ஶு = கதிர்களால்; பி³ந்நைஃ = மலர்ந்த; ஸரஸிஜைஃ = கமலங்களுடன்; ஸம்ஸ்ரிஜ்யதே = கலக்கிறது.

(க-ரை) வைகறைக் காற்று உமது பெருமூச்சின் மணதனைதப் பின்பற்ற வேண்டுமென நினைப்பது போன்று மரங்களிலிருந்து பூக்களை உதிர்த்து, அவற்றினுடையதும், -ரிதியின் கதிர்களால் மலரும் தாமரைகளின் பரிமளத்துடன் கூடியுள்ளது. (உதயமானதும் செடிகளிலிருந்து பூக்கள் வெதுவாய் உதிர்கின்றன. தாமரைகள் மலர்கினறன. வைகறைக் காற்று அவற்றின் மணம் பெற்றிருக்

கும். அஜமன்னனின் மூச்சும் நறுமணமுள்ளது). (தன்குணமிகை யணி).

ஈ॥ தாம் ரோதரேஷு பதிதம் த்[2]ரும பல்லவேஷு
நிர்தெ[3]ளதஹார கு[2]ளிகாவிஶத[2]ம் ஹிமாம்ப[3]: ।
ஆப[3]ாதி லப்[2]த[3] பரப[3]ாக[2]தயாஂ த[3]ரோஷ்டே[1]
லீலாஸ்மிதம் ஸத[2]ஶநார்சிரிவ த்வதீ[3]யம் ॥ 70

(ப-ரை) தாம்ர=சிவந்த; உத[2]ரேஷு=இடைப்பாகமுள்ள; த்[2]ரும=மரங்களின்; பல்லவேஷு=தளிர்களில்; பதிதம்=வீழ்ந்த; நிர்தெ[3]ளத=தூய; ஹாரகு[2]ளிகா=முத்துமணிகள் போல்; விஶத[2]ம்=நிர்மலமான; ஹிம=பனியின்; அம்ப[3]:=தண்ணீர்; லப்[2]த[3]=பெறப்பட்ட; பரப[3]ாக[2]தயா=மேன்மை குணமுடையதால்; அத[3]ரோஷ்டே=உதடுகளில்; த்வதீ[3]யம்=உன்னுடைய; ஸத[2]ஶநார்சி:=பற்களின் ஒளியுடன் கூடிய; லீலா=வேடிக்கையான; ஸ்மித இவ=புன்னகைப் போல்; ஆப[3]ாதி=ஒளிர்கிறது.

(க-ரை) சிவந்த தளிர்தளின் மேல் விழுந்த சுத்தமான வெள்ளை முத்துக்கள் போன்ற பனித் தண்ணீர், உமதுஉதடுகளில் பிரகாசிக்கும் வெண்மையான பற்களின் ஒளியுடன் கூடிய புன்னகையைப்போல் மிளிர்கிறது. (புனைவுளி ஒப்புமை கூட்டவணி)

ஈ॥ யாவத் ப்ரதாபநிதி[3] ராக்ரமதே நப[3]ாநு:
அஹ்நாயதாவ த[2]ருணேந தமோ நிரஸ்தம் ।
அயோத[3]நாக்[2]ரஸரதாம் த்வயிவீர யாதே
கிம் வா ரிபூம் ஸத்வ கு[2]ருஸ் ஸ்வய முச்சி[1]நத்தி ॥ 71

(ப-ரை) ப்ரதாபநிதி[3]: வீரத்திற்கிருப்பிடமாய; ப[3]ாநு:=சூரியன்; யாவத்=எதற்குள்; நாக்ரமிதே=உதயமாவதில்லையோ; தாவத்=அதற்குள்; அஹ்நாய=சீக்கிரமாக; அருணேந=அநூரனால்; தம:=இருள்; நிரஸ்தம்=போக்கடிக்கப் பட்டது; ஹேவீர=ஓ, வீரனே! த்வயி=நீ; அயோத[3]ந=போர்களில்; அக்[2]ரஸரதாம்=தலைமையத் தாங்க; தவ=உமது; கு[2]ரு:=தகப்பனார்; ரிபூந்=பகைவர்களை; ஸ்வம்=தான்; உச்சி[1]நத்திகிம்வா=செய்யக்கூடியதென்ன?

(க-ரை) ஒளிமிக்க சூரியன் தோன்றப் போகிறான். இதற்குள் அருணன் உதயமாகி இருளைப் போக்கினான். வீரனாகிய நீர் போர்

முனையில் தலைமை தாங்க உமது தகப்பனார் செய்யக் கூடியது என்ன இருக்கப் போகிறது? (வாக்கியப் பொருட்காட்சியணி)

ஜ॥ ஶய்யாம் ஜஹத்யுப³ய பக்ஷ விநீத நித்³ராஃ
ஸ்தம்பே³ரமாஃ முக¹ர ஶ்ரிங்க¹ல கர்ஷிணஸ்தே ।
ஏஷாம் விப³ாந்தி தருணாருண ராக³யோக³ாத்
பி³ந்நாத்³ரி கை³ரிகதடா இவ த³ந்தகோஶாஃ ॥ 72

(ப-ரை) உப³யபக்ஷ = இருபுறங்களில்; விநீத = போக்கப்பட்ட; நித்³ரா = தூக்கமுள்ளவர்; முக¹ரஶ்ரிங்க¹ல = கேட்கும்படியானைக்கால் விலங்குகள்; கர்ஷிணஃ = இழுக்கும்; தே = உமது ஸ்தம்பே³ரமாஃ = யானைகள்; ஶய்யாம் = படுக்கையை; ஜஹதி = விடுகின்றன; ஏஷாம் = எந்த யானைகளின்; த³ந்தகோஶாஃ = வெள்ளையாயுள்ள தந்தங்கள்; தருணாருண = பாலசூரியனுடைய சிவந்த; ராக³யோக³ாத் = சேர்க்கையால்; பி³ந்ந = வெட்டப்பட்ட; அத்³ரி = மலையின்; கை³ரிக = செங்காவி முதலிய தாதுப் பொருட்களின்; தடா இவ = கறைகள் உள்ளதுபோல் விப³ாதி = பிரகாசிக்கின்றன.

(க-ரை) உமது யானைகள் இருபுறங்களிலும் படுத்துக்கொண்டு, தூங்கி எழுந்து தம்முடைய கட்டுக கொலுசுகளை கலகலவென்று இழுக்கின்றன. அவற்றின் தந்தங்களின் மீது சிவந்த வெய்யில் படவே, மலைச் சரிவுகளை உரசுவதால் ஒட்டியுள்ள காவிக்கல் முதலிய தாதுக்களின் வண்ணம்போல் ஒளிர்கிறது. (தொடர் நிலைச் செய்யுட் பொருட்பேறணி)

ஜ ॥ தீ³ர்கே³ஷ்வமீ நியமிதாஃ படமண்டபேஷு
நித்³ராம் விஹாய வநஜாக்ஷ வநாயு தே³ஶ்யாஃ ।
வக்த்ரோஷ்மணா மலிநயந்தி புரோக³தாநி
லேஹ்யாநி ஸைந்த³வ ஶிலா ஶகலாநி வாஹாஃ ॥ 73

(ப-ரை) ஹேவநஜாக்ஷ! = தாமரைப் போன்ற கண்களுடைய அஜமாமன்னனே! தீ³ர்கே³ஷு = நீண்ட; படமண்டபேஷு = டேராக்களில்; நியமிதாஃ = கட்டப்பட்ட; வநாயுதே³ஶ்யாஃ = வநாயு வென்னும் நாட்டிற் பிறந்த; அமீ = இந்த; வாஹாஃ = குதிரைகள்; நித்³ராம் விஹாய = தூக்கம் விட்டு; புரோக³தாநி = முன் பாகத்தை யடைந்து; லேஹ்யாநி = தின்னக் கூடிய; ஸைந்த³வ = சிந்து

லவணத்தின்; ஶிலா = கற்களின்; ஶகலாநி = துண்டுகளை; வக்த்ர = வாயின்; ஊஷ்மணா = சூட்டினால்; மலிநயந்தி = அழுக்குள்ளவை களாகச் செய்கின்றன.

(க-ரை) உங்கள் பெரிய டேராக்களில் கட்டப்பட்டுள்ள வநாயு நாட்டுக் குதிரைகள் எழுந்து ருசியின்மை, சோர்வு, வலிகள் நீங்க அவற்றின் எதிரில் வைக்கப்பட்டுள்ள சைந்தவ லவணத்தின் துண்டுகள் அழுக்குறுமாறு நக்குகின்றன. (ஏதுவணி)

சு ॥ ப³வதிவிரள ப³க்திர் ம்லாந புஷ்போப ஹார꞉
ஸ்வகிரண பரிவேஷோத்³பே²த³ ஶூந்யா꞉ ப்ரதீ³பா꞉ ।
அயமபிச கி²ரம் நஸ்த்வத்ப்ரபோ³த³ ப்ரயுக்தாம்
அநுவத³தி ஶுகஸ்தே மஞ்ஜுவாக் பஞ்ஜரஸ்த²꞉ ॥ 74

(ப-ரை) ம்லாந = வாடிய; புஷ்ப = புஷ்பங்களென்னும்; உபஹார꞉ = காணிக்கை; விரள = அரிதாயவை; ப³க்தி꞉ ப³வதி = ஆகின்றன; ப்ரதீ²பாஶ்ச = தீபங்களும்; ஸ்வகிரண = தம்முடைய ஒளி; பரிவேஷ = சுற்றுவதால்; உத்³பே²தே³ = ஒளி; ஶூந்யா꞉ = அற்றவை; ப³வந்தி = ஆகின்றது; அபிச = அதுமட்டுமன்று; அயம் = இந்த அருகில் உள்ள; மஞ்ஜுவாக் = இனிய மொழிபேசும்; பஞ்ஜரஸ்த¹ = கூண்டில் உள்ள; தே = உம்முடைய; ஶுக꞉ = கிளி; த்வத் = உம்முடைய; ப்ரபோ²த³ = விழிப்புக்காக; ப்ரயுக்தாம் = உச்சரிக்கப்பட்ட; ந꞉ = எங்களுடைய; கி²ரம் = வாக்கை; அநுவத³தி = தொடர்ந்து செப்புகிறது.

(க-ரை) பூசை செய்யப்பட்ட மலர்கள் தீர்ந்துவிட்டன; தீபங்களின் ஒளி குறைந்துவிட்டது; கூண்டில் உள்ள உங்கள் கிளி விழித்துக் கொள்ளும் பொருட்டு எங்களைப் போலவே பேசுகிறது. (மாலைவிளக்கணி)

சு॥ இதி விரசித வாக்³பி³ ர்வந்தி² புத்ரை꞉ குமாரம்
ஸபதி² விக³த நித்²ர ஸ்தல்ப முஜ்ஜாம் சகார ।
மத²படு நிநத³த்²பி³ ர்பே²ாதி³தோ ராஜஹம்ஸை꞉
ஶுகரஜஇவ க²ாங்க²ம் ஸைகதம் ஸம்ப்ரதீக꞉ ॥ 75

(ப-ரை) இதி = இவ்வாறாக; விரசித = செய்யப்பட்ட; வாக்² பி³꞉ = துதிப்பாடல்கள் யுடைய; வந்தி²புத்ரை꞉ = துதிப்பாடகர் களின்; புத்ரை꞉ = மகன்களால்; ஸபதி² = உடனே; விக²தநித்²ர꞉ =

நீங்கிய தூக்கமுடைய; குமாரஃ = அந்த அஜமன்னன்; தல்பம் = படுக்கை; மத²படுநிநத்²பி³ஃ = மதித்து இனிமையாய் ஒலி செய்துக் கொண்டிருக்கும்; ராஜஹம்ஸஃ = அன்னப்பறவைகளால்; பே²ாதிதஃ = தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்ட; ஸுப்ரதீகஃ = ஸுப்ரதிகமென்னும்; ஸுரக²ஜஃ = திக்கிலுள்ள யானை; க²ாங்க²ம் = கங்கையாற்றின் ஸைகதம் இவ = மணற்றிட்டு போல்; உஜ்ஜாம்சகார = எழுந்தான்.

(க-ரை) இவ்வாறு வந்தி மகன்கள் செய்த தோத்திரங்களால், அஜமன்னன் எழுந்திருந்து சுப்ராதீகமென்னும் யானை, அன்னங்களின ஒலிகளால் விழித்துக்கொண்டு, கங்கையாற்று மணற்றிட்டிலிருந்து எழுந்ததுபோல், படுக்கையை விட்டு எழுந்தான். (இதர விதரவணி)

கூ॥ அத¹விதி³ மவஸாம்ய ஶாஸ்த்ர த்ரிஷ்டம்
திவஸ முகே³ாசித மஞ்சிதாக்ஷி பத்³மா ।
குஶலவிரசிதாநுகூல வேஷாஃஜஸ்ஸங்
க்ஷிதிப ஸமாஜ மக²ா த்ஸ்வயம் வரஸ்த¹ம் ॥ 76

இதி காளிதாஸ க்ரிதௌ ரகு³வம்ஶ மஹாகாவ்யே பஞ்சமஸ் ஸர்க²ஃ

(ப-ரை) அத¹ = தூக்கம் விட்டெழுந்ததும்; அஞ்சித அக்ஷி பத்²மா = அழகான கண் புருவங்களுடைய; அஜஃ = அஜமன்னன்; ஶாஸ்த்ர த்²ரிஷ்டம் = நூல்களில் கண்டுள்ள; தி¹வஸ முகே²ாசிதம் = காலையில் செய்யக் கூடிய; விதி³ம் = அனுட்டானத்தை; அவஸாம்ய = முடித்துக்கொண்டு; குஶலவிரசித = நிபுணர்களால்செய்யப்பட்ட; அநுகூல = சுயம்வரத்திற்குகந்த; வேஷஸ்ஸந் = அலங்காரமுடையவனாய்; ஸ்வயம் வரஸ்த¹ம் = சுயம்வர மண்டபத்திலுள்ள; க்ஷிதிப ஸமாஜம் = அரசர் கூட்டத்தை; அக²ாத் = அடைந்தான்.

(க ரை) அழகிய கண்புருவங்களுடைய அஜமன்னன் விழித்தெழுந்ததும் காலைக் கடன்கள் முடித்துக் கொண்டு சுயம் வரத்திற்குகந்த அலங்காரஞ் செய்துக்கொண்டு சுயம்வர மண்டபத்திலுள்ள அரசர் கூட்டத்தில் பிரவேசித்தான். (வினைமுதல் விளக்கணி)

இது காளிதாசனாலியற்றப்பட்ட ரகுவம்சத்தில் ஐந்தாம் சருக்கத்திற்குத் திருத்தணிவாழ் ஸ்ரீவித்யாநந்தரெனும் செ. ராமலிங்காசாரியாரால் இயற்றப்பட்ட தெளிவுரை.

ரகுவம்ச மகா காவியம்

ஆறாம் சருக்கம்

 சு॥ ஸதத்ர மஞ்சேஷு மநோஜ்ஞ வேஷாந்
ஸிம்ஹாஸநஸ்த[1]ா நுபசார வத்ஸு ।
வைமாநிகாநாம் மருதா மபஶ்ய
த[2]ாக்ரிஷ்ட லீலாந் நரலோக பாலாந் ॥ 1

(ப-ரை) ஸ: = அந்த அஜமன்னன்; தத்ர = அங்கே சுயம்வர மண்டபத்தில்; உபசாரவத்ஸு = அரச மரியாதையுடனிருந்த; மஞ்சேஷு = மேடையில்; ஸிம்ஹாஸநஸ்த[1]ாந் = சிங்காதனங்களில் அமர்ந்திருந்த; மநோஜ்ஞ வேஷாந் = அழகிய ஆடையலங்காரங் களுடனிருந்த; வைமாநிகாநாம் = விமானங்களில் சஞ்சரிக்கும்; மருதாம் = தேவர்களால்; ஆக்ரிஷ்ட = இழுக்கப்பட்ட; லீலாந் = விலாசமுள்ள; நரலோகபாலாந் = அரசர்களை; அபஶ்யத் = கண்டான்.

(க-ரை) அச்சுயம்வர மண்டபத்தில் சகல ராஜோபசாரங் களுடன் கூடிய மேடைகளில் சிங்காதனங்களில், விமானங்களில் சஞ்சரிக்கும் தேவர்களின் விலாசங்கள் போன்ற அழகான ஆடை யலங்கர்ரங்களுடன் உட்கார்ந்திருக்கும் அரசர்களைக் கண்டான். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ரதேர் க்[2]ரிஹீதாநுநயேந காமம்
ப்ரத்யர்பித ஸ்வாங்க[2] மிவேஶ்வரேண ।
காகுத்ஸ்த[1] மாலோகயதாம் ந்ரிபாணாம்
மநோ ப[2]பூ[3]வேந்து[2]மதீ நிராஶம் ॥ 2

(ப-ரை) ரதே: = ரதிதேவியின்; க்[2]ரிஹீத = ஏற்கப்பட்ட; அநுந யேந = வேண்டுகோளால்; ஈஶ்வரேண = பரமேசுவரனால்; ப்ரத் யர்பித = திரும்பவும் கொடுத்த; ஸ்வாங்க[2]ம் = உடலுடைய; காம இவஸ்தி[1]தம் = மன்மதனோவெனக் தோன்றும்; காகுத்ஸ்தம் = அந்த அஜமன்னனை; ஆலோகயதாம் = பார்த்துக் கொண்டுள்ள; ந்ரிபாணாம் = அரசர்களின்; மந: = மனம்; இந்து[2]மதீநிராஶம் = இந்து மதி தேவியை நிகைக்கச் செய்வது; ப[2]பூ[3]வ = ஆயிற்று.

(க-ரை) ரதியால் வேண்டப்பட்டு, ஈசனால் உயிர்த்து எழுந்த உடலுடைய மன்மதனைப் போல் உள்ள அஜமன்னனைக் கண்ட அங்குள்ள அரசர்கள் தங்கள் ஆசைகளை விட்டுவிட்டனர். ஏனெனில், அவனது அழகு இந்துமதியை பிரமிக்கச் செய்வதாக இருந்தது. (உருவகவுயர்ச்சியணி)

சு॥ வைத²ர்ப³ நிர்தி³ஷ்டமஸெள குமார꞉
க்ளிப் தேந ஸோப¹ாந பதே¹ந மந்த²ம் ।
ஶிலா விப⁸ங்கை²ர் ம்ரிக²ராஜ ஶாப²꞉
துங்க²ம் நகே²ாத்ஸங்க² மிவாருரோஹ ॥ 3

(ப-ரை) அஸெள = இந்த; குமார꞉ = அஜமன்னன்; வைத²ர்ப³ நிர்தி²ஷ்டம் = போஜமன்னனால் காட்டப்பட்ட; மஞ்சம் = மஞ்சத்தை; க்ளிப்தேந = செய்யப்பட்ட; ஸோப²ாந பதே¹ந = படிகளின் வழியே; ம்ரிக²ராஜஶாப⁸꞉ = சிங்கக்குட்டி; ஶிலா = கற்களின்; விப³ங்கை꞉ = வகையில்; துங்க²ம் = எடுப்பான; நக² உத்ஸங்க³ம் இவ = மலையின் சிகரம்போல்; ஆருரோஹ = ஏறினான்.

(க-ரை) அஜமன்னன் விதர்ப அரசனால் கட்டப்பட்ட மஞ்சத்தின் மீது சிங்கக் குட்டியானது கற்களின் மீதிருந்து மலை உச்சிக்கு ஏறுவதுபோல் அதன் மீது ஏறினான். (நிகரெடுத்துக் காட்டுவமையணி)

சு॥ பரார்த்¹ய வர்ணா ஸ்தரணோப பந்நம்
ஆஸேதி²வா ந்ரத்நவ த²ாஸநம் ஸ꞉ ।
பூ⁸யிஷ்ட மாஸீ து³பமேய காந்தி꞉
மயூர ப்ரிஷ்ட¹ா ஶ்ரயிணா கு³ஹேந ॥ 4

(ப-ரை) பரார்த்¹ய = மேலாய; வர்ண = நீலம் முதலிய வண்ணங்களுடைய; ஆஸ்தரண = கம்பளம் முதலிய விரிப்புகள்; உபபந்நம் = சம்பந்தப்பட்; ரத்நவத் = ரத்தினங்கள் பதித்த; ஆஸநம் = சிங்காதனத்தை; ஆஸேதி³வாந் = ஏறிய; ஸ꞉ = அந்த அஜமன்னன்; மயூர = மயிலின்; ப்ரிஷ்ட¹ = தோகைக்கு; ஆஶ்ரயிண꞉ = அருகில் நிற்கும்; குஹேந = குமாரசுவாமிக்கு; பூ²யிஷ்ட¹ம் = மிகவும்; உபமேயகாந்தி꞉ = உவமையான ஒளியுள்ளவன்; ஆஸீத் = ஆனான்-

(க ரை) இரத்தினங்கள்பதித்த சிங்காதனத்தில் விரிக்கப்பட்ட மேலான ரத்தின கம்பளங்கள் மீது உட்கார்ந்த அஜமகாராஜன், பல

வண்ணங்களுடைய மயில்மீது உட்கார்ந்த குமாரசுவாமிக்கு நிகராக இருந்தான், (விரிவுவமையணி)

ஸு॥ தாஸு ஶ்ரியா ராஜ பரம்பராஸு
ப்ரப^{3}ா விஶேஷோத^{2}ய து^{2}ர்நிரீக்ஷ்யம் ।
ஸஹஸ்ர த^{1}ாத்மா வ்யருச த்^{3}விப^{3}க்தஃ
பயோமுசாம் பங்க்திஷு வித்^{2}யுதேவ ॥ 5

(ப-ரை) தாஸு = அந்த; ராஜ பரம்பராஸு = அரசர்களின் வரிசையில்; ஶ்ரியா = ஒளியுடன்; பயோமுசாம் = மேகங்களின்; பங்க்திஷு = வரிசைகளில்; வித்^{2}யுதே^{2}வ = மின்னல் ஒளிர்வதுபோல்; ஸஹஸ்ரத^{3}ா = ஆயிரம் விதமாய்; விப^{3}க்தஃ = சம்பந்தப்பட்ட; ப்ரப^{3}ா விஶேஷ = ஒளிகளின்; உத^{3}ய = தோன்றியதால்; து^{2}ர்நிரீக்ஷ்யம் = காணமுடியாத; ஆத்மா = சொரூபம் உள்ளவன் போல்; வ்யருசத் = பிரகாசித்தான்.

(க-ரை) அந்த அரசர் கூட்டத்தில் ஒவ்வொரு அரசனுடைய ஒளியும் ஒன்றாக கூடி முகில் வரிசையில் பலவாய் பிரிந்து ஒன்றாக தோற்றமளிக்கும் மின்னல் கொடிபோல், அஜமன்னன் கண்கூசும் ஒளிமிகுந்து மிளிர்ந்தான், (உருவகவுயர்வுநவிர்ச்சியணி)

ஸு॥ தேஷாம் மஹார்ஹாஸந ஸம்ஸ்தி^{1}தாநா
முத^{2}ார நைபத்^{1}ய ப^{3}ரிதாம் ஸமத்^{3}யே ।
ரராஜ த^{3}ாம்நா ரகு^{3}ஸூநு ரேவ
கல்பத்^{3}ருமாணா மிவ ப்ரிஜாதஃ ॥ 6

(ப-ரை) மஹார்ஹ = மேலாய; ஆஸந = சிங்காதனங்களில்; ஸம்ஸ்தி^{1}தாநாம் = இருப்பவர்களாய்; உத^{2}ார நைபத்^{1}ய ப்^{2}ரிதாம் = ஒளிக்கும் ஆடையலங்காரங்கள் பூண்டவர்களாய்; தேஷாம் = அந்த அரசர்களுடையே; மத்^{3}யே = இடையே; கல்பத்^{2}ருமாணாம் = கற்பக விருட்சங்களுக்கு; மத்^{3}யே = இடையில்; பாரிஜாத இவ = பாரிஜாதமெனும் செடியைப் போல்; ஸஃ ரகு^{3}ஸூநுரேவ = அந்தரகுவின் மகனான அஜமன்னன்; த^{3}ாம்நே = ஒளிகொண்டு; ரராஜ = பிரகாசித்தான்.

(க-ரை) சிறந்த சிங்காதனங்களில் அமர்ந்துள்ள ஆடையலங்காரங்களுடன் தோன்றிய அம்மன்னர்களுள் அஜமன்னன் கற்பக விருக்ஷங்களுக்கிடையே பாரிசாதம்போன்று அதிசயமான ஒளியுடன் மிளிர்ந்தான். (விரிவுவமையணி)

ஸு ॥ நேத்ர வ்ரஜாः பௌர ஜநஸ்ய தஸ்மிந்
விஹாய ஸர்வாந் ந்ருபதீந் நிபேதுः ।
மதே[2]ாத்கடே ரேசித புஷ்பவ்ருக்ஷா
க[2]ந்த[3] த்[3]விபே வந்ய இவ த்[2]விரேப[2]ாः ॥ 7

(க-ரை) பௌரஜநஸ்ய=நகரத்து மக்களின்; நேத்ரவ்ராஜாः= கண்களின் கூட்டங்கள்; ஸர்வாந்ந்ருபதீந்=எல்லா அரசர்களை விடுத்து; தஸ்மிந்=அந்த அஜமன்னன் மீது; மத[2]உத்கடே=மதத்தால் பருத்திருந்த கன்னங்களுடைய; வநே=காட்டிற்பிறந்த; க[2]ந்த[3]த்[2]விபே=மதயானைகளால்; ரேசித புஷ்பவ்ருக்ஷாः=மலர்கள் இல்லாமற் செய்த மரங்கள் உள்ள; த்[2]விரேப[1]ா இவ=வண்டுகள் போல்; நிபேதுः=வீழ்ந்தன.

(க-ரை) மரங்களில் உள்ள மலர்களில் தேனுண்டு வந்த வண்டுகள் காட்டு யானையைக் கண்டதும், அம்மலர்களை விடுத்து, அந்த யானையின் மத ஜலத்தின் மீது மொயப்பது போல், பிர மன்னர்கள் மீதுள்ள ஊர்மக்களின் பார்வை அம்மன்னர்களை விட்டு அஜமன்னன்மீது வீழ்ந்தது. (பெருமையணி)

ஸு ॥ அத[1] ஸ்துதே வந்தி[2]பி[3] ரந்வ யஜ்ஞைः
ஸோமார்க வம்ஶ்யே நரதே[2]வ லோகே ।
ஸஞ்சாரிதே சாக[2]ரு ஸாரயோநௌ
தூ[3]பே ஸமுத்ஸர்பதி வைஜயந்தீः ॥ 8

(ப-ரை) அத[1]=பிறகு; அந்வயஜ்ஞைः=அரசு மரபினை யறிந்த; வந்தி[2]பி[3]ः=துதிப்பாடகர்களால்; ஸோமார்க வம்ஶ்யே= சந்திர சூரிய வம்சங்களிற் பிறந்த; நரதே[2]வலோகே=அரசமக்கள்; ஸ்துதே ஸதி=துதிக்கப் படவே; ஸஞ்சாரிதே=எங்கும் பரவச் செய்த; அகருஸார=சிறந்த அத்தர் மணம்; யோநௌ=காரணமா யுள்ள; தூ[3]பே=தூபமும்; வைஜயந்தீः=கொடிகளும்; ஸமுத்ஸர்பதி ஸதி=பரவிக்கொண்டிருக்க.

(க-ரை) பிறகு, வந்தி மாகதர்கள் (கட்டியங்காரர்கள்) சந்திர சூரிய வம்சத் தரசர்களின் மரபுகளையும் அவர்களின் விருதுகளையும் குறிப்பிட்டுப் பாடினார்கள். அத்தர் மணங்கள் கொடிகளின் உயரத்தையும் 'தாண்டி பரவிக்கொண்டிருக்க. (நிகழ்வினவிர்ச்சி யணி)

சு ॥ புரோபகண்டே[1]ஈப வநாஶ்ரயாணாம்
கலாபிநா முத்[2]தி[3]த வ்ரித்த ஹேதௌ
ப்ராத்[3]மாத ஶங்கே[1] பரிதோதி[2]க[2]ந்தாந்
தூர்ய ஸ்வநேந மூர்ச[1]தி மங்க[2]ளார்தே[1] ॥ 9

(ப-ரை) புரோபகண்ட[1] = நகரத்தின் அருகில் உள்ள; உபவநே = பூங்காவனத்தில்; ஆஶ்ரயாணாம் = இருப்பிடமாகவுள்ள; கலாபிநாம் = மயில்களுக்கு; உத்[2]த[3]த வ்ரித்தஹேதௌ = அதிக நடனத்துக்கு காரணமாகிய; ப்ராத்[3]மாத ஶங்கே[1] = ஊதப்பட்ட சங்குகள் உள்ளதும்; மங்க[2]ள அர்தே[1] = சுபங்களே பயனாக உள்ளதும் ஆகிய; தூர்யஸ்வநே = வாத்தியங்களின் ஒலி; பரிதஃ = எல்லா; தி[2]க[2]ந்தாந் = திசைகளின் கடையிலும்; மூர்ச[1]தி ஸதி = பரவிக் கொண்டிருக்க.

(க-ரை) சங்குகள் முழங்கின. மங்கள வாத்தியங்கள் ஒலித்தன. இவற்றின் அதிகமான ஒலிகள் திசைகள் எங்கும் பறவிற்று. அருகில் உள்ள நந்தவனங்களில் மயில்கள் அவற்றை முகில்களின் ஓசை யென்றெண்ணி, நடனம் செய்யத் தொடங்கின. (நிரநிறையணி).

சு॥ மநுஷ்ய வாஹ்யம் சதுரந்தயாநம்
மத்[3]யாஸ்ய கந்யா பரிவாரஶோபி[3] ।
விவேஶ மஞ்சாந்தர ராஜமார்க[2]ம்
பதிம்வரா க்லுப்த விவாஹ வேஷா ॥ 10

(ப-ரை) பதிம் வரா = மணமகனைத் தேர்ந்தெடுக்கும்; க்லுப்த விவாஹவேஷா = திருமணத்திற்கு வேண்டிய அலங்காரங்களுடைய; கந்யா = இந்துமதி தேவி; மநுஷ்ய வாஹ்யம் = மனிதர்களால் சுமக்கப்பட்ட; பரிவாரஶோபி[3] = ஏவலாட்களுடன் கூடிய; சதுரந்த யாநம் = பல்லாக்கை; அத்[3]யாஸ்ய = ஏறிக் கொண்டு; மஞ்சாந்தர = மஞ்சங்களின் நடுவில்; ராஜமார்க[2]ம் விவேஶ = ராஜவீதியில் நுழைந்தாள்.

(க-ரை) மணமகனைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, திருமணத்திற்குரிய ஆடையாபரணங்களைத் தொடுத்து; பல்லக்கிலேறி, ஏவலாட்களுடன் அம்மஞ்சங்கட்கிடையில் ராஜவீதியில் பிரவேசித்தாள். (நிகழ்வினவிற்சியணி)

ஸ்ரீ॥ தஸ்மிந் வித³ாநாதிஸயே வித³ாதுঃ
கந்யாமயே நேத்ர ஸதைக லக்ஷ்யே ।
நிபேது ரந்தঃகரணைர் நரேந்த்³ரா
தே³ஹை ஸ்திதாঃ கேவல மாஸநேஷு ॥ 11

(ப-ரை) நேத்ரஸதைக லக்ஷ்யே = நூற்றுக்கணக்கான கண்களுக்கு முக்கியமாக பார்க்கத்தக்க; கந்யாமயே = கன்னிகை உருவிலான; தஸ்மின் = அந்த; வித³ாதுঃ = பிரமனின்; வித³ாநாதிஸயே = படைப்பின் சிறப்பில்; நரேந்த்³ராঃ = அரசர்கள்; அந்தঃகரணைঃ = மனங்களில்; நிபேதுঃ = வீழ்ந்தனர்; ஆஸநேஷு = சிங்காதனங்களில்; தேஹைঃகேவலம் = உடல்களுடன் மட்டும்; ஸ்தி¹தாঃ = இருந்தனர்.

(க-ரை) பல நூற்றுக்கணக்கான கண்களால் பார்க்கத் தக்கவாறு பிரமனின் திறமையால் மிக லாவண்ணியத்துடன் படைக்கப்பட்ட அந்த கன்னிகையை அரச குமாரர்கள் அவளிடத்திலேயே ஒருங்கிணைந்த மனத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது அவர்களின் உடல்கள் மட்டும் ஆசனங்களில் உட்கார்ந்திருந்தன. (இன்பவணி மற்றும் உயர்வினவிற்சி)

ஸ்ரீ ॥ தாம் ப்ரத்யபி³ வ்யக்த மநோரத¹ா நாம்
மஹீபதீநாம் ப்ரணயாக்³ர தூ³த்யঃ ।
ப்ரவாள ஸோப³ா இவ பாத³பாநாம்
ஸ்ரிங்க³ார சேஷ்டா விவித³ா ப³பூ³வঃ ॥ 12

(ப-ரை) தாம்ப்ரதி = அந்த இந்துமதீ தேவியைக் குறித்து; அபி³வ்யக்த = நன்கு; மநோரத¹ாநாம் = விருப்பமுள்ள; மஹீபதீநாம் = அரசகுமாரர்களுக்கு; ப்ரணயா = பிரார்த்தனைகளில்; அக்³ர தூ³த்யঃ = முதன்மை சேடிகளில்; விவித³ঃ = பலவிதமான; ஸ்ரிங்க³ார சேஷ்டাঃ = சிங்கார சேட்டைகள்; பாத³பாநாம் = மரங்களுக்கு; ப்ரவாள ஸோப³ா இவ = தளிர்கள் போன்று; ப³பூ³வ = ஆயின.

(க-ரை) அந்த இந்துமதியின் நன்கு அறியப்படும் விருப்பமுள்ள அரசகுமாரர்களுக்கு அவர்களின் திருமணம் குறிக்கும் தொழில்கள் இளவேனில் என்னும் மடந்தையைப் பார்த்து, மரங்கள் (இளவேனிற் காலத்தில்) இளந்தளிர்கள் விடுவதுபோலிருந்தது. (அகமலர்ச்சியணி)

சு ॥ கஶ்சித் கராப்3யாம் உபகூ2ட3 நாளம்
ஆலோல பத்ராபி3 ஹதத்2விரேப3ம் ।
ரஜோபி3ரந்த: பரிவேஷ ப2ந்தி3
லீலாரவிந்த2ம் ப்3ரமயாஞ்சகார ॥ 13

(க-ரை) கஶ்சித் = ஒரு அரசன்; கராப்3யாம் = கைகளால்; உபகூ2ட3 நாளம் = பிடித்துக்கொண்ட காம்பையுடைய; ஆலோல பத்ர = அசையும் இதழ்களால்; அபி2ஹத த்விரேப3ம் = அடிக்கப் பட்ட வண்டுகளுடைய; ரஜோபி3: = மகரந்தத்தால்; அந்த: பரிவேஷ = உள்மண்டலத்தை; ப2ந்தி3 = கட்டும்படி; லீலா = வேடிக்கைக்காக; அரவிந்த2ம் = தாமரை மலரை; ப்3ரமயாம் சகார = திருப்பினான்.

(க-ரை) ஓரரசன் இந்துமதி தன்னை திருமணம் செய்துக் கொண்டு பிரமிக்கச் செய்யவேண்டுமென்ற எண்ணம் பிரதிபலிக்கக செய்யுமாறு ஒரு தாமரை மலரின் காம்பை கையில் பிடித்துக் கொண்டு திருப்பிக் கொண்டிருந்தான். (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ விஸ்ரஸ்த மம்ஸா த2பரோ விலாஸீ
ரத்நாநு வித்2த3ாங்க2த2 கோடி லக்2நம் ।
ப்ராலம்ப2 முத்க்ரிஷ்ய யத3ா ப்ரதே2ஶம்
நியாய ஸாசீ க்ரித சாருவக்த்ர: ॥ 14

(ப ரை) விலாஸீ = சிங்கார சீலனான; அபர: = மற்றொரு அரசன்; அம்ஸாத் = தோளிலிருந்து; விஸ்ரஸ்தம் = நழுவிய; ரத்ன அநுவித்2த3: = ரத்தினங்கள் பதித்த; அங்க2த2 கோடி = தோளணியின் நுனியில்; லக2நம் அகப்பட்டிருந்த; ப்ராலம்ப2ம் = ஒழுங்காயிருக்கும் வண்ணம் தன் கண்டமாலையை; உத்கரிஷ்ய = எடுத்துக்கொண்டு; ப்ராகீக்ரித = திரும்பிய; சாறுவக்த்ரஸ்ஸந் = அழகிய முகமுடையவனாய்; யத1ாப்ரதே2ஶம் = தனது ஆசனத்தில்; நியாய = அமர்ந்திருந்தார்.

(க-ரை) விலாச புருடனான மற்றொரு அரசன் தன்னுடைய ரத்தினங்கள் பதித்த தோளணியில் நுனிக்கு மாட்டிக்கொண்டு இருந்த் கண்டமாலையை முகம் திருப்பி எடுத்துக்கொண்டு, சரியாகப் போட்டுக்கொண்டு எப்போதும் போல் தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்திருந்தான். இவ்விதம் தான் இந்துமதியுடன்

லீலாவிநோதம் செய்தல் வேண்டுமெனக் குறிப்பிட்டான். (நினைப்பணி)

சு॥ ஆகு[1]ஞ்சி தாக்[2]ராங்கு[2]ளிநா ததோங்யஃ
கிஞ்சித் ஸமாவர்ஜித நேத்ர ஶோப[3]ஃ ।
திர்யத்[2]வி ஸம்ஸர்பித நக[1]ப்ரபே[3]ண
பாதே[2]ந ஹைமம் விலிலேக[1] பீட[1]ம் ॥ 15

(ப-ரை) ததஃ=முன்கூறிய அரசனை விட; அந்யஃ=மற்றொரு அரசன்; கிஞ்சித் ஸமாவர்ஜித=சற்று வளைந்த; நேத்ரஶோப[3]ந்= கண்ணொளி உடையவனாய்; ஆகுஞ்சித=வளைந்த; அக்[2]ர அங்கு[2]ளிநா = நுனி விரல்களுடைய; திர்யக்[2]விஸம்ஸர்பித= குறுக்கே உள்ள; நக[1]=நகங்களின்; ப்ரபே[3]ந=ஒளியுள்ள; பாதே[2]ந=பாதங்களால்; ஹைமம்=பொன்னாலாய; பீட[1]ம்= பாதபீடத்தை; விலிகே[1]ந=கீறி குறிப்பாக காட்டினான்.

(க-ரை) மற்றொரு அரசன் இந்துமதியை தன்னிடம் வருமாறு குறிக்கும்படியாக தன் கண்களை சற்று வளைத்தவனாய், தன்கால் விரல்களை; வளைத்துக்கொண்டு ஒளிக்கும் நகங்களால் பாதபீடத் தின் மீது கீறினான். (நிலத்தின் மீது கீறுவோன் அவலக்ஷண முடையவன் என்பது இந்துமதியின் முடிவு). (உய்த்துயர்வணி)

சு॥ நிவேஶ்ய வாமம் பு[3]ஜமாஸநார்தே[3]
தத் ஸந்நிவேஶா த[2]தி[3]கோந்நதாம்ஸஃ ।
கஶ்சித்[2] விவ்ரித்தத்ரிக பி[3]ந்நஹாரஃ
ஸுஹ்ரித் ஸமாப[3]ஷண தத்பரோ ஃபூ[3]த் ॥ 16

(ப-ரை) கஶ்சித்=ஒரு அரசன்; வாமபு[3]ஜம்=இடது தோளை ஆஸந அர்தே[3]=சிங்காஸனத்துப் பாதியில்; நிவேஶ்ய=வைத்து; தத் ஸந்நிவேஶாத்=அந்த இடது புயத்தை வைப்பதால்; அதி[2]க உந்நத=மிக எடுப்பான; அம்ஸஸ்ஸந்=தோள்பட்டையுடைய வனாய்; விவ்ரித்[2]த[3]=திரும்பிக் கொண்டுள்ள; த்ரிக=பின்னால் முதுகில்; பி[3]ந்ந ஹாரஃ=தொங்கும் முத்து மாலையை உடையவ னாய்; ஸுஹ்ரித் ஸமாப[3]ஷண=நண்பனோடு பேசுவதில்; தத்பரஃ அபூ[3]த்=ஆர்வமுள்ளவனாவான்.

(க-ரை) ஒரு அரசன் இடது கையை ஊன்றிக்கொண்டு, எடுப் பாக தோன்றும் தோள்பட்டையுடையவனாய், கழுத்தில் உள்ள

முத்தாரம் முதுகில் தொங்கிக் கொண்டிருக்க, அருகில் உள்ள நண்ப னோடு பேசுவதற்கு அவன் பக்கம் திரும்பி பேச விழைந்தான். அதாவது தானிதுபோல் இந்துமதியுடன் பேசவேண்டுமென்று சூசக மாக அறிவித்தான். இந்துமதியோ அவன் ரசிகனல்லனென்றும் தன்னைப் பார்க்காததால் அவனையும் பாராமலேயே போய் விட்டாள். (நினைப்பணி)

சு ॥ விலாஸிநீ விப்[3]ரம த[3]ந்தபத்ர
மாபாண்டுரம் கேதக ப[3]ர்ஹமந்ய: ।
ப்ரியாநிதம்பே[2]ாசித ஸந்நிவேஶ:
விபாடயாமாஸ யுவா நக[1]ாக்[3]ரை: ॥ 17

(ப-ரை) அந்ய: = மற்றோரரசன்; யுவா = இளமையானவன்; விலாஸிநீ = அன்பு சிநேகிதிக்கு; விப்[3]ரம = வேடிக்கைக்காக; த[3]ந்த பத்ர பூ[3]தம் = தந்தத்தால் செய்த காதணிபோல் உள்ளதும்; ஆபாண்டுரம் = அனைத்தும் வெண்ணிற மானதும் (ஆகிய); கேதக பர்ஹம் = தாழை இதழை; ப்ரியா = காதலியின்; நிதம்ப[2] உசிதை = பிருட்டபாகத்தில் வழக்கம்போல்; ஸந்நிவேஶ: = வைக்கும்; நக[1]ாக்[2]ரை: = நகங்களின் நுனிகளால்; விபாடயாமாஸ = கிழித் தான்.

(க-ரை) இளம் பிராயமுள்ள மற்றோரரசன் பெண்களின் நிதம்பத்தின் மேல் விரண முண்டாக்கும் தன் கை நகங்களால், பெண்கள் விலாசத்திற்காக அணியும் தந்தக் கம்மல் போல் வெள்ளை நிறமுள்ள தாழம்பூவின் இதழை, தான் இந்துமதியின் நிதம்பத்தின்மீது நகத்தால் கீற விழைவதை அறிவிக்கும் வண்ணம் கிழித்துக் கொண்டிருந்தான். இதைக் கண்ட இந்துமதி, அவன் திரிணங்களைக் கிழிக்கும் அவலக்ஷண முடையவனென்று அவனை விட்டுச் சென்றாள். (நினைப்பணி மற்றும் பிறிதின விற்சியணி)

சு ॥ குஶேஶயா தாம்ரதலேந கஶ்சித்
கரேண ரேக[2]ாத்[3]வஜ லாஞ்ச[1]நேந ।
ரத்நாங்கு[2]ளீய ப்ரப[3]யாऽநு வித்[2]த[3]ா
நுதீ[2]ரயாமாஸ ஸலீல மக்ஷாந் ॥ 18

(ப-ரை) கஶ்சித் = ஒரு அரசன்; குஶேஶய = தாமரையைப் போல்; ஆதாம்ர = செந்நிறமான; தலேந = அங்கையுடைய; ரேக[1]ாத்[3]

வஜ லாஞ்ச1நேந = கோடுகளுடைய கொடிகளை சின்னமாக உள்ள; கரேண = கைகளால்; ரத்நாங்கு2ளீய = ரத்தினங்களின் மோதிரங்களின்; ப்ரப3யா = ஒளியால்; அநுவித்2த3ா ந் = பறந்த; அக்ஷாந் = தாயங்களை; ஸலீலம் யத1ாதத1ா = வேடிக்கையுடன் கூடியவாறு; உதீ2ரயா = எடுத்துப் போட்டரன்.

(க-ரை) தாமரைப் பூப்போல் சிவந்த கோடுகளுடைய உள்ளங்கையால், விரலிலுள்ள மோதிரத்தின் ரத்தின ஒளியால் மின்னும், தாயங்களை எடுத்து ஒரு அரசன் வீசினான். அவளுடன் இதுபோல் விளையாட வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கும், சூதாடும் கடையன் இவனென்ற எண்ணம் அவளுக்கும் உண்டாயிற்று (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ கஶ்சித் யத1ாப3ாக2 மவஸ்தி1தே஽பி
ஸ்வ ஸந்நிவேஶாத் வ்யதிலங்கி2நீவ ।
ரத்நாம்ஸு க2ர்ப3ாங்கு2ளி ரந்த்3ர மேகம்
வ்யாபாரய3ா மாஸ கரம் கிரீடே ॥ 19

(ப-ரை) கஶ்சித் = ஒரு அரசன்; யத1ாப3ாக2ம் = உள்ள இடத்தில்; அவஸ்தி1தே஽பி = இருப்பதே ஆயினும்; ஸந்நிவேஶாத் = அதனிடம் விட்டு; வ்யதிலங்க2நீவ = நழுவியது போல்; கிரீடே = மகுடத்தில்; ரத்ன = உள்ள ரத்தினங்களின்; அம்சு = ஒளியே; க2ர்ப3 = உள்ளடங்கிய; அங்கு2ளி = விரல்களின்; ரந்த்2ரம் = துளைகள் உள்ள; ஏகம் = ஒன்றான; கரம் = கையை; வ்யாபாரயாமாஸ = பரவச் செய்தான்.

(க-ரை) ஒருமன்னன் தன் கிரீடம் உள்ளது உள்ளபடி இருந்த போதிலும், அந்த பாரமற்ற கிரீடத்தைச் சுமப்பது போல் இந்து மதியை சுமக்கும் குறிப்பை உணர்த்துவதுபோல், தன் கிரீடத்தை அதன் ரத்தின ஒளி தன் விரல் சந்துகளில் பரவ, தன் கையால் அதனை சரிசெய்து கொள்பவன் போல் தொட்டான். (தலைமீது கை வைப்பவன் அவலக்ஷணமானவன் என்பது இந்துமதியின் குறிப்பு) (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ததோ ந்ரிபாணாம் ஶ்ருத வ்ரித்தவம்ஶா
பும்வத் ப்ரக2ல்ப3ா ப்ரதிஹார ரக்ஷி ।
ப்ராக்ஸந் நிகர்ஷம் மக2தே3ஶ்வரஸ்ய
நீத்வா குமாரீ மவத2த்ஸு நந்த2ா ॥ 20

(ப-ரை) தத꞉ = பிறகு; ந்ரிபாணாம் = அரசர்களின்; ஶ்ருதவ்ரித்த வம்ஶா = மறபுகளைப் பற்றி விவரிக்கக் கேட்ட; ப்ரக²ல்ப⁴ா = நாவன்மை மிக்க; ஸுநந்தா = சுநந்தையென்னும்; ப்ரதீஹார ரக்ஷீ = வாயில்காப்பவள்; ப்ராக் = முதலில்; குமாரீம் = இந்துமதி தேவியை; மக²தே³ஶ்வரஸ்ய = மகத நாட்டரசனுக்கு; ஸந்நிகர்ஷம் = அருகில்; நீத்வா = அடையச் செய்து; பும்வத் = ஆண்மகனைப் போல்; அவத³த் = நவின்றாள்.

(க-ரை) அரசர்களின் மறபுகள் பற்றியும் கேட்டுக் கொண்டிருந்த நாவன்மை மிக்க சுநந்தையென்னும் வாயில் காப்பவள், முதலில், இந்துமதியை மகதநாட்டரசனிடம் அழைத்துச் சென்று ஆண்மகனைப் போன்று கூறினாள். (நிகழ்வினவிற்சியணி)

கா॥ அஸௌ ஶரண்யஸ் ஶரணோந்முக²ாநாம்
மக²ாத³ ஸத்வோ மக²த³ப் ரதிஷ்ட²꞉ ।
ராஜா ப்ரஜா ரஞ்ஜந லப்³த³வர்ண꞉
பரந்தபோ நாம யத²ார்த²நாமா ॥ 21

(ப-ரை) ஶரணோந் முக²ாநாம் = சரணடைந்தவர்களைக் காக்க வல்லமையுள்ள; அக²ாத³ஸத்வ꞉ = கம்பீரமான சுபாவமுடைய; மக²த³ப்ரதிஷ்ட²꞉ = மகத நாடுகளில் நிலைத்த; ப்ரஜா ரஞ்ஜந = மக்களை மகிழச் செய்வதில்; லப்த³வர்ண꞉ = எழுத்தறிவு (கல்வி) உள்ள; பரந்தபோநாம = பரந்தபன் என்ற பெயருள்ள; அஸௌ = இந்த; ராஜா = அரசன்; யதா²ர்த²நாமா = பெயருக்கேற்றவன்.

(க ரை) சரணடைந்தவர்களைக் காப்பாற்றும் கம்பீர சுபாவமுள்ளவனும், குடிகளை மகிழச்செய்யும் வல்லவனுமாகிய மகத நாட்டரசனெனும் இந்த பரந்தபன் அதன் பொருளுக்கேற்ற பெயருடையவன். (பரம் = பகைவர்களை; தபன் = தவிக்கச் செய்பவன். அதாவது-பகைவர்களை வெல்பவன்) (மேன்மேலுயற்சியணி)

சு ॥ காமம் ந்ரிபாஸ் ஸந்து ஸஹஸ்ரஶோऽந்யே
ராஜந்வதீ மாஹு ரநேந பூ⁴மிம் ।
நக்ஷத்ர தாராக்³ரஹ ஸங்குலாऽபி
ஜ்யோதிஷ்மதீ சந்த்³ர மஸௌவ ராத்ரி꞉ ॥ 22

(ப-ரை) அந்யே=மீதி; ந்ரிபா꞉=அரசர்கள்; காமம்=பல; ஸஹஸ்ரஶ꞉=ஆயிரமாயிரம்; ஸந்து=இல்லாத; பூமிம்=பூமியை; அநேந=இந்த பரந்தப அரசனால்; ராஜந்வதீம்=நல்லதொரு அரசன் உள்ளதாக; ஆஹு꞉=சொல்கின்றனர்; நக்ஷத்ர தாராக்³ரஹ =அசுபதி முதலிய விண்மீன்களும் பிற சாதாரண விண்மீன்களாலும், மற்றும் கோள்களாலும்; ஸங்குலாபி=கூடி விரிந்து உள்ளதாயினும் ராத்ரி꞉=இரவு; சந்த்³ரமஸைவ=சந்திரனாலேயே; ஜ்யோதிஷ்மதி=ஒளி பெற்றுள்ளது.

(க-ரை) நட்சத்திரங்கள், கோள்கள், தாரகைகள் உள்ளதாய் பரந்து விரிந்துள்ளபோதிலும் சந்திரனால் மட்டுமே ஆகாயம் பிரகாசிப்பதுபோல், பற்பல அரசர்கள் இருந்தபோதிலும் இவரால் பூமியை, நல்லதொரு அரசனைப்பெற்றுள்ளதாக கூறுகின்றனர். (தொகையுவமையணி)

௬ ॥ க்ரியா ப்ரப³ந்தா³த³ய மத்⁴வராணாம்
அஜஸ்ர மாஹூத ஸஹஸ்ர நேத்ர꞉ ।
ஶச்யா ஸ்சிரம் பாண்டு³ கபோல லம்ப³ாந்
மந்தா³ர ஶூந்யா நலகாம் ஶ்சகார ॥ 23

(ப-ரை) அயம்=இந்த பரந்தப மன்னன்; அத்⁴வராணாம்=வேள்விகளின்; க்ரியா ப்ரப³ந்தா³த்=அநுட்டானத்தால்; அஜஸ்ரம்=எப்போதும்; ஆஹூத=அழைக்கப்பட்ட; ஸஹஸ்ர நேத்ரஸ்ஸந்=தேவேந்திரனை உடையவனாய்; சிரம்=வெகு காலம்; ஶச்யா=சசீதேவியின்; அலகாந்=முகத்தில் தொங்கும் முடியை; பாண்டு³=வெள்ளையான; கபோலலம்ப³ாந்=கன்னங்கள் மீது தொங்கும்படியாகவும்; மந்தா³ர ஶூந்யாந்=கற்பகத்தையில்லாமலும்; சகார=செய்தான்.

(க-ரை) மேலும் இந்த மன்னன் எப்போதும் வேட்டலால் இந்திரன் சொர்கத்தை விட்டு, அந்த வேள்விகளின் அழைப்புகளையொட்டி அங்கேயே இருந்து விடுகின்றான். இவ்வாறு கணவன் தன்னருகில் இல்லாமையால் அவன் மனையாகிய சசீதேவி யாதொரு அலங்காரமும் செய்துக் கொள்வதில்லை. (ஏதுவணி மற்றும் பெருமையணி)

·॥ அநேநசே தி[2]ச்ச[1]ஸி க்[2]ரிஹ்யமாணம்
பாணிம் வரேண்யேந குரு ப்ரவேஶே ।
ப்ராஸாத[1] வாதாயந ஸம்ஸ்தி[1]தாநாம்
நேத்ரோத்ஸவம் புஷ்ப புராங்க[2]நாநாம் ॥ 24

(ப-ரை) வரேண்யேவ = தேர்ந்தெடுக்கத்தக்க; அநேந = ந்தபரந்தபமன்னரால்; க்[2]ரிஹ்யமாணம் = ஏற்கப்பட்ட; பாணிம் = கையை; இச்ச[1]ஸிசேத் = விரும்புவாயாகில்; ப்ரவேஶே = பட்டணம் மழையும்போது; ப்ராஸாத[2] = அரசு மாளிகைகளின்; வாதாயந = லகணிகளில்; ஸம்ஸ்திதாநாம் = உள்ள; புஷ்பபுர = பாடலிபுரத்து அங்க[2]நாநாம் = பெண்களின்; நேத்ரோத்ஸவம் = கண்களுக்கு விருந்து; குரு = செய்வாய்.

(க-ரை) நீ இவ்வரசனை தேர்ந்தெடுத்து திருமணம் செய்துக் கொண்டால் இவருடைய பாடலீபுரத்து உப்பரிகைகளிலிருக்கும் பல ணிகள் வாயிலாக பார்க்கும் பெண்களுக்கு கண் விருந்து செய்பவ ராகின்றாய். (கருத்துடையடையணி)

·॥ ஏவம் தயோக்தே தமவேக்ஷ்ய கிஞ்சி-
த்[2]விஸ்ரம்ஸி தூ[2]ர்த்[2]வாங்க மதூ[3]கமாலா ।
ருஜுப்ராணம க்ரியயைவ தந்வீ
ப்ரத்யாதி[2]தே[2]ஶை ந மப[3]ாஷமாணா ॥ 25

(ப-ரை) ஏவம் = இதுபோல்; தயா = அந்த சுநந்தையால்; உக்தேஸதி = சொல்லவே; தம் = அந்த பரந்தப மன்னனை; அவேக்ஷ்ய = பார்த்துவிட்டு; கிஞ்சித்விஸ்ரம்ஸி = சற்று நழுவிய; தூ[2]ர்வா = அருகம்புல்; அங்க = சின்னமாக உள்ள; மதூ[3]க = இலுப் பைப்பூ; மாலா = மாலையை உடைய; தந்வீ = இந்துமதிதேவி; ஏவம் = இந்த பரந்தப மன்னனை; அப[3]ாஷமாணா = பேசாதவ ளாய்; ருஜுப்ரணாம = பேசாமல் வணங்குதலால்; ப்ரத்யாதி[2]தே[3]ஶ = விட்டுச் சென்றாள்.

(க-ரை) இவ்வாறு சுநந்தை சொல்லவே, இந்துமதி அவளைப் பார்த்து ஒன்றும் பேசாமல் வணக்கம் செலுத்தியவளாய் தன்கையி லுள்ள அருகம்புல்லுடன் சேர்த்துக் கட்டப்பட்ட இலுப்பைப் பூ மாலை சற்று நழுவியவாறே அப்புறம் தாண்டிச் சென்றாள். (நிகழ் வினவிற்சியணி)

சு॥ தாம் ஸைவ வேத்ர க்2ரஹணே நியுக்தா
ராஜாந்தரம் ராஜஸுதாம் நிநாய ।
ஸமீரணோத்தே1ந தரங்க2 ரேக1ா
பத்2மாந்தரம் மாநஸ ராஜஹம்ஸீம் ॥ 26

(ப-ரை) வேத்ரக்2ரஹணே = பிரம்பைக் கையிலேந்தி; நியுக்தா = நியமிக்கப்பட்ட; (அதாவது வாயில் காப்பவளான) ஸைவ = அந்த சுநந்தையே; தாம் ராஜஸுதாம் = அந்த அரச மகளை (இந்துமதியை) ராஜாந்தரம் = வேறு அரசனிடம்; ஸமீரண உத்த1ா = காற்றில்பிறந்த; த1ரங்க2ரேக1ா = அலைகளின் வரிசை; மாநஸராஜஹம்ஸீம் = மானஸ ஏரியில்அன்னப்புள்ளை; பத்2மாந்தர இவ = வேறொரு தாமரை மலருக்கு (கொண்டு செல்வது போல்) நிநாய = அடையச் செய்தாள்.

(க-ரை) பிரம்பை கையில் பிடித்திருந்த வாயில்காப்பாளாகிய சுநந்தை இந்துமதியை மானஸமெனும் ஏரியில் அன்னப்பறவையை ஒரு மலரிலிருந்து மற்றொரு தாமரை மலருக்கு வாயுவின் துணையால் அசையும் அலைகளால் அடித்துச் செல்வது போல் அவ்வரசனிடமிருந்து மற்றோர் அரசனிடத்திற்கு அழைத்துச் சென்றாள். (எடுத்துக்காட்டுவமையணி)

சு ॥ ஜக2ாத2 சைநா மயமங்க2 நாத1
ஸ்ஸுராங்க2நாப்ரார்தி1த யௌவநஸ்ரீ: ।
விநீத நாக2: கில ஸூத்ர காரை
ரைந்த்2ரம் பத2ம் பூ3மிக2தோபி பு3ங்க்தே ॥ 27

(ப-ரை) ஏநாம் = இந்துமதியை நோக்கி; ஜக2ாத3 = சொன்னாள்; ஸுராங்க2நா = தேவப் பெண்களால்; ப்ரார்தி1த = கோரப்பட்ட; யௌவநஸ்ரீ: = இளம்பருவமெனும் சம்பத்தையுடைய; அயம் அங்க1 நாத2: = இந்த அங்க நாட்டு மன்னன்; ஸூத்ரகாரை: = யானை நூல்களியற்றிய வாலகில்யர்களால்; விநீத = கற்பிக்கப்பட்ட, நாக2: கில = யானைகளை உடையவன் ஆதலால்; பூமிக2தோபி = பூமியை அடைந்துள்ளனாயினும்; ஐந்த்2ரம் = இந்திரன் தொடர்பான; பத2ம் = ஐசுவரியத்தை; பு3ங்க்தே = அனுபவிக்கின்றான்.

(க-ரை) அப்போது அந்த சுநந்தை சொன்னதாவது; அங்க நாட்டரசனான இவன் தேவமாதுகள் விழையத்தக்க இளமை வயதுடையவன்; கஜசாத்திரம் இயற்றிய வாலகில்யர்களால்

வளர்க்கப்பட்ட யானைகள் உள்ளவனாய் பூலோகத்து தேவேந்திர னாகவே இருக்கிறான். (புனைவுளி விளைவணி)

சு ॥ அநேக பர்யாஸயதாஃஸ்ர பி²ந்தூ²ந்
முக்தாப¹ல ஸ்¹தூலதமாந் ஸ்தநேஷு ।
ப்ரத்யர் பிதா꞉ ஶத்ரு விலாஸிநீநா
முந்முச்ய ஸூத்ரேணவிநைவஹாரா꞉ ॥ 28

(ப-ரை) ஶத்ரு விலாஸி நீநாம்=பகைவர்களின் பெண்களுடைய; ஸ்தநேஷு=முலைகள் மீது; முக்தாப¹ல ஸத்²ரிஶாந்= முத்துமணிகளைப் போல் ஸ்து²லதமாந்=மிகப்பெரிய; அஸ்ர பி²ந்தூ²ந்=கண்ணீர் சொட்டுகளை; ப்ரயாஸயதா=பாயச் செய்யும் அநேந=இந்த வங்க நாட்டரசனால்; உந்முச்ய=எடுத்து; ஸூத்ரேணவிநா=கயிறு தவிர்த்து; ஹாரா ஏவ=ஆரங்களே; ப்ரத்யர்பிதா= வைக்கப்பட்டன.

(க-ரை) இவ்வரசன் பகைவரைக் கொல்வதால் அவர்களுடைய மனைவிகளின் கண்ணீர் பெரிய முத்துக்களைப்போல் அவர்களின் கொங்கைகள்மீது விழுந்து கயிறற்ற முத்துமாலைபோல் பிரகாசித்தன. அதாவது, இவ்வரசன் பகைவர்களைக் கொல்பவன். (பொதுப்புனை விலி புகழ்ச்சியணி)

சு ॥ நிஸர்க² பி³ந்நாஸ் பத²மேக ஸம்ஸ்த¹
மஸ்மிந் த்²வயம் ஶ்ரீ꞉ச ஸரஸ்வதீ꞉ச ।
காந்த்யா கி²ரா ஸூந்ரிதயா சயோக்²யா
த்வமேவ கல்யாணி தயோஸ்த்ரிதீயா ॥ 29

(ப-ரை) நிஸர்க² = இயற்கையில்; பி³ந்ந ஆஸ்பத²ம்= வெவ்வேறு இடங்களுடைய; ஶ்ரீ꞉ ச=இலக்குமியும்; ஸரஸ்வதீச= ஸரஸ்வதியும்; த்²வயம்=இவ்விருவரும்; அஸ்மிந்=இந்த வங்கத்தரசனிடம்; ஏகஸம் ஸ்த¹ம்=ஒருவனிடமே உள்ளனர்; ஹேகல்யாணி=ஓ இந்துமதி! காந்த்யா=ஒளியாலும்; ஸூந்ரித=வாய்மை; கி²ராச=வாக்கினாலும்; யோக்²ய=தகுதியுடைய; த்வமேவ= நீயே; தயோ꞉=அந்த இலக்குமி சரசுவதிகளுடன்; த்ரிதீயா= மூன்றாமவளாவாய்.

(க-ரை) இயற்கையாகவே ஒருவர் உள்ள இடத்தில் மற்றவர் வாழாத இலக்குமி சரசுவதிகள் இந்த அங்க நாட்டரசனிடம் உள்ளனர். ஓ கல்யாணி! அழகில் இலக்குமிக்கும் ஸத்தியம், பிரியம்

உள்ள வாக்குகளில் சரசுவதிக்கும் தகுந்த தோழி நீயே (அதாவது; செல்வந்தனும் வித்தையுமுடையவனான இம்மன்னனை மணப்பாய்) (நிகர் தொடர் முழுதுவமையணி)

சு॥ அத²ாங்கராஜா த³வதார்ய சக்ஷுः
யாஹீதி ஜந்யா மவத³த் குமாரீ ।
நாஸெள நகாம்யோ நசவேத³ ஸம்யக்
த்³ரஷ்டும் நஸா பி⁴ந்நருசிர் ஹிலோகः ॥ 30

(ப-ரை) அத²=பிறகு; குமாரீ=இந்துமதிதேவி; அங்க³ராஜாத்=அங்க நாட்டரசனிடமிருந்து; சக்ஷுः=பார்வையை; அவதார்ய=நீக்கி; ஜந்யாம்=தாயின் சேடியான சுநந்தையை நோக்கி; யாஹி=போ; இதி அவத³த்=என்று கூறினாள்; அஸெள=இந்த அங்கராஜன்; காம்யः=தேர்ந்தெடுக்கத்தக்கவன்; நேதிந=அன்றென்பதில்லை; ஸா=அந்த இந்துமதி; ஸம்யக்=நன்கு; த்³ரஷ்டும்=விமரிசனம் செய்யவும்; நவேதே³திந=அறியமாட்டாளென்பதுமில்லை; கிந்து=மேலும் என்னவெனில்; லோகः=மக்கள்; பி⁴ந்நருசிः=பலவித மாறுபாடுகள் உடைய விருப்பங்கள் கொண்டுள்ளனர்.

(க-ரை) இந்துமதி அங்கராஜனிடம் பார்வைமீட்டு, தன் தாயாரின் தோழியாகிய சுநந்தையைப் பார்த்து 'முன்னால் செல்' என்று கூறினாள். இதனால் அங்கராஜன் விழையத்தக்கவனல்லன் என்பது பொருளல்ல. இந்துமதியும் நன்மை தீமை அறியாதவளன்றென்பது பொருளல்ல; உலகம் பலவிதப் போக்குடைதல்லவா? ஆகையால், விருப்பத்தை நிறுத்த யார்வல்லவர்? (உலகவழக்கு நவிற்சியணி)

சு ॥ ததः பரம் து³ஷ்ப்ரஸஹம் த்³விஷத்³பி⁴ர்
ந்ரிபம் நியுக்தா ப்ரதிஹாரீர பூ⁴மௌ ।
நிதர்ஶயாமாஸ விஶேஷ த்³ரிஶ்ய
மிந்து³ம் நவோத்த²ாநமி வேந்து³ மத்யை ॥

(ப-ரை) ததः=பிறகு; ப்ரதிஹார பூ⁴மௌ=வாயில் நுழைய; நியுக்தா=ஆணையிடப்பட்ட சுநந்தை; த்³விஷத்³பி⁴ः=பகைவர்களால்; து³ஷ்ப்ர ஸஹம்=சகிக்க முடியாத; விஶேஷ த்³ரிஶ்யம்=அதிசயமாகப் பார்க்கத் தக்கவனாகிய; பரம்=வேறொரு; ந்ரிபம்=

அரசனை; நவோத்த[1]ாநம் = புது தோற்றமுற்ற; இந்தும்[2] இவ = சந்திரனைப்போல்; இந்து[2]மத்யை = இந்துமதிக்காக; நித[2]ர்ஶயாமாஸ = காண்பித்தாள்.

(க-ரை) பிறகு வாயில் காப்பவளாகிய சுநந்தை பகைவர்க்கு வெல்ல முடியாதவனும் அழகியவனுமாகிய மற்றொரு அரசனை புதிதாய் தோற்றமளித்த சந்திரனைப் போன்றுள்ளவனை இந்துமதிக்குக் காண்பித்தாள். (உவமையணி)

சு ॥ அவந்தி நாதே[1]ாऽய முத[2]க்[2]ரப[2]ாஹுஃ
விஶாலவக்ஷா ஸ்தநு வ்ரித்த மத்[3]யமஃ ।
ஆரோப்ய சக்ரப்[3]ரம முஷ்ணதேஜாஃ
த்வஷ்ட்ரேவ யத்நோல் லிகி[1]தோ விப[3]ாதி ॥ 32

(ப-ரை) உக்[2]ரப[2]ாஹுஃ = நீண்ட தோள்களுடைய; விஶாலவக்ஷா = அகன்ற மார்புடையவன்; தநுவ்ரித்தமத்[3]யம்ஃ = சிறுத்த, உருண்ட இடையுடையவன்; அயம் = இந்த அவந்தி மன்னன்; த்வஷ்ட்ரா = விஶ்வகர்மப் பிரமனால்; சக்ரப்[3]ரமம் = சக்கரம் போன்று சுழலும் அம்புகளுடைய இயந்திரத்தை; ஆரோப்ய = தொடுத்து; யத்ந உல்லிகி[1]தஃ = முயன்று சாணைப் பிடிக்கப்பட்ட; உஷ்ணதேஜா இவ = சூரியனைப் போல்; விப[3]ாதி = பிரகாசித்தான்.

(க-ரை) நீண்ட தோள்கள், அகன்றமார்பு, சிறுத்த இடையுமுள்ள இந்த அவந்தி மன்னன் த்வஷ்டா என்னும் பிரஜாபதியால் சக்கரம் போல் சாணைப் பிடித்துத் தீர்த்த சூரியனைப் போல் பிரகாசிக்கின்றான். (எடுத்துக்காட்டுவமையணி)

சு॥ அஸ்ய ப்ரயாணேஷு ஸமக்[2]ர ஶக்தே
ரக்[2]ரேஸரை ர்வாஜிபி[3] ருத்தி[1]தாநி ।
குர்வந்தி ஸாமந்த ஶிக[1]ாமணீநாம்
ப்ரப[3]ா ப்ரரோ ஹாஸ்தமயம் ரஜாம்ஸி ॥ 33

(ப-ரை) ஸமக்[2]ர ஶக்தேஃ = முழுமையான ஆளுந்திறன் கொண்ட; அஸ்ய = இந்த அவந்தி மன்னனுடைய; ப்ரயாணேஷு = சைத்திர யாத்திரையில்; அக்[2]ரேஸரைஃ = முன்னால் செல்லும்; வாஜிபி[3]ஃ = குதிரைகளால்; உத்தி[1]தாநி = கிளம்பிய; ரஜாம்ஸி = தூசிகள்; ஸாமந்த = பகையரசர்களின்; ஶிக[1]ாஃ = சிகைகளில்; மணீநாம் = மணிகளின்; ப்ரப[3]ா = ஒளியின்; ப்ரரோஹ = தோற்றத்தின்; அஸ்தமயம் = நாசத்தை; குர்வந்தி = செய்கின்றன,

(க ரை) பிரபு மந்திர உற்சாக சக்திகள் முழுமையாக உள்ள இந்த அவந்திராஜன், போருக்குச் செல்லும்போது, அவருக்கு முன்னால் செல்லும் குதிரைகளின் கால்தூசிகள், சத்துரு மன்னர்களின் சிகைகளிலிருந்து வந்த மணிகளின் ஒளியை மங்கச் செய்கின்றன. (அதாவது-சத்துருக்களை நாசம் செய்பவன்). (உயர்வுநவிற்சியணி)

ஸு॥ அஸௌ மஹாகாள நிகேதநஸ்ய
வஸந் நக²ரே கில ³சந்த்³ர மௌளேஃ ।
தமிஸ்ர பக்ஷேऽபி ஸஹப்ரியாபி⁴ஃ
ஜ்யோத்ஸ்நாவதோ நிர்விஶதி ப்ரதோ³ஷாந் ॥ 34

(ப-ரை) அஸௌ = இந்த அவந்தி நாட்டரசன், மஹாகாள = மாகாளமெனும் இடத்தையே; நிகேதநஸ்ய = இருப்பிடமாகக் கொண்ட; சந்த்³ரமௌளேஃ = பரமேசுவரனுடைய; அதூரே = அருகில்; வஸந் = வசிப்பவனாகையால்; தமிஸ்ர பக்ஷேபி = தேய்ப்பிறையிலும்; ப்ரியாபி⁴ஸ்ஸஹ = மனைவிமார்களோடு; ஜ்யோத்ஸ்நாவதஃ = வெண்ணிலாவுடைய; ப்ரதோ³ஷாந் = இரவுகளை; நிர்விஶதி கில = அனுபவிக்கிறானல்லவா!

(க ரை) இவ்வரசன் அருகில் உள்ள மாகாளேச்சுரனுடைய சிரத்தில் சந்திர ஒளியில் எப்போதும் சந்திரிகை உள்ள இரவுகள் உடையவனாக மனையை அனுபவிக்கிறான். (மிகுதியினவிற்சியணி)

ஸு॥ அநேக யூநா ஸஹ பார்தி²வேந
ரம்பே⁴ாரு கச்சிந் மநஸோ ருசிஸ்தே ।
ஶிப்ராந்தரங்க³ாநில கம்பிதாஸு
விஹர்து முத்³யாந பரம்பராஸு ॥ 35

(ப-ரை) ஹேரம்பே⁴ாரு = வாழைமரம் போன்று தொடைகளுடையவளாகிய இந்திமதியே! யூநா = இளமையுள்ளவனான; அநேந = இந்த; பார்தி²வேந ஸஹ = அவந்தி மன்னனுடன்; ஶிப்ராந்தரங்க³ = சிப்ராநதி அலைகளின்; அநில = காற்றால்; கம்பிதாஸு = அசைந்த; உத்³யாந பரம்பராஸு = பூங்காக்களின் வரிசைகளில்; விஹர்தும் = உலாவுவதற்கு; தே = உன்னுடைய; மநஸஃ = மனதுக்கு; ருசிஃகச்சித் = விருப்பமுளதா என்ன?

(க-ரை) வாழைக் கம்பங்கள் போன்ற தொடைகளுடைய இந்துமதி! இளமையுடன் துலங்கும் இந்த அவந்தி மன்னனுடன் சிப்ராநதியிலிருந்து வரும் காற்றால் அசையும் உத்தியான வநங்களில் உலாவ உனக்கு விருப்பமுள்ளதா? (உவமையணி மற்றும் வனப்புநிலையணி)

சு॥ தஸ்மிந் நபி³த்யோதித ப²ந்து³பத்மே
ப்ரதாப ஸம்ஶோஷித ஶத்ரு பங்கே ।
ப³ப²ந்த³ ஸா நோத்தம ஸௌகுமார்யா
குமுத்³வதீ பா³நுமதீவ பா³வம் ॥ 36

(ப-ரை) உத்தம=சிறந்த; ஸௌகுமார்யா = அங்கவனப்புடைய; ஸா=அந்த இந்துமதி; அபி³த்³யோதித=பூத்த; ப²ந்து³= சுற்றமெனும்; பத்³மே=கமலங்களுடைய; ப்ரதாப=வலிமையால்; ஸம்ஶோஷித=வாடச் செய்த; ஶத்ரு=பகைவர்களென்ற; பங்கே= சேறுடைய; தஸ்மிந்=அந்த அவந்திமன்னன் மீது; குமுத்³வதீ= வெண்குவளை; பா³நுமதீவ=சூரியன் மீது போன்று; பா³வம்= மனதை; நப³ப²ந்த³=காட்டாமற் போனாள்.

(க-ரை) உறவினரென்னும் தாமரைகட்கு துன்பம் செய்யும், பகைவரென்னும் சேற்றை உலர்த்திடும் சூரியனுக்கு நிகரானவனும் ஆகிய அவ்வரசனிடம் மென்மையான உடலுறுப்புகளுடைய இந்துமதி, வெண்குவளைக் கொடி சந்திரனை விரும்பாததுபோல், விருப்பமற்றவளானாள். (காட்சியணி மற்றும் உவமையணி)

சு॥ தமக்³ரதஸ் தாமரஸாந்த ராப³ா
மநூப ராஜஸ்ய கு³ணை ரநூநாம்
நித³ாய ஸ்ரிஷ்டிம் லலிதாம் வித³ாதுஃ
ஜக³ாத³ பூ³யஸ் ஸுத³தீம் ஸுநந்த³ா ॥ 37

(ப-ரை) ஸுநந்த³ா = சுநந்தை; தாமரஸாந்தராப³ாம் = தாமரைகளின் நடுவே உள்ள ஒளி போன்ற ஒளியுள்ள; கு³ணைஃ= அழகு, சீலம் முதலிய குணங்களால்; அநூநாம்=குறையாமலுள்ள; ஸுத³தீம்=நல்ல பல்வரிசையுள்ள; தாம்=அந்த; வித³ாதுஃ= பிரமனுடைய; லலிதாம்ஸ்ரிஷ்டிம்=அழகிய தோற்றத்துடன் பிறந்த இந்துமதியை; அநூபராஜ்யஸ்ய=அநூபதேசத்தரசனுடைய; அக்¹

ரத꞉=முன்னால்; நித³ாய=நிறுத்தி; பூ⁴ய꞉=மறுபடியும்; ஜக³ாத³=கூறினாள்.

(க-ரை) பிறகு, சுநந்தை கமலத்திடையேயுள்ள ஒளிபோல், பொன்நிறப் பிரகாசமுள்ள உடலும், அதிக அழகும், நற்றொழிலையுமுடையவளும், நல்ல பல்வரிசையும் பெற்று, பிரமனால் அற்புதமாய் பிறப்பிக்கப்பட்ட இந்துமதியை அநூபதேச மன்னனிடம் அழைத்துச் சென்று, கூறினாள். (விளக்கவணி)

சு॥ ஸங்க்³ராம நிர்விஷ்ட ஸஹஸ்ர பா³ஹு-
ரஷ்டாத³ஶ த்³வீப நிக¹ாத யூப꞉।
அநந்ய ஸாத⁴ாரண ராஜஶப்³த³꞉
ப³பூ⁴வ யோகீ³ கில கார்த வீர்ய꞉ ॥ 38

(ப-ரை) ஸங்க³ாம=போர்களில்; நிர்விஷ்ட=அநுபவமுள்ள ஸஹஸ்ரபாஹு꞉ = ஆயிரங்கைகளுடைய; அஷ்டாத³ஶ = பதினெட்டு; த்³வீப꞉=தீவுகளிலும்; நிக¹ாத=கட்டப்பட்ட; யூப꞉ = யூபக்கம்பங்களுடைய; அநந்ய சாத³ாரண=பிறரால் சொல்லமுடியாத; ராஜஶப்³த³꞉=அரசனென்னும் சொல்லுடைய; யோகீ³= பிரம்மவித்தையுடைய; கார்தவீர்ய꞉ = கார்த்தவீரியனென்னும் அரசன்; ப³பூ⁴வகில=இருந்தான்.

(க-ரை) போர்செய்வதில் மிக்க அனுபவமுள்ளவனும், ஆயிரங்கைகள் உடையவனும், பதினெட்டுத் தீவுகளிலும் வேள்விகள் செய்து எல்லா நாடுகளுக்கும் அரசனாய் சகல பிராணிகளையும் மகிழ்வித்தவனும், இவ்வளவு பேரரசன் இல்லையென்ற புகழ் வாய்ந்தவனும், தத்தாத்ரேயரால் பிரம்மஞானமடைந்தவனுமாகிய கார்த்தவீரியனென்னும் அரசன் ஒருவன் இருந்தான். (முறையிற் படர்ச்சியணி)

சு॥ அகார்ய சிந்தா ஸமகால மேவ
ப்ராது³ர்ப⁴வம் ஶ்சாபத⁴ர꞉ புரஸ்தாத் ।
அந்தஶ்ஶரீரே ஷ்வபி ய꞉ப்ரஜாநாம்
ப்ரத்யாதி³தே³ஶா விநயம் விநேதா ॥ 39

(ப-ரை) விநேதா=தண்டிப்பவனாகி; ய꞉=எந்த கார்த்தவீர்யார்ஜுனன்; அகார்ய=கெட்ட காரியங்களின்; சிந்தா=ஆலோ

சனை காலத்துடன்; ஸமகாலம்ஏவ=நிகராய அதே நேரத்தில்; புரஸ்தாத்=முதலில்; சாபதா்ரஃ=வில்லேந்தியவனாய்; ப்ராதுர்பவஸ்ஸந்=தோன்றி; ப்ரஜாநாம்=மக்களின்; அந்தஃகரேஷு=அந்தக் கரணங்களிலுள்ள; அவிநயமபி=குற்றங்களை; ப்ரத்யாதிதேஶ=போக்கினானோ.

(க-ரை) மேலும், அந்த கார்த்தவீர்யார்ஜுனன், மக்கள் கெடுதிகளை நினைக்கும்போதே, வில்லேந்தி அங்கு தோன்றி, அவர்களை தண்டிப்பதால் அவர்களுக்கு அப்படிப்பட்ட எண்ணமே தோன்றாமலிருக்கும்படி செய்தான். (குறிநிலையணி)

ச॥ ஜ்யா பந்த நிஷ்பந்த புஜேந யஸ்ய
விநிஶ்வஸத் வக்த்ர பரம்பரேண ।
காராக்ருஹே நிர்ஜித வாஸவேந
லங்கேஶ்வரே ணோஷித மாப்ரஸாதாத் ॥ 40

(ப-ரை) ஜ்யாபந்த=வில்லின் நாண் கயிற்றைக் கட்டுவதால் நிஷ்பந்த=அசைவற்ற; புஜேந=கைகளுடைய: விநிஶ்வஸத்=பெருமூசு விடுகிற;வக்த்ர=முகங்களின்; பரம்பரேண=வரிசையுள்ள; நிர்ஜித=வென்ற; வாஸவேந=இந்திரனையுடைய; லங்கேஶ்வரேண=இராவணனை; யஸ்ய=எந்த கார்த்த வீர்யார்ஜுனன்; காராக்ருஹே=சிறையில்; ஆப்ரஸாதாத்=கருணையுண்டாகும் வரை; உஷிதம்=நிறுத்தினானோ.

(க-ரை) இதுவுமன்றி, அந்த கார்த்த வீர்யார்ஜுனன் தேவேந்திரனை வென்ற இராவணனை தன் வில்லின் நாண் கயிற்றால் கட்டி அவன் பத்து வாயாலும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்க, சிறையில் அடைத்து, பிறகு, தயை கூர்ந்து விட்டு வைத்தான். (கருத்துடையடையணி)

ச ॥ தஸ்யாந்வயே பூபதி ரேஷ ஜாதஃ
ப்ரதீப இதி ஆகம வ்ரித்த ஸேவீ ।
யேந ஶ்ரியஸ் ஸம்ஶ்ரய தோஷரூடம்
ஸ்வபாவ லோலே த்யயஶஃ ப்ரம்ரிஷ்டம் ॥ 41

(ப-ரை) ஆகமவ்ரித்தஸேவீ = சாத்திரங்களைக் கற்ற பெரியோர்களை சேவிக்கும்; ப்ரதீப இதி=பிரதீபனென்னும்; ஏஷஃ= இந்த; பூ பதிஃ=அரசன்; தஸ்ய=அந்த கார்த்த வீர்யார்ஜுன

னுடைய; அந்வயே = வம்சத்தில்; ஜாத꞉ = பிறந்தான்; யேந = எந்த பிரதீப அரசனால்; ஸம்ஶ்ரய = அணுகிய புருஷனுடைய; தே³ாஷ = விசனாதிகளால்; ரூட⁸ம் = பிறந்த; ஶ்ரிய꞉ = இலக்குமியின்; ஸ்வப³ாவ லோலேதி = சுபாவத்தால் சஞ்சல முடையவனென்னும்; அயஶ꞉ = கெட்டபெயரை; ப்ரம்ரிஷ்டம் = போக்கப்பட்டதோ.

(க-ரை) இந்தப் பிரதீபனென்னும் அரசன் அந்த கார்த்த வீரியனுடைய மறபிற் பிறந்தவன். பெரியார்களை சேவித்து இலக்குமிக்கு விருப்பமிலா ஆயம், பானம், விபசாரம், கடினம், அகங்காரம் முதலிய கெட்ட குணங்களுக்கு ஒருபோதும் உட்பட்ட வனன்று. (மிகுதினவிற்சியணி)

சு ॥ ஆயோத³நே க்ரிஷ்ண க³திம் ஸஹாய
மவாப்யய꞉ க்ஷத்ரிய காளராத்ரிம் ॥
தாராம் ஶிதாம் ராம பரஶ்வத¹ஸ்ய
ஸம்பாவய த்³யுத்ப¹லபத்ர ஸாராம் ॥ 42

(ப-ரை) ய꞉ = எந்த பிரதீபன்; ஆயோத³நே = போரில்; க்ரிஷ்ணக³திம் = அக்கினியை; ஸஹாயம் = துணையாக; அவாப்ய = அடைந்து; க்ஷத்ரிய = அரசர்கட்கு; காளராத்ரிம் = சங்கார இர வாகிய³; ராம = பரசுராமனுடைய; பரஶ்வத¹ஸ்ய = கோடரியின்; ஶிதாம் = தீவிரமான; தாராம் = முகத்தை; உத்பல = குவளை; பத்ர = இதழ்களின்; ஸாராம் = வலிமைக்கு நிகரான வலிமையுடைய தாய்; ஸம்ப³ாவயதி = அறிகின்றானோ.

(க-ரை) இவ்வரசன் போரில் அக்கினியின் அருள் பெற்று, க்ஷத்திரியர்களின் எதிரியான பரசுராமனுடைய தாக்குதலை லட்சியப்படுத்த வில்லை. (மிகுதினவிற்சியணி)

ஞ ॥ அஸ்யாங்கலக்ஷ்மீ ர்ப³வ தீ³ர்க³பாஹோ
ர்மாஹிஷ்மதீவ ப்ரநிதம்ப³ காஞ்சீம்
ப்ரஸாத³ஜாலை ர்ஜலவேணி ரம்யாம்
ரேவாம் யதி³ ப்ரேக்ஷிது மஸ்திகாம꞉ ॥ 43

(ப-ரை) தீ³ர்க³ப³ாஹோ꞉ = நீண்ட தோள்களுடைய; அஸ்ய = இந்த பிரதீப மன்னனுக்கு; அங்க லக்ஷ்மீ꞉ = தொடையில் உள்ள இலக்குமி; ப³வ = ஆவாயாக; மாஹிஷ்மதீ = மாஹிஷ்மதி பட்டணத் தின்; வப்ர = மதில்களென்னும்; நிதம்ப³ = இடுப்பின் கீழ்ப்புறம்;

காஞ்சீ = ஓட்டியாணமாகிய; ஜலவேணி = நீரின் வெள்ளத்தால்; ரம்யாம் = அழகான; ரேவாம் = நர்மதாநதியை; ப்ரஸாத³ஜலைஃ = உப்பரிகைகளின் பலகணிகளில்; ப்ரேக்ஷிதும் = பார்ப்பதற்கு; காமஃ = விருப்பம்; அஸ்தியதி² = இருக்குமாயின்.

(க-ரை) மாஹிஷ்மதி பட்டணத்திற்கு சுற்றிலும் அகழிபோல் சூழ்ந்துள்ள நருமதை யாற்றின் அழகை நீ உப்பரிகை மேலிருந்து பலகணிகள் மூலம் பார்க்க விரும்பினால் இவனை வரனாக தேர்ந்தெடுத்துக்கொள். (உவமையணி)

சு ॥ தஸ்யாஃ ப்ரகாமம் ப்ரியத³ர்ஶ நோऽபி
நஸ க்ஷிதீஶோ ருசயே ப¹பூ³வ ।
ஶரத் ப்ரம்ரிஷ்டாம்பு² த³ரோ பரோத³
ஶ்ஶஶீவ பர்யாப்தகளோ நளிந்யாஃ ॥ 44

(ப-ரை) ப்ரகாமம் = மிகுந்த; ப்ரியத³ர்ஶ நோऽபி = அன்பு ததும்பும் பார்வையுடையவனாயினும்; ஸஃ க்ஷிதீஶஃ = அந்த பிரதீப மன்னவன்; ஶரத் ப்ரம்ரிஷ்ட = கூதிர்க்காலத்தால் போக்கிய; அம்பு த³ரம் = மேகங்களால்; உபரோத³ஃ = சூழ்ந்திராத; பர்யாப்தகளஃ = முழுமையான கலைகளுடைய; ஶஶீ = சந்திரன்; நளிந்யா இவ = தாமரைக் கொடிபோல்; தஸ்யாஃ = அந்த இந்துமதி தேவியின்; ருசயே = விருப்பத்திற்கு; நப²பூ²வ = ஆகாது போனான்.

(க-ரை) இந்த பிரதீப மன்னன் அழகானவனாக இருந்த போதிலும், கூதிர்க்காலத்து மேகங்களால் சூழாத அழகிய முழு மதியை, தாமரைக்கொடி ஒவ்வாததுபோல், அவனை இந்துமதி விரும்பவில்லை. (எதிர் நிலையணி)

சு ॥ ஸாஶூரஸே நாதி³ பதிம் ஸுஷேண
முத்²தி²ஶ்ய லோகாந்தர கீ²த கீர்திம் ।
ஆசாரபூதோ ப³யவம்ஶ தீ²பம்
ஶுத்²த³ாந்த ரிக்ஷ்யா ஜக²தே² குமரீ ॥ 45

(ப-ரை) லோகாந்தர கீ²த கீர்திம் = சொற்கத்தில் பாடும் புகழுடைய; ஆசாரபூத = நல்லொழுக்கத்தால் புனிதமான; உப³ய வம்ஶ = இரண்டாயதாய் தந்தையர்மறபிற்கு; தீ²பம் = ஒளியாயுள்ள; ஸூரஸேநாதி³பதிம் = சூரசேன நாட்டிற்கு அதிபதியான; ஸுஷேணம் = சுஷேணன் என்னும் அரசனை; உத்²தி²ஶ்ய =

நோக்கி; ஶுத்²த³ந்தரிக்ஷயா = அந்தப்புர பாதுகாவற்காரியான சுநந்தையால்; ஸா = அந்த; குமாரீ = இந்துமதி தேவி; ஜக²தே² = கூறப்பட்டாள்.

(க-ரை) துறக்கத்திலும் பரவிய புகழுடையவனும், நல்லொழுக்கத்தால் புனிதர்களாய தாய் தந்தையர்களின் இருமரபிற்கும் ஒளியுண்டாக்கும், சூரசேனாதிபதியான சுஷேணனுடைய சார்பில், வாயில் காவல் புரியும் சுநந்தை இந்துமதியுடன் கூறினாள். (குறி நிலையணி மற்றும் வீறுகோலணி)

சு ॥ நீபாந்வயஃ பார்தி²வ ஏஷயஜ்வா
குணை²ர்யமாஶ்ரித்ய பரஸ்பரேண ।
ஸித்²த³ாஶ்ரமம் ஶாந்த மிவைத்ய ஸத்வைஃ
நைஸர்கி²கோऽப்யுத்ஸ்ரி ஜேவிரோத³ஃ ॥ 46

(ப-ரை) யஜ்வா = விதிமுறைப்படி வேள்வி செய்த; ஏஷஃ = இந்த; பார்தி²வஃ = அரசன்; (சுஷேணன்) நீபாந்வயஃ = நீப மன்னர்களின் வம்சத்தவன்; யம் = எந்த சுஷேண அரசனை; ஆஶ்ரித்ய = அண்டி; கு²ணைஃ = ஞானமோன முதலிய குணங்களால்; ஶாந்தம் = அமைதியான; ஸித்³த²ாஶ்ரமம் = ரிஷியின் ஆச்சிரமத்தை; ஏத்ய = அடைந்து; நைஸர்கி²க அபி = இயற்கையான தாயினும்; பரஸ்பரேண = ஒன்றுக்கொன்றின்; விரோத³ஃ = வைரம்; உத்ஸ்ரிஜ்யதே = விடப்பட்டது.

(க-ரை) விதிமுறைப்படி வேட்டும் நீபவம் சத்தவனான இந்த அரசனில் மகரிஷிகளின் குடில்களில் யானை, சிங்கம் முதலிய விலங்குகள் தம்மியற்கைகுணமான பகையை விட்டு வாழ்வதுபோல், ஞானம், மொனம் முதலிய குணங்கள் அவற்றின் வித்தியசமான குணங்களை நீக்கிற்று. ஞானமுள்ள இடத்தில் மௌனம், ஐசுவர்யமுள்ள இடத்தில் ஈகை இவ்வாறு ஒரு நற்குணமுள்ள விடத்தில் மற்றொரு நற்குணம், பொதுவாக, காணப்படுவதில்லை. (அரசன் எல்லா நற்குணமுடையவன் என்பது பொருள்). (குறி நிலையணி)

சு ॥ யஸ்யாத்ம கே²ஹே நயநாபி⁰ராமா
காந்திர் ஹிமாம்ஶோ ரிவஸந்நிவிஷ்டா ।
ஹர்ம்யாக்²ர ஸம்ரூட³ த்ரிணாங்குரேஷு
தேஜோऽவிஷஹ்யம் ரிபுமந்தி²ரேஷு ॥ 47

(ப ரை) ஹிமாம்ரோ = சந்திரனுடைய; காந்திரிவ = வெண்ணிலா போல்; நயநாபி²ராமா = கண்களுக்கு நேர்த்தியான; யஸ்ய = எந்த சுஷேண மன்னனுடைய; காந்தி: = ஒளியானது; ஆத்மகே³ஹே = தன் மாளிகையில்; ஸந்நி விஷ்டா = சம்மந்தப்பட்டதோ; அவிஷஹ்யம் = சகிக்கமுடியாத; தேஜ: = வீரமோ; ஹர்ம்யாக்³ர = உப்பரிகை மேல்; ஸம்ரூட⁴ = பிறந்த; த்ரிண = புல்லின்; அங்குரேஷு = முளைகள் உள்ள; ரிபுமந்தி³ரேஷு = வைரிகளின் நகரங்களில்; ஸந்நிவிஷ்டம் = சார்ந்ததோ.

(க-ரை) சுஷேண மன்னனுடைய சொரூபம் தம்மவர்க்கு கண்விருந்தாய குளிர்ந்த வெண்ணிலா போன்றுள்ளது. இவருடைய வீரமோ வைரிகளின் நகரத்துள்ள மாடிகளின் மேல் புல் முளைக்கும் படி; அவர்கள் விட்டோடும்படிச் செய்யவல்லது. (வேற்றுமையணி)

சு ॥ யஸ்யாவரோத³ ஸ்தந சந்த நாநாம்
ப்ரக்ஷாளநாத்³வாரி விஹாரி காலே ।
களிந்த³ கந்யா மது³ரரம் க³தாஃபி
க³ங்கே³ார்மி ஸம்ஸக்த ஜலேவப²ாதி ॥ 48

(ப-ரை) யஸ்ய = எந்த சுஷேணனுடைய: வாரிவிஹாரகாலே = நீர்விளையாடல் காலத்தில்; அவரோத³ = அந்தப்புரத்துப் பெண்களின்; ஸ்தந சந்தநாநாம் = முலைகளில் ஒட்டியுள்ள சந்தனத்தை; ப்ரக்ஷாளநாத் = கழுவுதலால்; களிந்த கந்யா = யமுனையாற்று, மது³ராம் = மது³ரா நகரத்தை; க³தாபி = அடைந்தவனாயினும்; க³ங்கே³ார்மி = கங்கையாற்றின் அலைகளுடன்; ஸம்ஸக்த = சம்மந்தப்பட்ட; ஜலேவ = தண்ணீருடையதுபோல்; ப⁴ாதி = பிரகாசிக்கிறது.

(க-ரை) இந்த சுஷேணனுடைய பட்டணமான மதுரைக்கு அருகில் கறுமையான யமுனையாறு, இவருடைய அந்தப்புரத்திலுள்ள பல பெண்கள் நீராடும்போது கழுவிக்கொள்ளும் அவர்களின் கொங்கைகளிலுள்ள சந்தனத்தால் வெண்மையாகும் தண்ணீர் கலப்பதால் வெண்மையாயிருக்கும்; தூரத்திலுள்ள கெங்கையாறு கலந்ததுபோல் காணப்படுகிறது. (தற்குறிப்பணி)

சு ॥ த்ர ஸ்தேந தார்க்ஷ்யா த்கில காளியேந
மணிம் விஸ்ரிஷ்டம் யமுநௌக ஸா ய: ।

வக்ஷஸ்த்[1]ல வ்யாபிருசிம் த[2]த[2]ாந
ஸ்ஸகௌஸ்துப[3]ம் ஹ்ரீவயதீவ க்ரிஷ்ணம் ॥ 49

(ப-ரை) தார்க்ஷ்யாத் = கருடனால்; த்ரஸ்தேந = பயப்பட்டு; யமுநௌகஸா = யமுனையே; இடமாகக் கொண்ட; காளியேந = காளிங்கன் என்னும் சர்ப்பத்தால்; விஸ்ரிஷ்டம் கில = கொடுக்கப் பட்டு பரம்பரையாக; வக்ஷஸ்த[1]ல = மார்பில்; வ்யாபி = பரவும் = ருசிம் = ஒளியுள்ள; மணிம் = மணியை; த[2]த[2]ாநஃ = அணிந்திருக்கும்; யஃ = எந்த சுஷேண மன்னன்; ஸகௌஸ்து`ப[3]ம் = கவுஸ் துப மென்னும் மணி யணிந்த; க்ரிஷ்ணம் = ஸ்ரீகிருஷ்ண னுக்கு; ஹ்ரீவயதீவ = வெட்கச் செய்றானோ என்பது போலிருக்கின்றானோ.

(க-ரை) முன்பு கெருடனுக்குப் பயந்த காளிங்கன் என்னும் பாம்பரசனை இந்த யமுனை யாற்றிலிருக்கும்படி இந்த சுஷேண மன்னனுடைய மூதாதையோர் அடைக்கலம் கொடுத்தமைக்குப் பதிலுதவியாக கொடுக்கப்பட்டதென பரம்பரையாக கேள்வியுறும் மணியை இவ்வரசன் மார்பில் அணிவதால், இவன் கௌஸ்துப மணியணியும் கிருஷ்ணனையும் வெட்கமுறச் செய்கிறானோ வென்பதுபோல் இருக்கின்றான். (கூட்டவணிமற்றும் தற்குறிப்பணி)

சு॥ ஸம்ப[3]ாவ்ய ப[3]ர்தார மமும் யுவாநாம்
ம்ரிது[2] ப்ரவாளோத்தர புஷ்பஶய்யே।
ப்ருந்த[2]ாவநே சைத்ர ரத[1]ா த[2]மாநே
நிர்விஶ்யதாம் சுந்த[2]ரியௌவநஸ்ரீஃ ॥ 50

(ப-ரை) யுவாநம் = இளமையனான; அமும் = இந்த சுஷேண மன்னனை; ப[3]ர்தாரம் = பதியாக; ஸம்ப[3]ாவ்ய = ஏற்று; ம்ரிது[2]ப்ர வாள = மென்மையான தளிர்களே; உத்தர புஷ்பஶய்யே = மேற்புரத்தில் பூப்படுக்கையுள்ள; சைத்ரரத[1]ாத் = குபேரனின் பூங்காவனத்தைக் காட்டிலும்; அநூநே = குறையாத; ப்[2]ரிந்த[2]ாவநே = பிருந்தாவனமென்னும் பூங்காவில்; ஹே, சுந்தரி = ஓ அழகிய இந்துமதி! யௌவநஸ்ரீஃ = இளமையென்னும் உருவிலுள்ள சம்பத்தை; நிர்விஶ்யதாம் = அனுபவிக்கக் கடவது.

(க-ரை) ஓ அழகிய இந்துமதி! உனக்கு விருப்பமானால் இந்த இளம்வயதுடைய அரசனைப் பதியாக ஏற்றுக்கொள். குபேரனுடைய பூங்காவனத்திற்கு நிகரான இவனுடைய பிருந்தாவனமெனும் பூங்காவில் பூப்படுக்கைமேல் பரப்பப்பட்ட தளிர்கள்மேல் இளமை சுகத்தை அனுபவிப்பாய். (உவமை மற்றும் சிறப்பணி)

சு॥ அத்²யாஸ்ய சாம்ப³: ப்ரிஷதோக்ஷிதாநி
ஶைலேய க்³ந்தீ³நி ஶிலாதலாநி ।
கலாபிநாம் ப்ராவ்ரிஷி பஸ்யந்ரித்தம்
காந்தாஸு கோ³வர்த³ந கந்த³ராஸு ॥ 51

(ப-ரை) கிம்ச = இது மட்டுமன்று; ப்ராவ்ரிஷி = மாரி காலத்தில் காந்தாஸு = அழகான; கோ³வர்த³நகந்த³ராஸு = கோவர்தன மலைக் குகைகளில்; அம்ப³: = தண்ணீரின்; ப்ரிஷித உக்ஷிதாநி = சொட்டுகளால் நனைக்கப்பட்ட; ஶைலேய க³ந்தீ³நி = சிலாசத்தின் மணமுள்ள; ஶிலாதலாநி = பாறை இடங்களை; அத்³யாஸ்ய = ஏறிக்கொண்டு; கலாபிநாம் = மயில்களின்; ந்ரித்தம் = நாட்டியத்தை பஶ்ய = பாரும்.

(க-ரை) மேலும் மாரிக் காலததில் திவ்யமான கோவர்தன மலையின்குகைகளில் நீர்ச் சொட்டுகளால் நனைக்கப்பட்டு சிலாசத் துவாசனையுடைய சிலாசத்து பாறைகளின்மேல் ஏறிக்கொண்டு மயில்கள் நாட்டியமாடுவதை நீ காணலாம். (நிகழ்வினவிற்சியணி)

சு॥ ந்ரிபம் தமாவர்த மநோஜ்ஞ நாபி³:
ஸா வ்யத்யகா³த் த³ந்யவதூ³ர்ப³வித்ரீ ।
மஹீத³ரம் மார்க³வஶா து³பேதம்
ஸ்ரோதோவ ஹாஸாக³ர க³ாமிநீவ ॥ 52

(ப-ரை) ஆவர்த = நீர்ச்சுழி போன்ற; மநோஜ்ஞ = மனதை கொள்ளைக் கொள்ளும்; நாபி³: = கொப்பூழுடைய; அந்யவதூ³: = பிறனுக்கு மனைவியாக; ப³வித்ரி = ஆகப் போகும்; ஸா = அந்த இந்துமதி தேவி; தம்ந்ரிபம் = அந்த சுஷேண மன்னனை; ஸாக³ர க³ாமிநீ = கடலை நாடிச் செல்லும்; ஸ்ரோதோவஹ = ஆறானது; மார்க³வஶாத் = வழியைப் பொருந்தி; உபேதம் = கிடைத்த; மஹீத³ரம் இவ = மலையைப் போல்; வ்யத்யகா³த் = தாண்டிச்சென்றாள்.

(க-ரை) தண்ணீர்ச் சுழிபோல் அழகான கொப்பூழுடைய இந்துமதி கடலை நாடிச்செல்லும் ஆறானது வழியில் உள்ள மலையைக் கடந்து செல்வதுபோல் அந்த சுஷேணன் என்னும் மன்னனைத் தாண்டிச் சென்றாள். (குறிநிலை மற்றும் விரியுவமையணி)

சு ॥ அத²ாங்க³ த³ா ஶ்லிஷ்ட பு³ஜம் பு³ஜிஷ்யா
ஹேமாங்க³த³ம் நாம களிங்க³ நாத²ம் ।
ஆஸேதுஷீம் ஸாதி³தி ஶத்ரு பக்ஷம்
ப³ாலா மப³ாலேந்து³ முகீ²ம் ப³ப³ாஷே ॥ 53

(ப-ரை) அத²=பிறகு; பு³ஜிஷ்யா=ஏவலாளான சுநந்தை; அங்க³த³ ஆஶ்லிஷ்ட பு³ஜம்=வாகுபுரியால் அலங்கரிக்கப்பட்ட தோள்களுடையவனும்; ஸாதி³த ஶத்ரு பக்ஷம்=வெல்லப்பட்ட பகைவர்களுடையவனும் ஆகிய; ஹேமாங்க³த³ நாம=ஹேமாங்கத னென்னும் பெயருடைய; களிங்க³நாத²ம்=களிங்க நாட்டதிபதியை; ஆஸேதுஷீம்=அடைந்த; அப³ால இந்து³ முகீ²ம்=முழுமதிபோன்ற முகமுடைய; ப³ாலாம்=வாலையாகிய இந்துமதியை நோக்கி; ப³ப³ாஷே=கூறினாள்.

(க-ரை) பிறகு, தோழியாகிய சுநந்தை வாகுபுரியணிந்தவனும் சத்துருஞ்ஜயனுமாகிய ஹேமாங்கதனென்னும் களிங்க நாட்டு மன்னனருகிற் சென்று, முழுமதியைப் போன்ற அழகிய முகமுடைய இந்துமதியைக் கண்டு கூறத் தொடங்கினாள். (வீறுகோளணி மற்றும் விரியுவமையணி)

சு ॥ அஸௌ மஹேந்த்³ராத்³ரி ஸமாநஸாரঃ
பதிர் மஹேந்த்³ரஸ்ய மஹோத³தே³ஶ்ச ।
யஸ்ய க்ஷரத்ஸைந்ய க³ஜச்ச²லேந
யாத்ராஸு யாதீவ புரோ மஹேந்த்³ரঃ ॥ 54

(ப ரை) மஹேந்த்³ர அத்³ரிஸமாந ஸாரঃ=மகேந்திர மலைக்கு நிகரான திறமையுடைய; அஸௌ=இந்த ஹேமாங்க³த³ராஜன்; மஹேந்த்³ரஸ்ய=மகேந்திர மலைக்கும்; மஹோத³தே³ஶ்ச=மாக் கடலுக்கும்; பதிঃ=பிரபு; யஸ்ய=எந்த ஹேமாங்க³தனுடைய; ஜைத்ரயாத்ராஸு=திக்விஜய யாத்திரையில்; க்ஷரத்=மதம் ஒழுகச் செய்யும்; ஸைந்ய=படையிலிருக்கும்; க³ஜ=யானைகளின்; ச²லேந சாக்கில்; மஹேந்த்³ர=மகேந்திரமலை; புரঃ=முன்னால்; யாதீவ= போகின்றனவோ வெனவுளதோ.

(க-ரை) இவ்வரசன் மகேந்திர மலையைப் போன்ற திறம் படைத்தவன். இவனுக்கு மகேந்திரமலை மலைக்கோட்டையாகவும் கடல்நீர் அரணாகவும், உள்ளன. இவனுடைய படையெடுப்பின்

போது முன்னால் செல்லும் யானைப் படைகளில் உள்ள யானை களின் உயரம் மகேந்திர மலையே நடந்து செல்வதுபோல் தோன்றும். (உருவகவணி)

சு॥ வ்யாக³ாதரேகே¹ ஸுபு³ஜோபு³ஜாப்³யாம்
பி²ப³ாதி ய꞉சாப ப்³ரிதாம் புரோக²꞉ ।
ரிபு꞉ரியாம் ஸாஞ்ஜந ப²ாஷ்பஸேகே
ப²ந்தீ²க்ரிதாந மிவ ப²த்²த³தீ த்²வே ॥ 55

(ப-ரை) ஸுபு³ஜ꞉=நல்ல தோள்களுடைய; சாபப்³ரிதாம்= வில்லாளர்களில்; புரோக²꞉=முதன்மையான; ய꞉=எந்த ஹேமாங் கத மன்னன்; ப²ந்தீ³க்ரிதாநாம்=சிறையிலடைக்கப்பட்ட; ரிபு꞉ ரியாம்=சத்துருக்களின் இலக்குமிகளின்; ஸாஞ்ஜந ப²ாஷ்பஸேகே= மையுடன் கூடிய கண்ணீருடைய; ப²த்²த³தீ இவஸ்தி¹தே=முறை யோவென; த்²வே=இரண்டாகிய; ஜ்யாக²ாதரேகே¹=நாண் முடிச்சுக் கோடுகளை; பு³ஜாப்³யாம்=தோள்களில்; பி²ப³ர்தி= சுமக்கிறான்.

(க-ரை) மேன்மையான புயங்களுடைய வில்லாளர்களில் சிறந்தவனாகிய இவ்வரசன் இருபுயங்களிலும் இரண்டு விற்களை சுமப்பதால் அவற்றின் நாண்களின் உரசலால் இருதோள்கள் மீதும் கருமையான கோடுகள் ஏற்பட்டன. இக்கோடுகள் இவனுடைய பகைவரின் இலக்குமிகளை தோள்வலியால் கொண்டுவரும்போது அவ்விலக்குமிகளின்மையுடன் கூடிய கண்ணீர் தாரைகளோவென தோன்றுகின்றன. (மிகுதியினவிற்சியணி)

சு॥ யமாத்ம நஸ் ஸத்²மநி ஸந்நிக்ரிஷ்ட꞉
மந்த்²ர த்³வநி த்யாஜித யாமதூர்ய꞉ ।
ப்ராஸாத² வாதாயந த்²ரி꞉ய வீசி꞉
ப்ரபே²ாத³ய த்யர்ணவ ஏவ ஸுப்தம் ॥ 56

(ப-ரை) ஆத்மந꞉=தன்னுடைய; ஸத்²மநி = இல்லத்தில்; ஸுப்தம்=படுத்த; யம்=ஹேமாங்கத மன்னனும்; ஸந்நிக்ரிஷ்ட வீட்டின் அருகில் உள்ளவனாதலால்; ப்ராஸாத²=உப்பரிகைகளில்; வாதாயந=பலகணிகள் வாயிலாக; த்³ரி꞉ய=காணப்படுகின்ற; வீசி꞉=அலைகளுடைய; மந்த்²ரத்³வநி=கம்பீரமான ஓசையால்; த்யாஜித=விடுவிக்கப்பட்ட; யாம=வெள்ளத்தின் முடிவைக் குறிக்

கும்; தூர்யஃ=வாத்யங்களுடைய; அர்ணவ ஏவ=வருணனே; ப்ரபோத³யதி=எழுப்புவதுபோல் இருக்கிறது.

(க-ரை) தன் நகரில் படுத்திருக்கும் ஹேமாங்கத மன்னனை அந்த உப்பரிகை பலகணிகளின் வாயிலாக தென்படும் சமுத்திரன் காலத்தை அறிவிக்கும் பொருட்டு ஒவ்வொரு யாமத்திலும் வாசிக்கும் வாத்தியங்களை மிஞ்சிய தன்னுடைய ஓசைகளில் தூக்கம் விழிக்கச் செய்கிறான். (இவனை சமுத்திரனே ஸேவிக்கும்போது மற்றவர்கள் சேவிப்பது அதிசயமன்று என்பது பொருள்). (வீறுகோளணி)

சு॥ அநேநஸாகம் விஹராம்பு²ராஶே
ஸ்தீரேஷு தாளீவந மர்மரேஷு।
த்³வீபாந்தராநீத லவங்க²புஷ்பைஃ
அபாக்ரித ஸ்வேத³லவா மருத்³பி⁸ஃ॥ 57

(ப-ரை) அநேநஸாகம்=இந்த ஹேமாங்கத ராஜாவுடன்; தாளீவந=பனை தோப்புகளால்; மர்மரேஷு=சலசலப்பு சத்தஞ் செய்யும்; அம்பு² ராஶேஃ=கடலின்; தீரேஷு=கரையில்; த்³வீப அந்தர=வேறு தீவுகளால்; அநீத=கொண்டுவரப்பட்ட; லவங்க² புஷ்பைஃ=கிராம்பு பூக்கள் உள்ள; மருத்³பி⁸ஃ=காற்றுகளால்; அபாக்ரித=போக்கிய; ஸ்வேத³ல வாஸதி=வியர்வைத் துளி களுடன் கூடியவளாய்; த்வம் விஹார=நீ சஞ்சாரஞ்செய்.

(க-ரை) நீ இவ்வரசனோடு கூடி, இலைகளால் சலசல ஓசை எழுப்பும் பனைமரங்களுடைய கடற்கரையில் பிறதீவுகளிலிருந்து லவங்கப்பூ வாடையைக் கொண்டுவரும் காற்றை அனுபவித்துக் கொண்டே இருக்கலாம். (தகுதியணி)

சு॥ ப்ரலோபி⁸தாஃப் யாக்ரிதி லோப³நீயா
வித³ர்ப⁸ராஜா வரஜா தயைவம்।
தஸ்மா த³பாவர்தத தூ³ரக்ரிஷ்டா
நீத்யேவ லக்ஷ்மீஃ ப்ரதிகூல தை³வாத்॥ 58

(ப-ரை) ஆக்ரிதி லோப⁸நீயா=அழகால் ஈர்க்கத்தக்கத் தகுதி படைத்தவனாகிய! வித³ர்ப⁸ராஜா அவரஜா=போஜராஜனுக்குத் தங்கையான இந்துமதி; தயா=அந்த சுநந்தையால்; ஏவம்=இவ் விதமாக; ப்ரலோபி⁸தாபி=தூண்டப் பட்டபோதிலும்; நீத்யா=தெய்வயத்தனத்தால்; தூ³ரக்ரிஷ்டா=தொலைவுக்குக் கொண்டு

வரப்பட்ட; லக்ஷ்மீ꞉=இலக்குமி; ப்ரதிகூல தை²வாத் இவ=எதிர் மாறான தெய்வ பலமுள்ள மகன் போன்று; தஸ்மாத்=அந்த ஹேமாங்கத மன்னனிடமிருந்து; அபாவர்தத=பின்னுக்குத் திரும்பி னாள்.

(க-ரை) ஒருவனால் தூரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட இலக்குமி தெய்வானுகூலமின்றி அவனை விட்டுச் செல்லும் வண்ணம், அற்புதமான அழகுடைய இந்துமதி இவ்வரசனின் அருகி லிருந்து விலகிச் சென்றாள். (விரியுவமையணி)

சு ॥ அதே¹ாக³ாக்¹யஸ்ய நாத¹ம்
தௌவாரிகீ தே²வ ஸரூப மேத்ய।
இத꞉சகோராக்ஷி விலோகயேதி
பூர்வா நுஶிஷ்டாம் நிஜகா³த³ பே⁴ாஜ்யாம் ॥ 59

(ப-ரை) அத¹=பிறகு; தௌ²வாரிகீ=வாயில் காப்பாளான சுநந்தை; தே²வஸரூபம்=தேவனுக்கு நிகரான; உரக³ாக்¹யஸ்ய= நாகத்தின் பெயருடைய; புரஸ்ய=நாகபுரியின்; நாத¹ம்= மன்னனை; ஏத்ய=அடைந்து; ஹே சகோராக்ஷி=சகோரமெனும் பறவை போன்ற கண்களுடைய ஓ, இந்துமதி! இத꞉=இங்கேயும்; விலோகய=கவனி; இதி=என்று; பூர்வ அநுஶிஷ்டா=முன் சொல்லியதுபோல்; பே⁴ாஜ்யாம்=இந்துமதியைப் பார்த்து; நிஜக²ாத³=சொன்னாள்.

(க-ரை) பிறகு சுநந்தையானவள் தேவசமனான நாகபுரி மன்னன் அருகிற் சென்று, சகோரம் போன்ற கண்களுடைய இந்து மதியை நோக்கி, 'இங்கு கவனி' என்று கூறி முன்போல் கூறத் தொடங்கினாள். (விரியுவமையணி)

சு ॥ பாண்ட்²யோऽய மம்ஸார்பித லம்ப⁴ஹாரா꞉
க்லுப்தாங்க³ராகோ³ ஹரிசந்த³நேந।
ஆப⁴ாதி ப³ாலாதப ரக்த ஸாநு꞉
ஸநிர்ஜரோத்³கா³ர இவாத்³ரி ராஜ꞉ ॥ 60

(ப-ரை) அம்ஸார்பித=வாகுபுரிகளால் அலங்கரிக்கப் பட்டு; லம்ப² ஹாரா꞉=தொங்கும் முத்துமாலையுடைய; ஹரிசந்த²ந= சந்தனக் குழம்பால்; க்லிப்தாங்க²ராக²꞉=அங்கங்களில் பூசப்பட்ட; அயம்=இந்த; பாண்ட்²ய꞉=பாண்டிநாட்டரசன்; பால ஆதப=

இளம்பரிதியால்; ரக்தஸாநுஃ=செந்நிறச் சாரலுடைய; ஸநிர் ஜ²ரோத்²காரஃ=மலையருவி வெள்ளம் பாயும்; அத்³ரிராஜ இவ= மலையரசுபோன்று; ஆப⁴ாதி=பிரகாசிக்கின்றான்.

(க-ரை) வாகுபுரிகளிலிருந்து தொங்கும் முத்தாரங்களும், மலய பருவத்தில் பிறந்த சந்தனம் பூசிய பாண்டியநாட்டு மன்னன், இளர்பரிதியால் செந்நிறமுடைய சாரல்களும், வெண்மையாய் தோன்றும் அருவிகள் பாயும் மலையரசுபோல் ஒத்திருக்கிறான். (தற்குறிப்பணி)

சு ॥ விந்த்⁴யஸ்ய ஸம்ஸ் தம்ப⁴யிதா மஹாத்³ரே
ர்நிஃஶேஷ பீதோஜ்ஜித ஸிந்து⁴ ராஜஃ ।
ப்ரீத்யாஶ்வ மேத⁴ாவ ப்⁴ரிதார்த்³ர மூர்தே
ஸ்ஸௌ ஸ்நாதிகோ யஸ்ய ப⁴வத்யக³ஸ்த்யஃ ॥ 61

(ப-ரை) விந்த்⁴யஸ்ய=விந்தியம் எனும் பெயருடைய; மஹாத்³ரேஃ=விருத்தி யடைந்துக்கொண்டுள்ள மலையை; ஸம்ஸ் தம்ப⁴யிதா=நீக்குகின்ற; நிஃஶேஷ பீத=மீதமின்றி குடித்து; உஜ்ஜித=விடப்பட்ட; ஸிந்து⁴ராஜஃ=சமுத்திரனுடைய; அக³ஸ்த்ய; =அகத்திய முனிவன்; அஶ்வமேத⁴=புரவி வேள்வியின்; அவப்⁴ரித =தீக்ஷைக்குப் பிறகு நடத்தும் சடங்கில் குளிப்பதால்; ஆர்த்³ர= நனைக்கப்பட்ட; மூர்தேஃ=உடலுடைய; யஸ்ய=எந்த பாண்டி. நாட்டின்; ப்ரீத்யா=சிநேகிதத்தால்; ஸௌஸ்நாதிகஃ=நன்கு குளிக்கின்றவன்; ப⁴வதி=ஆகின்றான்.

(க-ரை) விந்திய மலையின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்திய வனும் கடல் நீரை மீதியின்றி குடித்து மறுபடியும் விட்டவனும் ஆகிய அகத்திய முனிவன் இப்பாண்டி மன்னனின் புரவி வேள்விக்குப் பிறகு நடக்கவேண்டிய அவப்ரிதமெனும் குளியல் சரியாக நடந்ததா என்று நலம் விசாரித்தான். (அதாவது அம்மா முனிவர் இவ்வரசனிடம் மிகுந்த பற்றும் அனுக்கிரகமும் உள்ளவர் என்பதாம்). (கூடாமையணி)

சு ॥ அஸ்த்ரம் ஹரா த³ாப்தவதா து⁴ராபம்
யேநேந்த்⁴ர லோகாப ஜயாய த்ரிப்தஃ ।
புரா ஜநஸ்த¹ாந விமர்த³ ஶங்கீ
ஸந்த⁴ாய லங்காதி⁴பதிஃ ப்ரதஸ்தே ॥ 62

(ப-ரை) புரா = முன்பு; ஜநஸ்த[1]ாந = மக்கள் நிலயங்களுக்கு; விமர்த[2] = உபத்திரவம்; ஶங்கீ = எண்ணிக்கொண்டிருந்தவனும்; த்ரிப்தஃ = செருக்குற்ற; லங்காதி[3]பதிஃ = இராவணன்; து[3]ராபம் = அரிதாய; அஸ்த்ரம் = பிரம்மாஸ்திரத்தை; ஹராத் = பரமேசுவரனால்; ஆப்தவதா = அடைந்த; யேந = எந்த பாண்டிய மன்னனுடன் அவனுடன்; ஸந்த[2]ாய = சந்தி செய்துகொண்டு; இந்த்[3]ரலோக = துறக்கத்தினை; அபஜாய = வெல்வதற்கு; ப்ரதஸ்தே[1] = புறப்பட்டான்.

(க-ரை) இராவணன் தன் மக்கள் நிலையத்திற்கு கேடு வராவண்ணம் அவ்விடத்திற்குச் சமீபத்தில் பரமேசுவரனிடம் பிரம்மசிரம் என்னும் பாசுபதாஸ்திரத்தைப் பெற்றிருந்த பாண்டிய மன்னனுடன் சந்தி செய்துகொண்டு இந்திரனுடன் போருக்குச் சென்றான் (அதாவது இராவணனுக்குங்கூட வெல்ல முடியாதவன் என்பதாம்). (கூடாமையணி)

சு॥ அநேந பாணௌ விதி[2]வத்[3] க்ருஹீதே
மஹா குலீநேந மஹீவ கு[3]ர்வீ ॥
ரத்நாநு வித்[2]த[3]ார்ணவ மேக[1]லாயா
தி[3]ஶஸ்ஸ பத்நீ ப[3]வ தக்ஷிணாஸ்யா ॥ 63

(ப-ரை) மஹாகுலீநேந = நற்குடி பிறந்த; அநேந = இப்பாண்டிய மன்னன்; பாணௌ = உன் கையை; விதி[3]வத் = முறைப்படி; க்[2]ருஹீதேஸதி = பிடித்தால்; கு[3]ர்வீ = பெரிதாய; மஹீவ = பூமி போன்று; ரத்ந அநுவித்[2]த[3] = ரத்தினங்களால் விரிந்த; அர்ணவ = கடலே; மேக[1]லாயாஃ = ஒட்டியாணமாகக் கொண்ட; த[3]க்ஷிணாஸ்யாதிஶஃ = தென் திசைக்கு; ஸபத்நி = சக்களத்தியாக; ப[3]வ = இருப்பாய்.

(க-ரை) ரத்தினங்களடங்கியுள்ள கடலிருக்கும் தென்திசை அரசனான இப்பாண்டியனைத் திருமணம் செய்துகொள்வாயேல் இவனுக்குப் பட்டத்து இராணி ஆவாய். (தொடர்நிலை செய்யுட்பொருட்பேரணி)

சு ॥ தாம்பூலவல்லீ பரிணத்[2]த[3] பூக[2]ா
ஸ்வேலா லதாலிங்கி[2]த சந்த[2] நாஸு ।
தமால பத்ராஸ் தரணாஸு ஶஶ்வத்
ப்ரஸீத[2] ரந்தும் மலயஸ்த[1]லீஷு ॥ 64

(ப-ரை) தாம்பூலவல்லீ = வெற்றிலைக் கொடி; பரிணத்[2]த[3] = தழுவிக்கொண்டுள்ள; பூக[3]ாஸு = பாக்கு மரங்கள் உள்ள; ஏலாலதா = ஏலக்கொடிகள்; ஆலிங்கி[2]த் = தழுவிக்கொண்டுள்ள; சந்த[2]நாஸு = பச்சிலை மரங்களின் இலைகளை படுக்கையாக கொண்ட; மலயஸ்த[1]லீஷு = மலய பருவத்தின் அச்செயற்கை நிலங்களில்; ஸர்வதா = எவ்வப்போது; ரந்தும் = விளையாட; ப்ரஸீத = அனுகூலமானவளாக இரு.

(க-ரை) கமுகு மரங்களைத் தழுவிக்கொண்டுள்ள வெற்றிலைக் கொடிகளும், சந்தன மரங்களை சூழ்ந்துள்ள ஏலக்காய் கொடிகளும் உள்ள மலய பருவதத்தின் அச்செயற்கையிடத்தில் நீசுகம் அனுபவிப்பாய். (முறையிற்படற்சியணி)

சு ॥ இந்தீ[2]வரஸ்யாம தநுர் ந்ரிபோ஽ஸௌ
த்வம் ரோசநா கௌ[2]ர ஸரீரயஷ்டிஃ ।
அந்யோந்ய ஸோப[3]ா பரிவ்ரித்[3]த[3]யே வாம்
யோக[3]ஸ்தடித் தோயத[3]யோ ரிவாஸ்து ॥ 65

(ப-ரை) அஸௌ = இந்த; ந்ரிபஃ = பாண்டி நாட்டு மன்னன்; இந்தீ[2]வரஸ்யாம தநுஃ = குவளையைப் போன்ற கறுத்த உடலுடையவன்; த்வம் = நீ; ரோசனா = கோரோசனைப் போன்ற; கௌ[2]ரஸரீர யஷ்டிஃ = பசுமையான மெல்லிய உடலுடையவள்; தடித்தோயத[3]ஃ இவ = மின்னலும் மேகமும் போன்று; வாம் = உங்களிருவருக்கும்; யோக[3]ஃ = சம்மந்தம்; அந்யோந்ய = ஒருவர்க்கொருவருடைய; ஸோப[3]ா = ஒளியின்; ப்ரிவ்ரித்[3]த[3]யே = வளர்வதற்கு; அஸ்து = ஆகும்.

(க-ரை) கறுங்குவளைப் போன்ற நிறமுடைய இளவரசனுக்கும்; கோரேசனைப் போன்ற பசுமை நிறமுள்ள உனக்கும் உண்டாகும் சம்மந்தம் மேகத்திற்கும் மின்னலுக்குமுள்ள சேர்க்கைப்போன்று மிகப் பிரகாசமாயிருக்கும். (தொகையுவமையணி)

சு॥ ஸ்வஸுர் வித[3]ர்ப[3]ாதி[3]பதே ஸ்ததீ[2]யோ
லேபே[3]஽ந்தரம் சேதஸி நோபதே[2]ஸஃ ।
தி[2]வாகராத[2]ர்ஸந ப[2]த்[3]த[3] கோஸே
நக்ஷத்ர நாத[1]ாம்ஸுரிவாரவிந்தே[3] ॥ 6

(ப-ரை) விதர்ப⁸ாதி⁸பதே꞉=போஜமன்னனுக்கு; ஸ்வஸு꞉= தங்கையான இந்துமதியின்; சேதஸி=மனதில்; ததீ²ய꞉=அந்த சுநந்தையின்; உபதே²ஶ꞉=போதனைகள்; தி²வாகர ஆத²ர்ஶந= சூரியனைக் கண்டதும்; ப²த்³த³கோஶே=மூடியுள்ள மொட்டுக்கள் உள்ள; அரவிந்தே²=தாமரைகளில்; நக்ஷத்ர நாத¹ாம் ஶுரிவ= சந்திரனின் கதிர்கள் போல்; அந்தரம்=அவகாசத்தை; நலேபே³= அடையாது போயிற்று.

(க-ரை) சூரியன் இல்லாதபோது சந்திரன் கதிர்கள் தாமரை மொட்டில் நுழையாது போவதுபோல் இவ்வரசனைப் பற்றிய சுநந்தையின் வார்த்தைகள், விருப்பமிலா இருந்துமதியின் மதிக்குப் பிடிக்கவில்லை. (விரியுவமையணி மற்றும் விலக்கணி)

சு ॥ ஸஞ்சாரிணீ தீ²பஶிகே¹ந ராத்ரௌ
யம் யம் வ்யதீயாய பதிம் வராஸா ।
நரேந்த்²ர மார்க²ாட்ட இவப்ர பே²ாதே³
விவர்ண ப³ாவம் ஸஸபூ³மிபால꞉ 67

(ப-ரை) பதிம் வரா=பதியைத் தேர்ந்தெடுக்கும்; ஸா=அந்த இந்துமதி; ராத்ரௌ=இரவில்; ஸஞ்சாரிணீ=உலாவும்; தீ²பஶிகே¹ந=விளக்கின் ஒளி போல்; யம் யம்=எந்தெந்த அரசனை; வ்யதீயாய=தாண்டினளோ; ஸஸ꞉=அந்தந்த; பூ²மிபால꞉= அரசன்; நரேந்த்²ரமார்க²=ராஜவீதியில்; அட்ட இவ= கோட்டை வாயிலின் மீதுள்ள வீடுகள் போல்; விவர்ண ப³ாவம்=வண்ணங் கெட்டும், இருள் நிரம்பியும்; (உள்ளதுபோல்); ப்ரபோ²தே²=அடைந் தனர்.

(க-ரை) முன்னால் அடைப்பில்லாத அரசமாளிகையின் மேற்புற மாடியில் விளக்கை யெடுத்துச் செல்லும்போது பின்புறத்தில் இருள் சூழ்வதுபோல், இந்துமதி எந்தெந்த அரசனைத் தாண்டிச் சென்றாளோ அந்தந்த மன்னனுடைய முகம் வெளுத்துவிட்டது. (தொகையுவமையணி)

சு ॥ தஸ்யாம் ரகே³ாஸ்ஸ ஒநு ருபஸ்தி¹தாயாம்
வ்ரிணீதவா நேதி ஸமாகுலோஉபூ³த் ।
வாமேதரஸ் ஸம்ஶய மஸ்ய ப²ாஹு
கேயூர ப²ந்தே²ாச் ச்¹வஸிதைர்நுநோத² ॥ 68

(ப-ரை) தஸ்யாம் = அந்த இந்துமதீதேவி; உபஸ்தி¹தாயாம் = அருகில் வர; ரகே³ாஸ்ஸூநு: = ரகுவின் மகனாய அஜமன்னன்; மாம் = என்னை; வ்ரிணீத = தேர்ந்தெடுப்பாளோ; நவா = இல்லையோ; இதி = என்று; ஸமாகுல: அபூ³த் = ஐயங் கொண்டவனானான்; அஸ்ய = இந்த அஜமன்னனின்; வாமேதர = வலது; பா³ஹு = தோள்; கேயூரப²ந்த³ = வாகுபுரி இடத்தின்; உச்ச்¹வஸிதை: = தோற்றத்தால்; ஸம்ஶயம் = ஐயப்பாட்டை; நுநோத² = போக்கியது.

(க-ரை) இந்துமதி தன் அருகில் வந்ததும் அஜமன்னவன் தன்னை அவள் தேர்ந்தெடுப்பாளோ மாட்டாளோவென ஐயங் கொள்ளவே அவனது வலப்புயம் அதிர்ந்த நற்சகுனத்தால் அந்த சந்தேகம் நீங்கியது. (நினைப்பணி)

சு ॥ தம் ப்ராப்ய ஸர்வாவயவாநவத்³யம்
ந்யவர்த தாந்யோபக²மாத் குமாரீ ।
நஹி ப்ரபு¹ல்லம் ஸஹகாரமேத்ய
வ்ரிக்ஷாந்தரம் காங்க்ஷதி ஷட்பத²ாளி: ॥ 69

(ப-ரை) குமாரீ = இந்துமதி; ஸர்வாவயவ = எல்லா உறுப்புகளிலும்; அநவத்³யம் = குற்றமற்ற; தம் = அந்த அஜராஜனை; ப்ராப்ய = அடைந்து; அந்ய = மற்றொரு அரசனை; உபக²மாத் = அடைவதற்கு; ந்யவர்தத = ஒப்பவில்லை; தத¹ாஹி = அதாவது; ஷட்பத²ாளி = வண்டுக்களின் கூட்டம்; ப்ரபு¹ல்ல = நன்கு மலர்ந்த; ஸஹகாரம் = மாமரத்தை; ஏத்ய = அடைந்ததும்; வ்ரிக்ஷாந்தரம் = மற்றொரு மரத்தை; நகாங்க்ஷதி = விரும்புவதில்லை.

(க-ரை) வண்டுகளின் கூட்டமானது சுவையுள்ள மாமரத்தை அடைந்தபோது மற்றொரு மரத்தை எவ்வாறு விரும்புவதில்லையோ அதுபோல் இந்துமதி எல்லா உருப்புக்களும் அழகாக உள்ள உடலையுடைய அந்த அஜமகாராஜனைப் பார்த்ததும் மற்றொரு மன்னனை நாட வேண்டுமென்ற எண்ணமற்றவளானாள். (தொகையுவமையணி)

சு॥ தஸ்மிந் ஸமாவேஶித சித்த வ்ரித்திம்
இந்து²ப்ரப³ா மிந்து²மதீ மவேக்ஷ்ய ।
ப்ரசக்ரமே வக்து மநுக்ர மஜ்ஞா
ஸவிஸ்தரம் வாக்ய மித²ம் சுநந்த²ா 70

(ப-ரை) தஸ்மிந் = அந்த அஜமன்னனிடம்; ஸமாவேஶித சித்தவ்ரித்தம் = நிறுத்தப்பட்ட மனமுடைய; இந்துப்ரப⁸ாம் = சந்திரன் போன்ற ஒளியுடைய; இந்து²மதீம் = இந்துமதி தேவியை; அவேக்ஷ்ய = பார்த்து; அநுக்ரமஜ்ஞா = சொற்களின் முன்பின் வலியை அறிந்த; ஸுநந்த²ா = சுநந்தை; இத²ம் = சொல்லத்தக்க இந்த; ஸவிஸ்தரம் = வரலாற்றை; வக்தும் = சொல்ல; ப்ரசக்ரமே = தொடங்கினாள்.

(க-ரை) சொற்றொடரின் முன்பின்னறிந்த சுநந்தை அஜ மன்னனிடன் மனம் நாட்டியுள்ளவளும், முழுமதிபோல் அழகுள்ள வளுமாகிய இந்துமதியைக் கண்டு அவ்வரசனின் வரலாற்றை விளக்கத் தொடங்கினாள். (உவமையணி)

சு॥ இக்ஷ்வாகுவம்ஶ்யஃ ககுதே²ா ந்ரிபாணாம்
கருத்ஸ்த¹ இத்யாஹித லக்ஷணோऽபூ²த் ।
காகுத்ஸ்த¹ ஶப்³த²ம் யத உந்நதேச்ச¹ாஃ
ஶ்லாக்³யம் த²த³த்யுத்தர கோஸலேந்த்³ராஃ ॥ 71

(ப-ரை) இக்ஷ்வாகு வம்ஶ்யஃ = இக்ஷ்வாகு அரசனுடையமரபில் பிறந்த; ந்ரிபாணாம் = அரசர்களில்; ககுத²ஃ = சிறந்த, ஆஹித லக்ஷணஃ = மேன்மையான குணங்களுடைய; ககுத்ஸ்த¹ இதி = ககுத்ஸ்தன் என்னும் அரசன்; அபூ³த் = இருந்தான்; யத் = எந்த ககுத்ஸ்த மன்னனால்; உந்நதேச்ச¹ாஃ = நற்குணங்களுடைய; உத்தரகோஸலேந்த்¹ராஃ = வடகோஸலை நாட்டிற்கதிபதிகளாகி திலீபன் முதலிய; ஶ்லாக்³யம் = புகழ் வாய்ந்த; காகுஸ்த¹ஶப்த²ம் = ககுத்ஸ்தன் என்னும் சொல்லை; த²த³தி = பெறுகின்றனர்.

(க-ரை) இக்ஷ்வாகு மரபு அரசர்களில் சிறந்த குணமுடைய ககுத்ஸ்த மன்னன் மரபில், அவனுக்குப் பின்னால் உதித்த குணாதிகமுள்ள வடகோசலையை ஆளும் மன்னர்கள்காகுத்ஸ்தர் களென்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். (முறையிற்படற்சியணி)

சு॥ மஹேந்த்²ர மாஸ்த¹ாய மஹோக்ஷரூபம்
யஸ் ஸம்யதி ப்ராப்த பிநாகி லீலஃ ।
சகார பாணை ரஸுராங்க²நாநாம்
க²ண்டஸ்த¹லீஃ ப்ரோஷித பத்ரரேக¹ாஃ ॥ 72

(ப-ரை) யঃ=எந்தககுத்ஸ்த மன்னன்; ஸம்யதி=போரில்; மஹோக்ஷரூபம்=பேரேறு போன்ற உருகொண்டு; ப்ராப்த பிநாகி லீலஸ்ஸந் = பரமேசுவரனாலடைந்த விளையாடல் உடையவனாய்; ப[3]ாணைঃ=பாணங்களால்; அஸுராங்க[2]நாநாம் = அரக்கப் பெண்க ளுடைய; க[2]ண்ட[2]ஸ்த[1]லீঃ = கன்னங்களில்; ப்ரோஷிதபத்ர ரேக[1]াঃ=மகர பத்திரிகை யெனும் கோடுகள் கலையுமாறு; சகார = செய்தான்.

(க-ரை) அந்த ககுத்ஸ்த மாமன்னன் ஈசனைப் போல் பெரிய எருதுருவெடுத்த இந்திரன்மீது உட்கார்ந்து, பாணங்களால் அரக்கப் பெண்களின் பதிகளைப் பிரியச் செய்ததால் அலங்கார மற்றவர் களாகச் செய்தான். (ஒன்றற்கொன்றுதவியணி)

சு ॥ ஐராவ ணாஸ்ப[1]ாலந விஸ்லத[1]ம்யঃ
ஸங்க[3]ட்டய ந்நங்க[2]த[2] மங்க[2]தே[2]ந ।
உபேயுஷஸ்வாமபி மூர்த்தி மக்[2]ர்யாம்
அர்த[2]ாஸநம் கோ[2]த்[1]ர பி[3]தே[2]ாঃதி[3] திஷ்டெ[1]ள ॥ 73

(ப-ரை) யঃ= எந்த ககுத்ஸ்த[1] அரசன்; ஐராவணாஸ்ப[1]ாலந= ஐராவதம் தட்டுவதால் பாழடைந்த; அங்க[2]த[2]ம்=வாகுபுரியை; அங்க[2]தே[2]ந=தன்னுடைய வாகுபுரியால்; ஸங்க[3]ட்டயந்ஸந்= உரசிக்கொண்டு; ஸ்வாம்=தன்னுடைய; அக்[2]ர்யாம்=சிறந்த; மூர்திம் = உடலை; உபேயுஷঃ=அடைந்த; கோ[2]த்ரபி[3]த[2]ঃ= தேவேந்திரனுடைய; அர்த[1]ாஸநமபி = பாதி இருக்கையை; அதி[3]திஷ்டெ[1]ள=ஏறினான்.

(க-ரை) பிறகு, தேவேந்திரன் சுயருபமெடுத்து ஐராவத[1]த்தை மெள்ளத் தட்டிக் கொடுத்து, அதனால் ஏகிய வாகுபுரியுடன் சிங்கா தனத்தின் மீது உட்கார்ந்தபோது, ககுத்ஸ்த மாமன்னன் இந்திர னுடன் பாதியாதனத்தில் தன் வாகுபுரியுடன் அவனது வாகுபுரியை உரசிக்கொண்டே உட்கார்ந்தான். (மிகுதினவிற்சியணி)

சு॥ ஜாதঃ குலே தஸ்ய குலோரு கீர்தி
குலப்ரதீ[2]போ ந்ரிபதிர் தி[2]லீபঃ ।
அதிஷ்ட[1] தே[2]ஸோந ஸதக்ரதுத்வே
ஸக்ராப்[3]யஸூயா விஜவ்ரித்தயே யঃ ॥ 74

(ப-ரை) உருகீர்திঃ = அதிகப் புகழுள்ள; குலப்ரதீ²பঃ = மரபிற்கு விளக்குப் போன்றவன்; திலீபঃ = திலீபனென்னும்; ந்ரபதிঃ அரசன்; தஸ்ய = அந்த ககுத்ஸ்த[1] அரசனின்; குலே = மரபில்; ஜாதঃ கில = பிறந்தானன்றோ! யঃ = எந்த திலீப மன்னன்; ஶக்ராப் யஸூயா = தேவேந்திரனுடைய பொறாமை; வி நிவ்ரித்தயே = போவதற்கு; ஏகோநஶதঃ க்ரதுத்வே = தொண்ணூற்றொன்பது வேள்விகள் உடைய எண்ணத்தில்; அதிஷ்ட[1]த் = இருந்தான்.

(க-ரை) அப்படிப்பட்ட ககுத்ஸ்த் அரச மரபில் குலவிளக்க மும் புகழுற்றவனும் ஆகிய திலீபன் பிறந்து தொண்ணூற்று ஒன்பது புரவி வேள்விகள் புரிந்து தேவேந்திரனுடைய அன்புக்காக நூறா வது யாகத்தை விட்டுக் கொடுத்தான். (காரணவராய்ச்சியணி)

௬॥ யஸ்மிந் மஹீம் ஶாஸதி வாணிநீநாம்
நித்²ராம் விஹாரார்த[1] பதே[1] க²தாநாம் ।
வாதோऽபி நாஸ்ரம்ஸயத²ம் ஶுகாநி
கோ லம்ப²யே த²ாஹரணாய ஹஸ்தம் ॥ 75

(ப-ரை) யஸ்மிந் = எந்த திலீப மன்னன்; மஹீம் = பூமியை; ஶாஸதிஸதி = ஆண்டுக் கொண்டிருக்க; விஹாரார்த[1]பதே[1] = விளை யாட்டின் பாதியில்; நித்²ராம் க²தாநாம் = தூக்கம் அடைந்த; வாணிநீநாம் = பாடகிகளின்; அம்ஶுகாநி = துணிகளை; வாதঃ அபி = வாயுவும்; நாஸ்ரம்ஸயதி = அசைக்கவில்லையோ; ஆஹரணாய = கவர்ந்துவிட; கঃ = ஏவன்; ஹஸ்தம் = கைகளை; லம்பயேத் = நீட்டுவான்.

(க-ரை) அந்த திலீப மன்னன் ஆளுகையில் உலாவிடம் சென்றபோது வழியில் படுத்துத் தூங்கி மயங்கி கிடந்த பெண்களின் துகில்களை காற்றுகூட அசைக்கவில்லை, சொத்துக்களைக் கவர எவனும் கைநீட்டத் துணியவில்லை. (அதாவது விபசாரம், திருடு ஆகியவை இல்லாமலிருந்தது). (மிகுதினவிற்சியணி)

௬॥ புத்ரோ ரகு³ஸ் தஸ்ய பத²ம் ப்ரஶாந்தி
மஹாக்ரதோ ர்விஶ்வஜிதঃ ப்ரயோக்த ।
சதுர்தி²க³ா வர்ஜித ஸம்ப்³ரிதாம்யா
ம்ரித்பாத்ர ஶேஷா மகரோ த்விபூ³திம் ॥ 76

(ப-ரை) விஸ்வஜிதः=விசுவசித் என்னும்; மஹாக்ரதோः= பெருவேள்விக்கு; ப்ரயோக்த=நடத்துகின்ற; தஸ்ய= அந்த திலீப மன்னனுக்கு; புத்ரः=மகனான; ரகு³ः=ரகுமன்னன்: பத³ம்= மாகாணத்தை; ப்ரஶாஸ்தி = ஆள்கின்றான்; யः=எந்த ரகுமன்னன்; சதுர்தி³க்=நான்கு திசைகளால்; ஆவர்ஜித=கொண்டுவரப்பட்டு; ஸம்ப்³ரிதா=வளர்க்கப்பட்ட; விபூ³தி=ஆக்கத்தை; ம்ரித்பாத்ர= மட்பாண்டமே; ஶேஷா=மிகுந்ததாய்; அகரோத்=செய்தான்.

(க-ரை) அந்த திலீபமன்னனுக்கு மகனான ரகுமன்னன் ராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டே 'விசுவஜித்' என்னும் வேள்வியை நடத்தி நாற்றிசைகளை வென்று, கொண்டுவந்த பொருள்கள்யாவும் அந்த வேள்வியில் விரயம் செய்தான்; மட்பாத்திரங்களை மட்டும் திருத்திக் கொண்டான். (பிரதினவிற்சியணி)

சு ॥ ஆரூட¹ மத்³ரீம் ஸுத³தீ³ ந்விதீர்ணம்
புஜ³ங்க³மாநாம் வஸதிம் ப்ரவிஷ்டம் ।
ஊர்த்³வங் க³தம் யஸ்ஸ ந சாநுப³ந்தி³
யஶः பரிச்சே¹த்து மியத்தயா஽லம் ॥ 77

(ப-ரை) அத்³ரீம்=மலைகளை; ஆரூட¹ம்=ஏறிய; உத³தீ³ந்= கடல்களை; விதீர்ணம்=தாண்டிய; பு³ஜங்க³மாநாம்=பாம்புகட்கு; வஸதிம்=நிலையான பாதாள உலகத்தை; ப்ரவிஷ்டம்=நுழைந்த; ஊர்த்³வம்=துறக்கம் முதலிய உலகங்களை; க³தம்=அடைந்த; அநுப³ந்தி³ச=முக்காலத்தும் பரந்த; யஸ்ப=எந்த ரகுமன்னனுடைய; யஶः=புகழ்; இயத்தயா=அதன் அளவை; பரிச்சே¹த்தும்= அளவிட; நாலம்= முடியாதது

(க-ரை) மலைகளிலும், பூமியிலும், மேலுலகு, கீழுலகுகளிலும் முக்காலங்களிலும் நிலைத்துள்ளவாறு விரிந்திருந்த இந்த ரகுமன்னனுடைய புகழின் அளவை விளக்க முடியாதது. (மிகுதிநவிற்சியணி)

சு ॥ அஸௌ குமாரஸ்த மஜோ஽நுஜாதः
த்ரிவிஷ்டபஸ்யேவ பதிம் ஜயந்தः ।
கு³ர்வீம் து³ரம் யோ பு³வநஸ்ய பித்ரா
து³ர்யேணத³ம்யஸ் ஸத்³ரிஶம் பி³ப³ர்தி ॥ 78

(ப ஹை) அஸௌ = இந்த; அஜ꞉ = அஜன் என்கிற பெயருடைய குமார꞉ = மகன்; த்ரிவிஷ்டபஸ்ய = சொர்க்கத்திற்கு; பதிம் = அரசனாகிய; தேவேந்திரனின்; ஜயந்த இவ = ஜயந்தன் போன்று; தம் = அந்த ரகுமன்னனை; அநுஜாத꞉ = அடுத்து பிறந்தான்; த்⁴ம்ய꞉ = கறகும் நிலையிலுள்ள; ய꞉ = எந்த அஜமன்னன்; கு³ர்வீம் = பெரிதாய; பு³வநஸ்ய = புவியின்; தூ⁴ர்யேந = வெகுகாலமாக அரசபாரத்தை சுமந்துக் கொண்டிருந்த; பித்ரா = தந்தையாகிய ரகு மன்னனுடன்; ஸத்ரிபம் யு¹தாதத¹ா = இணையாக; பி³ப³ர்தி = தாங்குகின்றான்.

(க-ரை) இந்த அஜமன்னன் துறக்கத்தின் அரசனான தேவேந்திரனுடைய மகன் ஜயந்தனைப் போன்று பிறந்து வெகு காலமாக, அரசு பாரம் தாங்கி தந்தையாருக்கு நிகராக இளவரசனாய் அரசு காரியங்களை நடத்துகிறான். (தொகையுவமையணி)

௬ ॥ குலேந காந்த்யா வயஸா நவேந
கு³ணைஶ்ச தைஸ்தை ர்விநய ப்ரத¹ா நை꞉ ।
த்வா மாத்ந ஸ்துல்ய மமும் வ்ரிணீஷ்வ
ரத்நம் ஸமாக³ச்சது காஞ்சநேந ॥ 79

(ப-ரை) குலேந = மறபினால்; காந்த்யா = அழகால்; நவேந வயஸா = புது இளமையால்; விநயப்ரத³ாந꞉ = அடக்கமே முதலாகக் கொண்ட; தைஸ்தை꞉ = அந்தந்த; கு³ணைஶ்ச = சீல முதலாய குணங்களாலும்; ஆத்மந꞉ = உனக்கு; துல்யம் = நிகரான; அமும் = இந்த அஜமன்னனை; த்வம் = நீ; வ்ரிணீஷ்வ = தேர்ந்துக் கொள்; ரத்நம் = இரத்தினம்; காஞ்நேந = பொன்னுடனும்; ஸமாக³ச்ச¹து = சம்மந்தம் கொள்ளட்டும்.

(க-ஸர) குலம், அழகு, நவயௌவனம், அடக்கம், நற்சுபாவம் முதலிய உயர்குணங்களுடையவனும், உனக்கு நிகரானவனும் ஆகிய இம்மன்னனை, நீ தெரிந்தெடுத்துக்கொள். இவ்விரு சேர்க்கையும் பொன்னுடன் மணி சேர்ந்தது போல் நன்றாக இருக்கும். (தொகையுவமையணி)

௭॥ ததஸ்ஸுநந்த³ா வசனாவஸாநே
லஜ்ஜாம் தநூக்ரித்ய நரேந்த்³ரகந்யா ।
த்³ரிஷ்ட்யா ப்ரஸாத³ாமலயா குமாரம்
ப்ரத்யக்ரஹீ த்ஸம்வரண வ்ரஜேவ ॥ 80

(ப-ரை) ததஃ=பிறகு; ஸுநந்த³ா வசநாவஸாநே=சுநந்தை சொன்ன பிறகு; நரேந்த்³ர கந்யா=இந்துமதி; லஜ்ஜாம் தநூக்ரித்ய=கொஞ்சம் வெட்கத்துடன்; ப்ரஸா²த அமலயா=மனத் தூய்மையோடு கருணையுள்ள; த்ரிஷ்ட்யா=பார்வையுடன்; குமாரம்=அவ்வரச குமாரனுக்கு; ஸம்வரண வ்ரஜேவ=சுயம் வரம் செய்யும் மாலையிட; ப்ரத்யக்³ரஹீத்=சம்மதித்தாள்.

(க-ரை) சுநந்தை அவ்வாக்கியங்களை கூறிய பிறகு இந்துமதி சற்றே வெட்கமடங்கியவளாம், கருணையுள்ள பார்வையோடு சுயம் வரத்துப் பூமாலையைப் போடுவதற்கு சம்மதித்தாள்- (அதாவது புன்னகைப் பூத்த முகத்துடன் அவனை நோக்கினாள். (நிகழ்வின விற்சியணி)

சு॥ ஸா யூநி தஸ்மி ந்நபி³லாஷ ப²ந்த³ம்
ஶஶாக ஶாலீ நதயா ந வக்தும் ।
ரோமாஞ்ச லக்ஷ்யேண ஸக²ாத்ர யஷ்டிம்
பி³த்வா நிராக்ராம த²ராள கேஶ்யாஃ ॥ 81

(ப-ரை) ஸா=அவ்விந்துமதி தேவி; யூநி=இளம் வயதினனான; தஸ்மிந்=அந்த அஜமகாராஜனிடம்; அபி³லஷப²ந்த³ம்=அன்பைப் பிணைக்க; ஶாலீநதயா=வெட்கத்துடன்; வக்தும்=சொல்வதற்கு; நஶஶாக=திறமையற்றவளாக ஆனாள்; தத¹ாபி=ஆயினும்; அராளகேஶ்யா=வளைந்த கூந்தலுடைய இந்துமதி தேவியின்; ஸஃ=அன்பெனும் பிணைப்பு; ரோமாஞ்ச=மயிர்கூச்சலின்; லக்ஷ்யேண=குறிப்பால்; க²ாத்ரயஷ்டிம்=கொடிமரம் போன்ற உடலுடன்; பி³த்வா=பிளந்துகொண்டு; நிராக்ராமத்=புறப்பட்டு வந்தாள்.

(க-ரை) அந்த இந்துமதி இளம்வயதினனான அஜமகாராஜனிடம் தனக்குண்டாகிய விருப்பத்தை வெட்கத்தால் கூறமுடியாதவளானாள். ஆயினும், அவளுடைய அன்பின் பிணைப்பு மிக மகிழ்ச்சியுடன் கூடியதால் அவளுக்கு உண்டான மயிர்கூச்சல் வெளிப்படுத்தியது. (பதப்பொருட்காட்சியணி)

சு ॥ தத²ாக²தாயாம் பரிஹாஸ பூர்வம்
ஸக¹யாம் ஸகீ¹ வேத்ரப்³ரிதா ப²ப³ாஷே ।
ஆர்யே வ்ரஜா வோऽந்யத இத்ய தை¹நாம்
வதூ³ரஸூயா குடிலம் த²த²ர்ஶ ॥ 82

(ப-ரை) ஸக்[1]யாம் = தோழியாகிய இந்துமதி; தத[1]ா = அவ்வாறு ஆக[3]தாயாம் ஸத்யாம் = அன்பு கொண்டவளாக; ஸகீ[1] = தோழியாகிய; வேத்ரப்[3]ரிதா = பிரம்பை வைத்திருந்த சுநந்தை; ஹே ஆர்யே! = ஓ இந்துமதி; அந்யதஃ = பிறவரசனை நோக்கி; வ்ரஜாவஃ = போகலாம்; இதி = என்று பரிஹாஸ பூர்வம் = விளையாட்டாக; ஆப[2]ப[3]ாஷே = கூறினாள்; அத[1] = பிறகு; வதூ[3]ஃ = இந்துமதீ தேவி; ஏநம் = இந்த சுநந்தையை; அஸூயா = கோபத்துடன்; குடிலம் யத[1]ா தத[1]ா = கலக்கத்துடன்; த[2]த[2]ர்ஶ = பார்த்தாள்.

(க-ரை) இந்துமதி இவ்விதம் அன்புகொண்டிருக்க, சுநந்தையானவள் வேடிக்கைக்காக மற்றோர் அரசகுமாரனிடம் 'போகலாமா' என்று கூறினாள், இந்துமதியை நோக்கி. அந்த வார்த்தைக்கு இந்துமதி சகியாதவளாய், சுநந்தையை பொறாமையுடன் பார்த்தாள். (சிறப்பணி)

சு ॥ ஸாசூர்ண கௌ[2]ளரம் ரகு[3]நந்த[2]நஸ்ய
த[3]ாத்ரீ கராப்[3]யாம் கரபோ[3]பமோருஃ ।
ஆஸஞ்ஜயாமாஸ யத[1]ா ப்ரதே[2]ஶம்
கண்டே[1] கு[3]ணம் மூர்த மிவாநுராக[2]ம் ॥ 83

(ப-ரை) கரப[3] உபம ஊருஃ = கையின் மேற்புறம் போன்ற தொடைகள் உடைய; ஸா = அந்த இந்துமதி தேவி; சூர்ண கௌ[2]ளரம் = குங்குமம் பூசிய சிவந்த; மாலையை; மூர்தம் அநுராக[2]ம் இவ = உருவெடுத்த அன்பைப்போல்; த[3]ாத்ரி = செவிலித்தாயாகிய சுநந்தையின்; கராப்[3]யாம் = கைகளால்; ரகு[3] நந்த[2]நஸ்ய = அஜ மன்னனுடைய; கண்டே[1] = கழுத்தில்; யத[1]ாப்ரதே[2]ஶம் = இடம் தவறாது; ஆஸஞ்ஜயாமாஸ = அணிவித்தாள்.

(க-ரை) புறக்கைப் போன்ற தொடைகளுடைய இந்துமதி சுநந்தை வைத்திருந்த குங்குமம் பூசிய சிவந்த மாலையை அவள் கையைப் பிடித்த வண்ணமே அன்போடு அஜமன்னனுடைய கண்டத்தில் ஏற்றத் தாழ்வின்றி அணிவித்தாள். (நிகழ்வினவிற்சியணி)

சு ॥ தயா ஸ்ரஜா மங்க[2]ள புஷ்பமய்யா
விஶால வக்ஷஸ் ஸ்த[1]ல லம்ப[2]யா ஸஃ ।
அமம்ஸ்த கண்ட[1]ார்பித பாஹு பாஶாம்
விதர்ப[3]ராஜாவரஜாம் வரேண்யஃ ॥ 84

(ப-ரை) வரேண்யஃ=தெரிந்தெடுக்கத் தக்க; ஸஃ=அந்த அஜ மன்னன்; மங்க²ள புஷ்பமய்யா=இலுப்பை முதலிய மங்களகரமான பூக்களுடைய; விஶால வக்ஷஸ்த²ல=அகன்ற மார்பில்; லம்ப³யா= தொங்கும்; தயாஸ்ரஜா=அந்த மாலையால்; வித³ர்ப⁴ ராஜா வரஜாம்=போஜமன்னனுக்குத் தங்கையாகிய இந்துமதீ தேவியை; கண்ட²ார்பித=கழுத்தில் வைக்கப்பட்ட; ப³ாஹுபாஶாம்=புயங்களென்னும் கயிறுகளுடையவளாக; ஆமம்ஸ்த=எண்ணினான்.

(க-ரை) தெரிந்தெடுக்கத் தக்க அஜமன்னன் இந்துமதி தன்னுடைய விரிந்த மார்பின்மீது தொங்கும்படி கழுத்தில் மங்களகரமான இலுப்பை முதலிய பூச்சரத்தைப் போட்டதால், அவளுடைய கைகளைத் தன் கழுத்தின் மேல் வைத்தது போலவும், தன்னைத் தழுவியதாகவும் எண்ணினான். (இன்பவணி)

சு॥ ஶஶிந முபக³தேயம் கௌமுதீ³ மேக⁴முக்தம்
ஜலநிதி³ மநுரூபம் ஜஹ்நுகந்யாஃ வதீர்ணா ।
இதிஸம கு³ணயோக³ ப்ரீதய ஸ்தத்ர பௌராஃ
ஶ்ரவணகடு ந்ருபாணா மேகவாக்யம் விவவ்ருஃ ॥ 85

(ப-ரை) தத்ர=அந்த சுயம்வர மண்டபத்தில்; ஸமகு³ண= நிகரான குணங்களுடைய இந்துமதி அஜமன்னர்களின்; யோக³ஃ கலப்பால்; ப்ரீதயஃ=மகிழ்வுற்ற; பௌரஃ=பட்டணத்து மக்கள்; இயம்=இந்த அஜமன்னன் அடைந்த இந்துமதி; மேக⁴முக்தம்= மேகங்களால் விடப்பட்ட; ஶஶிநம்=சந்திரனை; உபக³தா= அடைந்த; கௌமுதி³=வெண்ணிலாவுக்கு; அநுரூபம்=நிகரான; ஜலநிதி³ம்=சமுத்திரனை; அவதீர்ணா=பிரவேசித்த; ஜஹ்நு கந்யா=கங்கை; இதி=என்று(இவ்விதமாக); ந்ருபாணாம்=அரசர் களுக்கு; ஶ்ரவணகடு=கேழ்க்கக்கடுமையான; ஏகவாக்யம்=ஒரு வகையான சொல்லை; விவவ்ருஃ=தெளிவாய் சொன்னார்கள்.

(க-ரை) அந்த சுயம்வர மண்டபத்தில் எல்லா குணங்களாலும் நிகரான இந்துமதி அஜன்களுடைய தாம்பத்யத்தைக் கண்டு பட்டணத்து மக்கள் யாவரும் மகிழ்வடைந்தவர்களாய், இவள் சந்திரனையடைந்த வெண்ணிலா போன்றவள், தன்னையொத்த சமுத்திரனை கூடிய கெங்கை என்று ஏக வாக்கியமாக பலவிதங்களில் புகழ்ந்துக் கொண்டிருந்தனர். இவ்வாக்கியங்கள் பிறமன்னர்களின் காதுகளுக்கு கடுமையான அம்புகள் போன்றிருந்தது. (தொகை யுவமையணி)

ஃ॥ ப்ரமுதி²த வரபக்ஷ மேகத ஸ்தத்
க்ஷிதிபதி மண்டல மந்யதோ விதாநம் ।
உஷஸி ஸரஇவ ப்ரபு¹ல்ல பத்³மம்
குமுத²வந ப்ரதிபந்ந நித்³ர மாஸீத் ॥ 86

இதி காளித்³ாஸ க்ருதௌ ரகு³வம்ஶே மஹாகாவ்யே ஷஷ்டஸ் ஸர்க³ஃ.

(ப-ரை) ஏகதஃ = ஓரிடத்தில்; ப்ரமுதித வரபக்ஷம் = மிகமகிழ்ந்த; மருமகனின் சாரார் உடைய; அந்யஃ = மற்றொரு இடத்தில்; விதாநம் = சூனியமான; தத் க்ஷிதிபதி மண்டலம் = அந்த அரசர் கூட்டம்; உஷஸி = வைகறையில்; ப்ரபு¹ல்ல பத்³மம் = நன்கு விரிந்த தாமரையுடைய; குமுத²வந = வெண்டாமரை வனங்களால்; ப்ரதிபந்ந = அடைந்த; நித்³ரம் = சுருங்கிய; ஸர இவ = குளம் போன்று; ஆஸீத் = ஆயிற்று.

(க-ரை) அப்போது இந்துமதி தேவியை தேர்ந்தடுத்த அஜ மன்னனுடைய சுற்றத்தார்களின் முகங்கள் வைகறையில் பூத்த தாமரையுடைய குளம் போன்று மகிழ்ச்சியுடன் இருந்தன. பிற மன்னர்களுடைய முகங்கள் சுறுங்கிய வெண்டாமரைகளுடைய குளத்தின் பகுதியைப் போல் வெட்கமுடன் கூடியதாக இருந்தன. (ஒற்றை மணிமாலையணி)

இது காளிதாசராலியற்றப்பட்ட ரகுவம்சத்தில் ஆறாம் சருக்கத்திற்கு திருத்தணிவாழ் ஸ்ரீவித்யானந்தரெனும் செ ராமலிங்காசாரியரா லியற்றப்பட்ட தெளிவுரை.

ஆறாம் சருக்கம் முற்றிற்று.

ரகுவம்ச மகா காவியம்

பொருளடக்கம்

முதலாம் சருக்கம்

இரண்டாம் சருக்கம்

மூன்றாம்சருக்கம

நான்காம் ஸர்க்கம்

ஐந்தாம் சருக்கம்

ஆறாம் சருக்கம்

ரகுவம்ச சுலோகங்களின் குறிப்பு